

ஹர்ஷன் ராஜ்யஸ்ரீயை விடுவித்தல்

# இந்தியரியற்றிய அரும்பெருஞ் செயல்கள்

எல். டர்ன்புல் அவர்களாலும்
ஹெச். ஜி. டீ. டர்ன்புல் அவர்களாலும்
எழுதப்பட்டு

திருச்சி, பிஷப் ஹீபர் பாடசாலை
தலைமை ஆசிரியர்
எஸ். கே. தேவசிகாமணி, பி.ஏ., அவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டது

ஆக்ஸ்பர்ட் சர்வகலாசாலை ப்ரெஸ்
பம்பாய் கல்கத்தா மதராஸ்
1927

# நன்றிகூறுதல்

இந்நூலை இயற்றுவதற்கு சாசனங்கள் சமாசாரங்கள் முதலிய வைகளைக் கொடுத்து பேருதவிபுரிந்த கீழ்க்கண்ட கனவான்களுக்கும் பரோபகாரிகளுக்கும் இந்நூலாசிரியர்கள் தங்கள் மனமார்ந்த நன்றியை அன்புடன் செலுத்துகிறார்கள்:—

ஆண்ட் தலைவரின் பிரதிநிதி பாலா சாகிப் பண்டிட் அவர்கள்
சி. யே. கின்கெயிட் அவர்கள், ஸி.வி.ஒ., ஐ.சி.எஸ்.
பி. ஆர். கேடல் அவர்கள், ஸி.எஸ்.ஐ., ஸி.ஐ.ஈ., ஐ.ஸி.எஸ்.
காப்டன் ஈ. ஜே. ஹெட்லாம், ஆர்.ஐ.எம்.
லெப்டினன்ட்-கர்னல் ஸ்டீன், ஐ.ஏ.
ஏ. எம். மாக்மிலன் அவர்கள், ஐ.ஸி.எஸ்.
சூரத்து டாக்டர் ஸ்காட் அய்யர் அவர்கள்
57-வது ரைபில்ஸ் அட்ஜுடெண்ட் அவர்கள், எப்.எப்.
2/3 (கியூ.ஏ.ஒ.) கூர்க்கா ரைபில்ஸ் அட்ஜுடெண்ட் அவர்கள்
பூனா சர்தார் தஸ்தூர் நஹிர்வான் பெண் பாடசாலைத் தலைமை உபாத்தினி அமெரி அம்மாள் அவர்கள்

ஜான் மர்ரே கம்பெனியார் வெளியிட்ட மெரிவெதர் சிமித் எழுதியுள்ள "பிரெஞ்சுதேசத்தில் இந்திய படை" என்ற புஸ்தகத்திற்கும்; சுவெல் அவர்கள் எழுதிய "அழிந்து மறைந்துபோன ராஜ்யம்" என்ற சரித்திரத்திற்கும்; லாங்மென்ஸ் கம்பெனியார் வெளியிட்ட முக்கர்ஜி எழுதிய "இந்திய ஏற்றுமதி சரித்திரத்திற்கும்" இந்நூலை வெளியிட்டோர் பெற்ற பேறுதவிக்காக நன்றி செலுத்துகிறார்கள்.

# இந்தியச் சிறுவர்கட்கும், சிறுமிகட்கும் இந்நூலை இன்னுரிமை யாக்கல்

1. உங்களிற் சிலர் ஆண்மை என்னும் பொருளைப்பற்றி வியாசம் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் பெற்றிருக்கலாம். அக்கட்டுரையை நீங்கள் எழுதுவதற்கு உதவியாக உங்கள் ஆசிரியர் பின்வருமாறு சில குறிப்புகளையும் கூறியிருக்கலாம்:—ஆண்மையின் தத்துவம், ஆண்மையின் வகைகள், உடலாண்மை, உயிராண்மை, எடுத்துக்காட்டுகள், முடிப்புரை என்பன.

இவைகளெல்லாம் கேட்பதற்கு மிக எளிதாய்த்தான் உள்ளன. ஆனால் எழுதுவதற்கோ எளிதல்ல. ஈராயிரம் ஆண்டுகட்குமுன்பு கிரேக்க நாட்டுத் தத்துவஞானியும், அறிந்தவருட் சிறந்தவரென்று அழைக்கப்பெற்றவருமாகிய ஆரிஸ்ட்டாடில் என்பவர் ஆண்மையின் இயல்பை இவ்வாறு எடுத்துக்கூறியுள்ளார். 'ஆண்மையென்பது அஞ்சுதலுக்கும் அஞ்சாமைக்கும் இடையிலுள்ள மனநிலைமையே. அஞ்சுதல் எனின் எல்லாவகையான அஞ்சுதல்களையும் குறிக்காமல், அஞ்சுவனவற்றுளெல்லாம் அருவருக்கத்தக்கதான சாவுக்கு அஞ்சுதலையே குறிக்கும். மரணம் என்று சொல்லும் போது, எல்லாவகையான மரணங்களையன்றி, போர்முனையிற் புறங்காட்டாது சீர்பெற உயிர்துறத்தலையே குறிக்கும்.'

2. மேற்கூறியனவெல்லாம் எளியனவாகவும், நியாயமாகவும் காணப்படுகின்றன. கிரேக்கர் பெர்சியாவுக்கு விரோதமாய்க் கடும்போர் புரிந்தகாலத்தில் நிகழ்த்தின வீரச்செயல்களின் ஞாபகத்திலேயே வளர்ந்துவந்த யவனரில் ஒருவரும், மகா வீரம் பொருந்திய அலெக்சாந்தரைத் தீரத்துவமும் வீரத்துவமும் பெற்று விளங்குமாறு பயிற்றுவித்த ஆசிரியருமாகிய ஒருவர் ஆண்மையின் இலக்கணத்தை மேற்கூறியவாறு, போர்வீரனின் ஆண்மையே சிறந்த ஆண்மையென்று இயம்பியுள்ளது இயல்பே. கிரேக்கர் நடத்திய அரசாட்சியை ரோமர் கைப்பற்றியபோது, ரோமானிய கவிகளும், தத்துவஞானிகளும் ஆண்மையைப்பற்றிப் பேச வந்தகாலத்தில், மேற்கூறிய இலக்கணத்தைவிடச் சிறந்ததாக ஒன்றும் சொல்ல அவர்களால் முடியவில்லை. ஏனெனில்

ரோமாபுரியாரும், கார்த்தேஜ் மக்களுக்கு எதிராகக் கடும்போர் புரிந்து கஷ்டமுற்றிருந்தமையால், போர்வீரனின் ஆண்மையே மேலான ஆண்மையென அவர்களுக்கும் தோன்றிற்று. ஹொரேஷியஸ் என்னும் ரோமப் போர்வீரனுடைய சரிதையை மெக்காலே என்னும் ஆசிரியர் எளிய செய்யுள் ரூபமாக எழுதியுள்ளார். அதில் உள்ள பின்வரும் அடிகள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஊடுருவிப் பாய்ந்து உருகச்செய்யும்.

தந்தையர் தங்கிடு சமாதி காக்கவும்
தந்தெய்வம் ஆலயம் அழிவற நிற்கவும்
தீங்கினுக்கஞ்சா தெதிர்த்து நின்று
உடன்றுயிர் துறத்தலின் உயரியதுண்டோ ?

சில வருடங்களுக்குமுன் ஐரோப்பாவில் நிகழ்ந்த மகா யுத்த சமயத்தில், ஆங்கில ராஜ்யத்தின் இலட்சக்கணக்கான மனிதர்கள் ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும், கிராமத்திலிருந்தும் சென்று, கீர்த்தியும், நீதியும், சுதந்திரமும் உலகில் என்றும் அழியாது நிலைத்திருக்கும் பொருட்டு, போர்புரிந்து, உயிர்துறக்க எண்ணினரே! அத்தகையவர்களின் ஆண்மையையும், வீரத்தையும் நம்மில் எவரேனும் புறக்கணிக்கத் துணிவோமோ? ஜெர்மன் சக்கரவர்த்தி நம்முடைய போர்வீரர்களைப்பார்த்து, கூலிக்கு உழைக்கும் கூத்தர்கள் இவர்கள் என்று எள்ளிப் புறக்கணித்து நகையாடினன். அம்மன்னனின் வாய்மதமடங்குமாறு அக்காலத்திற் சிறந்த புலவனும், கவிஞனுமான ஓர் ஆங்கிலத் துரைமகனார் அற்புதச்செய்யுள் ஒன்றை இயற்றினார். அச்செய்யுள் இங்கிலீஷ் ‘டைம்ஸ்’ என்னும் பத்திரிகையில் அடியிற்கண்ட கருத்துகொண்டு திகழ்கின்றது: ‘உயர் நோக்கங்கள் உலைவுற்ற காலங்களிலும், உலகத்தின் அடிப்படையானவைகள் அழிவுற்றகாலங்களிலும், கூலியாட்கள் திரள்திரளாக வந்து, வருவாய்பெற்று, உற்றவேலையை ஊக்கமுடன்செய்து உயிர்துறந்தனர். அவர்களின் புயங்கள், விழுவதற்கிருந்த வானுலகத்தைத் தாங்கின. அதனால் பூவுலகின் அடிப்படையானவைகள் நிலைத்து நின்றன. கடவுளால் கைவிடப்பட்டவர்கள் நிர்மூலமாகாதபடி இவர்கள் பாதுகாத்ததன்றி, உலகப்பொருள்கள் அழிவுறாதபடி காப்பாற்றினார்கள்—எல்லாம் கூலிக்கே.’

ஆனதுபற்றிப் போர்புரியும் பொருனனது பொன்றா வீரத்தைப் புறக்கணிக்க முடியவே முடியாது. ஆண்மையென்னும் பொருளைத்தரும் அண்ட்ரியா (Andria) என்னும் கிரேக்க மொழியும், வர்ட்டஸ் (Virtus) என்னும் இலத்தீன் மொழியும், ஆணின்

தன்மை என்ற பொருளையே அறிவிக்கும். ஆங்கில மொழியில் தற்காலத்தில் வழங்கிவரும் வர்ச்சு (Virtue) என்னும் மொழி, இலத்தீனில் வர்ட்டஸ் (Virtus) என்று வழங்கும் மொழியே யாகும். ஆகவே மனிதன் பெறத்தக்க மாண்புறு குணங்களிலெல்லாம் சிறந்து விளங்குவது ஆண்மையே யாகும்.

3. இருந்தபோதிலும், உங்களிற் சிலர் மேற்சொல்லியவை களைப்பற்றி உளத்திற் சற்று திகைப்புறலாம். நீங்கள் ஒருவேளை 'இதெல்லாம் சரியே, ஆனால் உலகில் எப்பொழுதும் பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருப்பதில்லையே. அன்றியும் ஒவ்வொருவரும் போர்வீரராக இருக்கவும் முடியாதே. ஆகையால் இவ்விதமான ஆண்மையைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறாத பல ஆயிரக்கணக்கான சிறுவர்களும், சிறுமிகளும், பெண்களும் உலகில் இருப்பார்களே' என்று கூறலாம்.

மேற்கூறியவாறு சொல்வதே தப்பிதம். உலகில் உயுத்தம் இல்லாத நாள் உண்டோ? உடலுக்கும் உயிருக்கும் விரோதமான போர்கள் இல்லையேனும், என்றைக்கேனும் வாழ்க்கையின் போராட்டம் பொன்றியதுண்டோ? ஒருபுறம் அநியாயமும், அசுத்தமும், கொடுமையும் காணப்படுகின்றன. பிறிதொருபுறம் பொறாமை, அருவருப்பு, பழிப்பு முதலியன குடிகொண்டிருக்கின்றன. மற்றுமொருபுறம் அதர்மம் அடர்ந்து தோன்றுகின்றது. நித்திய வாழ்க்கையில் இக்கொடுமைகளிலிருந்து விலகி இன்புறுவதற்குப் போராடாமலிருக்க இயலுமோ? இப்பெரும் போராட்டத்தில் தக்கவகையாக நீங்கள் போர்புரிந்து வெற்றிபெற்று ஒவ்வொருவரும் வெற்றிக்கு அறிகுறியாகவுள்ள 'விக்டோரியா கிராஸ்' என்னும் பொற்பூவைப் பெறலாம். இப்பெரும் போராட்டத்திற்கு உங்கள் ஆண்மையைப் பலப்படுத்திக் கொள்ளும்பொருட்டே, பின்வரும் கதைகள் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. அக்கதைகளெல்லாம் உண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளேயன்றி வேறல்ல. அவைகள் உங்கள் நாட்டினரின் பண்டைநாட் குணங்களையும், இற்றைநாளின் இயல்புகளையும் எடுத்துரைப்பன. இந்நூலிற் கண்டுள்ள கதாநாயகர்களெல்லாம், வாளும்வில்லும் ஏந்திப் போர்புரியும் வில்லாளிகளும் அல்ல. முதியவர்களுமல்ல. அவர்களுள் சிலர் அரிவையர்கள். மற்றுஞ்சிலர் சிறுவர்கள். இக்கதைகளைக் கூர்ந்து கவனிக்குங்கால் அவைகள் எல்லாவற்றிலும் பொல் நாண் ஒன்று பொலிந்து ஊடுருவிச் செல்வதையும், அவைகள் ஒவ்வொன்றையும் செயற்கரிய செயலாகச் சிறந்து விளங்கச் செய்வதையும், பேராண்மைக்கு அறிகுறிகளாகப் பிறங்குவதையும்

காண்பீர்கள். அப்பொன்னுண் என்னும் பண்பாவது தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழச்செய்யும் ' சுயவெறுப்பே.'

4. இப்பொருள் சிறிது கடினமாயுள்ளதென்று நீங்கள் கூறலாம். ஆனால் நாம் இதைப்பற்றி இன்னும் சிறிது ஆலோசிப்போம். முதலாவதாக இந்நூலின் கதாநாயகர்கள் சிறந்த தீரர்கள் என்றும், முற்றிலும் அச்சத்தையே அகற்றினவர்களென்றும் நீங்கள் கருதவேண்டாம். அவர்களிற் சிலர் சாதாரண மக்களே. அவர்கள் மனதில் பயமுண்டு என்று நீங்கள் நிச்சயமாய் உணரலாம். ஆனால் அவர்களைத் தீரமுடையவர்களாகச் செய்தது எதுவெனில், அவர்கள் சரியான சமயங்களில், அச்சத்தை அடக்கியாண்டதேயாகும். பரிசுபெறும் எண்ணத்தைக்கொண்டாவது, தாங்கள் பயங்கொள்ளித்தனமாக நடந்துகொண்டால், ஜனங்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணத்தைக்கொண்டாவது, இழிந்தநோக்கமாய் அவர்கள் அச்சத்தை அடக்கியாளவில்லை. ஆனால் சிறந்த சிப்பாய்களைப்போல, தங்கள் தலைவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். மக்களை மாக்களினின்று பிரிப்பதும், வையகத்துறையும் வானவராக ஆக்கச்செய்வதும், ஆறறிவைப் பெற்ற ஆன்மாவேயாகும். அத்தகைய கீர்த்திகுன்றாச் சீரியர்களை நோக்கியே தற்காலத்திய கவியரசு ஒருவர் பின்வரும் கருத்துக்களைக் கவின்கொளக் கூறியுள்ளார். ' ஆன்மாவே! உன் கப்பலைப் புயல் சூழ்ந்து, அல்லல் நிறை நரகந்தோன்றினும், பார்க்குமிடமெல்லாம் பயந்தருகாட்சிகளும், நிகழ்ச்சிகளுங் காணப்படினும் அச்சத்தால் அறிவிழந்து, அடக்கமிழந்து, மதியிழந்து மயங்க நேரிடினும், கொண்ட கொள்கையினின்றும் தவறாது உறுதியுடனிரு ' என்று அறிவுறுத்தியுள்ளார்.

ஆன்மா நமக்கிடும் ஆணைகளிலெல்லாம் சிறப்புற்ற ஆணையொன்றேயாம் : அஃதாவது ' யாவரிடத்தும் அன்புகொள் ' என்பதேயாம். ' பூரண அன்பு அச்சத்தைப் போக்கும் ' என்னும் சத்திய வேத மொழிப்படி நம்மிடத்து அன்பு உண்டாக, உண்டாக, அச்சம் நீங்கும். அச்சம் அகலவே தைரியம் தானாகவே தோன்றும். பக்தியாலும், பற்றற்ற பான்மையாலும், சுயநயமின்மையாலுந்தான், அன்பை வெளிக்காட்ட இயலும். இஃது ஒன்றுதான் ஒப்பற்ற ஆண்மை, இவ்வாண்மை எவராலும் எளிதிற் கையாளக்கூடியதே.

# முன்னுரை

ஆங்கில மொழியிலுள்ள 'இந்தியர் இயற்றிய அரும்பெருஞ் செயல்கள்' என்னும் நூல், கடந்த ஆண்டில் எஸ். எல். சி. பரீட்சைக்கு உபபாடமாக வைக்கப்பட்டிருந்தது. அதன் நிமித்தம் ஆருவது பாரம் மாணவர்களுக்கு அப்பாடத்தைப் போதிக்கும் உரிமையைப் பெற்றிருந்தேன். இந்நூலாசிரியர்களுடைய சீரிய உரை நடையையும், உள்ளத்தை ஈர்க்கத்தக்க வகையில் கதைகளை வெளியிட்டிருத்தலையும், கற்போர்க்கு நாட்டுப்பற்றை நல்கக் கூடிய முறையில் நவிலப்பெற்றிருத்தலையும் அவர்களுக்குப் பன்முறை எடுத்துக்காட்டியுள்ளேன். ஆனால் தென்னிந்தியாவில் முற்காலத்தில் புகழ்பெற்றுத் திகழ்ந்த தமிழ் மக்களின் அரிய வீரச்செயல்களைப்பற்றிச் சிறிதும் கூறப்படாதிருந்ததைப்பற்றித் திகைப்படைந்தேன். இதில் ராஜபுத்திரர், கூர்க்கர், பார்சியர், மகம்மதியர், மகராட்டிரர் முதலியவர்கள் இயற்றிய வீரச்செயல்களைக் குறித்த வரலாறுகள் மட்டும் விளக்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் நாட்டினராகிய மனுச்சோழர், பொற்கைமாறன், குலசேகரர், கண்ணப்பர், திருநாவுகரசர், சிறுத்தொண்டர், இளங்கோவடிகள், கண்ணகி, மணிமேகலை முதலியவர்கள் ஆற்றியுள்ள அஞ்சாத்தன்மையும், பரநலமும் வாய்ந்த அருஞ்செயல்களில் ஒன்றேனும் ஈண்டு கூறப்படவில்லை.

இம்மொழி பெயர்ப்புநூல், மறந்துபோன பழைய தமிழ்க் கதைகளை ஆராய்வதன் மூலமாயும் அவற்றை வெளியிடுவதன் மூலமாயும், இக்காலத்திலுள்ள தமிழறிஞர்களின் உளப்பண்புகளை ஊக்குவிப்பதோடு, தற்கால தமிழ் மாணவர்களை தறுகண்மையும் தன்னலமறுப்பும் பொருந்தும் வண்ணம் செய்விக்கும் என்று நம்புகின்றேன்.

எஸ். கே. தேவசிகாமணி

4-உ ஆகஸ்டுமீ 1927

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| I. | பிறர்க்கென்று வாழ்ந்த பெரியார் ... ... ... | 1 |
| II. | உடன் பிறந்தோர்களில் உயர்வுற்றவன் ... ... | 8 |
| III. | மீவார் நாட்டு இராஜ ஸ்திரீ ... ... ... | 22 |
| IV. | மரகதம் என்ற புன்னை ... ... ... ... | 32 |
| V. | அரசபக்தியிற் சிறந்த அண்ணல் ... ... ... | 41 |
| VI. | ஒரு வீர அரசி ... ... ... ... ... | 53 |
| VII. | அஞ்சா நெஞ்சனான தேவ்பாண்டே ... ... | 75 |
| VIII. | குருபக்தியுள்ள சீக்கியன் ... ... ... | 84 |
| IX. | நன்றி மறவா நல்லுள்ளம் ... ... ... | 94 |
| X. | வெள்ளத்துக்கு அஞ்சா வீரன் ... ... ... | 101 |
| XI. | ஆண்மையில் சிறந்த ஜமேதார் ... ... ... | 106 |
| XII. | ஒரு கூர்க்க வீரன் ... ... ... ... | 114 |
| XIII. | கடலில் பணியாற்றும் காளையர்கள் ... ... | 120 |


---

# படங்களின் விபரம்


| | பக்கம் |
|---|---|
| ஹர்ஷன் ராஜ்யஸ்ரீயை விடுவித்தல் ... | முதல் படம் |
| கதவு பாக்கத் திறக்கப்பட்டது, பன்பீர் உள்ளே நுழைந்தான் ... | 39 |
| சாந்த் பீபி உருவிய வாளைத் தலைக்குமேல் சுழற்றிக்கொண்டு முன்னே பாய்ந்தனள் ... ... ... ... | 73 |
| சநாதன் ரஸ்தாவின் பக்கத்தில் கீழே விழுந்து இறந்து கிடந்தான் ... ... ... ... ... | 99 |

THE MADURA TAMIL SANGAM

# I

## பிறர்க்கென்று வாழ்ந்த பெரியார்

இரஸ்கின் (Ruskin) என்னும் ஓர் ஆங்கில ஆசிரியர் எழுதியுள்ள, 'ஸிஸேமியும் லிலிகளும்' (Sesame and Lilies) என்ற தொகுதியில் "மன்னனின் பொக்கிஷங்கள்" என்னும் பெயரையுடைய கட்டுரை யொன்றுண்டு. 'அதில் பண்டைக்கால அரசர்களில் பலர் தங்கள் வாழ்க்கையை உயர் நோக்கத்துடன் நடத்தாமல் உலகாயதமாய் தன்னய வகையில், தீச்செயல்களைச் செய்துவந்ததாகக் கூறுகின்றார். அத்தகைய மன்னர் தங்கள் பொருட் குவியல்களைத் திருடர் கன்னமிட்டுத் திருடவும், துருப்பிடித்தழியவும், பூச்சிகள் அரித்துத் தின்னவும்கூடிய நிலையில் இவ்வுலகத்தின்கண் தேடிவைத்துப் போனார்கள்' என மிக்க அழகாய் வர்ணித்தபின்னர், 'அம்மன்னரின் விலைபெற்ற அலங்கார ஆடைகள் அழிந்தன; அவரது பட்டயமும் தலைச்சிராவும் மங்கிப்போயின; அவருடைய பொன்னும், மணியும், அணியும் சிதறுற்றன; என்றாலும் பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஜனங்களின் நன்மையைக்கருதி, அவர்களுக்கென்று விஞ்ஞான நிதி சேர்த்துவைக்கும் உயர்மன்னர்கள் ஒருக்கால் தோன்றலாம்' என்றுமுரைக்கின்றார்.

ஆனால் இரஸ்கின் என்பவர் அசோக மன்னரின் சரிதையை ஆராய்ச்சி செய்திருந்தாரானால், மேற்கூறியவாறு எழுதாமல், பக்தி நெறி தவறாத ஞானமார்க்கத்தில் தானும் நடந்து, தனது குடிகளும் அந்நெறியில் நடக்கத்தக்க முயற்சிசெய்த அரசன் ஒருவன் பூர்வீக இந்து தேசத்தில் அரசு புரிந்தான் என்று ஒருக்கால் கூறியிருக்கக்கூடும். வெளியிலிருந்து வந்த படையெழுச்சி, உள்நாட்டுக் கலகம் இவைகளால் துன்புறாது சமாதானம் உற்ற "உத்தமயுகம்" இந்தியாவில் எப்பொழுதாவது நிகழ்ந்ததுண்டானால், அசோக மன்னரின் நீண்ட உபகார ஆட்சி நிகழ்ந்தகாலமே அவ்வித யுகம் என்று கூறலாம்.

இந்தியாவின் தென்பகுதி தவிர எஞ்சிய நிலப்பரப்பு முற்றும் அசோக அரசரின் ஆட்சியின்கீழ் கி. மு. 272 முதல் 231 வரை நாற்பது ஆண்டுகள் அளவு இருந்து

வந்தது. இப்பரந்த நிலத்தில் மூலை முடுக்குகளிலுங்கூட பக்தி, இரக்கம், பொறுமை, சமரசம் என்னும் உணர்ச்சிகள் குடிகொண்டிருக்கும்படியாக இந்த மாண்புற்ற மன்னர் அரசாட்சி செய்தனர்.

மிகச் சிறந்த காவலராகிய அசோக அரசர் ஆட்சிபுரிந்து வந்த மௌரிய இராஜ்ஜியமானது முதன்முதலாக அவரது பாட்டனாராகிய சந்திரகுப்தரால் நிறுவப்பெற்றது. அவர் திண்ணிய உள்ளம் உடையவர். கொண்ட கொள்கையி னின்றுந் திறம்பாத இயல்பினர். வேண்டுங்கால் கொடுமை யாகக்கூட இருக்குந் தன்மையினர். இப்பொழுது பேகார் என்றழைக்கப்படும் தமது மகத இராஜ்ஜியத்தைப் பெருக்கி, ஆப்கானிஸ்தானம் உள்பட வட இந்தியா முழுவதையும் தம்முடைய குடையின்கீழ் கொண்டுவந்தவர்.

அலெக்ஸாண்டர் என்னும் அரசரின் படைத்தலைவர் களுள் ஒருவரும், அவருடைய இராஜ்ஜியத்தின் ஒரு பகு திக்கு அரசராகவும் விளங்கிய சிரியா தேசத்து மன்னராகிய செலூக்கஸ் என்பார் தம்முடைய மகா பெருந்தலைவர் செய்தவண்ணம் தாமும் நாடுகளைக் கைக்கொண்டு வெற்றி பெற எண்ணி, சிந்துநதியைக் கடந்து பாஞ்சாலத்தின்மேல் படையெடுத்து வந்தார். ஆனால் அவரது போர்த்திறன் சந்திரகுப்த மன்னனிடத்தில் சிறிதளவும் செல்லவில்லை. ஆகையால் பாஞ்சால நாட்டை மீண்டும் தான் கைப்பற்றக் கூடும் என்று தான் எண்ணிய எண்ணத்தை அறவே ஒழித்து, தனது மாற்றானாகிய இந்து அரசனோடு மன மொத்து அவன் நட்புரிமையைக்கொண்டனர்.

இச்சந்திரகுப்த அரசனை ஆங்கில சரித்திரப் புத்தகத்தில் படிக்கப்படும் வெற்றிவேந்தனான வில்லியம் என்னும் ஜயவீர னுக்கு ஒப்பிடலாம். வில்லியம் அரசனுடைய ஆட்சிக்கு அடிப்படையாக இருந்தது அன்பு அல்ல. அச்சந்தான். அதுபோல் இம்மன்னனும் அன்பினாலும் அருளாலும் குடிகளை ஒன்றுபடுத்தி ஆளாமல், வன்பினாலும் துன்பினா லுமே ஒன்றுபடுத்தினான்.

சந்திரகுப்தனது குமாரனான பிந்துசாரன், சந்திரகுப் தனுக்குப்பின் அரசனானான். அவனைப்பற்றி எதுவும் தெரிந்துகொள்வதற்குப் போதிய ஆதாரங்கள் கிடையா.

எனினும் பிந்துசாரனது புதல்வன்தான் அசோக மன்னன். மௌரிய வம்சத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு முக்கிய காரணம், அசோக மன்னன் அக்குலத்தில் தோன்றியதேயாகும்.

அசோகர் அநேக அரும்பெருஞ்செயல்களைச் செய்துள்ளார். பௌத்தமதத்தை உலகமுற்றும் பரவச்செய்து, மற்றெவரும் செய்ததைக்காட்டிலும், அம்மதத்தைப் புவியின் பெருஞ்சமயங்களிலொன்றாக்கப் பெருமுயற்சி செய்தவரும் இவரே. இதுமாத்திரமோ? வேறெந்த மன்னனும் செய்ததைப் பார்க்கிலும் தம் ஆட்சிமுறையில் அறநெறி தவறாமல் எவ்வகையிலும் தர்மமே தழைக்கவேண்டுமென்று செங்கோல் செலுத்திவந்தவரும் இவரே. இதுநிற்க, தன்னயமின்றிப் பிறர்க்கென்றே வாழ்ந்தமைக்குப் பெரும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றவரும் இவரே. இவ்விதத் தியாக வாழ்க்கையே ஓர் அரும்பெருஞ்செயலாகும்.

அசோகர் பௌத்தமதக் கொள்கையைப் பின்பற்றிய பின்னர், அவர் வாழ்க்கையில் அமைதியும், சாந்தமும் குடிகொண்டு விளங்கின. ஆதலால் அவர் வரலாற்றில் பெரும் போர்த்திறனைக்காட்டும் நிகழ்ச்சி எதையும் எதிர்பார்த்தல் தர்மமாகாது. பிறர் ஒருவர் செய்துமுடிக்காத காவியச் செயலைச் செய்துமுடித்திருப்பார் என்றாவது, அல்லது தைரியமே துணையாகக்கொண்டு துணிவுற்ற வினைகளை நடத்தியிருப்பார் என்றாவது, அவர் வரலாற்றில் எதிர்பார்ப்பதற்கு இடமில்லை. இவைகளுக்குப் பதிலாக ஆரவாரமற்ற, ஆனால் செய்வதற்கரிய நிகழ்ச்சிகளையே அவர் ஜீவியத்தில் எதிர்பார்க்கவேண்டும். தமக்குள்ள அரசாங்க அதிகாரங்களைத்தையும் தம்முடன் வாழும் ஜனங்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், துன்புறுவோர் துன்பத்தைத் துடைக்கவும், நாள்தோறும் வழங்கிவந்ததினால் மேற்சொல்லிய உண்மை புலப்படும். இவ்வாறு ஓர் பேர் அரசன் தன் வாழ்க்கையை நடத்துவது எளிதல்ல.

பெரும்பேர்பெற்ற சார்லமேன், நெப்போலியன் முதலியவர்களைப்பற்றிக் கூறப்படும் கதைகளைப்போலவே, அசோகரைப்பற்றிக் கூறப்படும் கதைகளும் எத்தனையோ உள. ஆனால் அசோகர் வெட்டிய கல் வெட்டுக்களில் தம்மு

டைய ஜீவியத்தைப்பற்றி தாமே கூறும் குறிப்புகள் காணப் படுகின்றன. அவைகளிலிருந்து அம்மன்னனது களங்கமற்ற பெருந்தன்மையான இயல்பு தெள்ளிதில் புலனுகின்றது.

அவர் பட்டத்திற்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகளா யின பின்னர், ஓர் கடும்போர் முயற்சியில் முற்பட்டார். அவ் வகையில் அதுதான் தலையும் கடையுமாகிய முயற்சியாகும். வங்காளவிரிகுடாக் கடலோரமாய், மகாநதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையில் இப்பொழுது சென்னை இராஜதானியின் வடபாகமாக விளங்கும் நிலப்பரப்பிற்கு அக்காலத்தில் கலிங்க நாடு என்று பெயர். அசோகர் இந்நாட்டை கடும் போரினுல் தம்முடைய ஆட்சிக்குரிய நாட்டோடு ஒன்று படுத்திக்கொண்டார்.

இக்காலத்தில் ஒருவரும் போரினுலுண்டாகும் பெருந் துன்பங்களைக் கண்ணுல் கண்டதில்லை. ஆனுல் அண்மையில் ஐரோப்பாவில் நிகழ்ந்த மகா யுத்தத்தில் பெல்ஜியத்திற்கும் போலந்திற்கும் நேர்ந்தவைகளைப் பார்த்தவர்களோ, படித் தவர்களோ, அக்காலத்தில் கலிங்கத்திற்கு என்ன நேர்ந் திருக்கக்கூடுமென்று ஊகித்து அறியலாம். இலட்சத்து ஐம்பதினுயிரம் பேர்கள் சிறையிடப்பட்டார்களென்றும், இலட்சம் பேர்கள் கொல்லப்பட்டார்களென்றும், மேலும் எண்ணிக்கையற்ற பலர் பஞ்சத்தாலும், நோயாலும், கொடு மையாலும் மாண்டார்களென்றும் அசோகரின் வாக் கினின்றே காணப்படுகின்றது. எரிந்தழிந்த வீடுகளெத் தனையோ! அழிந்துகெட்ட வயல்கள் எத்தனையோ! பயிர் செய்யாமற் பாழாய்க்கிடந்த பண்ணைகளெத்தனையோ! தந்தைமார்களை யிழந்து தவித்தவர் எத்துணைவரோ! உடன் பிறந்தவர்களை இழந்து மனம் உடைந்தவர் எத்துணைவரோ! தனயர்களை இழந்துவிட்டுத் தவித்த தாய் தந்தைமார்கள் எத்துணைவரோ! வலிகுன்றியவர்களையும், பாதுகாப்பற்றவர் களையும் பகைவர் துன்புறுத்துவதைப் பார்த்து மனம் பதை பதைத்தவர்கள் எத்துணைவரோ! எண்ணிப் பார்த்தால் இச்செயல்களெல்லாம் ஓவியத்தில் வரைந்துள்ளவைகளைப் போல நம்முன் நிற்கின்றன அன்ருே? சென்ற மகா யுத்தத் தில் இக்காட்சிகளைக் கண்டார் அனைவரும் இனி யொரு முறை இதுபோன்ற யுத்தம் நிகழாதவாறு தடுப்பது தங்கள்

கடமையென்று கங்கணம் கட்டிக்கொண்டுள்ளார்கள். கலிங்கத்தின் காட்சிகள் அசோகனது அகத்தை ஊடுருவிச் சென்றன. ஆற்றொணுத்துன்பமும், கடக்கமுடியாக் கலக்கமும் அவரது உள்ளத்தில் குடிகொண்டன என்று அவரே கூறியுள்ளார். 'எவ்வளவு ஒரு உயிர் உயர்வையடைகிறதோ, அவ்வளவு அதனிடத்து அதிகரிக்கும் உருக்கமே உயர்வின் அடையாளம்' என்று பேக்கன் (Bacon) என்ற ஓர் ஆங்கிலப்பேராசிரியர் கூறியுள்ளார். அம்மொழியின் உண்மையை அசோகரது வாழ்க்கையில் காணலாம்.

ஏறக்குறைய இக்காலத்திற்றான் அசோகர் பௌத்த மதத்தை அனுசரிக்கத் தலைப்பட்டார். அவ்வாறு தலைப்பட்டதிலிருந்து, துன்புற்றவர்களிடத்து அவருக்குள்ள பரிவும், போர்புரிவதால் மக்கட்கு இடர் பெருகும் தன்மையை ஒழிக்கவேண்டுமென்ற உள்ளப்பண்பும் வலியுறுத்தப்பெற்றன என்று ஒருவாறு கூறலாம். தன்னைப்பற்றிக் கருதுமுன், மற்றவர்களைப்பற்றிக் கருதவேண்டுமென்றும், உலகின் துன்பங்களை ஒழிக்க முயலவேண்டுமென்றும் உபதேசிப்பதுதான் பௌத்த சமயக் கோட்பாடாகும். ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் அசோகரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மகத நாட்டில் கௌதம புத்தர் இக்கொள்கைகளை மனிதர்களுக்கு மனங்கொள்ளக் கூறியுள்ளார். ஆதலால், பின்னர் அதேநாட்டின் அரசனுன அசோகர், புத்தர் வகுத்துள்ள புனித உரைகளையே ஆட்சிக்குரிய அறவுரைகளாகக்கொண்டு, கீழ் நாடுகளிலெல்லாம் மஞ்சள் நிற உடையணிந்த மாசற்ற பெரியார்களை புத்தமதக் கொள்கைகளைப் பரப்புவதற்கென்றனுப்பியது மிக்க பொருத்தமுடையதாகும்.

அரச குடும்பத்தாருடைய உண்டிக்காக அளவிறந்த பிராணிகளைக் கொல்லுவது இதுகாறும் வழங்கிவந்த வழக்கமாகும். ஆனல் அசோகரோ, அவைகளைக் குறைத்து, இரண்டு மயில்களையும், ஒரு மானையுமே கொல்லும்படியாகக் கட்டளையிட்டார். பின்னும் சிறிதுகாலஞ் சென்ற பின்னர் இக்கொடுஞ் செயலையும் முற்றிலும் ஒழித்துவிட்டார். இந்நோக்கத்தினலேயே வேட்டையாடுவதையும் முற்றும் வெறுத்து நீக்கினர். வேட்டையாடுவதற்கு வெளியே

புறப்படுவதற்குப் பதிலாக, ஊர்விட்டு ஊர் யாத்திரை செய்யத் தலைப்பட்டார். அவ்வாறு யாத்திரை செய்யும்பொழுதே மதப்பிரசார வேலையையும் நடத்தினார். மனமாசற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். இந்தப் பக்தியுள்ள பார்த்திபன், பெற்றோர்களிடத்தும், மூத்தோர்களிடத்தும், பிள்ளைகள் மரியாதையாகவும், பக்தி விசுவாசமாகவும் இருக்கவேண்டுமென்றும், வாய்மையினின்று வழுவாமலிருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார். கற்பாறைகளில் அசோக அரசன் வெட்டியுள்ள மானிடரின் ஒழுக்க சம்பந்தமான உரைகள் பலவற்றுள், ஒன்று பின்வருமாறு பிறங்குகின்றது: 'தந்தையையும், தாயையும் பேணிப் பணியவேண்டும். உயிருள்ள எவ்விதப் பிராணியிடத்தும் அன்பும், இரக்கமும் காட்டுதல்வேண்டும். வாய்மையினின்றும் வழுவுதல் கூடாது. இவைகள் பக்திக்குரிய நல்லறங்களாகும். இவைகளை இடைவிடாது பழகல்வேண்டும். இங்ஙனமே மாணவர்கள் ஆசிரியர்களைப் போற்றவேண்டும். உற்றார் உறவினரிடத்து, உளம்தளராத மரியாதையோடு பழகவேண்டும். இவைகள்தான், பண்டைக்கால பக்தியின் பண்புகள். இவ்வாறு வாழ்ந்தால், வாழ்நாள் பெருகும். இவ்வாறே மக்கள் வாழவேண்டுமென்பது அரசனது ஆணை.' இப்போதனைகள், யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் உரியனவான பின்வரும் கற்பனையோடு வியக்கத்தகும் முறையில் மிகவும் ஒத்திருக்கின்றன. 'உன் இறைவணங்கிய கடவுள் உனக்கு கொடுத்துள்ள நாட்டில், உன் வாழ்நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தாய் தந்தையரைக் கனம்பண்ணுவாயாக.'

தற்கால வளர்ச்சி நெறியில் தொடர்புறுத்தப்படும் மூன்று முக்கிய விஷயங்கள், அசோக அரசரால் அக்காலத்திலேயே எதிர்பார்க்கப்பட்டிருந்தன. அவைகள் (1) பிற சமயங்களை இகழாது சகிக்குந்தன்மை, (2) மருந்து நிலையங்களை நிறுவுந்தன்மை, (3) புறவகுப்பினரிடத்து அறநெறியோடு கூடிய அன்புரிமை காட்டுந்தன்மை என்பனவாம்.

பின்னும் அவர் பல வரையறைகளை ஏற்படுத்தியிருந்தனர். "அளவுக்குமேல் எவரும் தன்னுடைய சமயத்தைப் "புகழுவாவது, பிறர் சமயத்தை இகழுவாவது கூடாது.....

"ஒவ்வொரு சமயமும், ஏதேனும் ஒரு காரணம்பற்றியா
"வது போற்றத் தகுந்ததாக இருக்கின்றது. எவன் ஒரு
"வன் பிறனுடைய கொள்கைகளையும், கோட்பாடுகளையும்
"தூற்றுகிறானோ, அவன் தன்னுடைய கொள்கைகளையே
"தாழ்த்துகின்றான்."

மருந்து நிலையங்களைப்பற்றி, ஒரு கல்வெட்டில் பின் வருமாறு வரைந்துள்ளார். "அந்நிலையங்கள் இரு திறப்படும். ஒன்று மக்கட்கு உதவுவது, மற்றொன்று மாக்கட்கு உதவுவது. இந்நிலையங்கள் இராஜ்ஜியத்தில் பல பாகங்களில் நிறுவப்பெற்றிருக்கின்றன. மருந்துக்கு வேண்டப்படும் செடி கொடிகளும், பிறபொருள்களும் அசோகருடைய இராஜ்ஜியத்திலேயே பயிரிடப்பெற்றன. அன்றேல், பிறநாடுகளிலிருந்து வருவிக்கப்பெற்றன."

இறுதியாக, தமது இராஜ்ஜியத்தில் வாழும் வனசரர்களிடத்து மிக்க அன்பு கூறுவதாகவும், முற்கூறியவர்கள் அரசரிடம் அச்சமின்றி விசுவாசம் கொள்ளவேண்டுமென்றும், அரசர் இவர்கள் இன்புற்றிருப்பதையே அபேட்சிக்கிறார் என்று அரசாங்கப் பொறுப்பாளிகள் இவர்களுக்கு உறுதி கூறவேண்டும் என்றும் இவர்கள் அரசரைத் தந்தையைப்போல் போற்றிக் கருதவேண்டும் என்றும் அறிவித்துள்ளார்.

அசோகரை இன்றுநாள் வரையிலும் தமது குடிகளின் தயையுள்ள தந்தையென்றே எண்ணிவருகின்றோம். பொது நன்மைக்காக, தாம் உழைத்த உழைப்பைப்பற்றியும், படுக்கையிலிருந்தாலும், அந்தப்புரத்திலிருந்தாலும், உணவுச்சாலையிலிருந்தாலும், யார் எக்குறையைத் தெரிவிக்க வந்த பொழுதும், தாமதமின்றி தாம் செவிகொடுத்து வந்ததைப் பற்றியும் அவரே கூறியுள்ளார். உத்தம நோக்கங்களையுடைய பல பெரியார்களைப் போலவே இவருக்கும் இவர் இயற்றிய நற்செயல்களில் திருப்தியுண்டாகவில்லை. இன்னும் செய்யவேண்டுவன பல உளவென்றே எண்ணிவந்தனர். 'என்னுடைய முயற்சிகளில் நான் ஒருபொழுதும் திருப்தியடையவேயில்லை' என்று அவர் கூறியுள்ளார்.

இம்மகானின் சொல்லும் செயலும் இத்தன்மையன. பேசின பேச்செல்லாம் அறவுரைகளே. செய்த செயல்க

ளெல்லாம் அறச்செயல்களே. மனிதர்கள் மனங்கொள வேண்டிய அறக்கொள்கைகள் வரையப்பெற்றுள்ள பாறை களும் தூண்களும் தம்முடைய பரந்த இராஜ்ஜியத்தில் பீஷ வாருக்கு அப்புறமிருந்தும் மைசூர், ஒரிஸா வரையிலும் காணப்படுகின்றன. பம்பாய் மாகாணத்தில் தாஞ ஜில்லா வில் சாப்பாரா என்னுமிடத்திலும், ஜானகாத்துக்கருகில், கிர்ஞர் குன்றிலும் சிலாசாஸனங்கள் காணப்படுகின்றன. அங்குள்ள எழுத்துக்கள் சமஸ்கிருத மொழிக்கு ஒத்துள்ள பிராகிருத அக்ஷரங்களாலும், இலங்கையில் காணப்படும் பௌத்த நூல்கள் எழுதப்பெற்றுள்ள பாலி எழுத்துக்களா லும் வரையப்பட்டுள்ளன.

ஐரோப்பிய சரித்திரத்தில் அசோகருக்கு முற்றும் ஒப் பான அரசர் ஒருவர் உண்டெனக் கூறுவதற்கிடமில்லை. இருந்தபோதிலும், சிற்சில சந்தர்ப்பத்தில், மாண்புற்ற சக் கரவர்த்தியாகிய மார்க்கஸ் அரீலியஸ் (Marcus Aurelius) என்பவரையும், வேறு சில விஷயங்களில் ஆங்கில மன்ன ராகிய ஆல்பிரட்டையும் (Alfred) ஒத்திருக்கின்ருர். அசோ கர் ஆல்பிரட்டைப்போல கொடிய துன்பந்தரு பகைஞரோடு போர்புரியாமல், போர்புரியவேண்டிய பிரச்சனைகளிலிருந்து விலகியிருந்தனர். ஆனுலும், தன் குடிகளுக்கு நன்மை செய் வதில் இடைவிடா ஊக்கம் கொண்டதாலும், அவர்களுடைய உயிர்களையும், உடல்களையும் காக்க முயன்றதாலும், பெருங் குணமுடைய சாக்ஸன் (Saxon) சக்கரவர்த்தி ஆல்பிரட் டோடு ஒப்பாகப் பேசுவதற்கு உரியவராயிருக்கிருர்.

இத்தகைய வாழ்க்கையே ஒரு அருமபெருஞ் செயலா கும்.

## II

## உடன் பிறந்தோர்களில் உயர்வுற்றவன்

டில்லி நகரத்திற்கு வடக்கே நூறு மைல்களுக்கப்பால் இந்திய சரித்திரத்தில் மிகச் சீர்த்திவாய்ந்த தனேச்வரம் என்னும் பழம்பதி யொன்றுண்டு.

அங்கநகரத்தைச் சூழ்ந்துள்ள நிலப்பரப்பை இந்துக்கள் புண்ணிய பூமியாகப் போற்றி வருகின்றார்கள். ஏனெனில் அவ்விடத்தில் தான் மகாபாரத மென்னும் சிறந்த வீரகாவியத்தில் சொல்லப் பட்டுள்ள பாண்டவ, கௌரவப் போர்கள் நிகழ்ந்தன. சந்திர கிரஹண காலையில் ஆயிரக்கணக்கான தேசாந்திரிகள் தனேச் வரத்துக்குச் சென்று, அங்கநகரிலுள்ள பிரம்மசாரப் பொய்கையில் நீராடுவார்கள். அன்று அப்பொய்கையின் நீர், மற்ற தடாகங்களி லுள்ள தீர்த்தத்தைக் காட்டிலும் புனிதமுடையதாகக் கொண் டாடப்படும்.

அங்கநகருக்குப் பக்கத்தில்தான் வேறுபல பெரும் போர்களும் நிகழ்ந்திருந்தன. அவைகளில் ஒருசமயம் பிருதிவி ராஜன், ஷகாபுடீன்கோரி என்பவனைத் தோற்கடித்தான். பின்னர்தானே அவனால் அவ்விடத்தில் தோல்வியுற்றான்.

ஏழாவது நூற்றாண்டில் சிலாதித்யன் என்னும் பெயர் பெற்ற ஹர்ஷவர்த்தனன் வடஇந்தியா முழுவதையும் வென்று, தனேச் வரத்தை ஆண்டுவந்தான். அவனுடைய அரசாட்சிக் காலத்தில், கீர்த்திபெற்ற சீனதேசாந்திரிகளான பாகின், யுவன் சுவங் என்ப வர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். அப்பொழுது கியாதிபெற்ற நூலாசிரியனான பாணன் என்பவன் ஹர்ஷனுடைய நெருங்கிய நண்பனானான். அவன் ஹர்ஷனுடைய சிறந்த ஆதரச்செயல் களைக்கொண்டாடும் அறிகுறியாக, 'ஹர்ஷ சரித்திரம்' என்னும் நூலை இயற்றினான். பின்பு ஹர்ஷன் நீண்டதும் வெற்றியுற்றது மான அரசுபுரிந்து 647-வது ஆண்டில் இம்மண்ணுலகைத் துறந்து விண்ணுலகை எய்தினான்.

குப்த பரம்பரையில் தோன்றிய பிரபாகர வர்த்தனன் என்ற அரசன் தனேச்வரத்தை ஆண்டுவந்தான். அவன் உரனும் ஊக்கமும் பொருந்தியவன். சிறந்த போர்வீரனும் இராஜ தந்திரியுமாவன். அவன் அயல்நாட்டரசர்களை அடிப் படுத்தி ஆண்டுவந்ததுடன் பற்பல போர்களில் பயத்தைத் தரும் பல அவுணப் (Huns) படைகளையும் தோற்கடித்துள் ளான். உயர்குலத்தில் உதித்தவளும், பேரழகு வாய்ந்த வளுமாகிய அவனரசிக்கு இரண்டு ஆண்களும் ஒரு பெண் ணும் பிறந்தார்கள்.

இவர்களில் மூத்தவனாகிய ராஜவர்த்தனன், சிந்தனையைச் சிறுதுறையில் செலவிடாதவன்; தனது நேரத்தின் பெரும் பாகத்தைப் படிப்பிலேயே பயன்படுத்துவன். ஆனால் இளை

யவனாகிய ஹர்ஷன் தன் தந்தையைப்போலவே போர்த்திற னில் பொலிவுற்று வந்ததோடு சிறுவர்களுக்குரிய வீரச் செயல்களிலும் மிக்க செருக்குற்றிருந்தான். அரசகுமாரி யாகிய ராஜ்யஸ்ரீ பல வழிகளிலும் சாமர்த்தியமுடைய வளாயிருந்தாள். அவள் இளம்பிராய காலத்தில், ஞான நூல்களை ஓதியுணர்ந்து, அவற்றில் பாண்டித்யமுள்ளவளாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அவள் தன் இனிய குரலால் பாடுவதுடன், பல இசைக்கருவிகளைக்கொண்டு இசை பயிலும் திறமையும் வாய்ந்தவள். கண்டார் காத லிக்கும் கட்டழகும், உளம் சோரா உற்சாகமும் அவள்பால் அமையப்பெற்றிருந்தன.

அவளுடைய சகோதரர்களாகிய இரு ராஜகுமாரர் களும் அவளிடத்தில் மிக அன்புபாராட்டி வந்தார்கள். ஆனால் ஹர்ஷனுக்கும் அவன் சகோதரிக்கும் உள்ள பந்த பாசம் மிக நெருங்கினதாகையால், ஒருவரையொருவர் விட்டுப் பிரிதல் பெருந்துயரத்தை விளைவிப்பதாக இருந்தது.

சில ஆண்டுகளுக்குப்பின் ராஜ்யஸ்ரீ அரசி கன்னோசிநாட் டரசனை கிரஹவர்மனை மணந்தாள். பெற்றோர்களும் மகிழ்ந்தார்கள்; மணவினைகள் சிறப்பாக நடந்தன.

மணப்பெண் மணமகனது அகத்துக்குச் செல்லும்போது தன் இளைய சகோதரனை விட்டுப்பிரிதல் தனக்கும் ஹர்ஷா வுக்கும் வருத்தத்தையும் விசனத்தையும் தந்தது. தாங்கள் பாலிய வயதில் கூடி விளையாடி மகிழ்ந்ததற்கெல்லாம் முடிவு வந்ததேயென்று வருந்தினார்கள்.

தனேச்வரத்தைவிட்டு ராஜ்யஸ்ரீ தன் கணவனோடு சென்றவுடன், அரசன் தனது மூத்தகுமாரனை யழைத்து 'நீ கவசந்தரித்து என்னுடைய எதிரிகளிடம் சென்று போர்புரியத்தக்க பருவத்தை அடைந்துள்ளாய். உன்னோடு கூட, அனுபவமும் ஆற்றலும் அமைந்த தலைவர்களடங்கிய பதினாயிரம் படைவீரர்கள் பின்தொடர்ந்து செல்லும்படி யாகக் கட்டளையிட்டிருக்கின்றேன். அவர்களைக்கொண்டு அவுணர்களை சம்ஹரிக்கப் படையெடுக்கவேண்டும்' என்று சொன்னான்.

போர்புரிய மனமற்றவனாய் தனது வாழ்நாட்களைத் தியா னத்திலும், நூல் ஆராய்ச்சியிலும் கழிப்பதே ராஜவர்த்தன

னுடைய உண்மையான விருப்பமாக இருப்பினும், அவன் ஒரு அரசகுமாரனுனபடியால், போர்க்கலையிலும் பயிற்சி பெற்றிருந்தான். ஆகையால் அவன் தனது தந்தையின் சிறந்த போர்வீரர்களோடுகூடிய திரண்ட குதிரைப் படைக ளுக்குத் தலைவனுகப் புறப்பட்டுச் சென்றுன்.

பல நூற்றுக்கணக்கான யானைகள் படைகளுடன் சேர்ந்து சென்றன. இவைகளின் பின்னே இளைய ஹர்ஷன் சேனை களை ஏவும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல், போர்ப்பயிற் சியில் பிரியமும் அனுபவமுங்கொள்ளுமாறு தனக்குரிய குதி ரைப் படைக்குமாத்திரம் தலைவனுகச் சென்றுன்.

இந்தப் படையெடுப்பானது உற்சாகத்தன்மையுள்ள சிறுவனுகிய ஹர்ஷனுடைய மனதிற்கு முற்றிலும் பொருத்த முள்ளதாக இருந்தது. ஆனுலும் தப்பியோடுகின்ற அவுணர் களைப் பின்தொடர்ந்து செல்வது அவனுக்கு அதிசீக்கிரம் களைப்பைக் கொடுத்தமையால் இமயமலைச்சரிவின் வழியாகப் போய்க்கொண்டிருக்கிறவர்களைப் பின்தொடர்ந்து பிடிக்கும் பொறுப்பை தனது தமையனுக்கு விட்டுவிட்டு, ஹர்ஷன் காட்டிலுள்ள சிறியதும் பெரியதுமான பலவகை விலங்கு களை வேட்டையாடுவதற்காகத் தங்கியிருந்தான். இவ்வாறு சிலநாட்களாக, மிகுதியான காட்டு விலங்குகளைக் கொன்று இன்புற்றிருந்தபிறகு இளைய அரசனுகிய ஹர்ஷன் வீட்டுக் குத் திரும்பிச்செல்வதைப்பற்றி எண்ணத் தொடங்கினுன். 'ராஜவர்த்தனனுடைய வருகைக்காகக் காத்துக்கொண்டி ருப்பதில் பயனில்லை, ஏனெனில் அவன் தன் சேனைகளைத் தள்ளிக்கொண்டு எதிரியைப் பின்தொடர்ந்துபோயுள்ளான். திரும்பி வருவதற்கு பல வாரங்களாகலாம். அதனுல் தனைச் வரத்துக்குச் சீக்கிரம் திரும்பிச்செல்லத் தயாராயிருக்க வேண்டுமென்று' ஹர்ஷன் தன்னுடன் வந்த மனிதர்களுக் குக் கட்டளையிட்டான்.

அவன் ஊர்ப்பிரயாணத்திற்காக இளைப்பாறிக்கொண் டிருந்தபொழுது, அரசனுல் அனுப்பப்பட்ட செய்தியாள் ஒருவன் வந்துசேர்ந்தான். அவன் நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பாலும், துன்பத்தாலும் பாதிக்கப்பெற்றிருந் தமையால், கொண்டுவந்த செய்தியை உடனே சொல்ல முடியவில்லை. கடைசியாக அவன் ஹர்ஷனிடம் 'தந்தை

யாகிய அரசர் மிக்க ஜ்வரத்தால் வருந்தி மரணத்தறுவாயி லுள்ளார்' என்ற துக்க செய்தியை அறிவித்தான்.

ஹர்ஷவரசன் தன் தந்தையினிடம் மிக்க அன்புசெலுத்தி வந்தவனுதலால், துணைக்கு ஒருவரையும் எதிர்பாராமல் தனேச்வரத்துக்கு உடனே புறப்பட்டான். உணவைப் பாராமலும், களைப்பைச் சிந்தியாமலும் அவன் அதிவேக மாகத் தன் நகருக்குக் குதிரையேறிச்சென்றுன். அவன் அவ்விடத்தையடைந்தபொழுது அங்கெல்லாம் துக்கமும் குழப்பமும் நிறைந்திருக்கக் கண்டான்; அரசர் இறக்குந் தறுவாயிலிருந்தமையால் ஹர்ஷன் அவர்பால் அணுகின பொழுது, அவனிடத்தில் இரண்டொரு இனிய புத்திமதி களைத் தவிர மிகுதியாய்ப் பேசமுடியவில்லை. அவர் தமக் குப்பிறகு ஹர்ஷன்தான் பட்டம் சூடவேண்டும் என்னும் கருத்தை வெளியிட்டு மரித்தார்.

அரசியானவள் துன்பத்தில் ஆழ்ந்தவளாகி அக்கால வழக்கப்படி உடன்கட்டையேறினுள். அச்சமயம் ஹர்ஷன் தனியே விடப்பட்டான். ஏனெனில் ராஜவர்த்தனன் என் னும் இளவரசன் இராணுவக் கடமையை நிறைவேற்ற வெகு தூரம் சென்றிருந்தான். குமாரியான ராஜ்யஸ்ரீயும் கன் னேசி நாட்டில் தன் கணவனுடைய அரண்மனையிலிருந் தாள்.

இறந்த அரசருக்குரிய உத்தர கிரியைகள் முடிந்தவுடன் அமைச்சர்கள் ஹர்ஷனை அணுகி அரியணையில் அமர்த்த விரும்பினர். ஆனல் அவன் மிகுந்த ராஜ விசுவாசத்தோடு மறுத்து, தன் சகோதரன் அடையவேண்டிய உரிமையைத் தான் பெற்றுக்கொள்ள இஷ்டமில்லை என்றனன்.

சில நாட்களுக்குப் பின்னர், ராஜவர்த்தனன் தனேச் வரத்துக்கு வந்துசேர்ந்தான். உற்ற செயல்களை உளங் கொண்டு சிலகாலமாக துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தானே யொழிய, வேறு ஒன்றும் அவனல் செய்ய இயலவில்லை. தன் தந்தையின் ஆசிமொழிகளைப் பெறவும், தாயினுடைய பிரி வைக் காணவும் இயலாது காலந்தாழ்த்து வந்ததுபற்றி தன் னைத்தானே மிக நொந்துகொண்டான்.

அவன் சற்று அமைதியுற்றபொழுது ஹர்ஷனையணுகி, தந்தையின் பட்ட உரிமையைப்பற்றித் தன் உள்ளக்கருத்

துகளைப் பின்வருமாறு அமைதியுடன் உரைத்தான்:—'விவேகமும் குடிப்பிறப்பும் அமைந்த நமது தந்தையார் தமக்குப் பின்பு நீ முடிசூடவேண்டுமென்று கருதினார். அது எனக்குப் பன்னாட்களாகத் தெரியும். அவர் நடுவுநிலைமையுள்ளவரும், பண்புகளைப் படிப்பவருமாவர். என்னிடத்தில் ராஜத்துவத்துக்குரிய இயல்புகள் இல்லையென்று நன்கறிந்தார். மேலும் அரசுரிமையைப் பெறுவதைக்காட்டிலும் ஆற்றலும் பொருளும் இன்றி நான் துறவியாய் இருப்பதே மேல் என்று கருதினார். உனது முகத்தில் ஆண்மையும் ஆர்வமும் ஆர்ந்திருப்பதால் சிறந்த அரசனாவதற்குரியவன் நீயே என்றறிந்தார்.' இவ்வாறு சொல்லி, தன்னிடமிருந்த வாளை வீசியெறிந்து ஹர்ஷனைப்பார்த்து 'நான் இன்று தொட்டு வாளை யெடுப்பதில்லை, நமது சீரிய தந்தையார் தீரத்தோடும் தெளிவோடும் ஆண்டுவந்த ராஜ்யத்தை உனக்கே அளிக்கின்றேன்' என்று கூறினான்.

ஹர்ஷன் உடன் பிறந்தோனுடைய உரைகளைக் கேட்டபொழுது, ஒன்றுந்தோன்றாமல் வெட்கத்தாலும் விசனத்தாலும் தலைகுனிந்தான். ஏனெனில் இளையவனாகிய தனக்குத் தந்தையார் அரசுரிமை யளித்தார் என்பதை ராஜவர்த்தனன் அறிந்திருக்கலாம் என்று பயந்தான்.

பின்பு நடுக்கமுற்று தாழ்ந்த குரலோடு 'அருமையான சகோதரனே, என்னோடு சீற்றங்கொள்ளாதே. அவர்கள் என்னை அரசனாயிருக்க வேண்டிக்கொண்டது உண்மையே. ஆனால் நான் அவ்வேண்டுகோளை விலக்கினேன். எனது ஒரே விருப்பமாவது நீ முடிசூடவேண்டும், நான் உன்னிடம் சேவை செய்யவேண்டுமென்பதே' என்று பகர்ந்தனன். ராஜவர்த்தனன் தன் தம்பியின் ஆர்வ மொழிகளைக்கேட்டு இரங்கினான். பின்னும் அவனைநோக்கி 'ஹர்ஷனே அப்படியல்ல, நான் உன்னைப்பற்றியாவது, உனது அன்பைப்பற்றியாவது ஐயுறவில்லை. நான் அரசனாவதற்குச் சற்றேனும் விரும்பவில்லை. எனக்குரிய அரியணையை நீ பெறுவாயாக. எனது அன்பும் ஆசிகளும் உனக்கு உரியவைகளே' என்று கூறினான்.

இருதயக்கலக்கத்தால் யாதும் பேச நாவெழாதபடி அவர்கள் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார்கள். அச்சமயத்தில்

கீழே அரண்மனை முற்றத்திலிருந்து வரும் பெருங்குழப்ப வோசையைக் கேட்டு, ராஜவர்த்தனன் பொள்ளெனக் குதித்தோடி தான் சற்றுமுன் எறிந்த வாளையெடுத்தான். தானும் ஹர்ஷனும் கடூர முகக்குறியோடு குழப்பத்தின் காரணத்தை என்னவென்று அறிய எதிர்பார்த்திருந்தனர்.

கன்னோசி நாட்டிலிருந்து வந்த தானாதிபதி ஒருவன் எவ்வித ஆசாரம் மரியாதையுமின்றி அறையினுள்ளே நுழைந்து, அவர்களை நோக்கி 'ஐயோ! நான் மிக்க பயங்கரமான செய்திகளோடு வந்துள்ளேன். தீரனும் சிறந்தவனுமான கிரஹவர்மன், பகைவனும் தீயவனுமாகிய மள்ளுவ நாட்டரசனால் அநீதியாய்க் கொல்லப்பட்டான். இக்கொடுஞ் செயலுடன் திருப்தியுறாமல், அரசியாகிய ராஜ்யஸ்ரீயை ஒரு திருடனின் மனைவியைப்போல் சிறைப்படுத்தி அவளது மெல்லிய கரங்களையும், கால்களையும் இருப்பு விலங்குகளால் இறுகக்கட்டியுள்ளான்' என்று அலறினான்.

இவ்வித பயங்கரச் செய்திகளைக் கேட்டவுடன், அவர்கள் திகைத்துச் சிறிதுநேரம் குன்றைப்போல அசைவற்றிருந்தார்கள். பின்பு ராஜவர்த்தனன் அந்நிலையினின்றும் மாறி கோபாவேசத்தோடு, 'எனது உடன்பிறந்தவளுக்குற்ற தீங்குகளுக்காகப் பழிவாங்கவும், சீரிய கிரஹவர்மனுடைய உதிரம் சிந்தும்படி உயிர்க்கொலைசெய்த கொடுமை நிறைந்த கொலையாளியைக் கொல்லவும் புறப்படுகின்றேன்' என்றுரைத்ததும், பழிவாங்கும் வீரத்தோடு கனன்றுகொண்டிருக்கும் மனத்தையுடைய ஹர்ஷன் தானும் பின்தொடர்ந்து வருவதாகக் கூறினான். அவன் தனது தம்பியை நோக்கி அதிகாரத்தொனியோடு 'ஹர்ஷனே, அப்படியல்ல; நம்மில் ஒருவர் இவணிருந்து சிம்மாசனத்தைக் காக்கவேண்டும். ஆதலால் நீ இவ்விடம் தங்கியிருப்பாய். நான் திரும்பாவிடில் நீயே குடும்ப காரியங்களைக் கவனித்துக்கொண்டு வருவாயாக' என்று விடையளித்தான். இச்சொற்கள் ஹர்ஷனுக்குத் துன்பத்தை விளைவித்தன. ஏனெனில் தன் சகோதரியின்பேரில் வைத்த இரக்கத்தால் அவளுக்குற்ற தீங்குகளுக்காகப் பழிவாங்க சகோதரனோடு செல்ல ஆசையுற்றிருந்தான். ஆனால் பெரியோர்களுக்குப் படிந்து நடக்கும் பழக்கமானது இந்தக் குப்த பரம்பரையில் சிறந்திருந்

தமையால் ஹர்ஷன் ராஜவர்த்தனனுடைய கட்டளைக்கு இணங்கினன்.

ராஜவர்த்தனன் தன் சேனைகளை மீண்டும் திரட்டிக் கொண்டு தனேச்வரத்தினின்று புறப்பட்டுச்சென்று மள்ளுவநாட்டரசனோடு பொருது அவனது படைகளில் பெரும் பாகத்தைச் சிறைப்படுத்தி வெற்றி முரசறைவித்தான்.

தனேச்வரத்தில் உள்ளவர்கள் அனைவரும் வெற்றிச் செய்திகளைக் கேள்வியுற்றுப் பெரிதும் மகிழ்ந்து, தங்கள் அரசனைப் புகழத்தொடங்கினர். ஆனாலோ, அவனைப்பற்றியுள்ள தீவினை மீண்டும் சோதிக்கத் தொடங்கிற்று. நல்ல செய்திகளுக்கு மாருக துன்பச்செய்திகளும் வந்தன. ஹர்ஷன் தனது தீரமுள்ள சகோதரனைப் புகழ ஆர்வத்தோடு எதிர் சென்றபொழுது அவனைக் காணுது, அவனுடைய சேனைத்தலைவனையும், வாடிய முகத்தோடு வந்துகொண்டுள்ள கூட்டத்தையும் கண்டான். 'என்ன, இன்னும் ஒரு விபத்தா?' என்று அரச குமாரன் அலறினன். அதைக் கேட்ட தூதன் பெருங்குரலோடு 'அவ்வித துன்பகரமான செய்திகளைத் தெரிவிக்க வந்ததைப்பற்றி வருந்துகின்றேன். அஃதாவது நமது சிறந்த அரசனுன ராஜவர்த்தனன் தனது பாதத்தைப் பகைவனுடைய கழுத்தில் வைத்து மிதிக்கையில், கௌடா நாட்டரசன் தனது அங்கியில் வாளை மறைத்துக்கொண்டு சிநேக பாவனையோடு நெருங்கி நம்மரசனைக் கொன்றுவிட்டான்' என்ருன். உடனே ஹர்ஷன் கோபத்தால் வெதும்பிய உள்ளத்தோடும் துன்பத்தால் கறுகிய முகத்தோடும் தூதுவனை நோக்கி 'எனது சகோதரி ராஜ்யஸ்ரீயைப்பற்றி என்ன செய்தி' என்று வினவினன். அதற்குத் தூதுவன் 'இவ்விதச் செய்திகளை அறிவிக்க வருவதற்கு முன்னதாகவே நான் இறந்திருக்கக்கூடாதா? உங்கள் சகோதரியை மள்ளுவ நாட்டரசன் ஓர் இருட்டறையில் சிறைப்படுத்தியிருந்தான். அவள் அதினின்றும் தப்பி விந்தியமலைக் காடுகளுக்குள் ஓடி மறைந்துகொண்டாள்' என்று கூறினன்.

ஹர்ஷன் அவனை நோக்கி 'அவளுடன் யார் சென்றது? காட்டு விலங்குகளால் நேரும் அபாயங்களினின்றும், எதிர்பாராத துன்பங்களினின்றும் அவளைக் காப்பாற்றுவதற்கு

எனது சகோதரனுடைய தேர்ச்சிபெற்றவர்களும், வலிமையுள்ளவர்களுமான வில்லாளிகள் எவரும் செல்லவில்லையா?' என்று கேட்டான்.

ஹர்ஷனது முகத்தில் தோன்றும் வெறுப்பை நோக்க விருப்பமில்லாத ராணுவத்தலைவன் அவனை நோக்கி 'அச்சீரிய நங்கை வில்லாளிகள் எவருமின்றித் தானே தப்பியோடினாள். சில பெண்களும், தன் கணவனது அரண்மனையில் விதூஷகனாக வேலைபார்த்து வந்த ஒரு குள்ளனும் தவிர வேறு ஒருவரும் அவ்வம்மையுடன் போனதாகத் தெரியவில்லை' என்று விடையளித்தான்.

அப்போது ஹர்ஷனுக்குற்ற கோபத்தை நோக்கப் பயங்கரமாயிருந்தது. ஹர்ஷன் தனது கொலு மண்டபத்தினின்றும் அகன்று விரைந்துசெல்லுகையில், அவனது வேலையாட்கள் அவனுக்கு முன்னே பயந்தோடினார்கள். இப்போது இவ்வித கோபமுற்றிருக்கும் இவ்வாண்மகன் தானா தன் சகோதரன் மார்பில் விழுந்து அழுது கண்ணீர்விட்டானோ? தனது சகோதரி ராஜ்யஸ்ரீயோடு அரண்மனைத் தோட்டங்களில் களிப்புற்றும் கவலையின்றியும் விளையாடியவன் முன்னே இவன்தானா?

பின்பு ஹர்ஷன் யானைகட்குத் தலைவனும் வலிமையுள்ளவனுமான ஸ்கந்தகுப்தனை அழைத்து அவனை நோக்கி பயங்கரமான குரலோடு 'நமது கீர்த்தி மிக்க ராஜவர்த்தனனுடைய உயிரைப்போக்கிய கோழைத்தனமுள்ள கௌடா நாட்டரசனைக் கொல்லப்போகின்றேன். போருக்குத் தயாராகுக' என்று கட்டளையிட்டான். விடியற்காலையில் சேனைகள் போருக்குப் புறப்பட்ட இரைச்சலாலும், பல்லாயிரக் கணக்கான காலாட்படைகளின் நடையோசையாலும், சங்கோசையாலும் அந்நகரத்துக்குடிகள் நித்திரைவிட்டு எழும்பினார்கள்.

ஹர்ஷன் பரந்த சேனைகளுக்குத் தலைவனாக, தனது முடிக்குமேல் அரசக்குடை நிழற்றவும், தனது முகம் துன்பத்தால் வாட்டமுற்றும் குதிரையேறிச்சென்றான்.• இவ்வாறாக ஹர்ஷன் தனது பகைவனைத் தண்டித்து சகோதரியை விடுவிக்குமாறு விரைந்தெய்தினான்.

மக்களுக்காவது மாக்களுக்காவது எவ்வித ஓய்வுமின்றி தொடர்ச்சியாய்ச் சேனைகள் சில நாட்களாய்ப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபடியால், பிரயாணத்தை சற்று நிறுத்தி இளைப்பாறும்படி அரசன் கட்டளையிட்டான்.

ஹர்ஷன் மிக்க விசனத்துடன் கட்டிலில் சாய்ந்து கொண்டிருக்கும்பொழுது, தனது தாயாதியாகிய பந்தியினிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் தான் மள்ளுவ நாட்டரசனுடைய சேனைகளுடன் அருகில் பாளையந் தங்கியிருப்பதாக வரையப்பட்டிருந்தது. தனது மனத்தின் துக்கத்தை எவரிடம் சொல்லி ஆற்றிக்கொள்ளலாம் என்று ஆவலோடிருந்த ஹர்ஷன், தன்முன் பந்தி தாமதமின்றி வரவேண்டும் என்று கட்டளையிட்டான்.

உடனே பந்தி தனியாக குதிரையேறிக்கொண்டு வந்து ஹர்ஷனுடைய கூடாரத்தை யணுகினதும், தனது குதிரையினின்றும் கீழேயிறங்கி உள்ளே நுழைந்தான்.

கோவென்று அலறி ஹர்ஷனது பாதங்களில் விழுந்தான். ஆனால் ஹர்ஷன் அவனை எடுத்துத் தழுவி தனது அன்புள்ள சகோதரியின் செய்தியைப்பற்றி விசாரித்தான்.

பந்தி மிக்க விசனத்துடன் அரசனை நோக்கி, 'மகத்துவமுள்ள மகாராஜனே! கன்னோசி நாடு கௌடா நாட்டரசனுடைய கைவசமிருக்கின்றது. நீர் மிக விரைந்து செல்லவேண்டும். அநீதியுள்ள அரசனை அழிக்கவேண்டும்' என்றான். அப்பொழுது ஹர்ஷன் ஆவலோடு 'எனது சகோதரியைப்பற்றி ஒன்றும் தெரியாதிருக்கின்றபொழுது கன்னோசி நாட்டின் கதியைப்பற்றி எனக்கு என்ன கவலை?' என்றான். பந்தி அரசனை நோக்கி 'எனது வருகைக்கு முன்னமே அவள் ஓடிவிட்டாள். நான் உடனே அவளைத் தேடுவதற்கு ஆட்களை அனுப்பினேன். ஆனால் எவ்வித பயனுமின்றி அவர்கள் விந்திய மலைக்காடுகள் முழுவதும் சுற்றித்திரிந்து அவளைப்பற்றிய செய்திகள் ஒன்றும் அறியாமல் திரும்பினர்' என்று கூறினான். அதைக்கேட்ட அரசன் 'ஆ! ஆ! இத்தகைய மனிதர்களா உனது மனிதர்கள்? அவளை சில பெண்களும், ஓர் குள்ளனும் தவிர வேறு எவ்விதத் துணையுமின்றிச் செல்லும்படி விட்டுவிடவில்லையா?' என்று வெறுப்புடன் விடையளித்தான். மீண்டும் அவனை நோக்கி 'எனது

நலமிக்க பந்தியே! கன்னோசி நாட்டைக் கைப்பற்றியிருக்கும் சிற்றரசனுக்குத் தண்டனை பின் விதித்துக்கொள்ளலாம். தானாகவே ராஜ்யஸ்ரீயைத் தேடப் புறப்படுவேன். அவ்வாறு நான் காட்டின் வழியே தன்னந்தனியாகச் செல்லவேண்டியிருந்தாலும், அவளைக் கண்டுபிடிப்பேனேயன்றி உயிர் வைத்திருக்கமாட்டேன்' என்று கூறினான். பின்பு ஹர்ஷன் சிறிது கோபம்தணிந்து, பந்தியை நோக்கி 'எனது அருமையான சகோதரனே! எனக்கும் எனது சகோதரிக்கும் உள்ள அன்புநிலையை மனித வர்க்கத்திற்குள் நீமட்டும் அறிவாய். நாங்கள் சிறுவர்களாயுள்ளபொழுது சேர்ந்து விளையாடிய பாலப்பருவங்களை ஞாபகம் வைத்திருக்கின்றாயா? எனது சீரிய பெற்றோர்கள் என்னைவிட்டுப் பிரிந்துசென்றார்கள். எனது அன்பு மிக்க சகோதரனே! ராஜ்யஸ்ரீ இந்நேரத்தில் ஒருவேளை சாகுந்தறுவாயிலிருக்கலாம். இவ்வித நிலைமையில் நான் புறப்படாமல் காலந்தாழ்க்கலாமா?' என்று இவ்வார்த்தைகளைக் கூறி அரசன் தனது ஏகாந்த அறைக்குச் சென்றான். பந்தியும் கூடாரத்தைவிட்டகன்று தனது நீண்ட பிரயாணத்தால் களைப்படைந்திருந்தமையால் சற்று இளைப்பாறினான்.

மறுநாள் ஹர்ஷன் மள்ளுவ நாட்டுப் படைக்கைதிகளையும், ராஜவர்த்தனனுடைய பாகத்துக்கு வந்த கொள்ளைப் பொருளையும் பார்வையிட்ட பின்னர், எல்லாவற்றையும் தனது தலைவர்கள் வசம் ஒப்புவித்து, ஒரு சிறு குதிரைப் படையோடு ராஜ்யஸ்ரீயைத் தேடப்புறப்பட்டான்.

சில நாட்களாகப் பிரயாணம் செய்தபிறகு ஹர்ஷன் விந்திய மலைக்காடுகளின் எல்லையை அடைந்து ஒரு சிறு கிராமத்தில் இரவுக்காகத் தங்கினான். மறுநாள் அதிகாலையில் காட்டில் நுழைந்து, தனது சகோதரியைப்பற்றி ஏதாவதொரு துப்பு கிடைக்காதா என்ற கவலையுற்றவனாகப் பல நாட்களாய்த் திரிந்தான். எவ்வித வழிகாட்டியுமின்றி துப்பறியத் தொடங்கிய வேலை சித்திபெறக் கூடியதாய்த் தோன்றவில்லை. அவள் மிகச் சமீபத்திலிருக்கலாம்; அல்லது மிகத்தூரத்தில் இருந்துகொண்டிருக்கலாம்.

இவ்வாறு அரசனுடைய மனம் நம்பிக்கையற்றுத் துன்பத்திலாழ்ந்துள்ள சமயத்தில் ஒரு சிறு வேடனைத் தற்செய

லாகச் சந்தித்து, அவனோடு சொல்லாடத் தொடங்கினான். அவ்வேடன் விந்திய மலைப்பிரதேசங்களின் அரசனுடைய புதல்வனென்பதையும், அவனுக்கு காட்டின் ஒவ்வொரு பெரும்பாதையும், குறுக்கு வழியும் நன்றாகத் தெரியுமென்பதையும் ஹர்ஷன் அறிந்துகொண்டான். பின்பு ஹர்ஷன் அச்சிறுவனை நோக்கி 'அன்பு மிக்க ஐயனே, இச்சிறந்த காட்டைப்பற்றிச் செவ்வையாய்த் தெரிந்துள்ள உம்மை, என்னுடைய பூர்வ ஜன்ம நல்வினையால் கண்டேன். ஏனெனில் உம்மைக்கொண்டு சில உதவிகளைப் பெறக்கூடும் என்று எண்ணுகின்றேன், உமது சஞ்சாரங்களில் ஓர் பெண்மணியையும் அவளுடன் ஒரு சிறிய தோழிக் கூட்டத்தையும் நீர் கண்டதுண்டோ? எனக்குக் கூறுவீர். கௌடா நாட்டரசனுடைய பழிவாங்குதலினின்றுந் தப்பியோடிய அரசி ராஜ்யஸ்ரீயை நான் தேடிச் செல்கின்றேன்' என்றான்.

பின்பு அச்சிறுவன் மெதுவாகத் தலையைத் தாழ்த்தி மிக்க மரியாதையுடன் 'பிதாவே! நீங்கள் தேடிச் செல்லுகின்ற பெண்ணைப்பற்றிய செய்திகளைத் தெரிவிக்கவாவது அல்லது எவ்வித உதவியைச் செய்யவாவது என் தீவினையின் பயனால் முடியாதவனா யிருக்கின்றேன். ஆனால் இக்காட்டில் தமது வாழ்க்கையை தெய்வப் பிரார்த்தனையில் கழித்துவருகின்ற ஒரு புத்தமதச் சன்னியாசி வசித்துவருகின்றார். அவராவது அவருடைய சீடர்களாவது இந்த துன்பகரமான பெண்ணைப்பற்றிய செய்திகளை யறிந்திருக்கலாம்' என்று விடையளித்தான்.

அரசன் தனது மனதில் பொங்கியெழுந்த புதிய ஆர்வத்தால் அவனை நோக்கி 'அவ்விதமானால் அப்பெரியாரிடம் என்னை யழைத்துச்செல்லும்' என்று வேண்டினான். பின்பு இருவரும் அத்துறவியின் இருப்பிடத்துக்குப் போகும் மார்க்கமாகச் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னே ஹர்ஷனது குதிரைப்படைவீரர் சென்றனர். இவ்விதத் துணிகரச் செயலில் தாங்கள் ஈடுபட்டதைப்பற்றி அவர்களுக்குற்ற அதிசயத்திற்கு அளவேயில்லை.

திடீரென அரசன் மரங்களின் ஊடே ஒளிவீசும் ஓர் சிவந்த போர்வையின் காந்தியைக் கண்ணுற்றான். குதிரையினின்றும் கீழேயிறங்கினான். தனது வாயை ஆற்று நீரால்

கழுவினான். தன்னைப் பின்தொடர்ந்தவர்களுக்குத் தான் திரும்பிவரும் வரையில் காத்திருக்கும்படி கட்டளையிட்டுத் தன்னந்தனியனாக சன்னியாசியின் முன்னர் விரைந்து சென்றான்.

சன்னியாசியை எவ்விதம் வணங்கவேண்டுமோ, அவ் விதமாக வணங்கி, அரசன் தனது செய்தியைத் தெரிவித் தான். பின்னும் அவரை நோக்கி 'காணாமற்போன என் தங்கையின் வரலாற்றை நான் அறிந்துகொள்ள மிக்க ஆவ லும் ஆத்திரமுமுள்ளவனாக இருக்கின்றேன். அவள் எந்த நேரத்திலாவது காட்டு விலங்குகளால் தாக்கப்படலாம். அல்லது யானைகளால் மிதிக்கப்படலாம். அல்லது இக்காட்டி னிடத்தில் உணவுப்பொருள்கள் முதலியன அகப்படாத காரணத்தால் பல துன்பங்களை யனுபவித்து இறக்க நேரிட லாம்' என்று கூறினான்.

அரசன் இவ்வித மொழிகளைப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, சன்னியாசியினுடைய வயது முதிர்ந்த சீடனொரு வன் அதி விசனத்தோடு குரு முன் வந்து அஞ்சலிசெய்து 'எம்பெருமானே! மிகவும் பரிதாபமான ஓர் செய்தி. ஒரு அழகிய இளம் பெண் இதுபொழுது மரணச்சிதையில் ஏறிக்கொண்டுள்ளாள். அவ்வித ஆபத்தான நிலைமையி னின்று அவளை நாம் காக்கவேண்டும். அவள் பிழைப்பதற் குரிய உபதேசங்களைப் புரிவதற்கு அவளிடம் துரிதமாய்ச் செல்லுமாறு வேண்டிக்கொள்கின்றேன்' என்று முறையிட் டான். இவைகளைக் கேள்வியுற்ற ஹர்ஷன் தனது சகோதரி யின் அடுத்துள்ள துன்பச் செய்திகளைக் கேட்டதனாலுண் டாகிய மனக்கலக்கத்தை உள்ளடக்க இயலாதவனாய் 'அவளே ராஜ்யஸ்ரீயாவள். ஐயோ, அவள் எல்லா ஆசைகளையும் வெறுத்து மரணத்திற்குத் துணிந்துவிட்டாளா? ஐய, பெரியோய், புறப்படுக, காலந் தாழ்ப்பதற்கில்லை' என்று இவ்வாறாக ஓலமிட்டுக்கொண்டே அன்பு மிக்க சகோதரன் ஆர்வங்கொண்டு குதித்தெழும்பினான்.

வயோதிக சன்னியாசியும் மனப்பூர்வத்துடன் • வழி காட்டியாக முன்னே சென்றார். அரசனோ துறவியின் சீடர்களும் தனது பரிஜனத்தாரும் பின்தொடர்ந்துவர

இளவரசியைத் துன்பத்தினின்றும் மீட்பதற்கு துரிதமாய்ச் சென்றான்.

ஆவலுள்ள சகோதரன் பல பெண்களின் உரத்த அழுகை யொலியை வெகு தூரத்திலிருந்தே கேள்வியுற்றதால் மிக விரைந்து சென்றான். சேர்ந்ததும் அதிசயிக்கத்தக்க தாகப் பல பெண்கள், ராஜ்யஸ்ரீயின் சிதையைச் சூழ்ந்து நின்று பரிதாபமாகப் புலம்புவதைக் கண்ணுற்றான்.

அங்குநின்ற ஒரு பெண், கலக்கமுற்று வருகின்ற ஹர்ஷனைத் தெரிந்துகொண்டு ராஜ்யஸ்ரீயை நோக்கி 'ஓ அருமையான அரசியே! உனது சகோதரன் உனக்கு உதவிபுரிய வந்துகொண்டிருப்பதைப் பார்' என்று அலறினாள். பின்பு ஹர்ஷன் தன் சகோதரியின் முன்பாக ஓடிச்சென்று, அவளது துன்ப நிலையைத்தவிர மற்றெல்லாவற்றையும் மறந்தவனாய், அவளை மெதுவாகத் தூக்கினான். தனது பாலப்பருவத்தில் சகோதரியின் பயங்களை எவ்வாறு போக்கிவந்தானோ, அவ்வாறே இப்பொழுதும், உறுதிச் சொற்களைக்கூறி அவளுடைய உள்ளக் கவலையை மாற்றினான். பின்பு கொழுந்து விட்டெரிகின்ற சுவாலையினின்றும் அவளை அப்புறப்படுத்தினான். சுவாலைகள் தமது உணவுப்பொருளை இழந்து கோபங்கொண்டதுபோல உலர்ந்த கட்டைகளில் பற்றியெரியத் தொடங்கின. அவன் அவற்றைக் கவனியாமல், தனது சகோதரியை அன்போடு ஏந்தி, எவ்வளவு கண்ணீர் சிந்த முடியுமோ, அவ்வளவு அவள் ஏங்கி, ஏங்கி அழுது தீருமட்டும் தாங்கிக்கொண்டிருந்தான். அவள் சிறிது அமைதியுற்றபொழுது, தன்னை ஆபத்தினின்றும் காத்ததற்காக ஹர்ஷனுக்குத் தனது நன்றியைச் சொல்ல முயன்றாள். ஆனால் சொற்கள் எழவில்லை. அவனுடைய முகத்தைமட்டும் உற்று நோக்கலானாள். முகத்தில் பயமின்மையும், பாதுகாப்புத் தன்மையும் பொலிவு பெற்றிருப்பதைக் கண்டாள்.

சில நாட்களாக அவர்களிருவரும் கானகத்தில் தங்கியிருந்தார்கள். சன்னியாசியினுடைய உபதேசங்களைக் கேட்டு, சன்னியாசியைத் தமது நகருக்கு விரைவில் வரும்படியாக வேண்டிக்கொண்டு அவரிடம் விடைபெற்று மகிழ்ச்சியுடனே தமது உற்சாகமுள்ள மெய்க் காவலுடன் குதிரையேறிச் சென்றார்கள்.

அதற்கப்பால் அவர்கள் அரசபக்தியுள்ள பந்தியைச் சந்தித்து எல்லோருமாகத் தனேச்வரத்துக்கு விரைந்து சென்றார்கள். அங்கு குடிகளால் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டார்கள்.

கன்னோசி நாட்டரசனாகவும், வட இந்தியாவிற்குத் தலைவனாகவும், நீண்ட காலமாகக் கீர்த்தியுடன் ஆண்டுவந்த ஹர்ஷனது அரசாட்சிக்காலம் அரும்பெருஞ் செயலுற்ற காலமாய் விளங்கியது. விவேகமும் வெற்றியும் பொருந்திய அவனுடைய மற்ற வீரச்செயல்களைப் பார்க்கிலும், தான் அன்பு செலுத்தி வந்த சகோதரிக்காக மிக்க தீரத்தோடும் தண்ணளியோடும் புரிந்த அரிய செயலே அவனுடைய பின் சந்ததியார் யாவரும் போற்றுவதற்குக் காரணமாயிருந்தது.

# III

## மீவார் நாட்டு இராஜ ஸ்திரீ

ராஜபுதனத்திலுள்ள சித்தூர் கோட்டையைப்பற்றிக் கூறப் பெறும் கதைகள் அநேகம் உள. அக்கதைகள் அக்கோட்டையில் வாழ்ந்துவந்த மக்களின் ஆண்மையைப்பற்றியும், பிராண நஷ்டத்தைப்பற்றியும் கூறுகின்றன. அவ்வித கதைகளைக் கேளாதவர் எவரேனும் உளரோ?

சித்தூர்கர் என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கிப் பார்த்தவர்கள் எவருக்கும், மூன்று மைல் நீளமும், ஐந்நூறு அடி உயரமுமுள்ள செங்குத்தான கற்பாறையும், அதின்மேல் கட்டப்பட்டிருக்கும் அற்புதமான கோட்டையும் இலேசில் ஞாபகத்திற்கு வரலாம். முற்காலத்தில் அது மீவாரின் தலைநகரமாக விளங்கிற்று. மக்கள் வதியும் நகரம் அக்கோட்டையினுள்தான் அமைந்திருந்தது.

ஓர் ஏரியின் கரையில் ஒரு அழகிய அரண்மனையுண்டு. அதன் உன்னத மதில்கள் நீல நிறமுள்ள நீரில் பிரதிபிம்பித்தது. சித்தூரில் உள்ள பழைய அரண்மனைகளுள்ளும், ஆலயங்களுள்ளும் அழிவுறாது நின்றது அதுதான். டில்லியில் தார்த்தாரிய அரசனாக விளங்கிய அல்லாவுடீன், இராஜ புத்திரர்களின் ஊர்களை பாழ்ப்படுத்தியபொழுது, அவனது

கொடுங்கையின் தீச்செயல்களுக்கு உள்ளாகாமலிருந்ததும் அக்கட்டிடந்தான். இலங்கையின் அரசகுமாரியும், அழகே வடிவாகிய பத்மினி என்னும் அரசியார், ராணு பீம்சிங்கிற்கு மனைவியாகப் புகுந்த அரண்மனையும் அதுவே. அங்கிருந்து தான் அவள் தன் உயிரை இழப்பினும் கணவனது மானத்தைக் காப்பாற்ற விரும்பி, சாவுக்கு எதிர்கொண்டு சென்றனள்.

பண்டைய நாளைய பாவலர், பத்மினியின் உருவையும், திருவையும், முகப்பொலிவையும் உவமித்து, வர்ணித்துக் கூறுவதற்கு வார்த்தைகள் வராமல் மயங்கினார்கள். அவளது கண்ணின் கருவிழிகளைப்போல், எந்த உருவும் ஒளிர்வதில்லை. அவள் கன்னங்களின் மென்மை, ரோஜாமலரின் இதழ்களுக்கும் கிடையாது. மாதுளையின் ரசமும் அவளது இதழின் செந்நிறத்திற்கு இணையாகாது. தந்தங்களோ, தாளங்களை விடத் தாவல்லியமுடையன. கரங்களோ, செந்தாமரை யரும்புகளைத் தோற்பிப்பன. பெண்களுக்குள் பெருமலராக விளங்கும் இவளது அழகு எங்ஙனம் மேம்பாடுற்றிருந்ததோ, அங்ஙனமே அவளது குணமும் சீர்பெற்று விளங்கிற்று. நங்கையர்க்குவேண்டும் நல்லறங்களுக்கெல்லாம் அவள் ஓர் எடுத்துக்காட்டாக இலங்கினாள்.

டில்லியில் அரசுபுரிந்த அல்லாவுடீன் தனது அரண்மனை யில் அமர்ந்து, இரவும் பகலும் பத்மினியின் வனப்பையே எண்ணி யெண்ணி உளமுருகினான். அவனது இருதயத்தைக் கவர்ந்து அவனுக்கு இன்பம் கொடுத்துவந்த அழகிய மனைவியர்கள் பலர் அவனுக்கு உண்டு. அம்மனைவிகள் அவனது கடைக்கண் பார்வையின் தயவை எப்பொழுது பெறுவோம் என்று காத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் பால் அவனுக்குப் பெரும் சலிப்புத்தோன்றிவிட்டது. ஈடும் எடுப்புமில்லாத சோகன் அரசகுமாரியின் அழகோடு அவர்கள் அழகை ஒத்திட்டுப்பார்த்தால், அவர்கள் அழகு எம் மாத்திரம்?

அக்கோட்டையின் அணியாக விளங்கும் பத்மினியை தான் அடைய முடியுமானால், சித்தூரை முற்றுகையிட்டிருக்கும் தன் சேனையை மீட்டுக்கொள்வதாகக்கூறி, பத்மினியை டில்லிக்கு தன்னிடம் அனுப்புமாறு இருமுறை கட்டளை

யிட்டனுப்பினுன். இரஜபுத்திர வீரர்களா இடம் கொடுப்ப வர்கள்? தங்கள் அரசியாரை அயலான் கையில் ஒப்புவிப்பதை விட, நூறுதடவை உயிர்துறக்க நேர்ந்தாலும் நேரிடட்டும் எனத் துணிந்தவர்கள். அரசியைப்பற்றிய இவ்வித எண்ணம், அவர்களுக்கு இடையருத வீரத்தை ஊட்டி, மாற்ருனது இரக்கமற்ற படையெடுப்பைத் தடுக்கச்செய்தது.

இஃது இவ்வாறு நிகழ, பத்மினி இரஜபுத்திர வம்சத் திற் பிறந்த உத்தம குடி நங்கையர்களோடு தன் பொழுதைப் போக்கிவந்தாள். அவர்களுடன் சேர்ந்து ஞானநூல்களை ஓதிவந்தாள். இரஜபுத்திரர்களின் ஆண்மையையும், வீரத் தையும் வெளிப்படுத்தும் பாக்களைக் கேட்டுவந்தாள். சிற்சில சமயங்களில் அவள் தன்னந்தனியளாய் தன் மாளிகையின் மேல்நிலையில் உலாவிவருவாள். மற்றுஞ் சில சமயத்தில் படிகளின் வழியாய் இறங்கி ஏரிக்கு வருவாள். அங்கு தண் ணீரில் தனது அழகிய பிம்பத்தைப் பார்ப்பாள். பின்னுஞ் சில சமயத்தில் தனது அரண்மனையின் உயர்ந்த உன்னத இடத்தில் நின்றுகொண்டு, மீவாரின் வெளிகளுக்கு அப்பால் அதிதூரத்திலிருக்கும் மலைகளை நோக்குவாள். அச்சமயங்க ளில் துக்கமும் பயங்கரமுமான எண்ணங்கள் அவளதுஉள்ளத் தைக் கொள்ளைகொள்ளும். அல்லாவுடீனுடைய முன்னேறி வரும் சேனையினது வெற்றிதரும் ஆரவாரம் தன் காதில் விழுவதுபோல பாவித்து, அப்படையை எதிர்த்து நிற்கும் இரஜபுத்திர தளகர்த்தரின் உதிரத்தால் மைதானமெல்லாம் செந்நிறம்பெற்றிருக்கிறதாகவும் தன் மனதில் கிரஹித்துக் கொண்டு, அந்த தார்த்தாரிய குடியிற் பிறந்த அல்லாவுடீன், ராணு பீம்சிங்கின் மனைவியாகிய தன்னை ஒரு கணமும் உயி ருடன் சிறைப்படுத்தமுடியாது என்ற நிச்சயங்கொண்ட வளாய், தன் கைகளை நெருக்கிக்கோர்த்து, தன் கண்களால் வெறித்து நோக்குவாள்.

இந்தியாவெங்கும் ஒப்பற்ற அழகுவாய்ந்த அப்பெண் மணியைக் கண்ணுல்காண ஆவலாய்க் காத்திருந்து, மனம் சோர்ந்த அல்லாவுடீன், பத்மினியைப் பார்க்கமாத்திரம் செய் தால் முற்றுகையிட்டிருக்கும் தன் சேனைகளையெல்லாம் திருப்பிக்கொள்வதாக பீம்சிங்குக்குச் செய்தி சொல்லியனுப் பினுன். அவ்வாறு பார்ப்பதிலும் அவள் மானத்துக்குப்

பங்கம் வராதபடி ஒரு பெரிய நிலைக்கண்ணாடியால், அவள் பிரதிபிம்பத்தைக் கண்ணுற்றால் போதுமென்று கூறினான். இது ஒரு சாதாரண அற்பவேண்டுகோளாக ராணாவுக்குத் தோன்றினமையால், மிகுந்த சந்தோஷத்துடன் அதற்குச் சம்மதித்தான். அல்லாவுடீனும் ஐயம் நீங்குமாறு, சில காவலாளர்களைமாத்திரம் அழைத்துக்கொண்டு சித்தூரினுள் பிரவேசித்தான். பிரதிபிம்பத்தைச் சில விநாடிகள் வரை கவனித்துப் பார்த்தான். தனக்குப் பெரிய கௌரவம் அளித்ததாகவும், தான் மிகமகிழ்ச்சி கொண்டதாகவும், நட்பிற்குரிய உறுதிமொழிகள் பலகூறி ராணா பீம்சிங்கினிடத்தில் விடை பெற்றுக்கொள்ளத் தலைப்பட்டான். இரஜபுத்திர வீரன், வீரத்திற்குப் பின்வாங்காமல், கோட்டையின் அடிவாரம்வரையில் தனது அதிதியைப் பின்தொடர்ந்து சென்றான். இருவரும் ஒன்றாய்ச் செல்லும்போது, அல்லாவுடீன் இரஜபுத்திர வீரர்பால் இன்மொழிகள் பகர்ந்து கொண்டு வரும்பொழுதே ஒரு சமிக்ஞைசெய்தான். பல விடங்களிலும் பதுங்கிக் கிடந்த அவனது வீரர்கள் திடீரென்று பாய்ந்து, இரஜபுத்திரவீரன் தன் வாளையெடுத்து வீசுமுன் அவனைச் சிறைப்படுத்திவிட்டார்கள்.

தனது தந்திரத்தின் சித்தியைப்பற்றித் தானே அகமகிழ்ந்தவனாய், அல்லாவுடீன் பத்மினிக்கு ஒரு கடிதம் அனுப்பினான். அதில் அவளது கணவனது விடுதலையைக் கருதினால், தன்னுடைய ராணுவம் தங்கியிருக்கும் இடத்திற்கு அவள் பிணைப்பொருளாக வந்துவிடவேண்டும் என்று எழுதியிருந்தது.

பத்மினி இந்த மானபங்கமான கடிதத்தைப் பார்த்து மனம்மாள்கி, சினங்கொண்டு தனக்குச் செய்த மான இழிவிற்கும், கணவனுக்குச் செய்த வஞ்சனைச் செயலுக்கும் பழிக்குப்பழி வாங்க மனதில் முடிவுசெய்துகொண்டாள்.

இலங்கையிலிருந்து பத்மினி சித்தூருக்கு மணமகளாக வந்தபோது அவளுடன் இருவர் வந்திருந்தார்கள். ஒருவர் கோரா என்னும் பேர்பூண்ட அவள் மாமன். மற்றொருவர் பன்னிரண்டு வயதுள்ள வாலிபன், கோராவுக்குச் சகோதரி மகன். இருவரும் சோகன் (Chohan) பரம்பரையைச்

சேர்ந்தவர். அவர்கள் உயிருள்ளளவும் எக்காரியத்திலும் நம்பத்தகுந்தவர்களாக விளங்கினார்கள்.

அவர்களைத் தன்னிடம் அழைப்பித்து, தார்த்தாரிய மன்னனை மடக்குவதற்குரிய வழியைப்பற்றியும் ராணா பீம்சிங்கின் மீட்டைப்பற்றியும் கலந்துபேசினாள்.

பத்மினி அழகில் எவ்வளவு மேம்பட்டிருந்தனளோ, அவ்வாறே அறிவிலும் சிறந்து விளங்கினள். அவள் புதிதாக ஒரு யுக்தி கண்டுபிடித்தாள். அதைக்கேட்டு உற்றார் உறவினரெல்லாம் மகிழ்ந்தார்கள். அது அதிக சாமர்த்தியமாக இருந்ததுடன் எளிதில் நிறைவேற்றக்கூடியதாகவுமிருந்தது.

அல்லாவுடீனிடமிருந்து கடிதம் கிடைத்த சில நாட்களுக்குள் பத்மினி அதற்கு ஒரு பதில் அனுப்பினாள். அதில் தன்னுடைய உயர் நிலைமைக்கு ஏற்றவாறு சிறந்த சீர்பெரு நங்கைமார்கள் புடைசூழ டில்லிக்கு குதிரையின்மேல் வர அனுமதித்தால் அவனது விருப்பத்திற்கு இணங்கக்கூடுமென்று எழுதியிருந்தாள். தனது இச்சைக்கு பத்மினி இசைந்ததைக்கண்ட அல்லாவுடீனுக்கு உண்டாகிய ஆனந்தத்திற்கு ஓர் அளவேயில்லை. தான் செய்வதற்கரிய பெருங் காரியங்களைச் செய்யக் கேட்டுவிடுவாளோ என்று அல்லாவுடீன் எதிர்நோக்கிக்கொண்டிருந்தான். ஆனால் பத்மினி கேட்டதெல்லாம் பெண்ணிற் கியல்பாயுள்ள ஓர் அற்ப டம்பமான காரியத்தில் திருப்தியுறுதலே யாதலின், இத்தகைய மகிழ்ச்சி இதற்குமுன் அவனுக்கு உண்டானதே கிடையாது. இதுபோன்று முன் எப்பொழுதும் அவன் இருதயம் களிப்பினால் துடிதுடித்ததேயில்லை. அரசியார் டில்லி அரண்மனையினுள் புகுந்தவுடனேயே சித்தூருக்குப் படைகளையனுப்பி இராஜபுத்திர ஆட்சியை வேரோடு களைந்துவிடவேண்டுமென்று தன் உள்ளத்தில் தீர்மானித்துக்கொண்டான்.

பத்மினிக்கு எவ்வளவு பேரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டுவர இஷ்டமுண்டோ அத்துணைவரையும் அழைத்து வரலாமென்றும், வந்தவுடன் தக்கவகையில் வரவேற்புகள் அளிக்கப்படுமென்றும் சற்றும் தாமதமின்றி பத்மினிக்கு அப்போதே பதில் விடுவித்தான்.

காமங்கொண்ட சுல்தான் அனுப்பிய பதில் பத்மினிக்குக் கிடைத்தது. புதிய புன்னகை அவள் முகத்திற்றோன்றிற்று.

தன் பல்லக்குடன் எழுநூறு பல்லக்குகள் டில்லிக்குவர தயாரிக்கும்படி கட்டளையிட்டனள். பிரயாணத்தில் பெண்ணிற்கு உள்ள மரியாதையில் சிறிதும் வழுவாதிருக்க வேண்டுமென்றும், இராஜபுத்திர வம்சத்தின் கோட்பாடு களின்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் கண்டிப்பான கட்டளைகள் பிறப்பித்தனள்.

பல்லக்குகளில் மெல்லிய பாவையர்களுக்குப் பதிலாக, ஏறுகளுக்கு ஒப்பானவர்களாகிய எழுநூறு மீவார் வீரர்கள் சித்தூரினின்றும் புறப்பட்டனர். ஒவ்வொரு பல்லக்கை யும் ஆறு போர்வீரர்கள் போகிகளின் வேடந்தாங்கிக் கொண்டு தூக்கிச்சென்றனர். ஆனல் பத்மினியோ தன் னுடைய அரண்மனையிலேயே ஒருவரும் அறியாது இருந்து விட்டனள். அந்த ரகசியம் சிலருக்குமட்டுந்தான் தெரியும். பெரும்பாலோர் அப்பல்லக்குகளுக்கு இடையில் மிக நன் ருக அலங்கரிக்கப்பெற்றிருந்த பல்லக்கு ஒன்றில்தான் சோகனின் அழகிய பெண்மணி வீற்றிருப்பதாக எண்ணி னர். மற்றுஞ் சிலர் மன்னவள் மதிமயங்கி இவ்விழி செய லைப்புரிந்தனளே என்று புலம்பினர். ஊர்வலம் மிக்க விம ரிசையாகத் தன்னுடைய இருப்பிடம் நோக்கி வருதலைக் கண்ட மகம்மதிய மன்னன் மனங்களித்தனன். பறவையைப் பற்றிவிட்டோமென்று மனப்பால் குடித்தனன். மனதிற் கிசைந்த மங்கை நம்மிடம் வந்துவிட்டாள், இராஜபுத்திர அரசன் திரும்பிச் சித்தூருக்குப் போவதையும் போகாத தையும்பற்றி இனி யோசித்துக்கொள்ளலாமென்று மன்னன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டனன்.

தார்த்தாரிய மன்னன் தங்கியிருந்த கூடாரம் மட்டித் துணியாலாகியது. அதைச் சுற்றிலும் பல்லக்கில் வந்தவர் கள் சூழ்ந்து நின்ருர்கள். பத்மினியை விரைவிற் காணலா மென்று எண்ணியிருந்த அல்லாவுடீன் சிறிது தாமதமான வுடன் என்ன தடையென்று கடாவினன். தன்னுடைய கணவனிடம் கடைமுறையாகக் கண்டு பேசி வருவதற்குச் சிறிது பொழுதுவேண்டுமென்று பத்மினி விண்ணப்பித்துக் கொண்டாள். அரசனும் அதற்கு ஒப்பினன். ராணு பீம் சிங் அப்பல்லக்கினுள் பிரவேசிக்கும்படி அனுமதி பெற்ருன். ஒருவரையொருவர் சந்தித்துப் பேசுவதற்குக் கொடுக்கப்

பட்ட நேரம் அரைமணி நேரமேயாகும். அரைமணி நேரமும் ஆயிற்று. மேலும் அரைமணி நேரமும் ஆயிற்று. அல்லாவுடீனுக்கு ஆத்திரம் அதிகப்பட்டது. பத்மினி தன்முன் உடனே வரவேண்டுமென்று மீறமுடியாத கண்டிப்பான உத்திரவு ஒன்றை அனுப்பினான்.

இதற்குப்பதில் காவலாளர்போட்ட ஒரே கூக்குரல் தான். பல்லக்கையுங் காணோம். பாவையரையுங் காணோம். சந்தித்துப் பேசுகிறோமென்று சொல்லிக்கொண்டே ராணா பீம்சிங் அங்கிருந்து ஓர் ஒப்புயர்வற்ற குதிரையின்மேலேறி சித்தூருக்குப் பாதிவழி தூரம் பாய்ந்துவிட்டான்.

அல்லாவுடீன் தான் வஞ்சிக்கப்பட்டதையும், அதிலும் ஒரு பெண்பிள்ளையின் சூழ்ச்சியால் தான் ஏமாற்றப்பட்டதையும் நினைக்க நினைக்க அவன் உள்ளம் கோபாவேசத்தால் கொதிக்க ஆரம்பித்தது. பீம்சிங்கைப் பின்பற்றும்படி உடனே ஆட்களை ஏவினான். எதிர்த்தார் எவரையும் அவ்வாட்கள் எமனுலகுக்கனுப்பினர். அதிவிரைவாக முன்னேசென்ற ராணா பீம்சிங்கைப் போர்வீரர்களும் வேகமாகத் தொடர்ந்து சென்றார்கள். சித்தூர் கோட்டை கண்ணுக்குப் புலனாயிற்று. அக்கோட்டையைக் காத்துநிற்கும் கலங்காத காவலர்களும் காணப்பட்டார்கள். ஏரியின் கரையிலுள்ள எழிலுறு மாளிகையில் மன்னன்வரவை எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள் ஏந்திழையான பத்மினி. தார்த்தாரிகளின் ஆரவாரமும் அணித்தில் கேட்கப்பட்டது. ஆனால் பீம்சிங்கோ ஆபத்தின்றி அரண்மனையை அடைந்தான். அல்லாவுடீனுடைய போர்வீரர்கள் உள்ளே புகுமுன்னே கதவுகள் அடைபட்டன.

போர் தொடங்கிற்று. ஒவ்வொரு கட்சியினரும் ஜயத்தையோ சாக்காட்டையோ எதிர்நோக்கி மலைந்தனர். இரஜபுத்திரர் உதிரமும் தார்த்தாரியரின் குருதியும் கலந்து பாய்ந்து மலையின் சரிவுகளெல்லாம் செந்நிறமாகிவிட்டன. கோரா, பாடேல் என்ற சிறந்த வீரர்களால் நடத்தப்பட்ட மீவாரின் மேன்மையுற்ற வீரர்களெல்லாம் செருக்களத்தில் சிறுமையுற்றனர். இரஜபுத்திர வீரர்கள் அடிக்கடி பகைவர்கள் எதிர்ப்பதைத் தடுத்தார்கள். அல்லாவுடீன் சேனை இரஜபுத்திரர் படையைவிட பத்துமடங்கு இருந்தாலும்,

இராணியாரின்பால் வைத்தபக்தி விசுவாசத்தால், அவளது மரணத்தைவிடக் கொடிதாயுள்ள மானபங்கத்தினின்று காப்பாற்றுவதற்காக, தாங்கள் கற்றுத்தேர்ந்த நம்புதற்கரிய வீரதீரச் செயல்களையெல்லாம் போர்க்களத்தில் காட்டினார்கள். பொழுதுபோகுமுன், மதில் சுவர்களைச்சூழ்ந்து பிணக்குவியல்கள் குவிந்தன. என்றாலும் அல்லாவுடீன் சேனைகளும் சிதறுண்டன. எஞ்சியிருந்தவர்களை யிருப்பிடத்திற்கு அழைத்துக்கொண்டார்கள். சித்தூரைக் கைப்பற்றவும் முடியவில்லை. இராணியாரது கௌரவமும் உலையவில்லை.

ஆனால் அன்று இறந்துபட்டவர் அநேகராவர். சோகன் குலத்தைச்சேர்ந்த கோரா என்னும் பிரபு அவர்களுள் ஒருவர். அவரது இளைய மனைவியார் இச்செருவை தன் மாளிகையிலுள்ள பலகணியின் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். தன் கணவர் வெம்போரில் கலந்துகொண்டிருப்பதைப் பார்த்துச் சிறிதும் கலங்கினாளில்லை. அவர் ஆவியைத்துறந்து விழுவதைக்கண்டும் கண்ணீர்விட்டாளில்லை. ஆனால் மிகக் காயமுற்றுக்கிடந்த பாதலைப்பார்த்து எனது கணவர் எங்ஙனம் பொருதாரென்று மெல்லிய குரலுடன் வினவினள். அதற்கு மாறுத்தரமாக, 'யுத்தத்தை நடத்தி அதில் அநேக உயிர்களை வாங்கினவர் அவர்தான். அவர் வாள் சென்றவழியே நான் பின்பற்றினேனேயொழிய பிறிதொன்றும் நான் செய்யவில்லை. குருதி வெள்ளம் பாய்ந்த செங்களத்தில் அனேக பிரேதங்களைக் கம்பளத்தைப்போல் விரித்தார். அநாகரிக அரசகுமாரனைக் கொன்று அவனது பிரேதத்தைத் தலையணையாகக்கொண்டு, மாற்றார் பலர் தன்னைச்சூழ மீளாநித்திரை செய்துகொண்டிருக்கின்றார்' என்று பெருமையுடன் மறுமொழி பகர்ந்தனன்.

இராஜபுத்திர இளங்கைம்பெண் என்செய்வாள்? கண்ணீரை வெளிக்குக் காட்டாமல் 'என் கணவரைப்பற்றி இன்னம் ஏதேனும் உண்டானால் எடுத்து இயம்பு' என்றனள். 'அவரைக்கண்டு அஞ்சவும், அதிசயிக்கவும் எதிரி எவனும் இல்லாதொழித்த அவரது பெருமையை இயம்புவது எங்ஙனம்?' என்றான் அவ்விளைஞன்.

கோராவின் உத்தம பத்தினியின் உள்ளம் அன்பாலும், பெருமையாலும் பூரித்தது. பாதலுக்குக் கடைமொழி

கூறி அன்புடன் விடைபெற்றதும், திருத்தமான மொழிகளால் 'ஏழை தாமதித்தேனென்று என் நாயகன் எள்ளுவரே' என்றுரைத்துப் பெருந்தீயில் புகுந்தனள்.

பத்மினியால் வஞ்சிக்கப்பெற்று சித்தூரைக் கைப்பற்ற முடியாமல் போய்விடவே, அல்லாவுடீனுக்குப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணத்தைத்தவிர வேறு எண்ணமில்லாதவனாகி அல்லும்பகலும் உறக்கமின்றிக் கிடந்தான்.

அல்லாவுடீன் அழகிற்கு நிலைக்களமாகிய அரசியர்பால் கொண்டுள்ள அவாவை யறுத்தானில்லை. அவளைக் கைக்கொள்வதைத் தவிர பிறிதொரு பேறு தனக்கில்லையென்று எண்ணினான். புதிய படைகளைத் திரட்டினான். சிறிது சிறிதாகச் சேகரித்தான். அதி ஜாக்கிரதையாக ஆட்களைக் கூட்டினான். இதற்குள் ராணா பீம்சிங் தன்னிடமிருந்து தப்பி ஓடிப்போய் பதின்மூன்று வருஷமும் ஆய்விட்டது. இன்னும் ஒருமுறை அல்லாவுடீன் தன் சேனைகளைத் திரட்டிக் கொண்டு சித்தூருக்கு விரோதமாய் எய்தினான்.

முன் நிகழ்ந்த போர் நிகழ்ச்சிக்குப் பின்னர், இராஜ புத்திரர் முன்னைய நிலையை அடைய முடியவில்லை. ஆனால் அல்லாவுடீனோ புதிய சேனையை மேலும் மேலும் செலுத்தினான். இவ்வாறு இராஜபுத்திர வீரர்கள்மேல் செலுத்தி, அக்குன்றின் தென்சரிவில் ஒரு சிறு இடத்தைக் கைப்பற்றிக்கொண்டான். ராணாவின் புத்திரரில் பதினொருவர் போர்க்களத்தில் மாண்டனர். மேவாரின் வம்சம் முற்றிலும் அற்றுப்போகாதபடி ஒருவன் மாத்திரம் உயிர்தப்பினான்.

அப்பொழுது தனது அரண்மனையின் கொத்தளங்கள் மேல் நின்று போரின் அமளியைப் பார்த்துகொண்டிருந்த பத்மினி, அல்லாவுடீன் சேனை குன்றைக் கைப்பற்றி முன்னேறி வருவதைக் கண்டதும், தன்னைச் சூழ்ந்துள்ள பெருந்தகையான மடந்தையர்களை யழைத்து 'அதோ தார்த்தாரியன் வருகின்றான். மானங்காக்க மரணத்தைப் பொருட்படுத்தாதவர் யாவரும் என்னுடன் வருக' என்று கூறினள். உயர்குடியிற் பிறந்தாள் எவளும் இதற்குப் பின்வாங்கவில்லை. நிமிர்ந்த தலையோடும் தெளிந்த முகப்பொலிவோடும் அமைதியாக ஒருவர் பின் ஒருவராய்ச் சென்று, நெருப்பு வளர்த்

திருக்கும், ஆழ்ந்த குகையொன்றினுள் புகுந்தனர். அவர்கள் செல்வதை அவர்கள் கொழுனர்கள் பார்த்து சித்தூரின் மானம் காக்கப்பட்டதாக ஓர்ந்து, தார்த்தாரியமன்னன் கோட்டையை அழித்தாலும் அவன் விரும்பிய வெற்றி கிடைக்காது என்று திட்டமாக எண்ணினர்.

மிகச்சிறந்த ரஜபுத்திரப் பெண்கள் ஒருவர்பின் ஒருவராக நெருப்பில் குதித்தனர். மெல்லிய உடம்பில் கொடும் நெருப்பு தீண்டிய காலத்தும் வாய் பேசாது மௌனமாய் இருந்தனர். இறுதியாக அக்னிப்பிரவேசம் செய்த பெருந்தகையார் பத்மினியாவர். அவள் புகுந்தவுடன் அம்மரணக் கிடங்கின் வாசல் அடைபட்டது. மானபங்கம் செய்வோனின் கை அவளை இனி ஒன்றும் செய்ய இயலாததாயிற்று.

அல்லாவுடீன் சித்தூரினுள் பிரவேசித்தபொழுதும் வீரமாதுசிரோமணியாகிய பத்மினி புகுந்த குகையினின்று வரும் புகை தணிந்தபாடில்லை. அந்நிகழ்ச்சியைக் காண எந்த மாற்றானும் துணிவுகொண்டானில்லை. எங்கு பார்த்தாலும் ரஜபுத்திரர்களின் பிணக்குவியல்கள் காணப்பட்டன. ஆனால் அவர்கள் ஆத்மாக்களோ யமனை எவ்வித பயமுமின்றி சந்திக்கப்போயின. ஆயினும் அவர்கள் வாட்களினின்று எதிரியின் இரத்தம் இன்னும் துளித்துக்கொண்டிருந்தது.

அல்லாவுடீனுக்கு அடங்காக் கோபம் பிறந்தது. வெற்றியுற்றும் வீணாயிற்றே என்று எண்ணினான். அங்குள்ள ஆலயங்களையும், அரண்மனைகளையும் அழித்து ஒழிக்கும்படி கட்டளையிட்டான். அவர்கள் அவைகளை அழிப்பதைத் தானே கூட இருந்து கவனித்து வந்தான். சித்திர வேலைகளும், செதுக்குவேலைகளும் அமைந்துள்ள கதவுகளையும், வளைவுகளையும், சிதைப்பதைக் கண்டு மகிழ்ந்தான். ஆனாலோ பத்மினி இருந்த அந்தப்புரத்தை அழிக்கச் சென்றபொழுது அதை அவனே தடுத்தான். இவ்வளவு கொடுங்குணமுடையானும், சாந்தமுற்று அழகிய பத்மினியின் அரண்மனையை அழியாதிருக்கும்படி கட்டளை பிறப்பிக்கச் செய்தது, அவளது அரிய அழகின் உருவெளித்தோற்றமோ யாதோ தெரியவில்லை.

அழிந்த இடங்களுள் அழியாமலிருப்பது அக்கட்டிடம் ஒன்றே. இன்றும் அதன் உயர்ந்தளாவியமதில்கள், நீலவர்ண

மான அந்நீரில் பிரதிபிம்பிக்கின்றன. அவ்வரசியார் தன் அழகிய கண்களால் மேவார் வெளிகளுக் கப்பாலுள்ள மலைகளை நோக்கிப் பார்த்திருந்த அன்று எப்படியோ, அப்படியே இன்றும், அந்திக்கால ஞாயிறு தன் ஒளி நிறை கிரணங்களை அவ்வரண்மனையின் உச்சிகளில் பரப்பிப் பொன்மயமாக்கி வருகின்றான்.

## IV

## மரகதம் என்ற புண்ணு

பதினாறுவது நூற்றாண்டின் ஆரம்பத்தில், புகழ்பெற்ற ராணா சங்காவின் குமாரனான விக்கிரமஜித்து என்பவன் தனது சிறந்த பிரபுக்கள் புடைசூழ சித்தூரில் கொலு வீற்றிருந்தான். தன் பிரபுக்களின் ராஜபக்தியாலும், வல்லமையாலும் தன்னிடத்திலிருந்து கூர்ஜரத்தின் சுல்தானால் அபகரிக்கப்பட்ட மேவார் ராஜ்யத்தை அவன் திரும்பவும் கைப்பற்றினான். ஆனால் அவன் பிரபுக்களிடம் சிறிதேனும் நன்றி காட்டவில்லை. அவன் தன்னுடைய பிரபுக்களின் கௌரவத்தைப் பங்கப்படுத்த முயன்றான். ஆனதுபற்றி அவர்கள் விக்கிரமஜித்தினிடத்து மிகுந்த கோபம் கொண்டனர்.

இறுதியாக ஆஜ்மீர் பிரபுவான வயது சென்ற கரம்சந்தர், ராணாவின் பக்கம் நின்றுகொண்டிருக்கும் தருணத்தில், அவர் ராணாவின் விருப்பத்திற்குச் சிறிது விரோதமாக நடந்ததை முன்னிட்டு, அனேக சண்டையில் தன் பிராணனையும் திரணமாகப் பாவித்துப் போர்புரிந்து, தனது ராஜபக்தியைக்காட்டிய அந்தப் பிரபுவினது ஸ்தானத்திற்கு உரிய மரியாதையை மறந்து, தன்னுடைய கொலு மண்டபத்தில் அனேக பிரபுக்கள் முன்னிலையில் கரம்சந்தரைத் தன் கையினால் அறைந்தான்.

இந்த அவமரியாதையைத் தாங்கமுடியாமல், சபையிலுள்ள எல்லா ரஜபுத்திர வீரர்களும் திடுமென ஒரேமனதாய் எழுந்து கொலுமண்டபத்தை விட்டுச் சென்றார்கள். அப்பொழுது மேவாரின் பிரதம பிரபுவும் சாந்தாவத்தின் அஞ்சா நெஞ்சனுமான காஞ்சி என்னும் தலைவன் பின்வருமாறு பேசலுற்றான்: ' எனது சகோதரப் பிரபுக்களே! எனக்குச் சற்றுச் செவிகொடுங்கள். இது வரையில் நாம் புஷ்பத்தின் மணத்தை நுகர்ந்தோம். இப்

பொழுது பழத்தைப் புசிக்கக் கட்டாயப்படுத்தப்படுவோம்போல் தோன்றுகிறது' என்றுரைக்க, ஆஜ்மீரின் அரசனான காம்சந்தர் 'நானே அதனுடைய வாசனை துலங்கும்' என்றார். இவ்விதமாக அவர்கள் ராணாவின்மீது அதிக கோபத்தோடும் தங்கள் தலைவருக்கு விளைந்த அவமானத்தை எவ்வாறு நீக்குவதென்று சிந்தித்துக் கொண்டும் கொலுமண்டபத்தை விட்டுப் பிரிந்தார்கள்.

அவர்கள் வெகு இரகசியமாய்க்கூடிப் பேசினார்கள். அவர்களுடைய மறைவான ஆலோசனையின் முடிவு, கர்வியான விக்கிரமஜித்தின் செவிக்கு எட்டவில்லை. அன்று பொழுதுஅஸ்தமிக்கு முன், வீரசிரேஷ்டனான பிருதிவி ராஜகுமாரனாகிய பன்பீரைத் தேடிப்பிடித்து, அவனை மேவாருக்கு அரசனாக ஏற்படுத்துவதாகத் தெரிவித்தார்கள்.

அவர்கள் நியமனத்தைப் பன்பீர் ஒப்புக்கொள்ளும்படி செய்தவுடனே, தங்களை மேற்காட்டியபடி அவமதித்த அரசனை சிம்மாசனத்திலிருந்து நீக்கவும், அவனை சீக்கிரத்தில் கொலைசெய்யவும் எத்தனித்தார்கள்.

ஆகவே பன்பீர் அநேக ரஜபுத்திர பிரபுக்களின் உதவியால் அரசனானான். அப்பிரபுக்கள் நன்றியற்றவனும், கர்வியுமான விக்கிரமஜித்தின்மீது அதிசீக்கிரத்தில் பழிவாங்கியதுபற்றி மிகவும் மகிழ்ச்சியுற்றார்கள்.

ராஜஸ்திரீகள் வசிக்கக்கூடிய அந்தப்புரத்தின் அறைகளின் ஒன்றில், ராணா சங்காவினுடைய குழந்தை உடைசிங் நித்திரை போய்க்கொண்டிருந்தது. இவ்வரசகுமாரன்தான் மேவார் பட்டத்துக்கு உரியவனும், வதம் செய்யப்பட்ட விக்கிரமஜித்தினுடைய மாற்றாந்தாயின் புத்திரனுமானவன்.

பன்பீர் இந்த அரசகுமாரனைக் கொல்லவேண்டுமென்று சதியாலோசனைசெய்து, சில சிற்றரசர்களை வரவழைத்து, அவர்களோடு ஆலோசித்து, அவர்களைப் பார்த்துப் பின் வருமாறு சொல்லலுற்றான்: 'உடைசிங் என்னும் குழந்தை தொட்டிலில் நித்திரை செய்கின்றான். அவனைச் சிலர் சிம்மாசனத்தில் ஏற்றவேண்டுமென்றும், அவனுடைய பாலியப் பருவம் கடந்துபோகுமுன், தங்களுக்கு வேண்டிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளலாமென்றும் கருதுகின்றார்கள்.'

குறுநில மன்னர்கள் அவன் சொன்ன விஷயத்தைக் குறித்து ஆழ்ந்த ஆலோசனைசெய்து, ஒரு பாலகனை தேசத்திற்கு அதிபதியாக்கினால், என்னென்ன விபத்துக்கள் விளையு

மென்று நன்கறிந்து, பழிக்கஞ்சாத ராஜ தந்திரி ஒருவன் அரசப் பிரதிநிதியாக ஆளுவானுகில், பலவாருன குழப்பங்கள் நாட்டில் விளையுமென்றும் யூகித்தறிந்துகொண்டு, இந்த இளவரசனைத் தொலைத்துவிட யாவரும் சம்மதித்தனர். அவனைக் கொல்லவும் ஏற்பாடுகள் செய்தனர்.

விக்கிரமஜித்து பட்டத்திற்கு வருவதற்கு மூன்று வருடத்திற்கு முன், சித்தூரை முற்றுகையிட்டுப் பிடித்த கூர்ஜரத்தின் சுல்தானுக்கு இணங்கக்கூடாதென்ற பிடிவாதத்தினுல் உடைசிங்கின் தாயாரான அழகிற் சிறந்த கர்ணுவதி என்ற ராஜகுமாரி முப்பதினுயிரம் ரஜபுத்திர ஸ்திரீகளை தீக்குளிக்கச் செய்தாள். தான் தீக்குளித்து உயிரை மாய்க்குமுன், தன் பிள்ளையின் செவிலித்தாயை அழைத்துவரச் சொன்னுள். அவளும் ஒரு ரஜபுத்திர மாது. உடைசிங்கு பிறந்த அன்றே அவளுக்கும் ஒரு குமாரன் பிறந்திருந்தான். தன் அருமையான குழந்தையை அன்போடு அவளிடத்துக் கொடுத்து அவளைப்பார்த்து, 'புன்னு, இப்பிள்ளையைக் காப்பாற்றும் புண்ணியக் கடமையை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும். யாதொரு தீங்கும் உன் அரசகுமாரனுக்கு நேரிடாவண்ணம் பாதுகாத்துக்கொள். மேவார் சிம்மாசனம் இவனுக்கே உரியது' என்று உருக்கமாய்ச் சொன்னுள்.

அதற்கு அந்த செவிலித்தாய் அரசியை நோக்கி 'தாயே, என் பிராணனையாவது அல்லது எனக்கு அதிகப் பிரியமான என் பந்துக்களின் பிராணனையாவது கொடுத்து அரசகுமாரனைக் காப்பாற்றுவேன்' என்று கண்ணீரும் கம்பலையுமாய்ச் சொன்னுள். இவ்வார்த்தைகளைக் கேட்டு அரசி அளவற்ற ஆறுதலடைந்தவளாய் தன் குமாரனை அணைத்து முத்தமிட்டு மிக்க அமைதியுடன் தீக்குளித்தாள்.

அதிக நேர்மையும் ஒருமையும் வாய்ந்த தாதியான புன்னு, ராணுசங்காவின் குமாரனை தன் பிள்ளையோடு வளர்த்து வந்தாள். பன்பீர் மேவாருக்கு அரசனுன அன்று சாயங்காலம், புன்னு அரசபாலகனுக்குப் பால் அன்னம் ஊட்டி ரஜபுத்திரருடைய வீரச் செயல்களைப்பற்றிய பாட்டுகளால் தாலாட்டிப் படுக்கவைத்தாள். அவளுடைய சொந்தப் பிள்ளை தன் மடியிலுட்கார்ந்து விளையாடிக்கொண்டிருந்தது. அதுவும் சீக்கிரம் தூங்குவதுபோலிருந்தது. திடீரென்று

பயங்கரமான கூக்குரல் கேட்டது. உடனே புன்னு மடியிலுள்ள தன் குமாரனைக் கீழே கிடத்திவிட்டு அரசகுமாரன் நித்திரை செய்துகொண்டிருந்த தொட்டிலினருகே ஓடினுள். அந்நேரம் அரண்மனை வேலைக்காரர்களில் ஒருவன், திகில்கொண்ட முகத்துடன் ஓடிவந்து 'விக்கிரமஜித்து ராணு இறந்துபோனுர்' என்று பெருமூச்சுடன் சொன்னுன். யாரோ அவனைக் கொன்றிருக்கவேண்டுமென்று புன்னுவுக்கு உடனே நன்ருகப் புலப்பட்டதால் பயத்தால் நடுநடுங்கி 'நாம் ராஜகுமாரனை மறைத்துக் காப்பாற்றவேண்டும்' என்று ரகசியமாகச் சொன்னுள். 'ஒரு கொலையைச் செய்தவன் இன்னொரு கொலையையும் செய்யப் பிரயத்தனப்படுவான். நாம் ராணுசங்காவின் புதல்வனைக் காப்பாற்ற வேண்டும்' என்ருள். 'ஆனுல் அதை எவ்வாறு செய்வது' என்று அந்த வேலைக்காரன் அதிக ஆர்வத்துடன் கேட்டான். 'எங்கும் பகைவர்கள் சூழ்ந்திருக்கிருர்களே. அரசகுமாரனுக்கு ராஜ விசுவாசமுள்ளவர்கள் ஒருவரையும் காணுமே' என்ருன். அதற்கு புன்னு 'எனக்கு ஒரு உபாயம் புலப்பட்டது' என்றுரைத்து, படுத்துக்கொண்டிருக்கும் தன் புத்திரனைக் குனிந்து பார்த்தாள். அப்போது அவள் முகம் வெளுத்தது, அவளுடைய கண்களில் கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருகிற்று. 'என் கண்ணே! என் அன்பே! இன்று நாங்கள் உன்னை அரசகுமாரனுகப் பாவனை பண்ணப்போகிருேம். இந்தத் தலைப்பாகையை உன் தலையில் தரித்துக்கொண்டு, ராணுவின் குமாரனைப்போல் உன் இடையில் இந்த முத்துசரங்களை அணிந்துகொண்டு, இந்தப் பட்டு மெத்தையில் நீ படுத்துத்தூங்கி, சொர்ப்பனத்தில் மேவார் தேசத்து இளங்கோவென்று எண்ணிக்கொள்வாயாக' என்று புன்னு தன் குமாரனைப் பார்த்துச் சொன்னுள். இதைக் கேட்ட அச்சிறுவனே ராணுவின் புத்திரன் என்று தன்னை நினைத்து விளையாடுவதில் தனக்கு அதிகப் பிரியமாகையால், மிக்க களிப்புடன் சிரித்தான். புன்னு தன் குமாரன் சிரசில் நவரத்தின மிழைத்த முடியைத் தரித்தாள். இடுப்பில் முத்துப்பட்டையைக் கட்டினுள். அப்பொழுது அந்தச் சிறுவன் தன் தாயைப்பார்த்து 'அம்மா நான் தூங்கி விழித்த பின்பும் ரஜபுத்திர அரசகுமாரனுக இருப்பேனே?' என்று

வினவ, 'ராஜ பக்தியுற்ற ரஜபுத்திரனின் தகுதிக்கேற்றவனுய் தூங்கிவிழிப்பாய்' என்று மிகச் சஞ்சலத்துடன் புன்ஞ பதிலளித்தாள்.

பிறகு அவள் உடைசிங்கை எழுப்பி அவனைப்பார்த்து 'நவீனமும், விசித்திரமுமான கண்காட்சிகளை உனக்குக் காட்டும்படி உன்னோடு இன்பமான பிரயாணம் செய்யப் போகிறேன்' என்று சொன்னுள். 'என் தோழன் என்னோடு வருகிருனு' என்று அரசகுமாரன் உடனே கேட்க, அவள் 'இல்லை, என் அரசே, அவன் உன்னுடைய பொருள்களைக் காப்பாற்ற இங்கேயே இருப்பான்' என்ருள். உடைசிங்கும் அதைக் கேட்டுச் சம்மதித்தான்.

தன்னைத் தனியே விட்டுவிட்டு தன் தாய் பிரயாணப்படுவது தெரிந்த தாதியின் குமாரன் ஓலமிட்டுத் தன் தாயைப் பார்த்து 'அம்மா என்னை இங்கே தனியாய்விட்டுப் போகாதே. என்னையும் கூட்டிக்கொண்டு போ' என்று அழுகையுடனே கெஞ்சினுன். அதற்குப் புன்ஞ தன் குமாரனைப் பார்த்து 'ரஜபுத்திர வீரனுடைய குமாரனுகிய நீ இப்படி நடந்துகொள்வது தகுதியா?' என்று கண்டித்து 'நான் வருமளவும் பேசாமல் அமைதியாயிரு' என்று சொல்லித் தன் மகனை அரசகுமாரன் சற்று முன் படுத்திருந்த பட்டு மஞ்சத்தில் படுக்கவைத்து, தங்களுடைய அரசனுக்காக தங்கள் பிராணனை ஒரு பொருட்டாக எண்ணுது வீர சொர்க்கமடைந்த ரஜபுத்திர வீரர்களுடைய செயல்களைத் தாலாட்டாக மங்தோசையுடன் பாடினுள்.

அவன் கண்ணை மூடி நித்திரைபோனவுடன் ஒரு நிமிஷம்வரை அன்பும் துக்கமும் கலந்த உருக்கப் பார்வையோடு தன் மகனைக் குனிந்து பார்த்தாள். பிறகு தன் கரத்தில் அரசகுமாரனைத் தூக்கிக்கொண்டு, அவளும் அரண்மனையின் உண்மையான ஒரு வேலைக்காரனுமாக இருவரும் ஒரு அந்தரங்க பாதையின் வழியாக அந்த அறையைவிட்டு வெளியே புறப்பட்டார்கள்.

அரண்மனையின் இருட்டான ஒரு பாகத்திற்கு வந்து சேர்ந்ததும் ஒரு பெரிய பழக்கூடையைத் தேடிப்பார்த்துக் கொண்டுவந்தாள். அதில் அரசகுமாரனைப் படுக்கவைத்து சப்தமின்றிப் படுத்திரு என்று கேட்டுக்கொண்டாள்.

பிறகு புஷ்பங்களையும், இலைகளையும் கூடைக்குள் அரச குமாரனின்மேல் போட்டு மூடித் தன்னோடு வந்த வேலைக் காரனை அந்தக் கூடையைத் தூக்கிக்கொண்டு கோட்டைக்கு வெளியே உள்ள ஒரு நிலையத்திற்குக் கொண்டுபோகும்படி திட்டப்படுத்தி, பிறகு தானும் கூடியசீக்கிரம் அந்த ஸ்தலத் திற்கு வந்து சேர்வதாகச் சொன்னாள்.

பிறகு அவள் தன் குமாரன் நித்திரைசெய்கிற அறைக்கு வந்து என்ன சம்பவிக்குமோ என்றறியக் காத்து நின்றாள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் கதவு திறந்தது, பன்பீர் உள்ளே நுழைந்தான்; அரசகுமாரனை உடைசிங் எங்கே என்று அகங்காரத்துடன் கேட்டான். மிக்க மனவேதனை யால் அவனுக்கு மறுமொழிசொல்ல நாவெழாமல், அவள் தன் சொந்தக்குமாரன் படுத்து நித்திரைசெய்யும் மஞ்சத் தைச் சுட்டிக்காட்டினாள். அந்தக் கொலைபாதகன் மஞ் சத்தையணுகி நித்திரைசெய்யும் குழந்தையை உற்றுநோக் கினான். நவரத்தின மிழைத்த தலைப்பாகையையும், இடை யில் கட்டிய ஒட்டியாணத்தையும் கண்ணுற்று, தன் நோக் கம் சித்திபெற்றதினாலுண்டாகும் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்து அயர்ந்து நித்திரைசெய்யும் குற்றமற்ற அந்தச் சிசுவின் மார்பில் ஈட்டியால் குத்தினான். பாதகியான அந்தத் தாய் கடுந்திகிலடைந்து கூச்சலிட்டுக்கொண்டு மஞ்சத்தருகே ஓடித் தன் குமாரனுடைய பிரேதத்தை மார்போடணைத்துக் கொண்டாள். இந்த அழுகுரலைக் கேட்ட அரண்மனையி லுள்ள ஸ்திரீகளெல்லாம் கொலை நடந்த அறைக்கு ஓடி வந்து ராஜசங்கா வம்சத்துக் கடைசித்தளிர் தொலைந்ததே என்றெண்ணி புன்னுவோடு ஓலமிட்டழுதார்கள்.

அனேகர் பிரலாபிக்க புன்னுவின் மகனது பிரேதம் தகனம் செய்யப்பட்டது. அஞ்சா நெஞ்சுடைய புன்னு தன் மகனது சரீரம் எரிந்து சாம்பலானபிறகு, அதைத் தன் கண்ணீரால் நனைத்து புனிதமாக்கி முடிந்ததும், தன்னிடத்து அடைக்கலமாகக் கொடுத்த ராஜ குமாரனை ஆபத்திலிருந்து நீக்கி நிர்ப்பயமான ஓர் இடத்திற்கு எப்போது கொண்டு சேர்க்கலாம் என்ற ஆர்வத்துடன் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் வேலைக்காரன் இருக்கும் இடத்திற்கு அதி விரைவாகச் சென்றனள்.

ஒரு ஆற்றின் அடித்தரையில் அந்தப் பழக்கூடையையும் அதினுள் உள்ள அருமையான ராஜ குழந்தையையும் மறைத்துவைத்துவிட்டு அந்த வேலைக்காரன் புன்னாவின் வருகையை மிக்க கலக்கத்துடன் ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். பிறகு இருவரும் சித்தூரைவிட்டு தியோலா நகரத்தை நோக்கி அதிவேகமாகச் சென்றார்கள். அவ்வூர் அரசனை சிங்பாவோ என்பவனை அரச குமாரனுக்கு அடைக்கலம் கொடுக்கும்படி புன்னா வேண்டினாள். ராணா சங்காவின் சந்ததியின் அபிவிர்த்திக்கு உடைசிங் ஒருவனே எஞ்சி உள்ளவன் என்பதை அவள் அவ்வூர் அரசனுக்கு எடுத்துரைத்தும், அத்தகைய ஆபத்துக்கிடமான பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவன் நடுங்கினான். ஆனதுபற்றி இராஜ குமாரன் தஞ்சம்புகத் தகுதியான இடத்தைத் தேடிக் கொண்டு அவள் உடனே அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுப் போக நேர்ந்தது. அந்த நேர்மையான வேலைக்காரனும் புன்னாவும் தாங்கர்பூர் என்னும் ஊரை அடைய, அவ்வூர் அரசனும் இராஜகுமாரனுக்கு உதவிபுரிந்தால் தனக்கு என்ன கேடு நேரிடுமோவென்று அஞ்சினான். அதிகக் கவலையாலும், சிரமத்தாலும் களைத்துப்போனாலும் அஞ்சா நெஞ்சமுடைய புன்னா தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை ஒரு நிமிஷமும் நழுவவிடாமல், அரச குமாரன் தஞ்சம்புகத்தக்க இடத்தை இன்னும் தேடிச்சென்றாள்.

இட்டேர் வழியாகப்போகும் சுற்று மார்க்கமாகச் சென்று அராவலிமலையின் பள்ளத்தாக்குகளின் பாதையற்ற அடர்ந்த காடுகளின் ஊடே திரிந்தலைந்தாள். பகலில் காயும் வெயிலால் தளர்ந்து இரவில் பெய்யும் பனியால்நனைந்து, தனக்கும் அரசகுமாரனுக்கும் பசியைத் தீர்க்க ஆகாரம் இன்றிப் பல சமயங்களில் வருந்தநேர்ந்தது. ஆனால் மலைநாட்டில் வசிக்கும் பில்ஸ் ஜாதியாரோடு அவள் சிநேகம் செய்துகொண்டதினால், அவர்கள் அவளுக்கு வேண்டிய உதவியைக்கொடுத்து அவளையும் அரசகுமாரனையும் பாதுகாத்தார்கள். அப்படியாக அங்கிருந்து அவள் கோடல்மேர் என்னுமிடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

வியாபாரத் தொழில்செய்து வந்தவரும், மதத்தில் ஜயினருமான ஆஸாஸா என்ற கோடல்மேரின் அதிபதி




கதவு திறந்தது, பன்பீர் உள்ளே நுழைந்தான்

யினுடைய கரத்தில் அரசகுமாரனை ஒப்புவித்து, பின்வருமாறு அவனைப் பார்த்து புன்னு அதிக பயபக்தியோடு சொன்னாள்:—'உம்முடைய அரசனை உம்முடைய பாதுகாப்பில்விடுகிறேன். அவனைப் பாதுகாக்கவேண்டிய கடமை உம்முடையது' என்றாள். அந்தத் தேசாதிபதி அதிக ஆச்சரியப்பட்டு பன்பீரை அரசனாக்கின பிரபுக்களுடைய கோபத்திற்காகப் பயந்தான். அச்சமயம் அங்கிருந்த அவனுடைய அன்னை அவன் பயப்படுவதைப் பார்த்து அவனைக் கடிந்துகொண்டு, 'உண்மையான ராஜபக்தி பயத்தைப் பொருட்படுத்தாது. இக்குழந்தை எல்லாநற்குணங்களும் வாய்ந்தஉன் எஜமானுகிய சிறப்புற்ற சங்காவின் புதல்வனுச்சே' என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் தைரியம் பிறந்து அந்தக் கவர்னர் இளவரசனைக் காப்பாற்றத் தீர்மானித்துக்கொண்டு அவன் சௌகரியத்தின் பொருட்டும், சந்தேகம் ஏற்படாமலிருக்கும் பொருட்டும், அவ்விளங் குமாரனைத் தன் பங்காளி என்று சொல்லிக்கொண்டான்.

உண்மையான புன்னு தனது காரியம் முடிந்தவுடன், யாரை தன் சொந்த குமாரனுடைய உயிரைப் பலிகொடுத்துக் காப்பாற்றினுளோ அந்த இளங்குமாரனிடம் விடைபெற்றுக்கொண்டாள். 'நான் இங்கே தங்கலாகாது ஏனெனில் ஆஸாஸா பங்காளியைச் சூழ்ந்து ஒரு ரஜபுத்திர ஸ்திரீ இருப்பது சித்தூரின் இளவரசன் இவனே என்று சந்தேகிக்க இடம்தரும்' என்று அதிக துக்கத்தோடு சொன்னாள். ஆகவே அவள் தனது உயிர்போன்ற அரசகுமாரனை விட்டுப் பிரிந்து தன் ஊருக்குத் திரும்பிச்சென்றாள். அரசகுமாரன் தனக்குரிய பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் நாள் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் கோரிக்கை கடைசியாய் நிறைவேறிற்று. மேவார் தேசத்துப் பிரபுக்கள் பிலுக்கனை பன்பீரின் ஆளுகை பிடிக்காமல், அத்தேசத்திற்குரிய ராஜ குமாரனைப் பட்டத்தில் அமர்த்துவ்து தகுதியென்று எண்ணிக்கொண்டிருக்கையில், புன்னு என்பவள் உடைசிங்தான் ராணுசங்காவின் எஞ்சிய புத்திரனென்று நிரூபித்தாள்.

மேற்கண்ட வீரச் செய்கையே மரகதமணி என்கிற புன்னுவின் அரும்பெருஞ்செயல். அவளுடைய பிரேதம்

அடக்கம் செய்யப்பட்டிருக்கிற இடத்தில், அற்புதமான சலவைக்கற்களால் கட்டப்பட்ட சமாதி இன்னும் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அச்சலவைக்கற்களில் கைதேர்ந்த சிற்பி அனேக வேலைப்பாடுகளைச் செய்துவைத்திருக்கின்ருன். அச்சமாதியும் அதன் சித்திர வேலையும், இந்திய மக்களின் அரும்பெருஞ்செயல்களாலாகிய தனையின் ஓர் பந்தத்துக்குக் காரணராகிய அந்த ரஜபுத்திர ஸ்திரீயின் தைரியத்தையும், உண்மையையும் எடுத்துக் காட்டத்தகுந்த ஞாபகச் சின்னங்களாகும்.

## V

## அரசபக்தியிற் சிறந்த அண்ணல்

1336-ம் ஆண்டில் நிறுவப்பெற்ற விஜயநகர ராஜ்யத்தின் தலைநகரழிந்து, அதன் அழிவுற்ற பெரும்பாகங்களை, ஹாஸ்பட்டு என்னும் ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஏறக்குறைய பத்து மைலுக்கு அப்பால் துங்கபத்திரை நதியின் தென்பாகத்தில் உள்ள ஹம்பி என்னுமிடத்தில் காணலாம்.

1564-ம் ஆண்டில் ஹம்பியில் அரசுபுரிந்த ராய ராமராஜ் என்பவர் மிக்க செருக்குற்றவர். பன்முறை தன் ராஜ்யத்தின்மேல், ஆமத்நகர், கோல்கொண்டா, பீதார் முதலிய மாகாணங்களின் முகம்மதிய மன்னர்கள் ஒன்றுசேர்ந்து படையெடுத்து வந்து, அச்சுறுத்திய காலத்தும், அஞ்சாது அவர்களைப் புறக்கணித்து, ஒல்லும்வாயெல்லாம் இடரே விளைத்து வந்தனர்.

1564-ம் ஆண்டு டிசம்பரில் அவர்களின் ஐக்கியபடை தென் முகம் நோக்கிச் சென்றது. ஏறக்குறைய ஒரு மாதம் கழியுமுன் தலைக்கோட்டை என்னும் இடத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. அப்போரில் ராமராஜா கொல்லப்பட்டனர். அவரின் படைகளெல்லாம் சிதறடிக்கப்பெற்றன. இலட்சக்கணக்கான மக்கள் போர்க்களத்தில் மாண்டொழிந்தனர்.

எதிர்ப்பாரின்றி முகம்மதிய படைத்தலைவர்கள், வியக்காதவரும் வியக்கத்தகும் விஜயநகரினில் புகுந்தார்கள். சென்ற அவர்கள் அந்நகரத்தைக் குரூரமாய்ச் சிதைத்தபின்தான், தங்கள் தேசத்துக்குத் திரும்பினுர்கள். அன்றுமுதல் இன்றுவரை அந்நகர் அழிந்த நிலையிலேயே இருந்துவருகின்றது.

விஜயநகரத்தரசரின் வெற்றியும் அதிகாரமும் இக்காலத்தில் பழங்கதையாக ஆகிவிட்டாலும், தங்கள் பழைய ராஜ்யத்தின் ஒரு பகுதியின்மேல் அரசுபுரிந்து, முன்னைய ராஜ்யத்திலிருந்து தென் கிழக்கே இருநூறு மைல்களுக்கப்பால் உள்ள சந்திரகிரியை புதிய தலைநகராக்கி, தங்கள் ஆட்சியை நடத்திவந்தார்கள்.

அறிவிற்சிறந்து நற்குணம் நிறைந்த வெங்கட்டராயர் மூப்புற்று 1614-ல் சாக்காட்டை யெதிர்நோக்கி நின்றனர். அவரது மனைவியாராகிய பாயம்மா என்பவர், ஜகராயரது புத்திரியாராவர். நீண்டகாலமாகப் புத்திரப் பேற்றிற்காகத் தவங்கிடந்தும் அப்பேற்றை அவ்வம்மையார் பெற்றாரில்லை. இருந்தாலும் அவ்வரசியார் பிறன் ஒருத்தியின் பிள்ளையைத் தன் பிள்ளையாகக் கூறிவந்தார். அரசர் அரசியார்பால் வைத்த இரக்கங் காரணமாக இந்நிகழ்ச்சியின் உண்மையைக் கண்டும் காணாததுபோலிருந்து, அவ்விளங்குமாரனுக்கு சிக்க (இளைய) ராயர் என்று பேர்புனைந்து, தன் அரண்மனை யிலேயே வளர்த்துவருமாறு செய்தாராயினும், பிறவகை களில் அவனுக்கு புத்திரனுக்குரிய சுதந்திரங்களை அளித் தாரில்லை.

சில ஆண்டுகளுக்குப்பின்னர், மாண்புற்ற மன்னர் மர ணத்தறுவாயிலிருந்தார். அவரது வலதுபக்கத்தில் அவருக் குப்பின் பட்டத்திற்கு வரவேண்டியவராகிய ரெங்கராயர் நின்றுகொண்டிருந்தார். அவரிடத்தில் அரசர் தமது மோதி ரத்தையும் ராஜ முத்திரையையும் அளித்து, படைத்தலைவர் களைப் பார்த்துத் தம்மால் அரசுக்கு நியமிக்கப்பெற்ற ரெங்க ராயரோடு ஒத்துவாழும்படி அவர்களுக்குப் புத்திமதி கூறினர். ஜகராயர் என்ற சிற்றரசன் தத்துப்புத்திர னாகிய சிக்கராயர் சிம்மாசனமேறுவானென்றெண்ணித் தமது சகோதரனின் பெண்களிலொருத்தியை அவனுக்கு மண முடித்திருந்தமையால் இவ்வுடன்பாட்டை ஏற்றுக்கொள்ள இணங்கவில்லை. ஜகராயரோடு சேருவதால் தங்களுக்கு லாபமுண்டென்று கருதின இன்னம் இருவர், இவருடன் சேர்ந்துகொண்டு புதிய அரசருக்கு உரிய மரியாதைகளைச் செலுத்தாது விட்டனர்.

பழைய அரசர் உயிர்துறந்தனர். ரெங்கராயர் சிம்மா சனம் ஏறினர். மூவர்தவிர மற்றெல்லோரும்வந்து தங்கள்

தங்கள் ராஜபக்தியைத் தெரிவித்துக்கொண்டனர். அவர்களுள் சிலரோ பொருளையும் பொன்னையும் துர்ச்செலவு செய்திருந்தமையால், அவர்கள்பால் கண்ட குற்றத்திற்காக ரெங்கராயர் அவர்களை வேலையினின்று நீக்கினர். அவர்களுக்குக் கோபம் உண்டானதால், ஜகராயருடன் சேர்ந்து புதிய அரசனுக்கு விரோதமாய் வேலைசெய்வதாக ஒப்புக்கொண்டனர். தனது மருமகன் சிக்கராயர் ராஜ்யபாரம் பெற்று அதிகாரம் செலுத்த நேர்ந்தாலும் நேரலாம் என்று நம்பிக்கைகொண்ட ஜகராயர் தள்ளப்பட்ட அதிபதிகளுடன் சேர்ந்து கலகத்துக்கு ஏற்பாடு செய்தார். இராஜ காரியங்களை இடைவிடாமல் கவனித்துவந்தமையால், அவர்கள் செய்த சூழ்ச்சியை புதிய அரசன் அறிந்துகொள்ளவில்லை. ஜகராயரும் தன் கைதவச் செயல்களை வெளிப்படையாகச் செய்யவுமில்லை. ஒரு தூதுவனை ரெங்கராயரிடத்தில் அனுப்பித் தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் அவர்கள்பால் அன்பு கொண்டு அரசர்க்குரிய மரியாதையைச் செலுத்த விரும்பியிருப்பதாக ஜகராயர் தெரிவிக்கச் செய்தார். இவர்களையும் தன்னுடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று விரும்பிய அரசர் காவலர்களை அழைத்து, முற்கூறியவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் வந்தால் அரண்மனையினுள் தாராளமாய் விடுத்து, சிற்றரசர்க்குரிய மரியாதை செய்யும்படியாகக் கட்டளையிட்டார். இக்காரணத்தால் ஜகராயரும், உடந்தைக்காரரும் அரண்மனையினுட்புகுந்து அரசன் தங்கள் துரோக நோக்கத்தை அறியுமுன் தங்களுடைய காவலாளர்கள் பலரை ஒவ்வொரு வாசலிலும் நிறுத்திவைத்துவிட்டார்கள். அரண்மனைவாயிலைக் கடிதில் மூடுவதற்கியலவில்லை. ஜகராயரின் வீரர்கள் அரண்மனைக் காவலாளர்களைக் கொன்று அரண்மனையின் உள்பாகமட்டும் நுழைந்துவிட்டனர். போலித்தலைவர்களில் ஒருவன் அரசரை உங்கள்பால் ஒப்பிப்பேனென்றுகூறி ரெங்கராயரைத் தேடிக்கொண்டுவந்தான். ரெங்கராயரைப் பார்த்தவுடன் 'இப்பொழுது நீ சிறைப்படுத்தப்பட்டாய். வம்புவழக்கு இல்லாமற் போ. இல்லையேல் உன் உயிரை இழப்பாய், இதுமுதல் சிம்மாசனத்தைத் துறந்துவிடவேண்டும். மறுபடியும் அதனிடத்தில் இச்சைகொள்ளலாகாது' என்று கூறினன்.

பகைவர் கையில் காட்டிக்கொடுக்கப்பட்டதையும் அரண்மனை மாற்றான்கையில் சிக்கியிருப்பதையும் உணர்ந்த அரசர் ஒன்றும் செய்வதற்கியலாதவராகி தானும் தன்னுடைய மனைவியும் மக்களும், தாழ்த்திய தலையுடனும், வாடிய முகத்துடனும் அரண்மனையை விட்டகன்றார்கள். அதுகாறும் அரசராக இருந்தும் அவர் பிரிவுக்கு வருந்தி, உபசரித்தவர்கள் ஒருவரேனும் கிடையாது. வஞ்சகர்களோடு வாதிடுவதற்கு வாய்திறப்பார் ஒருவருமில்லை.

ஆனால் எச்சமநாயக்கர் என்று ஒரு தலைவர் இருந்தார். அவர் ரெங்கராயரிடத்தில் தளராத பக்தியுடையவர். இவ்வாறு இங்கு நிகழ்ந்தபோது தலைநகரிலிருந்து சில மைல் தூரத்திற்கப்பால் அவர் தங்கியிருந்தமையால் அவருக்கு ஒன்றும் தெரியாது. ஜகராயரின் சூழ்ச்சியால் அரசர் சிம்மாசனத்தினின்று அகற்றப்பட்டார் என்ற செய்தி செவியில் நுழைந்த அளவில் அடங்காச் சீற்றங்கொண்டு, கோட்டையின் மதில்களை மூடச்செய்து, தக்க படைசேர்த்து தருணம் வந்தால் ஜகராயரோடு போர்புரியவும் அவர் தயாராக இருந்தார்.

பழைய அரசரை அகற்றிய அளவில் காலந்தாழ்க்காது, தன் இனத்தவனாகிய முற்கூறிய இளைஞனை அரச சின்னங்களோடு சிம்மாசனமேற்றி அவனது மாமன் என்னும் முறையில் அரசாங்கத்திற்குரிய மரியாதைகளையும் செல்வாக்குகளையும் ஜகராயர் ஏற்று ஆட்சிபுரியத் தொடங்கினார்.

ஆட்சியைக் கைக்கொண்டுவிட்டமையால் சிற்றரசர்கள் பலரையும், ஆக்கிரமித்த அரசருக்குச் செலுத்தவேண்டியவைகளையெல்லாம் செலுத்துமாறு மிக்க இறுமாப்புடன் கட்டளையிட்டார். எல்லோரும் ஜகராயருக்கு அஞ்சினதால் புதிய மன்னனை ஒப்புக்கொண்டு தங்கள் மரியாதைகளைச் செலுத்தினாலும், ஒருவர்தான் அப்படிச் செலுத்த வரவில்லை. அவர் பெயர்தான் எச்சமநாயக்கர். சிம்மாசனத்தை இழந்த மன்னரிடம் மனப்பற்று மிகவும் உடையவர். ஜகராயர் வாவென்று அனுப்பிய கட்டளைக்குப் 'பேர் ஊர் தெரியாத ஒரு இளைஞனுக்கு மரியாதை செய்வது எங்ஙனம்? என் இறைவனாகிய ரெங்கராயர் ஒருவருக்குத்தான் தலை தாழ்த்துவேன். அவர் ஒருவருக்குத்தான் என்

வாளை உறையிலிருந்து உருவுவேன்' என்று மிகக் கடுமையாகப் பதில் கூறியனுப்பினுர்.

இத்தகைய சுயேச்சைப் பதில் கிடைத்தவுடன் 'நாலாயிரம் போர்வீரர்களைப் படைத்த இவனுக்கு இவ்வளவு தீரமா' என்று எண்ணி 'உடனே தன்னை வந்து காணுவிட்டால் தான் அங்கு சென்று அவனை அழித்துவிடத் தீர்மானித்திருப்பதாக' மீண்டும் ஜகராயர் கட்டளையனுப்பினுர். எச்சமநாயக்கர் இதற்கும் அஞ்சவில்லை. 'வேண்டுமானுல் ஜகராயர் போர்தொடுத்து வந்தால், தான் தன்னுடைய படைகளைக்கொண்டு இயன்றதைப் பார்த்துக்கொள்ளக் கூடும்' என்று பதில் இறுத்தார்.

ஜகராயர் மற்ற சிற்றரசர்களையும் வசப்படுத்தவேண்டியதில் மிகச் சிரமம் உற்றிருந்தமையால், இப்பொழுது எச்சமநாயக்கரோடு போர்புரிவது பொருந்தாது என்று எண்ணி, 'தன்னுடைய இளவரசனுேடு ஒத்து வாழ்வதானுல் திரண்ட சொத்தும், வேண்டிய பணமும் தான் தருவதாக வாக்குக்கூறி' எச்சமநாயக்கருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பத் தீர்மானித்தார். அப்படியே எச்சமநாயக்கரை எல்லையைக் கடந்து புகழ்ந்து, தேன்மொழிகள் பல கூறி, புதிய ஆட்சியில் உயரிய பதவியை அளிக்க எண்ணியிருப்பதாகவும் வாக்கெழுதியனுப்பினுர். எச்சமநாயக்கர் எளிதில் பொருள் முதலியவைகளால் ஏமாற்றப்படுபவரல்ல. தேனெழுகும் கடிதத்தைப் படித்துப் பார்த்தார். நிதானமாக யோசித்தார். எந்த நிலத்தை இந்த ஜகராயர் நமக்குக் கொடுக்கக்கூடும்? நமது எஜமானுகிய ரெங்கராயருக்குச் செல்லவேண்டிய பொருளைத்தவிர வேறு எந்தப்பொருளை இவர் நமக்கு அளிக்கக்கூடும்? அந்த ரெங்கராயருக்கே அன்பு காட்டுவேன் என்று தீர்மானித்துக்கொண்டு, மற்றைய சிற்றரசர்களும் தலைவர்களும் ஒன்றுபட்டு தம்மை எதிர்த்துத் தோல்வியுறும்படி செய்தாலும், தாம் இவர் கட்சியில் சேர இயலாது என்று ஜகராயருக்குத் தெரிவித்துவிட்டார்.

இக்கடிதத்திற்கு ஜகராயர் என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் திகைத்தவராகி மற்ற சிற்றரசர்களைப் புகழ்வதிலும், கௌரவிப்பதிலேயுமே பொழுதுபோக்கி வந்தார். இவ்வாறு செய்து, ரெங்கராயரிடத்தில் ஆழ்ந்த

பற்றுடைய எச்சமநாயக்கரை எல்லாருடைய துணையைக் கொண்டு ஒழித்துவிடலாமென்று எண்ணினார்.

இவ்வாறு நிகழ்ந்து வருகையில் எச்சமநாயக்கர் ஜக ராயரால் கடுங்காவலில் வைக்கப்பெற்றுள்ள ரெங்கராய ரோடு சமாசாரப் போக்குவரத்துக்கு வழிசெய்துவந்தார். ரெங்கராயரைச் சிறையினின்று வெளிப்படுத்த பலமுறை முயன்றும் பயன்படாமையால், அவரின் புதல்வர்களுள் ஒருவரைக் கைப்பற்றிவிட்டால் அவருடைய முன்னோர்கள் வீற்றிருந்த சிம்மாசனத்தில் அப்புதல்வனை வீற்றிருக்கச் செய்யலாமென்று எண்ணினார். நெடுநேரம் நினைத்துப் பார்த்து ஒரு யோசனைசெய்து அதை மிக்க தைரியத்துடன் நிறைவேற்ற எண்ணிக்கொண்டிருந்தார். ரெங்கராயரினு டைய வண்ணான் ஒருவனை அழைத்து ரெங்கராயரின் இரண் டாங்குமாரனை ரகசியமாகச் சிறையினின்று வெளியே கொண்டுவந்து கொடுத்தால், பெரும்பொருள் வழங்குவ தாகக் கூறினார். மூத்தகுமாரன் வயதில் முதிர்ந்தவனாத லாலும் அவனைக் கொண்டுவருவது கஷ்டமாதலாலும், அவ னைக் கொண்டுவரச்செய்யாமல் இளையகுமாரனைக் கொண்டு வரச்செய்தார். பட்டத்துக்கு வருபவன் அரசகுமாரனா யிருக்க வேண்டுமேயொழிய எந்தக் குமாரனானாலுஞ் சரிதான் என்றும் எண்ணினார்.

வண்ணான் தன் வறுமைநோயைப் போக்கிக்கொள்ளு வதற்கு இது நல்ல தருணம் என்று எண்ணினதாலும், இக் காரியத்தில் தனக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லையாதலாலும் எச்சமநாயக்கர் கூறியாங்கு அச்சிறுவனைக் கொணர்வதற்கு இசைந்தான். எச்சமநாயக்கர் ரெங்கராயருக்கும் தன் கருத்தைத் தெரிவிக்கக்கூடிய ஒரு கடிதம் எழுதி வண்ணான் மூலம் அனுப்பினர். எப்படியாவது இரண்டாவது குமாரனை வண்ணான் மூலியமாக அனுப்பினால் அவன் கருத்துடன் கொண்டுவந்து சேர்ப்பானென்றும், சேர்த்தபின்னர் தாம் பாதுகாப்பதாகவும் எழுதியிருந்தது. இக்கடிதத்தை வண் ணான் வெளுத்த உடையில் வைத்து அவ்வுடையிலுள்ள கிழிசலைக்கொண்டு காட்டுவதுபோல் உள்ளே போய் அக்கடி தத்தை மன்னர் கையில் கொடுத்துவிட்டான். கடிதத்தைப் பார்த்ததும் காதல் மைந்தனைக் கூப்பிட்டு மதுரமொழிகள்

வழங்கி எச்சம நாயக்கரது இஷ்டத்தின்படி நிறைவேற்று மாறு வண்ணனுக்குக் கூறினார். வண்ணான் அழுக்குத்துணி களைத் தூக்கிச்செல்லும் பெரிய கூடையில் அச்சிறுவனை உட்காரச்செய்து அவனுக்குமேல் அழுக்குத் துணிகளைப் போட்டு மிக அழுக்கேறிய உடையை எல்லாவற்றிற்கும் மேலே போட்டு, பார்ப்போர் எவரும் சந்தேகங்கொள்ளாத வாறு அச்சிறுவனை அவன் வெளியே கொண்டுவந்துவிட்டான். அவ்வரசகுமாரன் வெளியே வந்த செய்தி ஒருவரும் அறியார்கள். கர்வங்கொண்ட ஜகராயருக்கும் எச்சம நாயக்கர் இவ்வாறு தன்னை ஏமாற்றியிருப்பார் என்றும் தெரியாது. வண்ணான் மூன்றுநாள்வரையிலும் அவ்வரசகுமாரனை வைத்திருந்தான். இனித் தீங்கு ஒன்றுமில்லை என்று தெரிந்து ஒருநாள் இரவு அவ்விளவரசரை எச்சமநாயக்கரிடம் அனுப்பி வைத்தான். இளவரசரைக் கண்டவுடன் ராஜபக்தியுள்ள எச்சம நாயக்கருக்கு உண்டான களிப்பிற்கு அளவேயில்லை. அவரை அதிக கௌரவத்தோடு வரவேற்றார். அவரது போர்வீரர்களும் அங்ஙனமே களிப்புடன் வரவேற்றார்கள்.

அரசகுமாரன் தப்புவித்து வெளிவந்த செய்தி ஜகராயர் காதிற்கு எட்டியதும், அவனுக்கு உண்டான கோபத்திற்கு ஓர் அளவில்லை. பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்ற ஆத்திரம் மிகக்கொண்டு ரெங்கராயருக்கு இரட்டிப்பான கடுங்காவல் ஏற்படுத்தினான். அவர்கள் உணவைக்குறைத்து வெறும் சோறும் சில மரக்கறியும்மாத்திரம் கொடுக்க உத்திரவுசெய்தான்.

எச்சமநாயக்கர் இளவரசனைச் சிறையிலிருந்து காவல் முன்னிலையிலேயே அப்புறப்படுத்திய செய்தியைக் கேள்வியுற்று சில சிற்றரசர்கள் 'எச்சமநாயக்கர் மிக்க தைரியமும், நுண்ணறிவுமுடையவர். அவர் ஒருவரே இவ்விளவரசை விடுவித்தார். ஜகராயரையும் அவர் ஏற்படுத்தியுள்ள போலி அரசையும் தொலைப்பதற்குரிய காலம் வந்தது. உரிமையுள்ள அரசரிடத்திலேயே நாம் பற்றுதல் காட்டி அவருக்காகவே போர்புரிய வேண்டும்' என்று பேசத் தலைப்பட்டார்கள்.

எச்சமநாயக்கரைத் தேடி மற்றவர்களும் தங்கள் தீர்மானத்தை அவருக்குத் தெரிவித்தார்கள். அது அவருக்கு அதிக ஊக்கம் அளித்தது. ரெங்கராயரை மிக்க கொடிய

காவலில் இருத்தி யிருந்தபோதிலும் எப்படியாவது அவரை விடுவிக்க வகை தேடவேண்டுமென்று எச்சமநாயக்கர் தமது மனதில் நிர்ணயித்துக்கொண்டார்.

சில உண்மையுள்ள ஆட்களைத் தெரிந்தெடுத்து, ரெங்க ராயர் காவலிலிருந்த கோட்டைக்குச்சென்று அவர் இருக்கும் இடத்தில் வேலைக்கு அமர்வதற்குத் தருணம் பார்த்து அமர்ந்துகொள்ளச் சொன்னார். அமர்ந்த பின்னர் சிறைக் கூடத்திற்கு ஒரு சுரங்கப்பாதை அதிவிரைவில் ரகசியமாய் வெட்டவேண்டுமென்று யுக்தி சொன்னார். அப்படித் தயாரிக்கப்பட்ட மனிதர் எச்சமநாயக்கரின் கட்டளைப்படியே செய்து முடித்தார்கள். சுரங்கம் தோண்டுவது நடுராத்திரியாயினும், ஒரு சிறு பந்த விளக்கைத் தவிர வேறொன்றும் உபயோகிக்கமுடியாமல் போயினும், சில தினங்களுக்குள் ரெங்கராயரிருந்த காவல் கிடங்குவரை சுரங்கப்பாதை வெட்டித் தயாராக்கினார்கள். தமது அறை போர்வீரரால் நிரம்பியிருக்கிறதைத் திடீரென்று பார்த்தவுடன் ராயர் பிரமிப்படைந்தனர்.

இவர்களைப் பார்த்ததும் அப்போர்வீரர்கள் தமது மாற்றானாகிய ஜகராயரது ஆட்களாயிருக்குமோ, தம்மை அவமானப்படுத்த அல்லது துன்புறுத்த வந்த மனிதரோ என்று எண்ணினர். ஆனால் வந்தவர்களெல்லாம் அரசர் அடிபணிந்து போற்றி நின்றார்கள். அவர்களின் தலைவன் எச்சமநாயக்கர் கொடுத்தனுப்பிய ஓலைத்துண்டைக் கொடுத்தான். அதில் அரசர் தாம் தப்பித்து வெளியே வந்துவிடக்கூடிய வழிவகை குறிப்பிட்டிருந்தது. தமது உண்மையான சிற்றரசன் எழுதிய ஓலைத்துண்டைப் பார்த்தவுடன் அவர் முகத்தில் கண்ணீர் ததும்பியது. உரை தடுமாறியது, உள்ளந் துடித்தது. என்ன செய்வார்? உள்ளத்துடிப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டு தம்மை விடுவிக்க வந்த வீரனைப்பார்த்து, 'எச்சமநாயக்கர் இவ்வளவு தூரம் சொல்லியிருக்கும் பொழுது நான் உங்களோடு வராமலிருந்தால் பொருத்தமற்ற செயலாகும்' என்றார். தம்முடைய மனைவிமக்களிடத்தில் விடைபெற்றார். உள்ளாடை ஒன்று தவிர மற்றவைகளை யெல்லாம் ஒழித்துவிட்டு அச்சுரங்க வழியே உட்புகுந்து செல்ல ஆரம்பித்தார். எச்சமநாயக்கர் அனுப்பிய ஆள்

களில் சிலர் முன்னே வழிகாட்டிச் சென்றார்கள். சிலர் பின்னே தொடர்ந்து சென்றார்கள். கை கால்களாலும், முழங்கால்களாலும் ஊர்ந்து ஊர்ந்து சென்றார். செல்லும் பொழுது மேலிருந்து விழுந்த கற்களாலும், தூசியாலும், பிறவாற்றாலும் துன்புற்றுச் சென்றார். ஒரு வார்த்தையும் பேசுவதற்கில்லை. அவர்கள் மூச்சுவிட்ட சப்தத்தைத் தவிர வேறு சப்தம் கேட்கப்படவே யில்லை. வெளி வெளிச்சம் கொஞ்சம் தெரியும் வரையில் அரசருக்கு விபத்து இன்றி வெளிவருவோம் என்ற நம்பிக்கையில் லாதிருந்தது. கடைசியாக சுரங்கத்தின் முடிவைப்பார்த் தார். சிறிது வெளிச்சமும் தெரிந்தது. இப்பொழுது தான் அவருக்கு உயிர்வந்தது. 'தப்பித்தேன், தப்பித் தேன்' என்று வாய்க்குள்ளேயே கூறினார். இப்படி சொல் லிக்கொண்டிருக்கும்பொழுதே திடீரென்று மேலிருந்து கல் லும் மண்ணும் அவர் தலையில் விழுந்தது. ஒரு கனத்த ஆளும் தத்தளித்துக்கொண்டு மேலிருந்து கீழேவிழுந் தான். கொத்தளத்தைக் காவல் காப்போர்களில் ஒருவன் சுரங்கம் தோண்டப்பட்ட பாகத்தில் அடிவைக்கவும் தொப் பென்று சுரங்கத்துக்குள் விழுந்தான். வாளை உருவி வீசி, அவனை வெட்டுவதற்கு இடவசதியுமில்லை. அரசனைத் தப்புவித்து விடுவதற்குப் போதிய அவகாசமும் இல்லை. இச் சம்பவம் ஜகராயருக்கு தாமதமின்றி அறிவிக்கப்பட்டது. மேலெல்லாம் மாசுபடிந்து, உடலெல்லாம் காயமுற்று, வாடி வதங்கிக்கிடக்கும் ரெங்கராயரை ஜகராயருக்குமுன்பு கொ ணர்ந்தார்கள். ஜகராயர் கடுஞ்சினங்கொண்டு ரெங்கராயரை அவர் மனைவி மக்கள்கூட காணமுடியாதபடி தனியறையில் கடுங்காவலில் மறுபடியும் வைக்கும்படி கட்டளையிட்டார்.

எச்சமநாயக்கர் இச்செய்தியைக் கேட்டு மிகவும் வருந் தியபோதிலும், எடுத்த காரியத்தை முடிக்காமல் எளிதில் விட்டுவிடும் இயல்பினர் இல்லையாகையால், எப்படியாவது தன் உயிரைக்கொடுத்தாவது முன்னைய ராமராய அரச பரம் பரையிலுள்ள ஒருவரைச் சிம்மாசனத்திலேற்றுவிக்கவேண்டு மென்ற தீர்மானத்தைச் சிரமேற்கொண்டார்.

சிற்றரசர்களுள் நடுத்தர வயதினர் ஒருவர் இருந்தார். அவர் அஞ்சாநெஞ்சம் படைத்தவர். ஆண்மையே உருவாக

விளங்குபவர். அவரிடத்திலுள்ள வீரர்கள் ஐந்நூறு பேர் களேயாயினும், அவராவது அவருடைய படைவீரராவது அபாயத்தைக் கண்டு எப்போதாவது பின்வாங்கினதில்லை. இதையறிந்த எச்சமநாயக்கர் அவரையழைத்து, உங்கள் தீரத்தைப்பற்றி நான் மிகவும் நன்றாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது ஜகராயர் ஊரை விட்டுவிட்டு தன்னுடைய இச்சக மொழிகளால் தனது கட்சியில் சேர்த்துக் கொண்டிருக்கும் சிற்றரசர்களைச் சந்திப்பதற்குச் சென்றிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ரெங்கராயர் சிறைப்பட்டிருக்கும் சிறைக்கோட்டையைக் காவல் புரிபவர் சிலரே. பழைய அரசரிடத்தில் பற்றுடையவர்கள் ராஜ விசுவாசத்தைக் காட்டுவதற்கு இதுதான் தக்க தருணம். நான் எனது சேனையை அங்கு அனுப்பினால், ஜகராயருக்கு உடனே செய்திபோய், அவர் தனது இருபதினாயிரம் சேனையோடும் வந்து பெரும் சேதம் விளைத்துவிடுவார். ஆனால் உங்களைப் பற்றி அவருக்கு ஒருவித சந்தேகமும் உண்டாகப்போவதில்லை. ஆதலால் நீங்கள்தான் இப்பொழுது பழைய அரசரை விடுவித்து அதனால் விளையும் கீர்த்தியை நீங்களே அடையவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். இத்தைரிய மொழிகளைக் கேட்ட வாலிப வீரன் 'ஒன்று அரசரைவிடுவிப்பது அல்லது இறந்தொழிவது' என்று தீர்மானித்துக் கொண்டார்.

உடனே தன்னுடைய படைகளையெல்லாம் ஒன்று திரட்டி சந்திரகிரிக்கு நேராய்க் கொண்டுபோய், முற்றுகையிட்டுக் காவலாளர்களையெல்லாம் அதிசயிக்குமாறு செய்து, எதிர்த்தவர்களைக் கொன்று ரெங்கராயரை விடுவித்தார் அத்தலைவர். பின் அத்தலைவர் எச்சமநாயக்கருக்கு இச்செய்தியைத் தெரிவித்து 'ஜகராயர் திடீரென்று வந்துவிட்டால், இன்னும் படையாட்கள் தேவையாயிருக்குமென்றும், உடனே பெருக்கும் சேனை வரவேண்டுமென்றும்' சொல்லி யனுப்பிவிட்டு, பழைய அரசரை நேரில்கண்டு வணங்கி, சிறந்த வந்தன வழிபாடுகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். அதேநேரத்தில் கோட்டைக்கு வெளியே ஆரவாரமும், சண்டையின் சச்சரவும் கேட்டன. ஜகராயர் தனது சேனையோடு திரும்பிவந்து, அத்தைரியம் மிகுந்த

MADURA

தலைவரையும், அவரைச் சார்ந்தவர்களையும் கொன்றுபோட்டனன்.

ஜகராயர் கொலைத்தொழிலுக்கு அஞ்சாத கொடும் பாதகனுகிய தன் தம்பிக்கு ஆள் அனுப்பிக் கூட்டிவரச் செய்தான். அவன் வந்தவுடன் ஜகராயர், 'இந்த எச்சம நாயக்கரால் என் மனதிற்கு அமைதியே இல்லை. அவ் வெச்சமநாயக்கருக்கு எவ்வளவோ பொருளும் பொன்னும் கொடுப்பதாக வாக்குச்செய்தும் அவன் என்னுடன் ஒத்து வருவதற்கு இசையவில்லை. சிற்றரசர்களுள் முதல் ஸ்தானத்தையும் அவனுக்குக் கொடுப்பதாகக் கூறினேன். ரெங்கராயருள்ளளவும் அவன் மற்றவர்களுக்குப் பணியவே பணிய மாட்டான். ஆதலால் ரெங்கராயர் சாவதே நல்லது. மற்ற விஷயங்களை உன் ஆலோசனைக்கு விட்டுவிடுகிறேன்' என்றுன்.

உடனே அவன் சென்று சிறையிற்கிடந்த ரெங்கராயரைப்பார்த்து 'நீ சாகவேண்டிய சமயம் வந்துவிட்டது. உன்னுடைய வாளாலேயே உன்னுயிரை மாய்த்துக்கொள்ளுகிருயா? அல்லது பிறருடைய வாளால் கொல்லப்பட எண்ணமா?' என்று கேட்டான்.

உடனே ரெங்கராயர், 'நான் இறப்பதற்குமுன்னே என் மனைவிமக்களைக் காண விரும்புகிறேன், அதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்' என்று வேண்டினர்.

ரெங்கராயர் தம் மனைவிமக்களையும் பார்த்தார். தமக்கு மரணம் சமீபத்திலிருப்பதைப்பற்றித் தெரிவித்தார். 'தன்னுலியன்றளவு நன்மைகளைப் புரிந்தவர்களும், பிறர்பொருளை அபகரியாதவர்களும், மரணத்தைப்பற்றிப் பயங்கொள்ள வேண்டியதில்லை' என்றுகூறி தனது உடைவாளை உருவி தனது மனைவியையும், இரு குமாரர்களையும், ஒரு குமாரத்தியையும் கொன்றுர். ஒரே ஒரு சிறுபெண் மாத்திரம் எஞ்சியிருந்தது. அது ரெங்கராயரால் மிகவும் நேசிக்கப் பட்ட பெண். தனது தந்தையை ஒரேபார்வையாய்ப் பார்த்து, தனக்கு வரப்போகும் சாவுக்கு அஞ்சாது எதிர்நோக்கி நின்றது. ஆனல் ரெங்கராயரோ, அதை எட்டிப்பார்த்து, கொல்ல மனமற்றவராய் தமது முகத்தைத் திருப்பிக்கொண்

டார். ஒரு சிறு பெண்ணைக் கொல்வது தனக்கும், தன் குடும்பத்துக்கும் அவமானமென்று எண்ணினார்.

பெருமூச்செறிந்து வேறொரு பக்கமாய்த்திரும்பி, தனது வாளால் தன்னைத்தானே குத்திக் கொன்றுகொண்டார். ரெங்கராயரின் மரபினர் எவரும் உயிரோடிருக்கக்கூடாதென்று தீர்மானித்து, எஞ்சியிருந்த சிறுமியையும், ஜகராயரின் உடன் பிறந்தோன் இரக்கமின்றி அவ்விடத்திலேயே கொன்றுவிட்டான்.

ஜகராயர் இனியாவது அமைதியுடன் சந்தோஷமாகக் காலங்கழிக்கலாமென்று எண்ணி இறுமாந்திருக்குந் தருணத்தில், எச்சமநாயக்கர் ஜகராயரிடத்தில் ஒரு தூதுவரையனுப்பி 'நீ அரச வமிசத்தினை அழித்துவிட்டதாக எண்ணினாலும் இன்னும் ஒரு பிள்ளை எஞ்சியிருக்கின்றானாதலால் நீ எங்களிருவரையும் கொன்றாலொழிய, உன்னால் நியமிக்கப்பெற்ற போலியரசன் சிம்மாசனத்திலிருக்க இயலாது' என்று சொல்லும்படி செய்தார்.

இம்மாதிரியான வீரமொழிகளைக்கேட்ட சிற்றரசர்கள் பலர் தங்கள் படைகளையெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு ஜகராயருக்கு விரோதமாக எச்சமநாயக்கரோடு இணைந்து போர்க்களம் புகுந்தனர்.

ஜகராயருக்கோ கைவசம் அறுபதினாயிரம் போர்வீரர்கள் உண்டு. ஆனால் அவர்களுடைய விரோதிகளின் பக்கத்தில் இருபதினாயிரம் போர்வீரர்கள் மாத்திரம் உண்டு. ஆதலால் ஜகராயருக்கு வெற்றி நிச்சயமென்று எண்ண இடமிருந்தது. ஒருமுறை போரில் தான் வெற்றி பெற்றால் போதும், எச்சமநாயக்கருடைய ஜம்பத்தை எவ்வித சிரமமுமின்றி அடக்கிவிடலாமென்று கூறினன்.

இச்செய்தியை எச்சமநாயக்கர் கேள்வியுற்றனர். ஒன்றும் வாய்பேசவில்லை. ஜகராயரின் சேனை அதிகமென்று அவருக்கும் தெரியும்; இருந்தாலும் "உண்மையைக் கடைப்பிடித்து, நன்மையைக் கடைப்பிடி" என்ற கொள்கையின்படி தன் போர்வீரர்களைத் தைரியப்படுத்தி, நல்லுரைகள் கூறி, வெற்றியை நிச்சயமாய் எதிர்நோக்கியிருந்தார்.

அப்படியே பதினாயிரம் போர்வீரர்களுக்கு மத்தியில் இறந்துபோன ரெங்கராயரின் இளைய குமாரனை வைத்து,

பின்னே பதினாயிரம் போர்வீரர் புடைசூழச் சென்று ஜகராயரின் சேனைத்திரளை மிக்க வன்மையுடன் தாக்கி, அவர்களைச் சிதறடித்து, ஜகராயருடைய கூடாரமட்டும் பின் தொடர்ந்து, அவனைப்பார்த்து, 'வெங்கட்டராயரின் முத்திரை மோதிரம் முதலியவற்றை இக்ஷணமே கொடுக்க வேண்டு' மென்று அதிகாரத்துடன் கேட்டார்.

ஜகராயரின் சேனை சிதறுண்டு சின்னாபின்னப்பட்டு விட்டபடியால், ஜகராயர் வேறுவழியின்றி, வெற்றி கொண்ட எச்சமநாயக்கருக்குத் தனது அரசச் சின்னங்களையெல்லாம் கொடுத்து, தன்னையும் ஒப்புக்கொடுத்து விட்டான்.

எச்சமநாயக்கரின் விருப்பம் பூர்த்தி யாகிவிட்டது. எல்லாச் சிற்றரசர்களும் ரெங்கராயரின் மிஞ்சிய புதல்வனை மன்னராக ஏற்றுக்கொண்டார்கள். கர்வங்கொண்ட ஜகராயர் தன் மீதியான சேனையுடன் மீண்டும் ஒருமுறை சிம்மாசனத்தைக் கைப்பற்றுவதற்கு நம்பிக்கையே யில்லாமல் காட்டிற்குத் துரத்தப்பட்டனன்.

பல துன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் இடையில் அன்னியனால் அபகரித்துக்கொள்ளப்பட்ட அரசாங்கத்தை உரிய அரசகுமாரருக்கு உரிமையாக்கிவைத்த, சிறந்து விளங்கிய சீர்பெறு தலைவனது சரிதை இத்துடன் முடிவுபெறுகின்றது. எச்சமநாயக்கர் தம்முடைய ஆண்மையினாலும், பக்தியினாலும் அரும்பெருஞ் செயல்களை இயற்றிய இந்திய மக்களின் இடத்தில் தாமும் ஒரு இடம் பெறுவதற்குத் தகுதியுற்றவரானார் என்பது திண்ணம்.

## VI

# ஒரு வீர அரசி

ஆமத்நகரத்து அரசகுமாரியான சாந்த் பீபி, பீஜப்பூர் சுல்தான் அலிஅடில்ஷாவின் பத்தினி. இவ்விருநாட்டின் உறவு அதிக நெருக்கமாகும்பொருட்டு, பீஜப்பூர் சுல்தான் தன் சகோதரியை ஆமத்நகரத்து இளவரசனுக்கு பாணிக்ரஹணம் செய்துகொடுத்திருந்தான்.

1565-ல் நடந்த தலைக்கோட்டை யுத்தத்தில், பீஜப்பூர் குதிரைப்படையும், ஆமத்நகரத்தின் பீரங்கிப்படையும் ஒன்று சேர்ந்து போர்புரிந்ததால்தான், மகம்மதியர்கள் இந்துசேனையைத் தோற்கடித்து வெற்றிபெற்றார்கள்.

சாந்த் பீபி அதி புத்திநுட்பமுடையவளாதலால், அவள் கணவனுக்கு எல்லாவிதத்திலும் உதவியாயிருந்தாள். ஆனதுபற்றி அலிஅடில்ஷாவின் மரணத்திற்குப்பின், பட்டத்திற்கு உரியவனான இப்ராஹிம் அடில்ஷா சிறுவனாகையால், ராஜ்யகாரியங்களைக் கவனிக்கும்படி அலிஅடில்ஷா தன் மரணத்தறுவாயில், தன் ராணி சாந்த் பீபியை நியமனம் செய்தான்.

சாந்த் பீபி பிரதிநிதி வேலையை மிகுந்த விவேகத்தோடும் தைரியத்தோடும் நடத்திவந்தாள். அவளிடத்துள்ள உள்ளான நற்குணங்களுக்காக பீஜப்பூரின் பிரஜைகளும் போர்வீரர்களும் எப்படி அவளைப் புகழ்ந்தார்களோ, அப்படியே அவளுடைய ராஜாங்க நிர்வகிப்பின் திறமைக்காகவும் வியந்தார்கள். ஆனால் அவள் தன்னிஷ்டம்போல் ராஜ்யபரிபாலனம் செய்ய முடியவில்லை. ஏனெனில் ஒருவர்பின் ஒருவராகப் பீஜப்பூர் சமஸ்தானத்தில் நியமனம் செய்யப்பட்ட மந்திரிமார்களெல்லாரும் கெட்டிக்காரர்களானாலும், பழிக்கஞ்சாதவர்களாகவேஇருந்தார்கள். ஒரு சமயத்தில் அம்மந்திரிகளில் ஒருவன் அவளைத் தேசப்பிரஷ்டம் செய்து, சத்தாராவில் சென்று வசித்துவரும்படி ஏற்பாடு செய்தான். இளவரசனாகிய இப்ராஹிம் ராஜ்யபாரத்தைத் தானே வகிக்க ஆரம்பித்தவுடனே, சத்தாராவிலிருந்த சாந்த் பீபியை பீஜப்பூருக்கு வரவழைத்துக்கொண்டான். ஆனாலோ அவள் ராஜ்யகாரியங்களில் ஒன்றிலும் தலையிடாமல் சிலகாலம் கழித்துவந்தாள்.

இந்நிலையில் இவள் வெகுநாள் இருக்கக்கூடவில்லை. ஆமத்நகரத்தில் ஏற்பட்ட குழப்பத்தில் இவள் தலையிட நேரிட்டது. இவள் சகோதரன் நைசாம்ஷா இறக்கவே, பட்டம் யாருக்குரியதென்பதைப்பற்றிச் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டன.

நைசாமின் மரணத்திற்குப்பின், அப்பட்டத்தை அவன் குமாரனுக்கு அளிக்க, தக்ஷிணவாசிகளின் ஒரு பெருங்கூட்டத்தாருக்கு விருப்பமில்லை. ஆகையால் அவர்கள், தங்களுக்கு முன்பின் தெரியாத யாரோ ஒரு இளைஞனுக்கு அப்பதவியை அளித்து, அவன் கட்சியைப் பலப்படுத்த, ஷாஜஹான் சக்கரவர்த்தியின் குமாரனாகிய மூரத் என்பவனது உதவியை நாடினார்கள். சக்கரவர்த்தி திருமகனுக்குத் தெக்கணத்தை ஜயிக்க மிக்க விருப்பம். அதற்குத்தக்க நல்ல சமயம் எப்போது வாய்க்குமென்று அவன் அதிக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

நியாயப்படி சாந்த் பீபியின் சகோதரன் மகனுக்குத்தான் பட்டம் சூட்டவேண்டியது. அவன் கட்சியைச் சார்ந்தவர்கள் சாந்த் பீபியினிடம் வந்து, அம்மகனைச் சிம்மாசனத்தில் வைக்க, அவள் உதவியை நாடினார்கள்.

இந்த வீரப்பெண்மணிதான் 1595-ல் ஆமத்நகரத்தை முற்றுகை யிட்ட மொகலாயருடைய சைனியங்களுக்கு விரோதமாய்ப் போர் செய்து, அந்நகரம் பிடிக்கப்படாதபடி பாதுகாத்தவள். அவளது தைரியத்திற்கும், யுத்தமுறைக்கும் எதிர்த்துநிற்க ஏலாதவனாய் மூரத் என்னும் இளங்குமரன் முற்றுகையை நிறுத்தி தன் சைனியங்களோடு தன் ஊருக்குத் திரும்பிச்செல்ல நேரிட்டது. இதற்குக் காரணம் சாந்த் பீபியின் வீரத்தன்மையே.

புருஷனை இழந்து ஜீவனாம்சம் பெற்று வருகின்ற ராணி சாந்த் பீபி, அனேக ராஜ கன்னிகைகள் புடைசூழ, ஒரு நாள் பீஜப்பூரிலுள்ள தன் அரண்மனையில் வீற்றிருந்தாள். அக்கன்னிகைகள் துணிகளில், பொன், வெள்ளி சரிகைகளால் செடி, கொடி புஷ்பங்கள் இவைகளையமைக்கும் சித்திரத் தையல்வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ராணி அற்புதமான வீரச்செயல்களை விவரிக்கும் சரித்திரங்களைத் தன்னுடைய மெல்லிய குரலால் அவர்களுக்கு உரக்க வாசித்தாள்.

சாந்த் பீபியின் ஸ்வீகார புத்திரன் அப்பாஸ்கானின் மனைவி சோரா (Zora) என்ற குமரி அவள் பாதத்தருகில் நெருங்கி உட்கார்ந்துகொண்டிருந்தாள்

எங்கும் அமைதியும், சந்தோஷமும் குடிகொண்டிருந்தது. கதை வாசிப்பதைச் சற்று நிறுத்தினாள். தன் அருகிலுள்ள பெண்களின் வனப்பைக் கண்ணுற்றுக் களித்தாள். பிறகு தன் அரண்மனையில் அலங்கரித்துள்ள அனேக சாமான்களின் விசித்திரத்தை மாறி மாறிப் பார்த்தாள். பின்னர் தனக்கு எதிரே திறந்துள்ள சாளரத்தின் வழியாகத் தெரிகிற பள்ளிவாசலின் உன்னத கோபுரங்களின் உச்சியில் பளீர் பளீர் என்று பிரகாசிக்கும் தங்க கலசங்களைப் பார்த்து ஆனந்த பரவசமாய்ப் பெருமூச்செறிந்தாள். ஏனெனில் இதுகாறும் ராஜ்ய பாரத்தைத் தாங்கி, அரண்மனை உத்தியோகஸ்தர்களின் வேலையைக் கண்காணித்து வந்ததினால் களைத்துப்போன, மதிவதன (சாந்த்) பீபி ராணிக்கு இப்

பொழுது அனுபவிக்கும் 'இளைப்பாறுதல்' யோகிகள் அனுபவிக்கும் சுகமென்றே சொல்லலாம். சாந்த் பீபியின் பூரணச் சந்திர வதனத்தைக் கவலையோடு கண்ணுற்ற சோரா, 'என் அருமை மாமியே, ஏன் பெருமூச்செறிகிறீர்கள்' என்று கேட்டாள். அங்குள்ள கன்னியர்கள் யாவரும் தங்கள் அரசியின் கவலைக்குக் காரணம் யாதோ என்று அறிய அவளையே உற்று நோக்கிய வண்ணமாயிருந்தனர்.

'நான் பெருமூச்செறிந்தேனு' என்று ராணி புன்சிரிப்போடு வினவினாள். 'அப்படியே நான் செய்திருந்தால் நான் துக்கத்தால் செய்தேன் என்று நினைக்கவேண்டாம். வாஸ்தவத்தில் நான் இவ்வளவு சந்தோஷமாய் என் காலத்தை என் மனதிற்குப் பிரீதியான வேலைகளிலும், விளையாட்டிலும் கழிக்கிறேனே என்று நினைத்தேனேயொழிய வேறில்லை' எனக் கூறினாள். பின்னும் தன்னுடைய கரங்களை உயர்த்தி, 'இவ்விதமாக நான் எப்பொழுதும் என் காலத்தைக் கழித்ததில்லை. பலசாலிகளால் மட்டும் உபயோகிக்கக்கூடிய அத்தகைய வாளாயுதங்களை இந்த என் கரங்கள் எத்தனையோ முறை தாங்கியுள்ளன. அக்கரங்கள் இப்பொழுது இந்த ஊசியால் செடிகளையும், கொடிகளையும் சித்தரிக்கின்றன' என்று தன் மெல்லிய கரங்களை உயர்த்தி அவைகளை உற்று நோக்கினவளாய் மேற்கூறிய வார்த்தைகளைச் சொன்னாள்.

சித்திரம் வரைதல், சரிகை நூலால் பட்டுவஸ்திரங்களில் புஷ்பங்கள் பின்னுதல், இவைபோன்ற சாத்வீகமான வேலைகளில் சாந்த் பீபி எவ்வளவு பேர் பெற்றவளோ, அவ்வளவு அவள் போர் முறைகளிலும் சிறந்தவளாகையால் அவள் சொல்லுவதை அவளைச் சூழ்ந்துள்ள பெண்கள் அதிக ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். குதிரைப்படையின் தளகர்த்தர்களில் அவளோடு குதிரை சவாரி செய்ய வல்லவன் எவன்? கேட்பவர் மெய்ம்மறந்து தலையசைக்கும் வண்ணம் வாய்ப்பாட்டிலாவது, வாத்தியங்களை மீட்டுவதிலாவது இவளை வெல்லக்கூடிய பாடகன் எவன்? ராஜ்ய தந்திரத்தில் இவளை வெல்லவல்ல புத்தி நுட்பமுடைய மந்திரி எவன்? சிறந்த காவியங்களின் கருத்துக்களை அவ்ளைவிடச் சிறப்பாய்ச் சொல்லும் வாக்காளன் எவன்? மாந்தளிர் போன்ற அவளது சரீரத்தின் மென்மையையும், பூரணச்

சந்திரனைப் பழிக்கும் அவள் வதனவனப்பையும், ஒரு சிறிது குறைக்க அவளிடத்து கோபக்குறியையாவது, பிடிவாதத் தோற்றத்தையாவது கண்டவர் எவர்? இவ்வாறான சிறப்புகளில் உவமையற்றவள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

ராணி திரும்பவும் புத்தகம் வாசிக்கத் தொடங்கினள். பெண்கள் தங்கள் சித்திரவேலையைச் செய்ய ஆரம்பித்தனர். அவ்வளவு சமாதானமும் அமைதியுமான அந்த வேளை சொற்ப நிமிஷங்களுக்குள் நேர்விகற்பமாக முடிந்துவிடுமென்று யோசிக்கத்தக்க காரியம் எதுவும் அங்கு தோன்றினதில்லை.

திடீரென்று கீழ் முற்றத்தில் சிலர் இறுமாப்புடன் வாக்குவாதம் செய்வதுபோல் ஒரு கூக்குரல் கேட்டது. 'ராணியின் திவ்விய சமுகம் போ' என்ற வார்த்தைகள் மட்டும் அக்கூச்சலுக்கிடையில் தெளிவாக யாவர் காதிலும் விழுந்தன.

'நாங்கள் ஒரு அவசர காரியமாய் வந்திருக்கிறோம். காலதாமதம் செய்யக்கூடாது' என்ற வார்த்தைகளும் இன்னும் பல வார்த்தைகளும் கேட்டன. பிறகு அநேகர் நடக்கிற காலடிச்சத்தமும், குதிரைகள் கடிவாளங்களைக் கடிக்கிற சத்தமும் கேட்டன. சோரா ஒரு நொடிப்பொழுதில் ஓடிச் சாளரத்திற்குச் சென்று, திரையின் பக்கமாய்ப் பார்த்து 'நூறு இருநூறு பேர்கள் குதிரைகளில் சவாரிசெய்து வந்திருக்கின்றனர். ஏன் அவர்கள் இங்குற்றனர்?' என்று சோரா தனக்குள்ளே வினவினள்.

விலகிக்கிடந்த மெல்லிய முக்காட்டை இழுத்துத் தன் முகத்தை மூடிக்கொண்டு ராணி தன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, சோராவை (Zora) கருத்தாய் நோக்கி, 'இன்றைக்கு கதை வாசிப்பு இவ்வளவுதான் என்று தோன்றுகிறது. பெருமாட்டிகளே, நான் உங்களைக் கூப்பிடுமளவும் நீங்களெல்லாம் வெளியே இருங்கள்' என்று நிதானமாய்த் தன்னைச் சூழ்ந்துள்ள பெண்களைப் பார்த்துச் சொன்னாள்.

கன்னிகைகள் உடனே எழுந்து கம்பீரமாக ராணியை வணங்கி ஒரு உள் அறைக்குச் சென்றார்கள். (Zora) சோரா

மட்டும் அங்கேயே தயங்கி நின்ருள். 'அம்மா நான்மட்டும் உங்களோடு இங்கேயே இருக்கவேண்டுகின்றேன். என்ன நடக்கப்போகிறதென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையினுல் அல்ல, உங்கள் பிராணனுக்கு ஏதேனும் ஆபத்து விளையுமோ என்ற பயம் என்னை வருத்துவதால் நான் இங்கிருக்க உத்தரவு கேட்கிறேன்' என்று அதிக பயத்தோடு வேண்டினுள்.

'ஏன் இவ்வாறு நடுங்குகிருய்? வேண்டாம், என் கண்ணே! சோரா,' என்று அதிக ஆர்வத்தோடு சாந்த் பீபி உரைத்து, 'என்னிடத்து ராஜ விசுவாசமுள்ள ஒரு நூறு வீரர்களாவது இந்த என் அரண்மனையிலில்லையா? பயப்படாதே! உன் தோழிகளோடு நீயும் செல். ஓர் யுத்தவீரனின் மனைவி நீ என்பது உனக்கு ஞாபகம் இருக்கட்டும்' என்று ராணி சோராவைப்பார்த்துச் சொன்னுள்.

இவ்வாறு ராணி சற்று கண்டித்துச் சொன்னவுடனே (Zora) சோரா தலையை நிமிர்த்து ராணியைத் தைரியமும், அன்பும் வெளித்தோன்றும் பார்வையுடன் உற்று நோக்கி, பின்பு அவ்விடத்தைவிட்டு அகன்ருள்.

அவளுடைய பிரகாசமான ஆடை மறைந்ததும், சாந்த் பீபியின் எதிரே ஒரு வேலைக்காரன் நின்று அவளுக்குத் தாழ்ந்து வணங்கி, ஆமத்நகரத்திலிருந்து ஒரு ஸ்தானுபதியும், அவனுக்குத் துணையாய் ஒரு குதிரைவீரனும் வந்திருக்கிருர்கள் என்றும், அந்த ஸ்தானுபதி பெரிய ராணியைப் பேட்டி காண உத்திரவு பிறக்கவேண்டுமென்று மன்ருடுகிறதாகவும் சொன்னுன்.

இவ்வார்த்தைகளைக் கேள்வியுற்ற பின்னும் சாந்த் பீபியின் களங்கமற்ற முகம் யாதொரு கலக்கமும் அடையவில்லை.

'நமது விருந்தினர்களை உபசரிப்பதில் எவ்வளவு கவனம் செலுத்தவேண்டியதோ அவ்வளவும் வந்திருப்பவர்களுக்குச் செலுத்தவேண்டும். நான் வந்திருக்கும் ஸ்தானுபதியைப் பார்க்குமுன் என்னுடைய ஸ்வீகார புத்திரனுகிய அப்பாஸ்கானை நான் பார்க்க விரும்புவதால் உடனே இவ்விடத்திற்கு அவனை வரும்படி சொல்' என்று சாந்த் பீபி வேலைக்காரனைப் பார்த்துக் கட்டளையிட்டாள்.

வேலைக்காரன் அதிவேகமாய்ச் சென்று, அப்பாஸ்கானைக் கூட்டிக்கொண்டு விரைவில் வந்தான். அவனது அழகிய முகத்தில் கவலையும் ஆத்திரமும் விளங்கின. அதைப் பார்த்ததும் ராணியின் முகத்திலும் இக்குறிகள் காணப்படாமலில்லை.

'அடிக்கடி உபயோகப்படுத்தாததால் எனது யுத்தாயுதங்கள் துருப்பிடித்துப்போகின்றனவென்று சொல்லும்பொருட்டு இங்கு வந்தனையோ?' என்று சற்று வேடிக்கையாய் ராணி தன் முன் நின்ற அப்பாஸ்கானை வினவினாள்.

'அம்மா, ஏளனமாகப் பேசுவது தற்சமயம் தகுதியல்ல. ஆமத்நகரத்தில் கலகமும் சண்டையும் நிகழ்ந்துள்ளன. ஒவ்வொரு கட்சியும் தங்கள் தங்கள் தலைவனுக்கு ஆமத்நகரத்தின் அரசுமுடியைச் சூட்ட விரும்புகிறார்கள். கட்சிகளுக்குள் சச்சரவும் சண்டையும் அதிக மும்மரமாகவேயிருக்கின்றன. இந்தக் குழப்பத்திற்கு மத்தியில் ஷாஜஹானின் குமாரனை மூரத், வல்லூறு புறாவின்மேல் பாயப்போவதுபோல, திக்கற்ற ஆமத்நகரத்தின் கோட்டைகளின் மீது முற்றுகையிட்டுப் பிடித்துக்கொள்ளத் தகுந்த சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். அநேக கட்சிகளின் சச்சரவால் ஒற்றுமையை இழந்திருக்கும் ஆமத்நகரம் எவ்வாறு மொகலாயப்படையை எதிர்த்துத் தோற்கடிக்க முடியும்?' என்று அப்பாஸ்கான் மிக்க ஆத்திரத்தோடு பதிலளித்தான்.

'அதற்காகவா, அவர்கள் என்னைநாடி இங்கு வந்திருக்கின்றனர்? ஐயோ என் அருமை நாடே! நீ என்ன கஷ்டத்திற்குள்ளானாய்' என்று ராணி மெதுவாகத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். இத்தகைய எண்ணத்தினால் அவளுக்குற்ற மனத்துயரத்தை எவரும் காணாது மறைக்கும்பொருட்டு சாளரத்தை நோக்கிச்சென்று, வெகு தூரத்திலுள்ள குன்றுகளுக்கப்பாலுள்ள தனது ஜன்ம பூமியைப் பார்க்கிறவள்போல, பலகணியின் வழியாய் தூரத்திலுள்ள குன்றுகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கொஞ்சநேரத்திற்கப்பால் சாளரத்திலிருந்து திரும்பினாள். அப்பொழுது அவளது கண்களில் துக்கம் நீங்கி, வழக்கம்போலுள்ள பிரகாசம் காணப்பட்டது. அவள் பார்வையில் வைராக்கியம்

வெளிப்பட்டது. 'ஆமத்நகரத்துக்கு நான் தொண்டுபுரிவது அவசியமானால், கட்டாயம் அப்பணியை ஆற்ற உறுதிசெய்து கொண்டேன். நீ என் உறுதியை மாற்ற நினைக்காதே. என் குணம் உனக்கு நன்ருய்த்தெரியும். ஆபத்திலேயே மூழ்கி எழுந்தவளாகிய எனக்கு ஆபத்தென்பது ஒரு பொருட்டல்ல. தர்மத்தை நிலைநாட்ட நான் போர்புரிவதற்குச் சென்ருல், என் அருந்தவப் புதல்வனையொத்த நீ என்னோடு புறப்படச் சித்தமாயிருக்கிருயா என்பதை எனக்குச் சொல்லவேண்டும்' என்று கேட்டாள். அப்பாஸ்கான் தலையை நிமிர்த்து, தன் கரத்தை உடைவாளின் பிடியின் மேல் வைத்து, 'நான் வணங்குகின்ற பரிசுத்தக் கடவுளின் மேல் ஆணை, என் முன்னோர்கள் உபயோகித்த இந்த உடைவாளின்மேல் ஆணை, எதிரியோடு சண்டைசெய்து உயிர் துறந்தாலும் சரி, வெற்றி பெற்ருலும்சரி, உன்னோடுகூடவே நின்று விரோதியோடு சமர்புரிவேன்' என்று ஆணையிட்டுக் கொடுத்தான். இவ்வாணை மொழிகளைக்கேட்ட சாந்த் பீபி 'என் பாக்கியமே பாக்கியம். பரந்த உலகத்திலுள்ள மாந்தர்கள் தங்களுக்குற்ற இடுக்கண்களைக் களைய சுத்தவீரனது உதவியை நாடா நிற்கின்றனர். அத்தன்மையான மாதர்களில், என் விஷயமாய்ப் போர்புரிய உறுதிகொண்ட சுத்த வீரனை நான் அடையும் அவ்வளவு பாக்கியத்தை பெற்றவர் யார்? நாம் இப்பொழுது வந்த ஸ்தானபதியோடு வார்த்தையாடி அவன் இவ்வளவு தூரம் பிரயாணம்செய்து இங்குற்றதின் முக்கிய நோக்கம் யாது என்று தெரிந்துகொள்வோம்' என அதிக உறுதியான தீர்மானங்கொண்டவளாய்ப் பேசினள்.

ஆமத்நகரத்துத் தூதுவனைச் சாந்த் பீபியின் சமுகம் அழைத்துச் சென்ருர்கள். சாந்தமும், கம்பீரமும், அவளது முகத்தில் குடிகொண்டிருந்தன. தூதுவன் யாதொன்றும் அவ்வித முகத்தினின்று தெரிந்துகொள்ள முடியவில்லை. வந்தகாரியம் இன்னதெனச் சொல்லும்படி அதிக அன்போடு அவள் வினவினள். பிறகு அவள் தூதுவன் சொல்லிய விஷயங்களின் ஒவ்வொரு பகுதியையும், அதிக கவனமாய்க்கேட்டு ஆமத்நகரத்துக்கு விளைந்துள்ள ஆபத்தையும் அந்நகரத்தார் சாவுக்கஞ்சாது போர்புரியத் தீர்மானித்

திருப்பதையும் தெரிந்துகொண்டாள். தூதுவனை அடுத்தடுத்து சில கேள்விகளைக்கேட்டு, ஆமத்நகரத்து அரசனிடத்து ராஜபக்தியுள்ள சேனையின் தொகுதியையும், அந்நகரத்தின் காவலான அரண் முதலியவைகளின் நிலைமையையும், மூரத் (Murad) என்ற ராஜ குமாரனது சைனியங்கள் எவ்வாறு, எங்கெங்கே அணிவகுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் தெரிந்துகொண்டாள். எல்லா விஷயங்களையும் அதிக நுட்பமாகக் கேள்விகள் மூலமாய் உணர்ந்து ஆமத்நகரத்தின் உண்மையான நிலைமை இன்னதென்பதைத் திருப்திகரமாக உணர்ந்தபிறகு, அவள் ஸ்தானுபதியைப் பார்த்து 'ஐயா, ஆமத்நகரம் சுயாதீனத்துடன் இருக்க வேண்டுமென்பது எனது உள்ளக்கிடக்கையாயினும், நான் ஒரு பெண்பால் என்பதையும், ஸ்திரீகளிடத்துத்தோன்றும் உடல் வலிமையே என்னிடத்துமுள்ளது என்பதையும் நீர் நன்முக அறிந்துகொள்ளவேண்டியது. நீங்களும் இன்னும் மற்ற சேனைத்தலைவர்களும் என்னைச் சேனுதிபதியாக ஒப்புக்கொண்டு, என் முகவலையைத் தங்கள் கொடியாகப் பாவித்து, என் ஆணையின் கீழிருந்து சமர்புரியச் சம்மதிப்பீர்களா?' என்று மிகச் சாந்தமாக வினவினள்.

ராஜ தூதுவன் சாந்த்பீபியைத் தாழ்மையோடு வணங்கி, அவளை நோக்கி, 'பெருமையும் மாண்பும் ஒருங்கே குடிகொண்ட அரசியே! தங்கள் பெயர் ஒன்றே ஒவ்வொரு யுத்தவீரனையும் அதிக ஊக்கத்தோடு நியாயக் கட்சியில் நின்று உண்மையாய்ப் போர்புரியச் செய்யும் மந்திரமாகும். தங்களிடத்து விளங்கும் அபார புத்திக்கூர்மை மிகக் கீர்த்தி பெற்றுள்ளது. படைவீரர்களிடத்து மறைந்துகிடக்கும் வீரத்தை வெளிப்படுத்தச் செய்யவல்ல தங்களிடத்துள்ள அபூர்வ சக்தி, மிகவும் வல்லமை பொருந்தியது. ஆகையால் தாங்கள் ஆமத்நகரம் வந்தீர்களென்ற வார்த்தையைக் கேட்டவுடனே, ஒவ்வொரு வீரனும் தன்னுடைய வாளை உருவிக்கொண்டு தங்கள் சகோதரனின் அருந்தவப் புதல்வர் சார்பாகச் சண்டை செய்யத் தூண்டப்படுவானென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை' என்று பதிலளித்தான்.

ராணி சிறிதுபொழுது யோசித்துப் பிறகு பின்வருமாறு சொல்லலுற்ருள்: 'முன்னொரு சந்தர்ப்பம் ஆமத்நகரத்

தின் படுகொலையை நிறுத்த அங்கு வந்தேன். அதை நிறைவேற்றமுடியாமல், மனது மிக நொந்து யுத்தம் செய்து அலுத்து பீஜப்பூர் திரும்பிவந்தேன். பிறகு கடவுளிடத்துப் பக்தி செய்வதிலும், மனச்சாந்தமாயிருப்பதிலும், என் வாழ்நாள் மிகுதியைக் கழிக்கவேண்டும் என்று பிரதிக்ஞை செய்துகொண்டேன். அப்போது என்னால் நிறைவேற்ற முடியாததை இப்பொழுது சித்திக்குக் கொண்டுவர முடியுமென்று நினைக்கிறாயா?' என்றாள்.

'அஞ்சா நெஞ்சுள்ள ராணியே! நீங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள் என்பது திண்ணம்' என்று அதிக உறுதியாய் தூதுவன் சொல்லி, திரும்பவும் அரசியை நோக்கி 'நான் சென்று, தாங்கள் கோட்டையைக் காவல்புரியப் போகிறீர்கள் என்ற இந்தச் சுபசெய்தியைச் சொல்வேனானால், என் வாய் மூடுமுன், ஆயிரக்கணக்கான பட்டயங்கள் எழும்பி மின்னும்; அநேக ஆயிரம் பேர் வெற்றிமுழக்கம் செய்வார்கள் என்பது திண்மை' என்று அதி பரபரப்புடன் சொன்னான்.

முகவலைக்குள்ளிருக்கும் ராணியின் கண்கள் பிரகாசித்தன. அவளது கரங்கள் தாமாகவே உடைவாளின்பிடியைத் தேடின. 'உன்னுடைய வீர மொழிகள் என் சரீரத்தில் பரவும் ரத்தத்தைக் கொதிக்கச்செய்தன. போதும் நிறுத்து. நான் ஆமத்நகருக்குக் கட்டாயம் வரப்போகின்றேன். மூரத் இளவரசன் வெற்றிபெறப்போவதைப் பார்ப்போம்' என்றாள்.

தான் வந்த காரியம் நிறைவேறினதால் சந்தோஷத்தில் மூழ்கி, சாந்த் பீபிக்குச் செய்யவேண்டிய வணக்கம் மரியாதையை முறைப்படி செய்து விடை பெற்றுக்கொண்டு ஸ்தானாபதி திரும்பினான்.

அரசியின் தீர்மானம் அதி வேகமாய்க் காட்டுத் தீபோல் அரண்மனையெங்கும் பரவிற்று. சாமானியக் காரியங்களை அரண்மனையில் கவனிப்பார் ஒருவருமில்லை. ராணி சண்டை சம்பந்தமாக ஆலோசிப்பதிலேயே சிந்தனை உடையவளாயிருந்தாள். வெகு சீக்கிரத்தில் சிறந்த குதிரைப் படை ஒன்றைச் சேகரித்து, அதை நடத்திக்கொண்டு பீஜப்பூரை விட்டுப் புறப்பட்டாள். சோரா என்னும் பெண்

மணியோ தன் அன்புக்குப் பாத்திரமாயுள்ள கணவனையும், அவர் தாயையும் விட்டுப் பிரிந்து, பீஜப்பூரை அவர்களில்லாத சமயத்தில் பாதுகாத்துக்கொண்டிருக்கக் கொஞ்சமும் பிரியமில்லாதவளாய் இருந்தாள். ஆகையால் தனக்கு உயிருக்கு உயிரான அவர்கள் இருவரும் யுத்தத்தில் அனுபவிக்கக்கூடிய சுகதுக்கங்களைத் தானும் அவர்களோடு பகர்ந்து கொள்ள விரும்பி அவள் புறப்பட்டாள். ஆகவே, தம்பதிகள் இருவரும் சாந்த் பீபியோடு சென்றார்கள்.

ஆமத்நகரத்துள் சாந்த் பீபி பிரவேசித்தபோது, யாவரும் அவளை அதிகக் களிப்புடன் வரவேற்றார்கள். அவர்களுக்குக் கிடைத்த உதவியைப் பெரிதும் பாராட்டினார்கள். தன் கட்சியின் நிலையைப் பூரணமாகத் தெரிந்து, ராணி சேனைத்தலைமையை வகித்தாள்.

தனக்குப் பக்க பலமாகத் தன் நாட்டிற்கு அருகிலுள்ள பீஜப்பூர், கோல்கொண்டா நாடுகளின் சுல்தான்களின் உதவியைப் பெற்றுக்கொள்வது தன் முதல் வேலையாகத் தீர்மானித்தாள். பீஜப்பூர் சுல்தான் சாந்த் பீபியை, தன்னைப்பெற்ற அன்னையைப்போல அன்பு செலுத்துகிறவனாகையால், அவனுடைய உதவி கிடைப்பதைப்பற்றி யாதொரு சந்தேகமுங் கொள்ளவில்லை.

ஆனால் ஆமத்நகர சைனியத்தில் ஒரு துரோகியிருந்தான். அவன்தான் கோட்டை கவர்னர். சுயநலத்தை எண்ணி, விரோதி தனக்குப் பல பேருதவிகளைப் புரிவானென்று கருதி, எதிரியின் சிநேகத்தை நாடினான். ஆமத்நகரத்துச் சைனியத்தை நடத்துவது ஒரு பெண்ணென்றும், ஆகையால் அதைப் படையெடுக்கத் தீவிரமாய் வரவேண்டுமென்றும் ரகசியமாய் அவன் எதிரிக்குச் செய்தியனுப்பினான்.

அவனது கைதவம் கண்டுபிடிக்கப்பட்டவுடன் கடிதில் காலன் உலகிற்கனுப்பப்பட்டான். பிறகு ராணி அதிக தைரியமாய் மொகலாய ராஜகுமாரனுக்கு ஒரு கடிதம் வரைந்தாள். அரசகுமாரன் ஆமத்நகரத்திற்குச் சிநேகனாக வந்தால், அவனை வரவேற்கும் முறைப்படி வரவேற்று, அவனுக்குச் செலுத்தவேண்டிய சிறப்புகள் செலுத்தப்படுமென்றும், அவ்வாறின்றிப் பகைவனாகப் படையெடுத்து வந்தால், தானும் தன் படைவீரர்களும் தங்களுடைய ஆயு

தங்கள் முழுவதும் நாசமாகும் வரையிலும், தங்கள் சைனியத்திலுள்ள யாவரும் யுத்தத்தில் இறக்குமளவும், கோட்டையைப் பாதுகாத்துப் போர்புரிய நேரிடுமென்றும், அதிக தைரியமாய் அந்தக் கடிதத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் மூரத் இளவரசன் ஆமத்நகரத்தை எப்படியும் கைப்பற்றவேண்டுமென்ற நோக்கமாகவே யிருந்ததாலும், சக்கரவர்த்தி சிரேஷ்டனான அக்பரின் ஸ்தானாபதியாகிய தான், கேவலம் ஒரு பெண்பால் அதிகார மேறையாய்க் கட்டளையிடுவதை ஒப்புக்கொண்டு, அவள் ஏற்படுத்திய நிபந்தனைகளுக்குட்பட்டு நடக்கவா? என்ற ஆங்காரம் மேவினதாலும், சீக்கிரத்தில் ஆமத்நகரத்தை தான் எதிர்க்கப்போகிறதாக அவளுக்குப் பதில் எழுதியனுப்பினான். சாந்த் பீபி அவனையும் அவன் சைனியங்களையும் எதிர்க்க வேண்டிய பிரயத்தனங்களைச் செய்ய ஆரம்பித்தாள்.

ஆமத்நகர சிம்மாசனம் யாருக்குரியதென்பதைப்பற்றி நடந்த சச்சரவில் சண்டையிட்டுத் திருப்தியற்ற அனேகர் இப்பொழுது சண்டையை ஒழித்து மேன்மைதங்கிய சாந்த் பீபி தலைமை வகித்து நடத்தும் படையில் ஒருமிக்கச் சேர்ந்து அமர்புரிய வந்து குழுமினார்கள்.

உணவுப்பொருள்கள் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டன. கோட்டை கொத்தளங்களெல்லாம் செவ்வையாய்ப் பழுது பார்க்கப்பட்டன. பேர்பெற்ற மொகலாயச் சேனையை எதிர்த்து ஆமத்நகரத்தைக் காப்பாற்றத் தயாராக, கவசம் தாங்கி நிற்கும் தன் யுத்த வீரர்களுடன் ராணி வீரமொழிகளைப் புகன்று, வீராவேசத்தைக் கிளப்பினாள். தன் நாட்டை மொகலாயர் கையிலிருந்து விடுவிக்கவேண்டிய பிரயத்தனங்களைச் சற்றும் அச்சமில்லாமலும், அவசரப்படாமலும் செய்தாள்.

உதவிபுரிவதாகக் கட்டுப்பாடு செய்த நேச தேசங்களை அதிக சீக்கிரமாய்த் தங்கள் படைகளை அனுப்பும்படி வேண்டினாள். இவ்வாறு அவள் அவர்களைத் துரிதப்படுத்தியது, அவளுடைய முன்ஜாக்கிரதையைப் புலப்படுத்தும். ஏனெனில் பீஜப்பூரிலிருந்து தாமதமாய்ப் புறப்பட்ட ஒரு குதிரைப்படை வழியில் எதிரியின் கையிலகப்பட்டு, ஆமத்நகரத்திற்கு வந்து சேரமுடியாமற்போய்விட்டது. இந்தப்

படையைத்தவிர மொகலாயச் சேனையை வழிமறித்துச் சண்டைசெய்யக்கூடிய சேனை வேறொன்றில்லாததால், மொகலாயருடைய படை யாதொரு இடையூறின்றி ஆமத்நகரத்தை வந்தடைந்தது.

பிறகு பகவத் கிருபையால் எது நடக்கவேண்டியதோ, அதை எதிர்பார்த்த வண்ணமாய் ராணி வாளாவிருந்தாள். கோட்டைக்கு வரும் மார்க்கங்களிலெல்லாம் எதிரியின் சேனைகள் காவல் புரிந்தன. ஆனதுபற்றி வெளியிலிருந்து ராணிக்கு உதவியாய்ச் சேனைகள் கோட்டைக்குள் பிரவேசிக்க முடியவில்லை. அப்படியிருந்தும் ராணி தன்னுடைய சொந்த சேனை பலத்தால் கோட்டையைக் காப்பாற்ற வேண்டுமென்று தீர்மானித்தாள். இளமையில் அவள் கற்றுத்தேர்ந்த யுத்த முறைகள் யாவும் அவளுக்கு இத்தருணம் அதிக பிரயோஜனமாயின. அவளுடைய தானையிலுள்ள அரேபிய வீரர்கள் குறிபார்த்துச் சுடுவதில் மிக்க சமர்த்தர்கள். அவ்வரேபியர்கள் மொகலாய படையிலுள்ள பலரை அடிக்கடி சுட்டு வீர சொர்க்கம் புகுத்தனர்.

தேசத்தைக் காவல்புரியும் கலையில் ராணி மிகத் தேர்ச்சி பெற்றவள். ஆகையால் எதிரி உபயோகிக்கும் ஒவ்வொரு முறைக்கும் தகுந்த எதிர் முறையை அவள் கைதேர்ந்த தளகர்த்தனைப்போல உபயோகித்து வந்தாள். எதிரிகள் கோட்டைக்குள் வருவதற்குத் தோண்டும் ஒவ்வொரு சுரங்கமும் எவ்வளவு விரைவில் தோண்டப்பட்டதோ, அவ்வளவு சீக்கிரம் அது மூடப்பட்டது. எதிரிகள் கோட்டைகளில் பிளவு ஏற்படும்படி உடை குண்டு போட்டு உடைத்தால், அப்பிளவுகளைச் சீக்கிரம் தன் சேனைகளைக்கொண்டு பூர்த்தி செய்துவிடுவாள்.

மூரத், சாந்த் பீபியைப்பற்றி தான் இதுகாறும் கொண்டுள்ள அபிப்பிராயம் தப்பென்றுணர்ந்து, அதை மாற்ற நேர்ந்தது. தன்னைவிட ராணி அதிக சாமர்த்தியமுடையவளென்று தெரிந்தான். தன் ராணுவங்கள் ஆகாரமில்லாமல் அதிக கஷ்டப்படுவதைக்கண்டு வருந்தினான். கோட்டையை முற்றுகையிடுவதில் எத்தனையோ நாட்கள் கழிந்த போதிலும், இன்னும் முற்றுகை ஆரம்பத்தில் கோட்டை

என்ன நிலையில் இருந்ததோ, அந்நிலையில் கொஞ்சமும் வித்தியாசமில்லாதிருப்பதையும் உணர்ந்தான்.

முற்றுகையிடப்பட்ட கோட்டைக்குள் நாலா பக்கங்களிலும் சாந்த் பீபி, தனது போர்வீரர்கள் உற்சாகப்படும்படி அடிக்கடி சுற்றிவந்து சந்தோஷப்படுத்தினாள். எப்படிப் பட்ட ஆபத்தான இடத்திலும் தான் தைரியமாய் நிற்பாள். எதிரி சுலபமாகத் தாக்கக்கூடிய பாகங்களில் அஞ்சாது நிற்கையில் அவளுடைய முகவலைத்துணி, காற்றில் படபட வென்று ஒலித்துக்கொண்டேயிருக்கும். அவளுக்குப் பயமென்பது சிறிதளவேனுமில்லை.

மறுபடியும் ராணி தனக்குதவிபுரிவதாக வாக்குச்செய்த பீஜப்பூர் சுல்தானுக்குக் கடிதம் எழுதினாள். அதில் தன்னிடத்துள்ள அதிக தீரமுள்ள சேனையைத் தன் உதவிக்கனுப்பும்படி வேண்டினாள். இக்கடிதத்திற்கு யாதொரு பதிலும் கிடைக்கவில்லை. இப்பால் தன் மருமகன் யாது காரணத்தாலோ தனக்கு உதவிபுரிய இணங்கவில்லை என்று நினைத்தாள்.

உண்மை என்னவெனில், அவளுடைய கடிதங்களை மொகலாய படைத்தலைவர்கள் வழிப்பறித்து, மூரத் ராஜகுமாரனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். அவன் அவற்றில் சில வசைமொழிகளைச் சேர்த்து திருப்பிக் கடிதம் கொண்டுபோகிறவனிடம் கொடுத்தனுப்பிவிடுவான். இவ்விதமாக ராணி எந்த இடத்திலிருந்து சைனியத்தை நிச்சயமாக எதிர்பார்த்தாளோ, அவ்விடத்திலிருந்து வரவில்லை. அப்படி வருவதாயிருந்தாலும் பீஜப்பூர் சேனை ஆமத்நகரத்திற்கு வந்துசேருமுன் மொகலாயர் கையில் அகப்பட்டு சிதைவுபட்டுவிடக்கூடும்.

இவ்விதமாக முற்றுகையிட்ட சேனையும், முற்றுகையிடப்பட்ட சேனையுமாகிய இரு கட்சிக்காரர்களும் சோர்வடையும் வரையில் முற்றுகை நிகழ்ந்துகொண்டேவந்தது. ஒருநாள் இரவு சாந்த் பீபி தன் சேனைகளைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு போகும்தருணத்தில், 'வீரச்சகாக்களே, மகம்மதிய சகோதரர்களே! உங்கள் கோரிக்கை வெற்றிபெற அதிக தைரியமாய்ப் போர்புரிந்தீர்கள். இன்னும் அனேகர்களை நீங்கள் பலிகொடுக்கநேருமுன் இப்போதே சரண

மடையுங்கள். இப்பொழுது நீங்கள் நிற்கின்ற அதே கொத்தளத்தின் கோட்டைக்குள், அநேக சுரங்கங்களைத் தோண்டி மருந்துகளால் அவைகளை நிரப்பி நெருப்புவைக்கத் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நாளை அச்சுரங்கங்கள் வெடித்து, கோட்டையின் பல இடங்களில் பிளவு ஏற்படும். ராஜாதிராஜனுன மொகலாய சக்கரவர்த்தியின் சைனியங்கள் அப்பிளவுகளில் நுழைந்து கோட்டைக்குள் பிரவேசிப்பார்கள். ஜாக்கிரதை! எச்சரிக்கையாகக் கூறுகின்றேன். நீங்கள் யாவரும் உடனே சரணுகதி யடைந்தால்தான் தப்பிப் பிழைக்கமுடியும்' என்று உரத்த சத்தத்தோடு கோட்டைக்கு வெளியிலுள்ள எதிரியின் சைனியத்திலிருந்து எவனே ஒருவன் கூவினுன்.

கூக்குரல் சத்தம் திடீரென்று நின்றது. எங்கும் சப்தமின்றி அமைதியாக விருந்தது. எச்சரிக்கை மொழிகளைக் கேட்ட அனேகர் பயந்து ராணியைச் சரணமடையச் சொன்னுர்கள். சாந்த் பீபி ஒரே உறுதியாய் நின்று எதிரியின் காதில் தான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் விழும்படி தனித்தனியாய் உயர்த்திப் பின்வருமாறு பேசினுள்:—'வெற்றி பெறப்போகிற தருணத்தில் நாம் சரணுகதி செய்யோம். நம்து விரோதிகளிடத்தில் உயிர்ப்பிச்சை இரக்க நாம் பயங்காளிகளான பெண்களா? என் அருமை மக்களே! மொகலாய யுத்த வீரர்களின் கொடுமைக்கு ஆளாக உங்கள் ஆருயிர் மனைவிமக்களைப் பலியிட நீங்கள் விரும்புவீர்களா? நான் கேவலம் ஒரு ஸ்திரீஜாதிதான். ஆயினும் என் பிராணனைக் கொடுத்தாகிலும் இந்தக் கோட்டையைக் காப்பாற்றுவேன். சர்வவல்லமையுள்ள கடவுள் நம்மை இந்த துன்மார்க்கரிடத்திலிருந்து காப்பாற்றுவார். விரைவிற் சென்று சுரங்க வேலைக்காரர்களை அழைத்துவாருங்கள். தீவிரமாய் வேலைசெய்யுங்கள். ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டிய பொழுதின்னமிருப்பதால் இந்த அபாயத்தைத் தடுக்காமல் விட்டுவிடக்கூடாது' என்று உரக்கக் கூவினுள்.

இந்த வீரமொழிகளைக்கேட்ட சேனைகளிடத்துப் புதிய உணர்ச்சி தோன்றிற்று. பின்பு அவர்கள் 'எங்கள் ஆருயிர் தாயே, நாங்கள் உயிர்துறப்பதேனும் போர்புரிவோம், உங்

களைவிட்டுப் பின் வாங்கோம். எதிரியிடம் சரணாகதி செய்யோம்' என்று பெருங்கூச்சலாய் எல்லாரும் ஏகமனதாய்க் கூறினார்கள்.

அதி சுறுசுறுப்போடு மண்வெட்டி, கடப்பாரை முதலிய ஆயுதங்களால் பூமியைத்தோண்டி, சுரங்கங்களைக் கண்டு பிடித்து அதனுள் வைக்கப்பட்ட வெடிமருந்தைத் தோண்டி எடுத்து, எதிரிகளின் பிரயத்தனத்தைப் பழுதாக்கினார்கள். முதல் சுரங்கம் இவ்வாறு சிதைவுபடுத்தப்பட்டு, அதைக் காவல்புரியும் காவல்சேனை அங்கிருந்து துரத்தப்பட்டதும், மொகலாயர் உடனே தங்கள் படைகளுக்கு இச்செய்தியை அபாய அறிவிப்பினால் விளம்பரம் செய்தார்கள்.

அதிவேகமாய் மூரத், சுரங்கம் போடப்பட்டிருந்த இடத்தை நோக்கிச்சென்றான். தன்னுடைய சுரங்க வீரர்கள் ஒருமாதமளவும் கஷ்டப்பட்டுச் சமைத்த சுரங்கம் கெட்டுப்போனதைக் கண்டான். அச்சுரங்கத்திலுள்ள வெடி மருந்து தீப்பற்றி வெடித்தால் கோட்டை முழுவதும் உடைபடும் என்று இளவரசன் அதிக நிச்சயமாய் நம்பியிருந்தான். அவன் எண்ணம் நிறைவேறாமல் போனதுபற்றி மிக மனம் வருந்தினான். எதிரியின் சுரங்கக்காரர்களால் இன்னம் கண்டுபிடிக்கப்படாமலிருக்கிற ஒரு சிறிய சுரங்கத்தின் ஞாபகம் வந்தது. அதை சாந்த் பீபியின் சுரங்கப்படைகள் கண்களுக்குத் தோன்றுமுன் அச்சுரங்கத்திலுள்ள வெடி மருந்தைக் கொளுத்திவிடவேணுமென்று மூரத் இளவரசன் உடனே ஆக்ஞாபித்தான். பிறகு அக்கோட்டையின் பிளவுக்குட்சென்று யுத்தம்செய்யும்பொருட்டு ஒரு சைனியத்தையும் திட்டம்செய்தான்.

கோட்டைச் சுவற்றினின்று ஒரு சிறு புகைச்சுவாலை எழுந்தது. அதை முற்றுகையிட்டிருக்கும் சேனைத்தலைவர்கள் அதிகக் கவலையாய்க் கவனித்தார்கள். திடீரென்று மருந்து வெடித்த சத்தமும் கேட்டது. ஏராளமான கற்களும் மண்ணும் ஆகாயத்தில் கிளம்பின. சிறிய அச்சுரங்கத்தின் கேடுபாடான வேலையால் கோட்டைச்சுவற்றில் ஒரு சிறிய விடவு ஏற்பட்டது.

மொகலாய சேனையின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. முற்றுகையிட்டிருக்கும் சைனியம் விடவுற்ற இடத்திற்கு

வெகு வேகமாய்ச் சென்றது. புகையும் தூசியும் கலைந்த பின்புதான் சாந்த் பீபிக்கு ஏற்பட்ட விபத்து இன்னதெனப் புலப்பட்டது.

கொஞ்சநேரம் அவளுக்கு அபஜயம் நேரும்போல் தோன்றிற்று. தன்னுடைய ராணுவத்தின் ஒரு பிரிவு ஓட்டம்பிடிக்கவும் தயாராக இருந்தது.

'நீங்கள் எனக்குச் செய்துகொடுத்த ஆணையும் பிரதிக்கினையும் எங்கே? நீங்கள் ஓடினால் விரோதியினது கையில் அகப்படாமல் வேறு எங்கே தப்பித்து ஓடமுடியும்? உங்கள் மானத்தை இழக்கும் தறுவாயில் இருக்கிறீர்கள். இந்தத்தருணத்தில் நீங்கள் என்னைவிட்டு ஓடுவீர்களானால், யார் உங்கள் வீரத்தைப் புகழ்ந்து பாடப்போகின்றார்கள்? பெண்களாகிய நாங்கள் மனம் தளராவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டியது உங்கள் கடமையன்றோ?' என்று மிக அதிகாரத்துடனும் தூண்டப்படும் விதமாயும் சொல்லிப் படையை ஒன்று சேரும்படி செய்தாள். அத்தருணம் அன்பே உருவெடுத்து வந்ததுபோன்ற சோரா சாந்த் பீபி ராணியின் மெல்லிய கவசத்தையும் வாளையும் தூக்கிக்கொண்டு அங்கு வந்தாள். அவளிடமிருந்து அதை எடுத்து கவசத்தை அணிந்ததும் ராணி ஒரே பாய்ச்சலாகத் தாவி, உருவின தன் உடைவாளைத் தலைக்குமேல் வீசிக்கொண்டு, 'என் வீரர்களே, என்னோடு கோட்டையின் பிளவுக்கு வாருங்கள். யார் என் பின்னே சண்டைக்குவரத் தயாராயிருக்கிறீர்கள்? "மானமழிந்தபின் வாழாமை முன்னினிது." நாம் சண்டையில் உயிர்துறந்தாலும் ஒரு கணப்பொழுதில் வீரர்களோடு வீர சொர்க்கம் புகலாம்' என்று உரக்கக் கூறிக்கொண்டு முன்னுக்கு ஓடினாள் (படம் பார்க்க).

ராணியின் வலிமையும், அவள் மானத்தைப்பற்றி எடுத்துரைத்த வசனங்களும், தன்னுடைய சேனைகளுக்கு உற்சாகத்தையும் புதிய ஊக்கத்தையும் ஊட்டின. அவர்கள் கூட்டமாய் ராணியின்பின் சென்று அதிக ஊக்கத்தோடு எதிரிகளை எதிர்த்தார்கள். இவ்வண்ணமாய்க் கோட்டையைக் காப்பவர்களின் சேனைத் தொகுதியும், அவர்களுடைய ஊக்கமும் எதிரியை பிரமிக்கச் செய்ததோடு மனத்தளர்வையுமடையச்செய்தன. கூடைகளில் மண்ணை நிரப்பி அவற்றை

கோட்டைமதிலின் உச்சியிலிருந்து பிளவுக்கு நேரே சற்று கீழே கயிற்றில் கட்டித் தொங்கவிடச்செய்து, ராணியின் ஸ்வீகார புத்திரனும் இன்னும் குறிப்பில் தேர்ந்த பல வீரர்களும் அச்கூடைகளில் உட்கார்ந்துகொண்டு, பிளவுகளின் துவாரங்களினூடே எதிரியைக் குறிபார்த்து அடிக்கடி சுட்டார்கள்.

விபத்து நேரிடப்போகிறதென்று உணர்ந்து, கோட்டையை அதிக வீரத்தோடு காத்துக்கொண்டிருக்கிற தன் சேனுவீரர்களுக்கு ஒரு விருந்தளித்தாள். உணவுப்பொருள்கள் யாவும், அதிக முன்ஜாக்கிரதையாகவே ராணி சேகரம் செய்துவைத்திருந்ததால் யாதொரு கஷ்டமில்லாமல் விருந்து நடந்தேறியது.

தன்னுடைய சேனைகள் வயிறுர அறுசுவை உண்டியை அருந்த, ராணி கோட்டையின் வெடிப்பைவிட்டு அகலாமல், பசிக்குக் கொஞ்சம் அன்னத்தைமாத்திரம் உண்டுகொண்டாள். ராணியினிடத்தில் அதிக விசுவாசமுள்ள சோரா அவளோடுகூடவே யிருந்தாள். அப்பாஸ்கானும் குண்டு போடுவதில் கைதேர்ந்த அவனுடைய அரேபியர்களும் வெடிப்பைவிட்டு அகலாது காத்துக்கொண்டேயிருந்தனர்.

சிறிதுநேரம் மொகலாயர்கள் சண்டையை நிறுத்தினர். புயலுக்குமுன் தோன்றும் அமைதியைப்போல, மொகலாயர் யுத்தத்தைச் சீக்கிரத்தில் ஆரம்பித்து, வெடிப்பின் வழியாக கோட்டைக்குள் நுழையப் பிரயத்தனப்படுவார்கள் என்று ராணி முன் அறிந்தாள். கோட்டைமேலுள்ள பீரங்கிகளையெல்லாம், பிளவுக்கு நேரே திருப்பிவைக்கத் திட்டம்செய்தாள். ஆமத்நகரத்தை அதின் கோட்டையின்மேலேறி உள்ளே குதித்துப் பிடித்துக்கொள்வது எவருக்கும் சாத்தியமல்ல.

எங்கும் அமைதியாயிருந்த சூரியன் சிறிதும் இரக்கமில்லாது காய்ந்தான். மரத்தின் ஒரு இலையாவது அசையவில்லை. காற்று எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டது. சரியான மத்தியானப்பொழுது. சேனைகள் தங்கியுள்ள ஒவ்வொரு இடத்திலிருந்தும் தொழவேண்டிய சமயம் வந்தது என்று அறிவிக்கும் கூக்குரல்கள் கிளம்பின. மகம்மதியர்கள்

ஒவ்வொருவரும் அவரவர்கள் உட்கார்ந்த இடத்திலேயே தொழுவதற்குத் தங்கள் துணிகளை விரித்தனர்.

திடீரென்று எதிரியின் போர்வீரர் மத்தியினின்று, பளபளவென்று பிரகாசிக்கும் கவசத்தை அணிந்துகொண்டு, பட்சியின் இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட தலைப்பாகையைத் தலையில் தரித்த ஒரு சிறந்தவீரன் புறப்பட்டுவந்தான். அகழிகளில் பதுங்கியிருக்கும் தன் சைனியங்களைத் தன்னோடு வரும்படி சமிக்கைசெய்து, கோட்டையின் வெடிப்பை நோக்கி, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்றான். இவ்வாறு துணிச்சலாய்ச் செல்லுகின்ற படைத்தலைவனை மொகலாய சைனியத்திலுள்ள அரேபியர், ஆப்கானியர், ரஜபுத்திரர்கள் இவர்கள் அனைவரும் பின்பற்றிச் சென்றனர்.

எல்லாரும் கோட்டையின் விடவினிடத்துப் போர் முழக்கம் செய்துகொண்டும், யுத்தப் பாட்டுகளைப் பாடிக்கொண்டும் குழுமினார்கள். உடைவாட்களையும், கேடயங்களையும், துப்பாக்கிகளையும், ஈட்டி முதலிய ஆயுதங்களையும் தாங்கிச் செல்கின்ற சைனியத்தைப் பார்த்தோர் பிரமித்து நின்றனர்.

ஒப்பற்ற தைரியசாலியான தங்கள் தலைவியாகிய சாந்த் பீபியின் படைகளோ, கோட்டையை அதிக ஊக்கத்தோடு காவல்புரிந்தன. போர்த்துக்கேசிய வீரன் பிளவுபட்ட இடத்தை நாடிச் செல்லும்பொழுது, அவனுடன் சென்ற பல தேசத்து வீரர்கள் கோட்டையின் மேலிருந்து வந்த எதிரிகளின் நூற்றுக்கணக்கான துப்பாக்கிகளால் சுடப்பட்டு விழுந்தனர். கோட்டைகளின் பற்பல கொத்தளங்களிலும் நிறுத்தப்பட்ட பீரங்கிகள் பூமி அதிரும்படி வெடித்து அநேகரை எமபுரம் அனுப்பின. இந்த சந்தர்ப்பத்தில் மொகலாய சைனியங்கள் பின்னிடவும் முடியவில்லை. முன்வரிசையில் உள்ளவர்கள் பின்னடையும்போது பக்கத்திலுள்ளவர்களோடு மோதி, கீழே விழுந்து, பின் அணியிலுள்ளவர்களால் மிதித்து உயிர்துறந்தனர். பிளவின்பக்கமாய்க் கோட்டைக்குள் சென்று கோட்டையைக் கைப்பற்ற பலதடவை சேனைத்தலைவன் முயன்றான். ஆனால் அவன் இடிந்து விழுந்துகொண்டிருக்கும் மண்குவியலைப் பிடித்துக்கொண்டு நிற்கமுயலுகையில், எதிரியின் சேனையில் குறிதப்பாமல்

சுடுகிற அரேபியர்களின் குண்டு ஒன்றால் சுடப்பட்டு எமனுக்கு இரையானான்.

ஒருபுறம் பீரங்கிகள் சப்தித்துக்கொண்டிருந்தன. காயப்பட்ட வீரர்கள் வேதனை பொறுக்கமுடியாமல் கதறுகின்ற சத்தமும், மரணாவஸ்தைப்படுகிறவர்களுடைய கூக்குரலும் எங்கும் கேட்டன. இவ்வித சத்தங்களுக்கிடையில் சாந்த் பீபி, தன்னுடைய மெல்லிய முகவலையின் பின்பாகம் காற்றில் பறக்க மெதுவாக நடந்து, காயப்பட்டவர்களுக்கு சயித்தியோபசாரம் செய்துகொண்டும், காவல்புரியும் வீரர்களை உற்சாகப்படுத்திக்கொண்டும், தைரிய வார்த்தைகளைப் படைவீரர்களுடைய காதிற்படும்படி பேசிக்கொண்டும் பிளவுபட்ட இடத்தின் முகத்துவாரத்தில் நின்று தைரியப்படுத்திக்கொண்டிருந்தாள்.

அந்த வீர உருவத்தை தூரத்திலிருந்து மூராத் ராஜகுமாரன் கண்ணுற்றான். முற்றுகையில் தான் தோல்வியடைந்ததற்குக் கோபங்கொண்டு மனவருத்தமுற்றாலும், அந்த வீரப் பெண்மணியினிடத்து தனக்கிருக்கும் வியப்புற்றம் நன்குமதிப்பு அதிகரித்தது.

சூரியன் அஸ்தமிக்க, இருள் பூலோகமெங்கும் பரவியது. மொகலாய சைனியம் முழுவதும் பின்னிட்டது. ஆயிரக்கணக்கான மொகலாய வீரர்கள் மாண்டனர். அந்த சேனைக்கு ஏற்பட்ட நாசத்திற்கு அளவேயில்லை. மொகலாயர் முற்றிலும் அபஜயமடைந்தனர். காயப்பட்டுக் கீழே விழுந்த வீரர்களையும், வீராவேசத்தோடு போர்புரிந்து மாண்டவர்களின் சரீரங்களையும், ஏராளமான அவர்களின் ஆயுதங்களையும், அவர்களது கொடிகளையும் யுத்த களத்திலேயே விட்டுவிட்டு, எஞ்சிய மொகலாய சைனியம் உயிர் தப்பியோடிற்று. அவர்களைத் துரத்திப் பிடிக்கச் செல்வது போல், கோட்டையிலிருக்கும் சாந்த் பீபியின் பீரங்கிகளினின்று வெளிப்படும் குண்டுகள் இரக்கமின்றி ஒலித்துக்கொண்டு பின்தொடர்ந்தன. மொகலாயச் சேனை தோல்வியுற்றதால் துக்கசாகரத்தில் மூழ்கினர். அவர்களுக்குற்ற அவமானத்திற்கு அளவேயில்லை. தங்கள் சேனைகள் இவ்வாறு போர்புரிந்து தோல்வியுற்று அனேகர் எமபுரம் அடைவதற்குக் காரணமாயிருந்த அரசகுமாரனது துக்கத்தை யார்



[69-ம் பக்கம் பார்க்க]

"உருவின தன் உடைவாளைத் தலைக்குமேல் வீசிக்கொண்டு...முன்னுக்கு ஓடினுள்."

வர்ணிக்கக்கூடும்? ஒரு பெண் தன்னோடு போர்புரிந்து, தன் சேனையை முதுகுகாட்டி ஓடும்படி செய்தாளேயென்று அரசகுமாரன் வெட்கித் தலைகுனிந்தான். உலகம் தோன்றிய நாள்முதல் இதுவரையிலும் இத்தகைய வீரப் பெண்மணியைக் கண்டவரும், அப்படிக் கண்டதாகப் பிறர் சொல்லக் கேட்டவரும் ஒருவருமிலர்.

பூராவாய் தோற்கடிக்கப்பட்ட சேனையில் எஞ்சிய சிலர் பாளையத்திற்கு திரும்பிப்போனபின், விடவுகளைப் பழுது பார்க்கும்படி ராணி ஆக்ஞாபிக்க, மறுநாள் பொழுது புலரு முன் உடைந்த கோட்டை பூரணமாக்கப்பட்டது.

கதிரவன் தன்னுடைய கிரணங்களை விரித்து, ஆமத் நகர வெற்றிக்கு ஆசிகூற குணதிசைச் சிகரம் வந்தடைந்தான். காரிருள் அகன்றது, மொகலாயப்படை தங்கியிருப்பதற்கென்று கோட்டைக்கு வெளியில் கொஞ்சதூரத்தில் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவ்விடத்திலிருந்து ஒரு மொகலாய தூதுவன் கோட்டையை நோக்கி, அதிகாலையில் நடந்து வந்துகொண்டிருந்தான். அவன் கையில் சமாதானக்கொடி யொன்று பறந்துகொண்டிருந்தது. முற்றுகையிட்டு ஆமத்நகர் கோட்டையைக் கைப்பற்றுவது முடியாதென்று உணர்ந்த ராஜகுமாரன், இத்தூதுவனை யனுப்பி தன்னோடு எதிர்த்துச் சமர்புரிந்த வீர ராணியின்பால் தனக்குள்ள நல்லெண்ணத்தைத் தெரிவித்து, இறந்துகிடக்கும் மொகலாய வீரர்களின் சரீரங்களை நல்லடக்கம் செய்ய உத்திரவு பெற்றுவரும்படி ஏவினான். யுத்தகளத்தில் மாண்டுகிடக்கும் தலையிழந்த கவந்தங்களும், கைகால் வெட்டுண்ட முண்டங்களும் கண்டோர் மனதைத் திடுக்கிடச் செய்தன. முடிந்தபோரின் அகோரத்தை குறிப்பிடும் பிரேதக் குவியல்கள் வெகு சீக்கிரம் அடக்கம் செய்யப்பட்டன.

எங்கும் அமைதி குடிகொண்டது. இப்பொழுது ராணி தன் கவசத்தைக்களைந்து, தனது ஆயுதங்களைப் பாசறையில் வைத்துவிட்டு ஓய்ந்து உட்கார்ந்தாள். கோட்டை காப்பாற்றப்பட்டது. அதை அதிக உறுதியோடு காத்துக் கொண்டிருந்த வீரர்களிடத்து தன் நன்றியைப் பாராட்டி, தனது வந்தனத்தைச் செலுத்தவேண்டுமென்று எண்ணி

னாள். தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் சிறிதும் அவளிடத்துத் தோன்றவில்லை. தன்னைச்சூழ்ந்து நின்று, தன் வீரத்தைப் புகழ்ந்து, அவர்களது வெற்றிக்குக்காரணம் தன் வீரமென்று நாத்தழும்ப வாழ்த்தி, ஆனந்தக்கண்ணீர் சொரியும் தன் சேனைவீரர்களைப் பார்த்து, 'என்னாலொன்றுமில்லை, திருவருட் கடாக்ஷத்தைப் பூரணமாக நம்பியிருந்தேன். அப்பரம்பொருளின் கருணைதான் உங்களுக்கு ஊக்கத்தை ஊட்டி வெற்றிபெறச் செய்தது' என்று தனது மென்மையான வசனத்தால் விடை பகர்ந்தாள்.

மதிவதன (சாந்த்பீபி) ராணியின் சரிதத்தை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் தனது மேன்மைதங்கிய உத்தியோகத்தினாலல்ல, பெருமைவாய்ந்த ஸ்தானத்தினாலுமல்ல, ஆனால் தனது குன்றா வீரத்தாலும், அழியா வாய்மையாலும், மாசில்லா மாட்சிமையாலும், செயற்கரிய செயல்களை இயற்றி, பொன்றாப் புகழைநாட்டி, இந்திய மக்களுள் பெருமகள் எனப் பேர்பெற்றனள் என்பது கண்கூடாகும்.

## VII

## அஞ்சா நெஞ்சனை தேஷ்பாண்டே

சீவாஜியின் குணாதிசயங்களும், அவரது வீரச்செயல்களும் இந்தியா எங்கும் தெரியப்பட்டுள்ளன. ஆனால் ஹார்தெஸ் மஹால் நாட்டின் தேஷ்பாண்டேயாகிய பாஜிபிரபுவின் வீரமாணம், மஹாராஷ்டிர நாட்டிற்கு வெளியே எவ்வளவு பிரசித்தியாயிருக்கவேண்டியதோ, அவ்வளவு பிரசித்தியாகவில்லை. தனக்கு அருமையான தளகர்த்தன் மோசமின்றிக் கோட்டைக்குள் போய்ச் சேரும்வரை அவர் பின் நின்று, தொடர்ந்துவரும் எதிரியுடன் கைகலந்து போர்புரிந்து, முன் செல்லாது நிறுத்தி, தன் கடமையை விடாப்பிடியாக நிறைவேற்றுவதில் தனது பிராணனைக் கொடுத்த மஹான் இவனே. தெர்மாப்பிலி என்னுமிடத்தில் சண்டை செய்த ஸ்பார்டா நகரத்து வீரர்களுடைய சைனியமொன்று, தாங்கள் சண்டையில் உயிர்தப்ப முடியாதென்று உணர்ந்தும், முதுகு காட்டாமல் வீரத்தோடு பகைவரை எதிர்த்துச் சண்டையிட்டு உயிர்துறந்தது, அன்னாருடைய வீரச்செய்கையை

மஹாராஷ்டிா வீரனது செய்கைக்கு நிகராக்குவது மிகையாகா தென்றே கூறலாம். பாஜி தேஷ்பாண்டேயின் வீரர்களில் எஞ்சினவர்கள், போர்முடிவானபிற்பாடு பின்வாங்கினது உண்மை தான். ஆனல் சீவாஜி தாம் குறித்த இடத்தைப் போய்ச்சேரு மளவும், அவர்கள் ஒரு அடியாவது பின்எடுத்து வைக்கவில்லை. அவர் அபாயமின்றி ஒரு கோட்டையை அணுகியபின்தான், எஞ்சிய வீரர்கள் யாதொரு குழப்பமுமின்றி ஒழுங்காய்த் திரும்பிச் சென்றூர்கள். தங்களுக்கு இட்டபணியை ஒழுங்காகவும், வீரத் தோடும் செய்து அம்மட்டோடு முடித்தது மிக்க மேன்மை. அவர் கள் சண்டையைப் பின்னும் தொடர்ந்து நடத்தியிருந்தார்களானல், அது நல்ல யுத்தமுறையாகாததோடு, அனவசியமாய் ஏராளமான பிராண நஷ்டத்திற்கும் இடமாயிருந்திருக்கும்.

அலெக்ஸாந்தர், ஸீஸர், நெல்ஸன், நெப்போலியன் ஆகிய இவர்கள் போன்ற பிரசித்திபெற்ற தளகர்த்தர்கள் யாவரும் மானிட வசியம் என்னும் அபாரசக்தியைப் பெற்றிருந்தார்கள். இச்சக்தி யால்தான் தங்களைச் சார்ந்தவர்கள், தாங்கள் ஏவின கட்டளை யைத் தடையின்றி நிறைவேற்றும்படி ஏவப்பட்டார்கள். சீவாஜியி னிடத்தும் இத்தகைய சக்தி இருந்ததென்பது, பாஜி தேஷ் பாண்டேயின் கதையால் நன்கு விளங்கும்.

செயற்கரிய ஒரு வீரச்செயலைச் செய்யும்படி, தேஷ்பாண் டேயை ஏவி, அவன் செய்து முடிப்பான் என்று அவனது திறமை யில் பூரணநம்பிக்கை வைத்த இந்த ஒரு விஷயமே தம்மை அடைந்தவர்களின் மனத்தைக் கொள்ளைகொண்டு, அவர்களைத் தம்மிடத்து உண்மையாயிருக்கச் செய்யும் ஆகருஷணசக்தி சீவாஜியினிட மிருந்ததென்பதற்குத் தக்க சான்றூகும். ஆரம்பத் திலே பாஜி தேஷ்பாண்டே, சந்திரராவ் மோரேயின் கட்சியில் அதிக விசுவாசமுடையவனயிருந்தான். ஆனல் 1655-ல் மோரே வம்சத்தினரை சீவாஜி கொஞ்சம்கூட பச்சாத்தாபமில்லாமல் சங்கரித்தார். சந்திரராவ் மோரேயின் மரணத்திற்குப்பிறகு தேஷ் பாண்டே சீவாஜியினிடம் வேலைக்கமர்ந்தான். கடைசியில் சீவாஜியிடம் அவனுக்குள்ள பக்தியும் பற்றும் உண்மையோ அல்லவோ என்று கண்டிப்பாய்ப் பரீட்சிக்கப்பட நேரிட்டது.

சீவாஜியும், அப்சல்கானும் ஒருவரையொருவர் சந்தித்த பேர் பெற்ற சம்பவம் 1659-ல் நிகழ்ந்தது. அதன் முடிவில் அப்சல் கானை சீவாஜி கொன்று, அவனுடைய சைனியத்தையும் தோற் கடித்தார். சிலகாலம் சீவாஜிக்கு எல்லாம் தன் மனதுக்கு இசைந்தபடியே நடந்தேறியது. அவர் மகம்மதியர்களை முறி யடித்து, பல கோட்டைகளைக் கைப்பற்றினர். அந்தக் கோட்டை

களிலெல்லாம், கோலாப்பூருக்குப் பன்னிரண்டு மைலுக்கப்பால் வடமேற்கிலுள்ள பான்ஹாலா என்னும் மலைக்கோட்டையே மிகச் சிறந்ததாகும்.

மஹாராஷ்டிரர்களின் கோட்டைகள் பொதுவாக கட்டப்பட்டிருக்கிற மாதிரியே, பான்ஹாலாவும் மூவாயிரம் அடி உயரமான ஒரு சிகரத்தில் கட்டப்பட்டுள்ளது. அதன் ஒரு பாகத்தில் இரண்டடுக்கு மெத்தையுள்ள 'சிவாஜி கோபுரம்' என்னும் உயர்ந்த கட்டிடம் பார்க்கின்ற எவருக்கும் எளிதில் தெரியும். கோபுரத்தின் மேலிருந்து கீழே நோக்கினால் செங்குத்தான மலைச்சிகரம் ஒன்று தோன்றும். அதற்கருகில் கல்லால் கட்டப்பட்ட பெரிய களஞ்சியங்கள் பல உள. காலாகாலங்களில் அவைகளில் தானியங்களை நிரப்பிவைத்துக்கொண்டதினால்தான் நீண்ட முற்றுகை காலங்களில், சிவாஜிக்கு எதிரிகளை எதிர்ப்பதற்கு மிகுந்த அனுகூலமாயிருந்தது.

மகமதியர் கையிலிருந்த பான்ஹாலா மலைக்கோட்டையைச் சிவாஜி திடுமென மனத்துணிவுடன் தாக்கி, அதைக் கைப்பற்றி தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டார். இப்படியிருக்கும் காலத்தில் கலகம் செய்து, சுயேச்சையாய் சிற்றரசு நடத்திவந்த அபிஸினியா நாட்டானை சித்தி ஜாகூர் என்பவன் அப்பொழுது பீஜப்பூர் சுல்தானுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். சிவாஜியின் வலிமையைச் சிதைக்க இந்த அபிஸினியா தேசத்தானே தகுந்தவனென்று, பீஜப்பூர் சுல்தானாகிய அலி அடில்ஷா தன் மனதில் தீர்மானித்துக்கொண்டான். சிவாஜிக்கு விரோதமாய் இருபத்தையாயிரம் காலாட்படைகளும், ஏராளமான பீரங்கிப்படைகளும் உள்ள பெரிய சைனியத்தைத் தயாரித்து அனுப்பினான். உடனே சிவாஜி எதிர்த்துப் போர்புரிய மனமற்றவராய், பான்ஹாலா கோட்டைக்குள் போய் நுழைந்துகொண்டார். ஆகையால் விரோதிகள் அதை முற்றுகையிட்டார்கள். அப்பொழுது மாரிக்காலம் ஆரம்பிப்பதற்கு ஒரு மாதமாத்திரமிருந்தது. மழை பெய்ய ஆரம்பித்தால் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் பெருமழை பெய்யுமாகையால், முற்றுகையிடும் படைகள் மழையில் தங்கள் வேலையைச்செய்ய முடியாததலால், முற்றுகை விரைவில் நீங்கிவிடும் என்று சிவாஜி எதிர்பார்த்தார். இத

னிடையில் கைதேர்ந்த சில வீரர்கள் கோட்டையிலிருந்து இராக்காலங்களில் கிளம்பி, மலைகளில் ஊர்ந்துசென்று முற்றுகையிட்டிருக்கும் பாளையத்தைக் கொள்ளையடித்து வந்தார்கள்.

இத்தகைய ஆபத்துக்கிடமான துணிகரச் செயல்களில் பாஜி தேஷ்பாண்டே தன் சாமர்த்தியத்தைக் காட்டுவதற்கு இடமிருந்தது. சித்தி ஜாகூர் என்றவன் சாதாரண சாமானிய விரோதியல்ல. அவனைச் சுலபமாய்த் துரத்தமுடியாது. கோட்டைக்கு வெளியே உள்ள மஹாராஷ்டிர சேனைகள், முற்றுகையிட்டிருக்கும் ஜாகூரின் சைனியத்தைப் பிரிக்கும்படி எவ்வளவோ முயற்சித்தும் கைகூடவில்லை. அவ்வித சேனைகள் மகமதியர்களால் தோற்கடிக்கப்பட்டு முன்செல்லாதபடி தடுக்கப்பட்டன. சில சமயங்களில் வேவு பார்க்கும்படியாக சிவாஜி வெளியிடங்களில் வைத்திருந்த சிப்பந்தி சேனைகள் வெளியேறுதபடி கோட்டைக்குள்ளே துரத்தப்பட்டன. பான்ஹாலா கோட்டையைச்சுற்றிலும், சித்தியின் படைகள் எஃகு வளையத்தைப்போல் பலமாகச் சூழ்ந்துகொண்டார்கள்.

இவ்விதமாக மாரிக்காலம் முழுவதும் முற்றுகை நீடித்துக்கொண்டிருந்தது. சிவாஜி முற்றுகையால் கலங்கிக்கொண்டிருந்தார். உணவுப்பொருள்கள் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைவுபடலாயின. பான்ஹாலா பிடிபட்டுத் தாமும் தம் சேனையும் சிறையாக்கப்பட நேர்ந்தால், இதுகாறும் அவர் பட்டபாடு வீணாகும். அப்படியில்லாது கோட்டையை விட்டு வெளியில் வந்து எதிரியோடு சமர்புரிவதென்றால் தாம் தோல்வியடைவது திண்ணம். ஏனெனில் சித்தி ஜாகூருடைய சேனை மிகப்பெரிதும் பராக்கிரமமுமானது. என்ன செய்வதென்று தெரியாமல் சிவாஜியின் மனதில் மேல்கண்ட எண்ணங்கள் மேலிட்டுக்கொண்டிருந்தன.

ஆகையால் சிவாஜி ஒரு உபாயம்செய்யக் கருதினார். 'ஆசைக்கு ஓர் அளவில்லை' என்பது பழமொழி. சித்தி ஜாகூரும் இம்மாய்கையில் சிக்கியவான்தான். இவன் ஒரு பெரிய அதிகாரத்தைச் செலுத்த ஆசியாதிருக்கமாட்டான் என்றெண்ணி, தம்முடைய உதவியால் சித்தி ஜாகூர் ஒரு

ராஜ்யத்தை ஏற்படுத்தக்கூடுமென்ற ஆசையை தந்திரமாய் அவனுக்கு உண்டாக்கும்படி சீவாஜி ஏற்பாடு செய்தார்.

இவ்விதசூட்சி சித்தியின் காதில் விழுந்தவுடன் சீவாஜியைப் பத்திரமாய் தன்னிடம் அழைத்து வரும்படி உத்திரவு பிறப்பித்தான். சீவாஜியை மரியாதையோடு வரவேற்றான். அதிகக் கவனமாக அவரோடு ஆழ்ந்து யோசித்தான். சித்தி ஜாகூரின் அந்தரங்க சிநேகிதனாக எண்ணப்பட்டு சீவாஜி கோட்டைக்குத் திரும்பிவந்தார். முற்றுகை பேருக்குமாத்திரம் நடக்கட்டுமென்று இருவரும் தீர்மானித்துக்கொண்டார்கள்.

இத்தகைய துரோகச்செயல்கள் இரகசியமாக நடைபெற்றதாக எண்ணி இருந்தாலும், எப்படியோ சிறிது சிறிதாகப் பீஜப்பூர் சுல்தான் காதிற்கு எட்டியது. உடனே அதிகக் கோபங்கொண்டு தானே நேரில் சண்டைசெய்யத் தீர்மானித்து, பான்ஹாலாவை நோக்கிப் புறப்பட்டான்.

சீவாஜி சுல்தானின் வருகையைக் கேள்வியுற்று கோட்டையைவிட்டுப் புறப்படத் தீர்மானித்தார். சித்தி ஜாகூர் இரகசியமாய்ப் புரிந்த உதவியாலோ, அல்லது மறுநாள் கோட்டை தங்கள் வசமாவது நிச்சயமென்று நினைத்து உருவிய கத்தியுடன் காவல்புரியும் வீரர்கள் அஜாக்கிரதையாய்த் தூங்கிக்கொண்டிருந்ததாலோ, சீவாஜியும் அவரது ஐயாயிரம் போர்வீரர்களும் கோட்டையைவிட்டு முற்றுகையிட்டிருக்கும் எதிரிகளின் சேனையை ஒருவரும் காணாதவாறு கடந்து, விஷல்காட் கோட்டையை நோக்கி அதிவேகமாகச் சென்றார்கள்.

சித்தி ஜாகூருக்கு அடுத்தபடியாக ராணுவத்தில் தலைமை உத்தியோகம் வகித்தவன் அப்சல்கானின் குமாரனான இளம்பிராயமுள்ள (பாசல்கான்) என்ற பாசல் மகம்மது. இவன் பிரதாபக்காட்டில் நடந்த படுகொலையில் தப்பித்தவர்களுள் ஒருவன். சீவாஜி தந்திரமாகத் தப்பிப்போய்விட்டார் என்று கேள்விப்பட்டவுடனே அவன் அதிக ஆத்திரப்பட்டான். சீவாஜியைத்தொடர்ந்து ஒரு குதிரைப்படையுடன் செல்லும்படி தனக்கும் ஜாகூரின் குமாரனான சித்தி அஜிஸ் என்பவனுக்கும் உத்திரவளிக்கவேண்டுமென்று சித்தி ஜாகூரை மன்றாடிக் கேட்டு உத்திரவு பெற்றான். சித்தி

ஜாகூர், தானே காவலாட்படை ஒன்றை நடத்திக்கொண்டு அவர்களுக்குப்பின் வருவதாகச் சொன்னான்.

பான்ஹாலாவிலிருந்து விஷல்காட் கோட்டைக்கு நேராய்ப்போனால் இருபத்தைந்து மைல் தூரம். ஆனால் சிவாஜி சென்றிருக்கக்கூடிய மல்காப்பூர் மார்க்கமாக சுற்றிப் போனால் சற்று மைல் அதிகம்.

எந்த நேரத்தில் சிவாஜி கோட்டையைவிட்டுச் சென்றார் என்று திட்டமாய்ச் சொல்லமுடியாது. ஆனால் அவரைத் தொடர்ந்து பின்சென்ற சைனியங்கள் புறப்படுவதற்கு நெடுநேரத்திற்குமுன்னமே அவர் புறப்பட்டிருக்கவேண்டும். பான்ஹாலாவிலிருந்து விஷல்காட்டுக்குச் செல்லும் மார்க்கம் கஷ்டமான வழியானதால் அதிக வேகமாகச் செல்லும் காலாட்படையைவிட குதிரைப்படை வெகு வேகமாய்ச் செல்லமுடியாது.

மத்தியான வேளையில் இந்த விஷல்காட்டுக் கோட்டைக்கு ஆறு மைல் தூரத்தில் சென்றுகொண்டிருக்கும்போது தம்மைப் பின்தொடர்ந்து வருகிற எதிரியின் சேனையைச் சிவாஜி கண்ணுற்றார்.

விஷல்காட் கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தால்தான் சிவாஜியும் அவருடைய சைனியங்களும் எதிரியினிடமிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஏனெனில் அக்கோட்டையின் மேற்குப் பக்கமாக அல்லது கோன்கான் பக்கமாக முற்றுகையிட்டுப் பிடிப்பது சாத்தியமில்லை. அப்படி முற்றுகை போடப்பட்டாலும், கோட்டைக்குள் உணவுப் பொருள்கள் வேண்டிய மட்டும் இருப்பதால், கோட்டையை எதிரியினிடம் ஒப்புவிக்கவேண்டிய அவசியம் நேராது. ஆனதால் தம் சேனையை இரண்டு பாகமாக வகுத்து, ஒரு பாகத்துக்கு பாஜி தேஷ்பாண்டேயைத் தலைவனாக நியமித்து, தாமும் தம்மோடு செல்லும் பாதி சைனியமும் விஷல்காட்டைப் போய்ச்சேருமளவும் பாஜி தேஷ்பாண்டே தன் படையோடு அந்தக் கோட்டைக்குச் செல்லும் நெருங்கிய கணவாயின் வழியாக எதிரியின் குதிரைப்படை வாராதபடி தடுத்துக்கொண்டிருக்க வேண்டுமெனக் கட்டளையிட்டு, சிவாஜி புறப்பட்டார். சிவாஜி விஷல்காட் கோட்டையைச் சேர்ந்தவுடன் ஐந்து பீரங்கிகள் தீரப்படுமென்றும், உடனே

தேஷ்பாண்டே சண்டையை நிறுத்தி விஷல்காட்டுக்கு வந்து சேரவேண்டியதென்றும் திட்டம் செய்யப்பட்டது.

பாஜி தேஷ்பாண்டேக்கு இட்ட பணி அதிகக் கஷ்டமும் ஆபத்துக்கிடமுமானது. மகமதியரின் குதிரைப்படை, ஆரம்பத்தில் எவ்வளவு சொற்பமாயிருந்தாலும் சீக்கிரம் அது அதிகரித்துவிடும். அப்பொழுது மஹாராஷ்டிரருடைய படையை எதிர்க்கும் விரோதியின் படை, பன்மடங்கு அதிகமாகிவிடும் என்பது திண்ணம். ஒரு சேனையை அதை விடப் பன்மடங்கு பலமான இன்னொரு சேனை பின்நின்று தாக்கும்போது, அதை எதிர்த்து தோல்வியடையச் செய்வது சண்டையில் நடத்தும் அதிசயச் செயல்களில் ஒன்றாகும்.

மேற்சொன்ன பின்படை ஒரு செங்குத்தான பக்கங்களுள்ள பள்ளத்தாக்கின் உச்சியில் அணிவகுக்கப்பட்டிருந்தது. அந்த ஸ்தலத்தை இப்பொழுது திட்டமாகக் குறிக்க முடியாது என்றாலும் அது அநேகமாக மல்காப்பூருக்கும், விஷல்காட்டுக்கும் இடையிலுள்ள பண்டார்பாணிக்குச் சமீபத்திலிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

தட்சணத்தை நன்கு தெரிந்தவர்கள் மனக்கண்ணால் அந்த இடத்தைத் தெரிந்துகொள்ளலாம். மேடுபள்ளமான குன்றுகளுக்கு மத்தியில் இரு பக்கங்களிலும் கால்மைல் விஸ்தீரணமுள்ள பள்ளத்தாக்கு ஒன்று இருந்தது. அந்தப் பள்ளத்தாக்கு மேடுபள்ளமானது. அதன் சரிவான பக்கத்தில் ஒரு பாழடைந்த பாதை ஒன்றுண்டு. அதன்வழியாகக் குதிரைப்படை சுலபமாகச் செல்லலாம். அப்பாதையின் இரு பக்கத்திலும் அமைந்துள்ள குன்றுகள் அப்பாதையின் வழியாக எதிரி வராதபடி காத்துக்கொண்டிருக்கும் சேனையை, எதிரியின் குதிரைப்படை சூழ்ந்துகொள்ளாவண்ணம் தடுக்கக்கூடியன. அத்தகைய குன்றுகளுக்கிடையில் நின்று, சிவாஜியின் மாவலரைப்போலுள்ள மலைநாட்டார்தான் போர் புரிய முடியும்.

தேஷ்பாண்டே தன்னுடைய சேனையை நெருக்கி அணிவகுத்து, வரப்போகிற எதிரியின் குதிரைப்படையை எதிர்க்கத்தக்கதாக சித்தப்படுத்தினான். தங்களுக்கிட்ட பணியை ஆற்றி, சிவாஜி விஷல்காட் கோட்டையைச் சேருமட்டும்,

தாங்கள் இருக்கும் ஸ்தானத்தைவிட்டுப் பின்வாங்காமலிருந்தால்தான், தங்கள் சிறந்த தலைவனுடைய பிராணன் காக்கப்படுவதோடு, மஹாராஷ்டிர ராஜ்யங்கள் நிலைபெறும் என்றும், தனது படைவீரர்கள் உணரும்படி, தேஷ்பாண்டே அவர்களுக்கு எடுத்துக்காட்டி, ரோஷமூட்டும்படியாய்ச் சில வார்த்தைகளை சமயோசிதமாய்ப் பேசினான். தனது வீரர்களைப்பார்த்து 'உங்களிடத்து வாளும், ஈட்டியுமிருக்கின்றன. நீங்கள் தோளோடுதோள் உராய்ந்துகொண்டு நின்று எதிரியின்மேல் அவ்வாயுதங்களைப் பிரயோகித்தால், எவனும் உங்களைக்கடந்து செல்லமாட்டான்' என்று தேஷ்பாண்டே சொன்னான்.

எதிரியினுடைய குதிரைப்படை சீக்கிரம் வந்து சேர்ந்தது. அவர்கள் தங்கள் புரவிகளை அதிவேகமாக நடத்தி மஹாராஷ்டிரருடைய சேனைகளைத் தாக்கினார்கள். குதிரைவீரர்களும் மகாராஷ்டிரரும், ஒருவரையொருவர் எதிர்த்து மோதினார்கள். தேஷ்பாண்டேயின் வீரர்கள் கொஞ்சமும் பின்னடையவில்லை. அங்கங்கே சிலர் கீழே வீழ்த்தப்பட்டாலும், ஏனைய வீரர்களெல்லாம் தங்கள் ஈட்டியாலும் கத்தியாலும் மகம்மதிய சைனியங்களை அதிகக் கொடுமையாய்த் தாக்கினதால், எதிரியின் படை வீரர்களில் அனேகர் தங்கள் புரவிகளிலிருந்து கீழேவீழ்ந்து துஞ்சினார்கள். அவர்கள் ஊர்ந்த எண்ணிறந்த குதிரைகள், மஹாராஷ்டிர சைனியத்தின் முன், தங்கள் வீரர்களை இழந்து நடத்துவாரின்றி நின்றன.

உடனே (Fazl Mahomed) பாசல் மகம்மது, தன் காலாட்படை வந்து சேருமளவும் சண்டை செய்யாதிருப்பதே உசிதமென்று உணர்ந்து தாக்குவதை நிறுத்தினான். தேஷ்பாண்டே தன் சைனியத்தைச் சுற்றிவந்து, தன் வீரர்களது உறுதியையும் ஊக்கத்தையும்பற்றிப் புகழ்ந்து, அவர்கள் சீக்கிரத்தில் மகமதிய காலாட்படையோடு செய்யப்போகும் மல்யுத்தத்தில் இன்னும் அதிக ஊக்கத்தையும், வீரத்தையும், உறுதியையும் காட்டவேண்டுமென்று அவர்களுக்கு வீராவேசத்தை எழுப்பிவிட்டான். வெகு சீக்கிரத்தில், எதிர்பார்த்த வண்ணம் எதிரியின் காலாட்படை ஒழுங்காகக் குன்றின்மேல் ஏறிவந்து மஹாராஷ்டிர சைனியத்தைத் தாக்

கிற்று. சிறிது நேரம் சண்டை அதிக மும்முரமாய் நடந்தது. கத்திகளும், ஈட்டிகளும் கேடயங்களைப் பிளந்து எதிரியின் மார்பைத் துளைத்தன. இரண்டு படைகளிலும், வீரர்களது ஆரவாரமும் குத்துண்ட வீரர்களின் மரணாவஸ்தையின் ஒலியும் கேட்பவர்களின் காதுகளைச் செவிடுபடச் செய்தன. வெகு சீக்கிரத்தில் எதிர்த்துப் போர் புரிந்த மகமதிய சைனியம் ஊக்கம் குன்றிப் பின்னிட்டது. தங்கள் படையிலுள்ள இறந்த வீரர்களின் சவத்தையும், காயப்பட்ட வீரர்களையும் யுத்தகளத்திலேயே விட்டுவிட்டு எஞ்சிய சைனியம் ஒரே ஓட்டமாகக் குன்றிலிருந்து கீழ் நோக்கி ஓடினது.

பாசல் மகம்மது எல்லையற்ற அவமானத்தில் மூழ்கினான். என்றாலும் புதிய சைனியம் வருமளவும் காத்திருந்து, மஹாராஷ்டிர சேனையை அதிக பலத்தோடும் வீரத்தோடும் மற்றொரு முறை தாக்கவும், அந்தப் படையைத் தானே நடத்தவும் தலைப்பட்டான்.

அஞ்சா நெஞ்சனான தேஷ்பாண்டே, முன் நடந்த இரண்டு தாக்குகளாலும் களைத்துப்போன வீரர்களை அதிக சாமர்த்தியமாய் அணிவகுத்தான். இனிப் புரியும் சமர், முன் நிகழ்ந்த இரண்டையும்விட அதிக பயங்கரமாய் இருக்கும் என்று அவனுக்கு நன்கு புலப்பட்டது. ஆனாலும் அவன் தன் வீரர்களைப் பார்த்து, அவர்கள் எதிரியோடு இனி புரியப் போகும் சண்டைதான் கடைசிச் சண்டையென்றும், அதிலும் எதிரியை முதுகுகாட்டி யோடும்படி செய்தால், தங்களுக்குப் பூரண வெற்றி கிடைப்பதோடு, தங்கள் ஒப்பற்ற தலைவனாகிய சிவாஜிக்கு ஏற்பட்ட ஆபத்தும் ஆதவனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடுமென்றும், உற்சாகமும் தீரமும் தன் வீரர்களுடைய மனதில் எழும்படியாகப் பேசி, 'சீக்கிரத்தில் நீங்கள் பீரங்கி வெடியின் சத்தத்தைக்கேட்டு மகிழப்போகின்றீர்கள்' என்றான். எதிரியின் சைனியங்கள், தோளோடு தோள் சேர்ந்து நெருங்கியும், பல வரிசையாட்களாய், கனத்த சேனையாக அணிவகுக்கப்பட்டும், ஒரு பெரிய அகலமான சுவர் நகர்ந்து மோதியதைப்போல, மஹாராஷ்டிர வீரர்களைத் தாக்கின. எதிரியின் சேனையின் தொகை பன்மடங்கு அதிகமானதால், மஹாராஷ்டிரர்கள்

சற்றுப் பின்வாங்கினார்கள். அச்சமயத்தில் தேஷ்பாண்டே தன் சைனியத்தண்டை வந்து, தங்கள் முழு பலத்தோடும் எதிரியைத் தாக்குவதவசியம் என்று தூண்டிவிட, அவ்வண்ணமே, மஹாராஷ்டிரர்கள் அதிக ஊக்கத்தோடும் வைராக்கியத்துடனும் அமர் புரிந்ததால், பீஜப்பூர்சைனியம் ஒரு அடியாவது மஹாராஷ்டிர சேனையைப் பின்னிடும்படி செய்ய முடியவில்லை. இச்சம்பவம் பிலாடன் (Flodden) யுத்தத்தில் ஸ்காட்லண்டு தேசத்தார் ஆங்கில தேசத்தாருக்கு விரோதமாய் கடைசித் தடவையாக, எதிர்த்து நின்று புரிந்த போரை ஒத்திருந்தது.

மஹாராஷ்டிர சேனைத் தலைவனான வீரனின் சரீரத்தில் பல பாகங்களில் எதிரி காயப்படுத்த, அவைகளிலிருந்து இரத்தம் ஓடியதால் கடைசியில் களைத்து, இரத்தக் குறைவால் அவன் இம்மண்ணுலகை நீத்து, வீர சொர்க்கம் புகுந்தனன். அதே தருணத்தில் வெகு தூரத்திலிருந்து வெடித்த பீரங்கிச் சத்தமும் கேட்டது. சிவாஜி விஷல்காட் கோட்டையைச் சேர்ந்தார். தான் சண்டைபோட்டதின் பலன் கிட்டிவிட்டதென்று தன் மரணத்தறுவாயில் தேஷ்பாண்டே தெரிந்துகொண்டான். இவனைச் சூழ்ந்து, இறந்தும், இறக்கும் தறுவாயிலுமிருந்த வீரர்கள் எழுநூறு பேராவர். பீஜப்பூர் சைனியமும் பீரங்கி வெடியின் சத்தத்தைக்கேட்டது. சிவாஜி தங்கள் கையினின்று தப்பிவிட்டாரென்று தெரிந்துகொண்டார்கள். அதன்பின் அவர்களுக்குப் போர் புரிய மனமேயில்லை.

எஞ்சிய மஹாராஷ்டிர வீரர்கள், தங்கள் தலைவனின் உடலை அதிக துக்கத்தோடும் பெருமையோடும் தூக்கிக் கொண்டு, விஷல்காட் கோட்டையை நோக்கித் தளரா அடியுடனும் கம்பீரத்துடனும் நடந்து சென்றார்கள்.

# VIII

## குருபக்தியுள்ள சீக்கியன்

லார்டு ராபர்ட்ஸ் என்பார் எழுதியுள்ள 'இந்தியாவில் தாமதித்த நாற்பத்தோராண்டு' என்ற புத்தகத்தில், 1878-ம் வருடத்

தில் நிகழ்ந்த ஆப்கன் யுத்தத்தைப்பற்றி விபரமாய் எழுதியுள்ளார். அதில் வரையப்பெற்றிருக்கும் தொகுப்புகளின் ஒன்றில், தமது இரு சீக்கிய வேலையாட்களின் வீரத்தைப்பற்றியும் அன்பைப் பற்றியும் பின்வருமாறு விவரித்துள்ளார். "மற்றும் பல சந்தர்ப்பங் களில் செய்ததுபோலவே இச்சமயத்திலும், கூடியமட்டும் என் மேல் எவ்வித குண்டும் தாக்காதபடி என் பக்கம் நெருங்கி நின்று என்னைப் பாதுகாத்தார்கள். ஒருசமயத்தில், குண்டு ஒன்று ஓரிடத்தைத் தாக்கியபின் என்னை என்கையில் தாக்கிற்று. அக் குண்டு எங்கிருந்து வந்ததெனச் சற்று உற்றுநோக்குங்கால், என் பக்கம் நின்ற சீக்கியன் ஒருவன் தனது கைகளை நீட்டிக்கொண்டு, பகைவன் பார்க்காதபடி என்னை மறைத்து நின்றுகொண்டிருப்ப தைக் கண்டேன்" என்பன.

அவ்வாறான தந்நலம் விடுத்த பக்தியை, தண்ணளி வாய்ந்த தலைவனுக்குச் செலுத்திவந்ததே சீக்கியப் போர்வீரரின் சரித்திரத் தின் பிரதமலட்சணமாக எப்பொழுதும் விளங்குகின்றது. ஆப்கன் யுத்தத்துக்கு இருநூறு ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த ஓர் சம்பவத் தில் தனது குருவின் உடலை ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதற்காகத் தனது உயிரையே தியாகம் செய்த பணிவுள்ள ஒரு வண்டியோட்டி யின் வரலாறு சீக்கியரின் விசேஷித்த கர்ன பரம்பரையான தர்மத் திற்கு எடுத்துக்காட்டாகின்றது. இத்தன்மையான போற்றற்குரிய இயல்புகளுக்குக் காரணமாயுள்ள சீக்கிய சமயக்கொள்கைகளின் வலிமையைப்பற்றியும், யுத்தக்கொள்கைகளின் திறனைப்பற்றியும், சரித்திரத்தில் காணப்படும் வயோதிக வண்டியோட்டியைப்பற்றி யும் அறிந்துகொள்ள, சீக்கியர் வரலாற்றைச் சிறிதுநேரம் கவனிப் பது உசிதமாகும்.

சீக்கிய சமயத்தை முதல்முதல் ஸ்தாபித்து, சீக்கியர் எங்கும் பரவிப் பேர்பெற்ற ஓர் ஜாதியாராவதற்குக் காரணராகவிருந்த நானக்ஷா உயர்ந்த ஜாத் என்னும் குலத்தில் லாகூருக்குப் பக்கத்தி லுள்ள ஓர் கிராமத்தில் 1469-ம் ஆண்டில் அவதரித்தார். அவர் துறவுநிலையைக் கடைப்பிடித்து மெய்ப்பொருளை யுணர, இந்தியா முழுவதுமன்றி, பர்சியா, மெக்கா முதலிய இடங்களுக்கும் யாத் திரை புறப்பட்டு, இறுதியாக 1500-ம் ஆண்டில் திரும்பிவந்து, தமது நாட்டார்களுக்குச் சீர்திருத்தப்பட்ட சமயசம்பந்தமான உன்னதக் கொள்கைகளைப் போதித்துவந்தார். "கடவுள் ஒன்றே என்பதின் உண்மை, ஜாதிபேதத்தின் வீண்பெருமை, விக்கிரக ஆராதனையின் பயனின்மை, பிழைப்புக்காகத் துறவியாதலின் டம்பம், சமயத்தின் கொள்கைகளைத் தினசரி ஜீவியத்தில் சாதிக் கவேண்டியதினவசியம்," ஆகிய இவைகளே அவருடைய உபதே

சங்களின் முக்கிய பொருள்களாகும். அவருடன் சேர்ந்து அவருடைய கொள்கைகளை ஏற்றுக்கொண்ட ஜாத்வகுப்பாரான கிருஷிகர், குருவின் சீடர்களென்று அர்த்தம் கொள்ளும் "சீக்கியரென" அழைக்கப்பட்டார்கள்.

ஆரம்பத்தில் இந்தக் கிளர்ச்சியானது முற்றிலும் சமயசம்பந்தமுள்ளதாகவே யிருந்துவந்தது. பின்பு அக்காலத்து இந்தியாவின் முறைப்படி அது உன்னத நிலையுற்றபொழுது, புறச்சமயங்களால் சிதைவு படாது நீடித்து நிலைத்திருக்கும்படி ஆயுதபலத்தைக் கொண்டு தன்னைப் பாதுகாக்கவேண்டியிருந்தது.

அக்காலத்தில்தான் பேபர் பாஞ்சால நாட்டில் மொகலாய ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டிருந்தான். அப்பொழுது பேபர் நானக்ஷாவைச் சில மாதங்களாகச் சிறையில் வைத்தான். ஒரு சமயம் நானக்ஷா அரசனைச் சந்தித்தபோது, தமது போதனைகளைப் போதித்து உரையாடிக்கொண்டிருந்ததாகவும், அரசன் அவருடைய அறவுரைகளால் அழுந்தப்பெற்று அவரைச் சிறையினின்று விடுவித்ததன்றி, மீண்டும் மதபோதனைகளைப் புரியும்படி உத்திரவு கொடுத்ததாகவும் ஒரு சரித்திரம் கூறுவதுண்டு. ஐந்தாவது சீக்கிய குருவாக விளங்கிய அர்ச்சுன், நானக்ஷாவின் பாக்களும் உபதேசங்களும் அடங்கிய தெய்வத்தன்மை வாய்ந்த "கிரந்த்" என்னும் நூலைத் தொகுத்தான். அந்நூல் சீக்கியருள் சிறந்த நூலாகத் திகழ்ந்தது. அப்போதுள்ள சீக்கியத் தலைவனான அர்ச்சுன் மிகப்பிரசித்திபெற்று வந்தமையால், லாகூரை ஆண்டு வந்த மொகலாய கவர்னர் அர்ச்சுனைக் கைதிசெய்து சிறைப்படுத்தினான். சீக்கியர் அவன் சிறையில் இறந்த செய்தியைக் கேள்வியுற்றபொழுது, சித்திரவதையால் உயிர் துறந்திருக்கக்கூடுமென்று எண்ணிக்கொண்டு கோபங்கொண்டார்கள். அந்நாள் முதலாக அவர்கள் அமைதியுற்ற சமயப்பற்றைத் தவிர்த்து, மார்க்க சம்பந்தமான உபத்திரவங்களை எதிர்த்து எவ்விதமான தண்டனைகளுக்கும் உட்பட்டார்கள். மொகலாயரோடும் ஆப்கனியரோடும் போராடின போராட்டத்தில், தங்கள் தலைவர்களுக்கும், தங்கள் சமயத்திற்கும் காட்டிவந்த பக்திவைராக்கியமே அவர்களுக்கு வெற்றியைக்கொடுத்து அழிவின்றி அவர்களைக் காக்கச் செய்தது.

அர்ச்சுன் 1606-ல் இறந்தபிறகு அவன் குமாரனான ஹார் கோவிந்த் குருபீடத்தை யடைந்தான். பின்பு அவன் ஒரு ராணுவப்படையை ஸ்திரமாய் வகுத்ததல்லாமல், போர்க்களத்தில் தானே நின்று நடத்தும் திறமை வாய்ந்த சேனைத்தலைவன் எனப் பெரும் புகழைப் பெற்றான்.

மகமதியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் ஓயாத போர் நிகழ்ந்து வந்தது. போரில் மிக அவாவுள்ள ஹர் கோவிந்துக்குப் பின்னே வந்த இரு குருமார்கள் நெடுங்காலம் ஆட்சி புரியவில்லை. அவனுடைய குமாரனை தெக்பகதூர், 1664-ம் ஆண்டில், ஒன்பதாவது குருவாக நியமிக்கப்பட்டு, மொகலாயர்களின் கொடுமைக்கு எதிர்த்துப் போரை நடத்திவந்தான். பத்தாண்டுகட்குப் பின்பு, அவன் மொகலாயரால் கைதி செய்யப்பட்டான். குற்றவாளியாக டில்லிக்கு அனுப்பப்படுமுன், அங்கு சென்றவுடன் தனக்கு நேரக்கூடிய சம்பவம் இன்னதென்று ஏற்கனவே தெரியுமாதலால், தெக்பகதூர் தனது இளைய புதல்வனை கோவிந்தை யழைத்துப் பிரிவு மொழிகளைப் பகர அனுமதிபெற்றான். சிறுவன் தன்னை யடைந்தபொழுது, தெக்பகதூர் தன் வசமுள்ள குரு கோவிந்துடைய புகழமைந்த வாளை யளித்து அவனை நோக்கி, 'இவ்வாளைக்கொண்டு, உனது வலிமை மிக்க மூதாதை, சீக்கியர்களுடைய மதத்தைப் பாதுகாத்து வந்தார். இவ்வித நற்காரியத்திலேயே இடைவிடாது நீயும் ஈடுபட்டு வருவாயாக. என் காலம் முடிவுற்றது. எனக்குப் பயம் சிறிதுமில்லை. ஏனெனில் நான் பயபக்தியோடு கடவுளுக்குத் தொண்டுபுரிந்து வந்துள்ளேன். அல்லாமலும் அவருக்குசிதமான காரியங்களுக்காகப் போராடி வந்துள்ளேன். சீக்கியர்களின் வருங்கால குருவாக நீ விளங்குவாயாக. நான் நடத்தி வந்ததுபோலவே நீயும் உனது குடிகளைப் பாதுகாத்து வருவாயாக. எனது ஆசி மொழிகள் உனக்கு உரியவையாகுக' எனப் பகர்ந்தான்.

இம்மொழிகளைக் கேட்ட சிறுவன் விடையளிப்பதற்கியலாதவனாய், தந்தையால் கொடுக்கப்பெற்ற தனது மூதாதையின் வாளைக் கரத்தில் பிடித்தவனாய் அவருடைய ஆணைகளுக்கு மிகப் பணிவோடு உடன்பட்டான். பின்பு தெக்பகதூர் உறுதியும் கம்பீரமும் வாய்ந்த குரலுடன் திரும்பவும் அவனை நோக்கி, 'நான் டில்லியின் மொகலாய அரசனுடைய தண்டனைக்கு ஆளாகப்போகின்றேன். தீரமுள்ள மனிதனுக்கு மரண பயமில்லை. ஆனால் நமது குலப்பெருமையை யுன்னி, எனது உடலைக் கண்யமாகப் புதைக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். எனது மரணத்துக்

குப் பின்பு அரங்கசீப் பழியும் பகையும் பாராட்டி, எனது பிரேதத்தைப் பலரும் வெளிப்படையாகப் பார்க்குமாறு இழிவுபடுத்துவான். இவ்விதம் நேர்வது நமக்குப் பெருமை யாயிராது. புதல்வனே! இவ்வாறு சம்பவிக்குமானால், உனது தந்தைக்கு வந்த நிந்தைக்காகப் பழிவாங்குவாயாக. என் சரீரத்தைச் சேமிக்க ஓர் ஒய்விடத்தைச் சேகரித்து, நமது சமயத்திற்கும் ஜாதிக்குமுரிய புனிதச் சடங்குகளைப் புரிந்து வருவாயாக' என்றான்.

தன் புதல்வனுக்கு இவ்விதக் கட்டளைகளையிட்டபின், தெக்பகதூர் சக்கரவர்த்தியண்டை டில்லிக்கு அனுப்பப் பட்டான். அங்கு தனது சமயத்தை விட்டுவிடுவதாக வாக்குறுதி கொடுத்தால், அவன் உயிரைக் காப்பாற்றுவதாக அவனுக்கு அறிவித்தார்கள். அதை இகழ்ந்து அதற்கு இணங் காததால் அரங்கசீபின் ஆணையால் அவன் சிரச்சேதப்படுத் தப்பட்டான். அரங்கசீப் தனது சமயத்திற்காகக் காட்டி வந்த மிகுந்த வைராக்கியத்தாலும், அவனுடைய மதத் திற்கு வேறுபட்டவர்கள் மீதுள்ள வெறுப்பாலும், குரு வின் உடலைப் பலர் பார்வையிலிருக்கும்படியும், எந்த உற வினனாவது சீடனாவது அவன் உடலைப் புதைப்பதற்கு அப்புறப்படுத்தக்கூடாதென்றும் ஆக்ஞாபித்தான்.

இளங்குரு தன் தந்தையின் பிரேதத்திற்குற்ற அவ மானச் செய்திகளைக் கேள்வியுற்றதும், அவருடைய இறுதி யான வேண்டுகோளை நிறைவேற்றத் துணிந்தான். டில்லிக் குச்சென்று தன் தந்தையின் சவத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவும், அதை மீண்டும் அம்ரிதசரசுக்குக் கொண்டு வந்து முடிவுச் சடங்குகளைச்செய்து கௌரவமாய்ப் புதைக் கவும் தீர்மானித்தான்.

இவ்வித அருஞ்செயல் அபாயகரமானதென்று அறிந்த தினால், தனது சீடர்கள் எவரையும் எவ்வித தொந்தர வுக்குட்படுத்தக்கூடாதென ஆவலுள்ளவனாய், தன்னந் தனியனாக இந்த விசனகரமான பணியை நடத்துவிக்கப் புறப்பட்டான். இளங்குரு டில்லிக்குச் செல்லும் மார்க்க மாய்ப் பிரயாணம் செய்தபோது, இரவு மிக்க இருளடைந் திருந்தது. வேறு ஒருவராவது அந்நேரம் அப்பாதையில் பிரயாணம் செய்யவில்லை. அரங்கசீபின் பாதுகாப்பிலிருந்

தும் பார்வையிலிருந்தும் தன் தந்தையின் உடலை எவ்வாறு மீட்டுக்கொண்டுவருவது என்பதைப்பற்றித் தெளிவான வகை அவனுக்குச் சிறிதேனும் புலப்படவில்லை.

தன் உயிரைக் கொடுத்தாவது தான் மேற்கொண்ட வேலையைப் பூர்த்திசெய்ய எண்ணியிருந்ததாலும், தன் தந்தையின் உறுதி மொழிகளாலும், தான் கைக்கொண்ட கருமத்தின் தூய்மையாலும் தூண்டப்பெற்றிருந்ததாலும், யாதொரு அச்சமுமின்றித் தனியே சென்றான்.

அவன் சிறிது தூரம் கடந்து சென்றபொழுது, நெருங்கி வருகின்ற ஓர் வண்டியின் ஒலியையும், பலர் பேசும் வார்த்தைகளின் தெளிவற்ற சப்தத்தையும் கேள்வியுற்றான். வண்டியிலுள்ளவர்கள் பகைவர்களோ, அல்லது நண்பர்களோ என்று அறியாததால் கோவிந்த் வழியிலுள்ள ஓர் மரத் தடியிற் சென்று மறைந்திருந்தான். அவ்வண்டி சமீபித்து வந்து, தான் ஒளிந்துகொண்டிருந்த வழியாய்ச் சென்றது. வண்டியிலுள்ளவர்கள் சீக்கியர்களென்றும், தமது பெருமை வாய்ந்த குருவாகிய தெக்பகதூரின் கொலையைப்பற்றியும், அரங்கசீபின் இழிவான பல நடத்தைகளைப்பற்றியும், மிக்க கோபாவேசமாய் அவர்கள் விவாதித்து வருவதையும் காதால் கேட்டான்.

பின்பு கோவிந்த் துணிவுடன் நடந்துசென்று வண்டியை நிறுத்தினான். வண்டியோட்டிக்கும் அவன் புதல்வனுக்கும் தன்னை இன்னானென்று அறிவித்தான். அம்ரித்சரசிலிருந்து பலதூரம் தனியாகவந்த இளங்குருவைக்கண்டு அவர்கள் வியப்புற்றார்கள். அதிவிரைவாகக் கீழேயிறங்கித் தங்கள் தலைவருக்குப் பக்தியோடு வணக்கம் புரிந்தார்கள். குருகோவிந்த் அவர்கள்பேரில்வைத்த உறுதியான நம்பிக்கையால் தனது அபாயம் நிறைந்த துணிகரச்செயலைத் தெரிவித்தான். அவன் இந்த விஷயமாய்ப் போகிறதாக ஒருவருக்கும் வெளியிடாதிருக்கும்படி வேண்டிக்கொண்டான்.

பின்பு அம்முதிர்வயதான வண்டியோட்டி கோவிந்துக்கு எதிரே நின்றுகொண்டு மிக்க அக்கரையோடு அவனை நோக்கி 'மிக்க புனிதமானவனே! டில்லிக்குச் செல்லாதே, ஏனெனில் அவ்விடம் உனக்கு மரணப்படுகுழியாகும். உன்னை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நமது நகரத்

துக்குத் திரும்புவாயாக. உனது வெற்றிமிக்க வீரர்களோடு கொடுங்கோலனுகிய மொகலாய அரசனின் தலைநகரத்துக்குள் நுழையத்தக்க நற்காலம் வரும்வரையில் காத்துக்கொண்டிருப்பாயாக. இவ்வாருக உனது தந்தையின் மரணத்தாலுண்டான பகையைத் தீர்த்துக்கொள்வாயாக' என்று வேண்டினன். பின்புகோவிந்த் இச்செய்திகளைக்கேட்டு வெறுப்புற்று அவனை நோக்கி 'எனது தந்தையார் என்னை விட்டுப் பிரிந்து கொல்லப்படுமுன் தமது உடலை ஊருக்குக் கொண்டுவந்து இறுதிகாலத்தில் அதற்குரிய தெய்வீகச் சடங்குகளைப் பக்தியுடன் செய்துமுடிக்கும்படி ஆணையிட்டுள்ளார். வழிச்செல்வோர் பலரும் பார்த்துப் பரிகசிக்கும் அவருடைய தூய பிரேதத்தைக் காப்பாற்ருமல், என்னைப் பாதுகாக்கும்பொருட்டு நான் ஊருக்குத் திரும்புவது தர்மமாகுமா? நமது நலத்திற்காக உயிர்விட்டவரும், நம் குலத்தவர்களால் என்றும் மறவாமல் போற்றப்பட்டு வருபவருமான என் தந்தைக்குரிய கடமைகளை நிறைவேற்றி வைக்கும்விதம் இதுதானே?' என்று விடை பகர்ந்தான்.

பின்பு அம்முதிய சீக்கியன் கோவிந்தை நோக்கி 'சான்ருேனே! நீ கூறியவைகளெல்லாம் உண்மையும், முறையானவைகளுமாகும். ஆனுல் நமது குலத்தவருக்கு பிற்காலத்தில் பேரும் புகழும் உன்னுல்தான் விளங்கவேண்டுமென்பதை உணர்ந்துகொள்வாயாக. மொகலாயனுடைய பகையினுல் நீ கொல்லப்படுவாயானுல், மாற்றானுக்கு மாருக எங்களை நடத்துவோர் யார்? உடனே எங்களோடு திரும்புவாயாக. ஓ குருவே! முன்செல்லவேண்டாம். அன்புள்ள தெக்பகதூருடைய உடலை மீட்டுவரும் பேற்றை அடியேன் பெறும்படியாக உத்தரவளிக்க வேண்டுகின்றேன்' என்று மன்ருடினன்.

இத்தகைய தன்னலமற்ற பக்தியைக்கண்டு மனம் பதிந்தவனுகி, குருகோவிந்த் அம்முதியவனுடைய குருபக்திக்காக வியந்தான். ஆனுலும் தனது குலத்தவர்களை டில்லிக்கனுப்பி வைத்து, அவர்களுடைய உயிர்களைப் போக்குவதைக்காட்டிலும் தானுகவே அங்கு செல்வது நியாயமென்றும் அவனுக்குத் தெரிவித்தான். அம்முதிய சீக்கியன், இளங்குருவினுடைய தீர்மானத்தைக்கேட்டு வாட்டமுற்றவனுகி அவனை

நோக்கி, 'நான் போர்புரிவதற்கியலாத முதியவனுயிருக்கின்றேன். இருந்தபோதிலும், எனது குருபக்தியைக் காட்டுவதற்குரிய சமயம் வாய்த்திருக்கின்றபொழுது நான் அவ்விதம்செய்ய அனுமதி பெற்றேனில்லை. நான் மீண்டும் டில்லிக்குப்போக உன்னிடம் குறையிரந்து கொள்ளுகின்றேன். உனது உயிரை இழந்தும் நீ நிறைவேற்றமுடியாத காரியத்தை எனது உயிரை வைத்துக்கொண்டே நிறைவேற்ற என்னுல் முடியும். நீ ஒரு சமயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளாயாகில், நீ உயிர்தப்பித்துக்கொள்ள முடியாது. உனது மேம்பாடுற்ற நோக்கத்தை நிறைவேற்றுமுன்பே நீ பிடிக்கப்பட்டாலும்படுவாய்' என்று விண்ணப்பித்தான்.

இவ்வாருக அம்முதிய சீக்கியன் எடுத்துரைக்கவே, கோவிந் அவனுடைய நியாயமான மொழிகளை ஏற்றுக்கொண்டு, கடைசியாகத் தன் ஊருக்குத் திரும்பிச்செல்வதற்கும் இணங்கினுன். தனக்குப் பதிலாகத் தைரியமுள்ள வண்டியோட்டியையும், அவனுடைய குமாரனையும் டில்லிக்கு அனுப்பிவைத்து, அங்கு மரணதண்டனை நிகழ்ந்த நாற்சந்தியில் வைக்கப்பட்டுள்ள தெக்பகதூரின் உடலைக் கொண்டுவரும்படி விதித்தான்.

அம்முதிய சீக்கியன், தனது விவாதத்தால் வெற்றியுற்றதைக்குறித்து மிக மகிழ்ந்து, தனது வண்டியைத் திருப்பி மொகலாய அரசனுடைய தலைநகரை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது இளங்குரு மனதில் துயருற்றுன். ஆனுல் தனது வகுப்பினர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய, தான் உயிருடன் இருப்பது அவசியமாயிருக்கலாம் என்று உணர்ந்து தன் மனத்தை ஆற்றிக்கொண்டு கோட்டைக்குத் திரும்பினுன்.

அக்காலம் சீக்கியருக்குக் கெட்ட காலம். டில்லியில் காணப்பெறும் எந்த சீக்கியனுக்கும் மரணம் ஏற்படுவது நிச்சயமாயிருந்ததால், அவ்வண்டியோட்டியும் அவனுடைய குமாரனும் மகமதிய உடுப்புக்களைச் சேகரித்துக்கொண்டு மகமதியரைப்போல மாறுவேடம் பூண்டார்கள். தங்களை ஒருவரும் கவனிக்காதபடி சாமர்த்தியமாய் நகரத்துள் பிரவேசித்தார்கள். சில நேரமாக அவர்கள் ஜன நடமாட்டமில்லாத கடைவீதிப் பக்கங்களில் ஒளிந்திருந்தார்கள். பின்பு

நகரமாந்தரெல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தபொழுது, இடையாமத்தில் அவர்கள் தங்கள் வண்டியில் புறப்பட்டு கொலைசெய்யப்பெற்ற தங்கள் தலைவனுடைய உடலைக் கிடத்தியுள்ள இடத்திற்குச் சென்றார்கள். அவர்கள் வியப்படையும்படி அவ்வுடல் முற்றும் பாதுகாப்பில்லாதிருக்கக் கண்டார்கள். காவற்காரர்கள் தங்கள் ஈனவேலையில் மிக வெறுப்படைந்தவர்களாய் பிணத்தைப் போட்டுவிட்டு வெளியேறிவிட்டார்கள்போலும். மேலும் அவர்கள் 'சீக்கியனின் பிணம் இவ்விடத்தில் பல நாளாய்க் கிடக்கின்றது. இம்மட்டும் ஒருவரும் இவ்வுடலை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள முயலவில்லை. அநேகமாய் இனிமேல் ஒருவரும் எடுத்துக்கொண்டு போக வரமாட்டார்கள்' என்று எண்ணியே தங்கள் கடமையில் அலட்சியமாயிருந்திருக்கலாம்.

பின்பு அம்முதிய வண்டியோட்டியும், அவன் மகனுமாகச் சேர்ந்து, மிக்க பணிவோடு தெக்பகதூருடைய உடலை வண்டியில் எடுத்து வைத்தார்கள். தங்களுடைய மேல்சட்டைகளால் அதை மறைத்தார்கள். பிறகு இருவரும் ஒரே எண்ணத்தால் உள்ளமுருகினவர்களாய் ஒருவரையொருவர் அமைதியாக நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.—

'காவலாளிகள் திரும்பிவந்து, பிரேதமில்லாதிருப்பதைக் காணும்போது கூக்குரலிடுவார்கள். பின்பு டில்லியின் ஒவ்வொரு பாதையும் பரிசோதிக்கப்படும். ஆகையால் யாராவது ஒருவர் குருவினுடைய பிரேதம் இருந்த ஸ்தானத்தில் பதில் பிரேதமாக யிருக்கவேண்டியது அவசியம்.'

இந்த எண்ணத்தால் தாக்கப்பட்டு, சிறிதுநேரம் இருவரும் வாய்திறக்கவில்லை. பிறகு வண்டியோட்டியின் மகன் பொள்ளெனக் கிளம்பி, 'தந்தையே, அந்தப் பிரேதத்திற்குப் பதிலாக நான் கிடக்கின்றேன். நமது சிறந்த குருவின் பிரேதவிடத்தை நானே ஒப்புக்கொள்கின்றேன்' என்றான்.

இவற்றைக் கேட்ட அம்முதியவன் 'மகனே! அப்படியல்ல. நீ மிகவும் சிறுவன். உலகத்தில் நீ வாழ்வதற்கு உனக்கு முன்பாக நீண்டகாலம் உள்ளது. நமது புனித சமயத்துக்காக நீ ஒருவேளை போர்புரிய நேரிடலாம். ஆனால் எனது கண்களோ மங்கலாயின. எனது புயங்கள் வலியிழந்தன. ஆயினும் நமது குலத்துக்குரியதான ஒரு நல்வழியில்

உயிர்விட உன்னுகின்றேன்' என்றான். புதல்வன் தந்தையை நோக்கி, தான் அவ்விதம் நல்வழியில் உயிர்விடச் சகாயம் செய்ய வேண்டிக்கொண்டான். மீண்டும் அவன், 'நான் மூன்று புதல்வர்களுள் ஒருவன். நான் இறந்தால் போர் புரிய இன்னும் இருவருள்ளார்கள். ஆனால் தங்களுக்குப் பதிலாக எவருள்ளார்? நீங்கள் வீட்டிற்குத் தலைவராய் இருக்கின்றீர்கள். நாங்கள் எந்த விஷயத்திற்கும் உங்களையே நாடுகின்றோம்' என்று கூறினான்.

அம்முதிய சீக்கியன் மகனை நோக்கி 'பேச்சை விடு, நேரமாகின்றது. பொழுது சீக்கிரம் புலர்ந்துவிடும். காவலாளிகள் எந்நேரத்திலாவது திரும்பிவரலாம். குருவின் தூய பிரேதத்தை அம்ரித்சரசுக்குக் கொண்டுபோய் அதற்கு நமது சமயத்திற்குரிய புனிதச் சடங்குகளை நிறைவேற்றத் தவறவேண்டாம்' எனக் கட்டளையிட்டான். இன்னமும் புதல்வன் தன் தந்தை உயிர் நீப்பதினின்றும் தடுத்து அவரை இணங்கச் செய்வதிலேயே காலந்தாழ்த்திக்கொண்டிருந்தான். பின்பு அம்முதிய சீக்கியன் தன் வாளை உருவி மெல்லிய உற்சாகமுள்ள குரலுடன் 'குருவுக்கு ஜயமுண்டாகுக!' என்று கூறிக்கொண்டே, தனது மார்பில் வாளால் குத்திக்கொண்டான். உடனே குருவின் பிரேதம் கிடந்திருந்த அவ்விடத்திலேயே விழுந்தான். தாழ்மையுள்ள அவ்வண்டியோட்டியின் முகத்தில் சாந்தமும் சந்தோஷமும் பொருந்திய புன்னகை பொலிவுற்றிருந்தது. தனது குருபக்திக்காக உயிர்நீத்து, அழியா இன்பத்தை அனுபவிக்கப் புகுந்ததுபோலுங் காணப்பட்டது.

பின்பு, புதல்வன் தந்தையின் உடலை குருவின் உடலைப் போல் வேற்றுருவமைத்துக் கிடத்திவிட்டுத் துயரத்துடன் நீங்கினான். பின்பு தனது தூய பிரேதச்சுமையோடு அம்ரித்சரசுக்குப் புறப்பட்டான். அங்கு சேர்ந்தபின் அதை மிகுந்த கண்யத்துடன் அடக்கம்செய்தான். சடங்குகளையும் நிறைவேற்றினான்.

வண்டியோட்டியும், அவன் மகனும் செய்த வீரச்செயல்களுக்காக கோவிந்த் அவர்களை மிகவும் புகழ்ந்தான். அவற்றிற்குக் கைம்மாறாக அக்குடும்பத்தாருக்கு 'சிங்கர்கள்' எனச் சிறப்புப்பட்டம் கொடுத்துப் போர்புரியும் சீக்கியர்

களுள் அவர்களுக்கு உயர்ந்த பதவிகளை அளித்தான். இன்றைக்கும் அவர்களுடைய சந்ததியார்கள் 'முசாபி சீக்கியர்கள்' என்று பட்டம் புனைந்து, நமது இராச்சியத்திற்காகப் போர்புரிந்து வருகின்றார்கள். தன்னயம் விடுத்த தீரம் பொருந்திய ஓர் வீரச்செயலைக்கொண்டு தங்கட்குக் கிடைத்துள்ள கீர்த்தியால் அவர்கள் மிக்க பெருமையுடன் வாழ்வது நியாயமாகும். இந்தியர்களியற்றிய அரும்பெருஞ்செயல்களுள் இதுவும் ஒன்றாகும்.

# IX

## நன்றி மறவா நல்லுள்ளம்

ஒரிஸாவில் 1866-ல் பயங்கரமான பஞ்சம் உண்டாயிற்று. அந்நாளில் இந்நாளைப்போல பஞ்ச நிவாரண முறைகள் ஏற்படவில்லை. ஆதலால் ஒரிஸாவில் ஆகாரமின்றி மாண்டவர்களின் எண்ணிக்கை அதிகம். மக்கள் பட்ட துயருக்கும் இடுக்கண்களுக்கும் எல்லையேயில்லை.

வெகுதூரத்திலிருக்கும் அந்நிய நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் அப்பொழுது வரவழைக்க வேண்டியிருந்தமையால், உணவின் விலை உயர்ந்தது. ஆகையால் ஏழைகள் மாத்திரம் இடருக்குட்படவில்லை. நடுத்தர வாழ்வினையுடைய பலரும் விலை மிகுதியால் மிகுந்த துன்பம் எய்தினர்.

பெரிய அரசர்களாலும் போர்வீரர்களாலும் புரியப் பெற்று, பல பாவலர்களால் பாக்களாகப் பாடியுள்ள அரும் பெருஞ்செயல்களைப்பற்றி இதுகாறும் படித்தோம். இக் கதா நாயகன் ஓர் அரசனுமல்ல; அரசகுமாரனுமல்ல; ஒரு ஏழை ஹிந்துப் பையனுவன். இருப்பினும் சநாதன் மிதித்த இடத்திலெல்லாம் பொன் விளைவது தகுதி. யாரேனும் ஒரு புலவர் அந்நாளில் அவன் சரித்திரத்தைச் செய்யுள்களாகக் கூறியிருந்தால், இன்றும் இந்தியர் அப்பாக்களைப் பாடி மகிழ்ந்து கொண்டிருப்பார்கள்.

ஒரிஸாவில் மூன்று வருஷகாலமாக விடாப்பஞ்சம் பிடித்தது. சூரிய வெப்பத்தால் தகிக்கப்பெற்ற பூமியில் புல்லும் காண்பது அரிதாகிவிட்டது. மரங்கள் இலை அற்றுப்போன

தால் பறவைகள் பாடுவதை நிறுத்தின. பூண்டுகள் யாவும் கரிந்து தீய்ந்து போய்விட்டன. மழைத்துளி என்பதே கிடையாது.

பட்டினி கிடக்கும் ஜனங்களெல்லாம் அன்னத்திற்கும், ஆகாரத்திற்குமாக வாய்விட்டுக் கதறினர். எப்பொழுதும் மேகமற்ற வானத்தையே அண்ணாந்து பார்த்து ஏமாந்து போயினர். ஆடு மாடுகளெல்லாம் அங்கங்கே பாதைகளின் பக்கங்களில் விழுந்து இறந்துகிடந்தன. ஊர்திரி நாய் களுக்குக்கூட குப்பைக் குழியில் ஒரு சிறுவளவு உணவுகூட கிடைப்பதரிதாகிவிட்டது.

சநாதன், தன் தாய் தந்தையர், தன் சிறு தம்பி இவர் களோடு ஒரு குக்கிராமத்தில் வசித்துவந்தான். அவர் களுக்குரிய சிறு நிலம் இரண்டு பருவகாலங்களிலும் பயிர் செய்வதற்கில்லாது பாழ்பட்டு விட்டது. அவர்கள் வச மிருந்த சில ஆடு மாடுகளும் ஆகாரத்திற்காக விற்றுவிடப் பட்டன.

நாளொன்றிற்கு ஒரு கவாளத்தைமட்டும் உண்டு, உண வின் பெரும்பகுதியை பசிப் பிணியைத் தாங்கமுடியாத தங்கள் இரு குமாரர்களுக்கும் கொடுத்துப் பெற்ேறார்கள் இவ்வாறு பல நாட்களாகக் காலங்கழித்து வந்தனர்.

ஒருநாள் இவர்களின் தந்தை, தாயை நோக்கி 'நான் மிகுதியாகச் சாப்பிடுகிறேன். நான் இங்கு இல்லாமலிருந் தால் பிள்ளைகளுக்கு அதிகமாக உணவுகிடைக்குமே' என்று கூறினர். இம்மொழிகளைக் கேட்டவுடன் தாயின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. 'நீங்கள் எங்களைவிட்டு நீங்கினல் எங்கள் கதி என்னகும்?' என்று கேட்டனள். பின்னும் 'நான்தான் உங்கள் வாழ்வுக்குத் தடையாக இருக்கின்றேன். நம்முடைய குழந்தைகளை நகரத்திற்கு அழைத்துச் செல்லுங் கள். என்னுடைய நகைகளையும் கொண்டுபோய், விற்று பொருள்பெற்று, வேண்டும் பண்டங்களை விலைக்கு வாங்கிப் பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள்' என்று அம்மாது சொல்லிப் புலம்பினள்.

மனைவியைப் பிரியும் செய்தியை மணவாளன் கேட்கச் சகிக்கவில்லை. தன்னுடைய குடும்ப நகைகளையெல்லாம் விற்று, சிறு தொகைபெற்று, அதைக்கொண்டு அரிசி வாங்

கினர். ஆனால் இவர் அரிசியை அதிகமாக வாங்குவதற்கில்லை. ஏனெனில் அந்த ஜில்லாவுக்காக சர்க்கார் சேகரித்து வைத்திருந்த அரிசியெல்லாம் செலவாகிவிட்டது. நாளாக ஆக பணங்கொடுத்தாலும், விலைக்கு அரிசி கிடைப்பது அரிதாகிவிட்டது.

'நம்முடைய பெற்றோர் நமக்கு அடுத்த வேளைக்கு வேண்டிய உணவை எப்படித் தேடுவது என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர். நானே போய் அவ்வுணவைத் தேடுவேன்' என்று சநாதன் தனக்குள்ளேயே எண்ணினன். இவ்வெண்ணத்தைப்பற்றித் தன் பெற்றோர்களிடத்தில் ஒன்றும் கூறாமல்வெளியிற் புறப்பட்டுப் பகலெல்லாம் அலைந்து திரிந்து காட்டிலுள்ள கனிகளையும், இலைகளையும் பறிக்க முயன்றும் ஒன்றுங்கிடைக்கப் பெறாமையால், பசியாலும் களைப்பாலும் தளர்ந்து வீடுவந்து சேர்ந்தான்.

அவன் களைப்பைக் கண்ட தாய் மனந்தளர்ந்து, ஒரு சிறு பாத்திரத்தில் அவன் உண்ணும்படியாகக் கொஞ்சம் உணவைக்கொடுத்து, அதை உண்டு களைதீரும்படியாக வேண்டிக்கொண்டனள். உடனே அச்சிறுவன் 'நான் வேண்டும் உணவைக் காட்டில் உண்டுவிட்டேன். நாளை ஒன்றுங் கிடைக்காவிடில், நீங்கள் கொடுப்பதை உண்பேன்' என்று கூறினன். அவன் அன்று சிறிதளவேனும் உண்ணவில்லை யென்று தாய்க்குத் தெரியுமாதலால், கண்களில் ததும்பிக்கொண்டிருந்த கண்ணீரை வெளிக்காட்டாது ஒரு புறம் திரும்பிக்கொண்டனள். ஆனால் அவன் தம்பியோ பசியினல் துடிதுடித்துப் பதறினன். தனக்கு ஏதேனும் கொடுத்துப் பசியை ஆற்றவேண்டுமென்று தாயைக் கண்ணும் கண்ணீருமாய்க் கெஞ்சினன். அவள் சநாதனுக்குப் படைத்த உணவை அவன் சகோதரனுக்குக் கொடுத்தாள். தன் தம்பியின் பசி தணிந்ததைப்பற்றி சநாதன் அதிக திருப்தியடைந்தான்.

இப்படியே ஒவ்வொருநாளும் அதிகாலையில் வெளியே செல்வான். சூரிய கிரணத்திற்குத் தப்பி மரத்தினடியிற் காணப்படும் பசும்புல்லையும் இலைகளையும் சேகரித்துக் கொண்டுவந்து, தன் தாயினிடம்கொடுத்து, தான் வயிறார உண்டுவிட்டதாகவும் சொல்லி அவளை மகிழச்செய்வன்.

இவ்வகையாக நாட்கள் பயங்கரமாகக் கழிந்தன. நாளாக நாளாக அவனுடைய தந்தையார் சில அடிதூரங்கூட கோலைப் பின்றி நடக்கமுடியாத நிலையில் மெலிந்துவிட்டார்.

தன் அன்பிற்குரிய மனைவிமக்களுக்குத் தன்னால் யாதொரு பிரயோஜனமுமில்லாதது கண்டு, தான் உண்ணும் சிறு உணவையேனும் தன் மக்களுக்குக் கொடுக்கவேண்டு மென்று மனங்கொண்டு தன் மனைவியைப் பார்த்து, 'நான் சிறிதுதூரம் யாத்திரையாகப் போகின்றேன். நீங்கள் ஒரு வரும் அஞ்சவேண்டாம். நான் சுகமாகவே யிருப்பேன்' என்று கூறினர்.

அவர் மனைவியார் என் சொல்லுவார்? வாய் திறந்து பேசவில்லை. எந்த யாத்திரையைப்பற்றி அவர் கூறுகின்ருரென்று தெரிந்துகொண்டாள். அவர் திரும்பிவராத யாத்திரையைப்பற்றிச் சொல்லுகிருர் என்பதை யுணர்ந்தாள். அவர்களுக்குச் சீக்கிரம் யாதொரு ஒத்தாசையும் கிடைக்கா விட்டால், எல்லோரும் அந்நிலைக்கு வரவேண்டியது தானென்றும் அவ்வம்மையாருக்குத் தெரியும்.

பொழுது விடிந்தது. தன் முன்னோர்கள் வாசஞ்செய்ததும், இந்த க்ஷாமகாலத்திற்குமுன் தானும் சுகமாயும் சந்தோஷமாயும் வாழ்ந்துவந்த தன் சிறிய வீட்டைத் தந்தையார் விட்டு வெளியே ஊர்ந்துவந்தார்.

ஒரே ஒருமுறை கண்ணைத் திறந்து பார்த்தார். குடும்பத்தாரை ஆசீர்வதித்தார். ஆசி கூறியபின் அடுத்துள்ள ஆரண்யத்துள் நுழைந்தார். அவ்வளவுதான், அப்புறம் காண்பதற்கேயில்லை. இச்செயல் மனைவியினுடைய மனதை மிகவும் புண்படுத்தியதுடன் அவளுக்கிருந்த சிறிது உடல் வலியையும் உலையச்செய்தது. சில தினங்களுக்கெல்லாம் அவளும் படுக்கையிலேயே போய்க் கிடந்துவிட்டாள். பொறுப்பெல்லாம் சநாதனின் தலையில் விழுந்தது. அவன் படுக்கையில் கிடக்கும் தன் தாயைக் காப்பாற்றவேண்டிய நிலையிலிருந்ததோடு, மற்ற சிறுவர்களைக் காப்பாற்றவேண்டிய நிலையையுங் கைக்கொண்டான்.

சில சமயங்களில் மைல் கணக்காக நடந்து திரிந்து, உண்பதற்கு ஒன்றும் பெருமல் மீண்டுவருவான். மற்றுஞ் சில சமயங்களில் சிலரைக் கண்டு சிறிது அரிசியாவது, மாவாவது

கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்டு வாங்கிக்கொண்டுவந்து, தன் தாயினிடங் காட்ட, அவள் முகத்தில் அப்பொழுது சிறிது புன்னகை அரும்பும்.

இம்மாதிரியான சம்பவங்கள் வரவரக் குறைந்தன. குடும்பத்தில் ஒருவரும் ஒரு பிடி உணவுகூட இல்லாமல் காலங் கழித்த நாட்கள் பல.

ஆயிரக்கணக்கான ஜனங்கள் பசியால் வருந்தும் அவ் வேளையில் சநாதனுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. தனது தாயாரின் உடலில் உயிரைத் தரித்திருக்கும்படி செய்வதற்கு வேண்டிய உணவை எங்கு பெறுவதென்று அவனுக்குத் தெரியாமல் தயங்கினான்.

அவன் உடம்பு எலும்புக்கூடாக இருந்தது. தோலின் உட்புறத்தில் எலும்பைத்தவிர பிறிதொன்றுங் காணப்படவில்லை. அவனுடைய தம்பியோ பசியினால் அடிக்கடி மயக்கமிட்டு விழுந்தான்.

இருந்தாலும் சநாதன மனோதைரியத்தை இழக்கவில்லை. கால்கள் தட்டுத்தடுமாறித் தவித்தாலும், பல மைல்கள் அலைந்து திரிந்தாவது, தங்கள் பசித்துன்பத்தைப் போக்கக்கூடிய தயாள சிந்தையுடைய ஒருவனை எப்படியாவது கண்டுபிடித்துவிடவேண்டுமென்று கண்ணுங்கருத்துமாய்ச் சுற்றித்திரிந்தான்.

ஒருநாள் பலமைல் தூரம் படர்ந்துசென்று, இனி ஒரு அடியும் எடுத்துவைக்க முடியாதென்று தெரிந்தவுடன் ஒரு மரத்தடியில் களைத்துப் படுத்துவிட்டான். அச்சமயத்தில் அடுத்த ஊரிலிருந்து சிறிது அரிசி வாங்கிக்கொண்டுவந்து, ஒரு கிழவி சமையல் செய்துகொண்டிருந்தாள். இப்படிச் சமையல் நடந்துகொண்டிருப்பதைச் சிறுவன் வாசனையால் முகர்ந்து, 'எனக்குச் சிறிது உணவு கொடுங்கள். நான் இறந்துவிடுவேன்போலிருக்கிறது. மூன்று தினங்களாய் நான் ஒன்றும் சாப்பிடவில்லை. உதவுங்கள், உதவுங்கள்!' என்று வாய்விட்டு அலறுவதைக் கேட்ட கிழவி, மிகவும் அனுதாபங்கொண்டு சமையல் பாத்திரத்திலிருந்து சிறிது உணவைக்கொணர்ந்து சநாதனிடத்தில் கொடுத்தாள். கொடுத்த உணவை அவன் உண்பானென்று ஆவலோடு கிழவி எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, இச்சிறு



வன் அதை உண்ணுமல், ஒரு பழந்துணியில் சுற்றிக்கொண்டு தன் ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

ஊரோ அநேக மைல்களுக்கு அப்பால் இருப்பினும், இறக்குந்தறுவாயிலிருந்த தாயின்பால் கொண்ட பக்தி யானது அவனை நடக்கச்செய்தது. தன்னை அறியாமலே தான் நடந்து, கால் நோக்காட்டையும் கவனியாமல் கடிதிற் சென்றுன்.

சில சமயங்களில் அந்த உணவில் சிறிது உண்ணலாமா என்று எண்ணினுன். இருந்தாலும் தாயின்பால் கொண்ட எண்ணத்தால் அவ்வாசையை யொழித்து நடந்தான். பொழுதும் போய்விட்டது. வானம் இருண்டது. உடுக்கள் ஒளிர்வதற்குத் தொடங்கின. மரத்தின் ஒரு சிறு இலையுங் கூட அசையவில்லை. ஒரே புழுக்கமாக இருந்தது. ஆனுல் வீடோ வந்து சேரவில்லை.

சநாதன் களைப்பு மிகுதியால பாதையின் பக்கத்தில் படுத்தான். சில நிமிஷங்கள்வரை இளைப்பாறி, பின் செல்ல லாமென்று கருதினுன். அப்பொழுது ஒரே ஒரு பிரகாச மான நட்சத்திரத்தை உற்றுநோக்கிக்கொண்டிருந்தான். தன் தந்தையார் தன் கண்ணுக்குமுன் தோன்றுவதுபோல் தோன்றிற்று. அவருடன் பேசக்கூடிய அவ்வளவு சமீபத் தில் அவர் இருப்பதுபோலவுந் தோன்றிற்று. உடனே ஒரு கலக்கம் உண்டாயிற்று. அயற்சியும், பசியும் தோன்ற வில்லை. தூக்கந்தான் வந்தது. தன்னுடைய உணவு மூட் டையை மார்போடு மார்பாக அணைத்துக்கொண்டு, பெரு மூச்சுவிட்டு 'இதோ சீக்கிரம் விழித்துச்செல்வேன்' என்று கண்ணை மூடிக்கொண்டான்.

அடுத்தநாள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத் திற்குச் செல்லும் வயோதிகன் ஒருவன் பாதையின் பக்கத் தில் சிறுவன் ஒருவன் உருண்டுகிடப்பதைக் கண்டு, அவன் பக்கத்திற்சென்று, அவன் கையை விலக்கி, சட்டையைத் தூக்கிவிட்டு நாடி துடிக்கின்றதோ என்று பார்ப்பதற்குக் கையை வைத்தபொழுது சோற்றுமூட்டை இருப்பதைப் பார்த்து 'என்ன ஆச்சரியம்! சோற்றை வைத்துக்கொண்டு பசியால் இவன் உயிர் துறந்திருப்பதற்கு என்ன காரணம்' என்று எண்ணி ஆச்சரியமடைந்தான்.

வீரநெஞ்சுள்ள சிறுவன் செத்துப்போனான். அவன் ஏது காரணத்தால் மரித்தான் என்று கூறுவதற்கு ஒருவரையும் காணோம். தன் தாய்க்குக்கொண்டுவந்த உணவில் ஒரு பருக்கைகூட உண்ணாது உயிர் துறந்த அவனைப் போற்றிப் புகழ்வதற்கும் ஒருவரையும் காணோம். இருந்தாலும் இறைவனாக இருந்து எண்ணற்கரிய தீரச்செயல்களைப் புரிந்த அரசகுமாரர்களின் செய்கைகளைக் காட்டிலும் இச்சிறு குடியிற் பிறந்த இந்தியச் சிறுவனது செய்கை பொன்னினும் போற்றத்தக்க அரிய செய்கையென்று திண்ணமாகக் கூறலாம்.

X

## வெள்ளத்துக்கு அஞ்சா வீரன்

சரித்திரச் சிறப்புற்ற சூரத் என்னும் நகரம், தப்தி நதியின் தெற்குக் கரையில் சங்கம இடத்திற்கு இப்பால் 14 மைல் தூரத்திலமைந்துள்ளது. அங்குதான் இக்கதாநாயகனாகிய பார்சி குலத்திலுதித்த ஒருவர் அரும்பெருஞ் செயலை யாற்றினார். இந்தியாவின் மேற்குப் பிரதேசத்திலுள்ளவர்கள் நாகரீகத்திலும், செல்வத்திலும் முன்னேற்றமுடைய பாரஸீகர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். "யாருக்கும் நன்மை பயக்காவண்ணம் வீசும் காற்றே தீய காற்று" என்பதொரு பழமொழி. பெர்சியாவில் உண்டாகிய மகம்மதிய மதக்கொள்கைப் பிரசாரமாகிய குளிர் காற்று, பாரஸீகர்களை அங்கிருந்து கிளப்பிவிட்டது. அங்கிருந்து அவர்கள் கூர்ஜரத்திற்கு வந்தார்கள். அவர் வருகை இந்தியாவிற்குப் பல நன்மைகளை யளித்தபடியால் அப்பழமொழி பொய்க்கும்படியாய்விட்டது. இது ஏறக்குறைய 650-ம் ஆண்டில் நிகழ்ந்தது. அதற்கப்பால் ஐந்நூறு ஆண்டுகள் கழிந்தபின்னர் அவர்கள் சூரத்தை யடைந்தார்கள்.

பாரஸீகர்கள் எங்கிருந்தாலும் சரி, வியாபாரத்தில் மிகுந்த கவனம் செலுத்தி, முகாமையாய் நின்று நடத்திவந்தார்கள். போர்த்துகல் தேசத்தினர் இந்தியாவிற்கு வந்த தருணம், சூரத் நகரம் பெரும் வியாபார ஸ்தலமாய், தலை சிறந்து விளங்கியது. அக்காலத்தில் பம்பாய் ஒரு சிறு கிராமம். சில மீன் பிடிப்பவர்களின் குடிசைகள்மாத்திரம் அங்கு உண்டு.

காலக்கிரமத்தில் பம்பாய் நகரம் வளமுற்று சிறிது சிறிதாகச் செல்வமுற்று, பெரும்பட்டினமாகத் தொடங்கினநாள் முதலாக

சூரத் நகரம் தன்னுடைய மாட்சியிற் சிறிது சிறிதாகக் குன்றத் தொடங்கிற்று. இருப்பினும் சூரத் நகரத்தில் இன்னும் கண்ணைக் கவரத்தகும் கட்டிடங்கள் பலவற்றைக் காணலாம். அக்கட்டிடங்கள் முன்னைய வியாபாரத்தின் உன்னத நிலையையும், ஐரோப்பியரோடு அதற்கிருந்த சம்பந்தத்தையும் நினைப்பூட்டாநிற்கும்.

ஆற்றங்கரையிலமைந்துள்ள அநேக நகரங்களைப்போல், சூரத்நகரமும் வெள்ளக்கேட்டினின்றும் விடுதலையடையவில்லை. 1882-ம் ஆண்டில் ஒரு பெரும்வெள்ளம் வந்தது. இதைப்போலொத்த வெள்ளம் முன் ஒருக்காலும் வந்ததில்லை. அப்பிரவாகம் நீங்கியபின், அவ்வூரார் அதுபோன்ற வெள்ளம் அணித்திற்றேன்றித் தங்களை இடையூற்றுக்குள் ஈடுபடுத்தாது என்று பொதுவாய் எண்ணியிருந்தனர்.

அடுத்த ஆண்டிலேயே தங்கள் எதிர்நோக்குக்கு விரோதமாக ஒரு கொடுஞ்சம்பவம் நேர்ந்தது. 1883-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ந் தேதி, திங்கட்கிழமை சாயங்காலம் பருவக் காற்று அளவு கடந்த மழையைப் பொழிந்து, பெரும் வெள்ளத்தைப் பெருகும்படிசெய்து, தங்கள் வீடுகளுக்கும் உயிர்களுக்கும் ஆபத்து வந்துவிடுமோவென்று ஜனங்கள் திகில்கொள்ளும்படி செய்துவிட்டது.

திடீரென்று வெள்ளம் பெருகியவுடன் தாழ்ந்த நிலத்திலிருப்பவர்களெல்லாம், மேட்டுப்பாங்கான நிலத்திற்கு வரும்படியாக எச்சரிக்கை செய்யப்பட்டார்கள். நடு இரவுக்குப் பின்னர் வெள்ளம் அதிகரித்து, இதற்குமுன் வந்திருந்த எல்லையையும் கடந்துவிட்டது. மழையோ விடவில்லை. மிகுதியாகப் பெய்து, ஜலப்பெருக்கு மிகுந்துகொண்டே வந்தது.

ஆற்றுக்கும் நகரத்திற்கும் மத்தியில் மெக்காஹாரி என்ற அணை யொன்றுண்டு. அணை எவ்வளவு வெள்ளத்தைத் தாங்குமோ அதற்குமேல் வெள்ளம் வந்தது. அணை அழிந்தால் ஊர் அழிந்துவிடுமென்று யாவரும் அஞ்சினார்கள். மெக்கா பாலமும் அடித்துக்கொண்டு போகப்படும் என்று எண்ணினார்கள். இப்பாலம் அடிபட்டுப் போய் விட்டால் ஊரினுள் வெள்ளம் புகுந்து நூற்றுக்கணக்கான

வீடுகளை அழித்து, ஆயிரக்கணக்கான ஜனங்களை வாரிக் கொண்டு போய்விடுமென்று பயந்தார்கள்.

அதிர்ஷ்டவசமாய் அவ்வணை உடைபடவில்லை. இருந்தாலும் மேலதிகாரிகளுக்கு உண்டாகியிருந்த மனக்கவலைக்கு அளவேயில்லை. ஒவ்வொரு நாழிகையும் தண்ணீர் அதிகரித்தது. ஒருவரும் உறக்கங்கொள்ளவில்லை. விடியற்காலையில் நகரபரிபாலன சங்கத்தின் காரியதரிசியும், பாலம் முதலியவைகளைக் கண்காணிக்கும் உத்தியோகஸ்தர்களும் சென்று, மிக்க கவலையுடன் பார்வையிட்டு வந்தார்கள். அவர்களைச் சுற்றிலும் நாலாபக்கங்களிலிருந்தும் தண்ணீர்வந்து சூழ்ந்து கொண்டது. இனி வெள்ளத்தினின்று தப்பிக்க வியலாதென்றெண்ணி, படகுகளில் ஜனங்களை யேற்றி வெளியில் அனுப்பத் தீர்மானித்தார்கள்.

மூன்றுந்தேதி விடியற்காலை ஐந்து மணிக்கு ஆற்றங்கரையெல்லாங் கடந்து, வெள்ளம் புரண்டு, ஊரினுள் புகுந்து, நகர முழுவதும் கொள்ளையிடத் தலைப்பட்டது. குதிரைச் சவாரி செய்யும் மனிதனுங்கூட அதைக் கடந்து செல்ல வியலாது. இச்சமயத்தில் கங்க்ராகாரி என்னும் அணை அழிவுற்றது. வெள்ளம் ரெயில் பாலத்தின் கண்களின் வழியாய்ப் புகுந்து, மேலும் மேலும் நகர்க்குள் நுழைந்து நாசப்படுத்தத் தலைப்பட்டது. ஊரில் முக்காற்பங்கு தண்ணீர்க்குள் மூழ்கிவிட்டது. சிற்சில இடங்களில் இருபது அடி ஆழம் வரை தண்ணீர் நின்றது. பதினாயிரம் வீடுகள் பாழ்பட்டன. கட்டடங்களும், வீடுகளும், தண்டவாளங்களும், தீபமேற்றும் தூண்களும் இருந்த இடந்தெரியாமல் பெயர்ந்து சாய்ந்தன. ரஸ்தாக்களின் பல இடங்கள் அறுபட்டு, பிடுங்கிக்கொண்டுபோகப்பட்டன. ஜனங்களுக்கு உரியவையானதும் நகரத்துக்குச் சொந்தமானதுமான பொருள்களுக்கு உண்டான நஷ்டம் பல லட்சக்கணக்கான ரூபாய் என்று கணக்கிடப்பட்டது.

அந்நகரைச் சுற்றிலும் அமைந்து, முன்னூறு வருடங்களாக அழகுறுத்திக்கொண்ட மதில் பல பாகங்களிலும் இடிந்து விழுந்தது. உதவி நியாயாதிபதியின் நியாயஸ்தலமும், சிங்கார நந்தவனத் தோட்டத்தின் மதில்களும் அழிந்தன. தோட்டமெல்லாம் மண்ணடித்து, மணல் மேடாக்கி

விட்டது. காட்சி சாலையிலிருந்த மிருகங்களெல்லாம் சித்தப்பிரமை கொண்டு வெளிக்கிளம்பி ஓடினதில் அங்கங்கே மூழ்கி மாண்டன. இப்படித் தண்ணீருக்குள் நகரமுழுதும் இரண்டு தினங்களாக மூழ்கிக் கிடந்தாலும், அநேக வீடுகள் திடீரென விழுந்தபோதிலும் ஒரு உயிருக்குக்கூட ஆபத்து நேரவில்லை.

இவ்வளவு பெரிய வெள்ளத்திலும் ஒருவரும் இறவாமலிருந்ததற்குக் காரணங்கள் நகர பரிபாலன சங்கத்தார் மேற்கொண்ட முயற்சியும், சிறந்தோர் சிலர் கைக்கொண்ட சிரத்தையும் என்று கூறினால் மிகையாகாது. அன்று நடந்த முயற்சிகளிலெல்லாம் சிறந்து விளங்கிய ஒரு வீரனின் முயற்சி இங்கு பாராட்டற் குரியதாகும்.

அக்காலத்தில் தாதாபாய் தொராப்ஜீ பாண்டியா என்ற ஒருவர் தேகப்பயிற்சிக்குரிய விஷயங்களைப் போதிப்பதிலும், நீந்தக் கற்றுக்கொடுப்பதிலும் ஆசிரியராகக் காலங்கழித்து வந்தார். அவருக்கு வயது முப்பத்தொன்று. அவரிடத்தில் இத்தகைய வியப்புற்ற பாடங்களில் பயின்று வந்த மாணவர் பலர். அக்காலத்தில் திகழ்ந்த பாரஸீகர்கள் பலருக்கு அவர் தேகப்பயிற்சி போதனைகளைக்கூறித் தேர்ச்சிபெறச் செய்திருந்தனர். அவர் மிகவும் ஆற்றலுடன் இவ்வெள்ளம் வருவதற்கு முன்பே தம்முடைய நீஞ்சுந் திறனால் பல பேர்களின் உயிர்களைக் காப்பாற்றியுள்ளார்.

பிரவாகம் கொடுமையாயிருந்த அந்த நாள் முழுதும், கலெக்டர், உதவி கலெக்டர், போலீஸ் சூப்பெரின்டெண்டெண்ட் முதலான உத்தியோகஸ்தர்களோடு சேர்ந்து, ஒவ்வொரு வீட்டிலிருந்தும், படகுபடகாய் ஆட்களைக் கொண்டுவந்து கரையேற்றினர். இப்படியிருக்கும்பொழுது, பொழுது போய்விட்டது, இருள் வியாபித்தது. இத்தருணம் நமது வீரர், நான்பூரா கடைத்தெருவிலிருந்தார். வெள்ளம் மிக அதிகரித்த நிலையிலிருந்தது. அநேகம்பேர் நீந்தத் தெரியாமல் சுழன்றுகொண்டுவரும் அவ்வெள்ளத்திற்கு இரையாகி விடுவார்களோ என்று எண்ணும்படியாக இருந்தது. கிடைக்கக்கூடிய படகு, போலீஸ் சூப்பெரின்டெண்டெண்ட் வீட்டிலுள்ள ஒரே படகுதான். அவர் வீட்டிற்கும் இவர் இருந்த நான்பூராவுக்கும் மத்தியிலுள்ள இடமெல்லாம் ஒரே இருள்

சூழ்ந்து கிடந்தது. ஆனால் பாண்டியாவோ பயப்படவில்லை. ஒரு கையில் தீபமும், பற்களினிடையில் ஒரு கோலையும் கௌவிக்கொண்டு, அவ்வெள்ளத்தில் குதித்து நீந்திச் சென்றார். ஈராயிரம் ஆண்டுகட்குமுன் தைபர் என்னும் நதி கரைபுரண்டோடும் பெருவெள்ளத்தில், காஸியஸ், ஸீஸர் என்னும் இரு மஹான்கள் எப்படி நீந்திச் சென்றார்களோ, அப்படியே பாண்டியா முழங்கிநிற்கும் பிரவாகத்தைத் தனது பலத்த கையால் அடித்துத்தள்ளி, போரினும் மகிழக்கூடிய இதயத்துடன் அஞ்சாது முன்சென்றார்.

யாருக்காகத் தன்னுயிரையும் கொடுத்துக் காப்பாற்றுவதற்குச் சென்றாரோ, அவர்கள் மிகுந்த ஆத்திரத்துடனும், என்ன நேருமோ என்ற பயத்துடனும், வெளிச்சம் தோன்றும் திசையை நோக்கி திரண்ட தண்ணீரின் மத்தியில், அது எரிந்து தணிந்து பிரகாசிப்பதைப் பார்த்தவண்ணமாயிருந்தார்கள். சிற்சில சமயங்களில் ஒளி மங்குவதைப் பார்த்து, நீந்துதலிற் சிறந்த வீரனுக்குப் பெரும் இடையூறு வந்துவிடுமோ என்று எண்ணிப் பயந்தார்கள். வேளாவேளைகளில் விளக்குத் தடைபட்டு, நின்ற இடத்தில் நின்றதாகத் தோன்றினபோதிலும், ஒரு கஜதூரம் எதிர்த்துச் செல்வதற்கு ஜலத்தோடு பாண்டியா எவ்வளவோ மல்லுக்கட்டு செய்யவேண்டியிருந்ததால், அவர் பிடித்திருந்த விளக்கு மெல்ல மெல்ல முன்சென்று போனது.

பல நாளைய அப்பியாசத்தினால் வரும் தேர்ந்த சக்திக்கும் சாமர்த்தியத்திற்கும் பிரதிபலன் இப்போது கிடைத்தது. அந்த அபார ஆபத்து சமயத்தில் அவருடைய பயிற்சி மாத்திரம் பயன்பட்டிருக்காது. அவருடைய மாண்புற்ற தைரியமும், கொண்ட நோக்கத்தைக்கொண்டு செலுத்தும் மன நிர்ணயமும் சேர்ந்து அவர் மனத்தைத் தூண்டி உற்சாகப்படுத்தியது. பிரவாகத்தின் பலத்த நீரோட்டத்தையும், ஆகாயத்தின் காரிருளையும், தமது ஆருக்களைப்பையும் சற்றேனும் எண்ணாமல் சூப்பெரின்டெண்டெண்ட் வீட்டிற்குச் சென்று, படகைக் கைப்பற்றிக் கடைவீதிக்கு அதைத் தள்ளிக்கொண்டு திரும்பினார். உயிர் பிழைப்பதில் நம்பிக்கையற்று, பயந்து நடுங்கிச் சோர்ந்திருந்த ஜனங்களுக்குப் படகின் துடுப்புச் சப்தம் கேட்டதும் அவர்கள் மனத்

தில் எவ்வளவுமகிழ்ச்சி உண்டாயிருந்திருக்குமென இலேசாய் கிரஹித்துக்கொள்ளலாம். ஒவ்வொருவரையும் படகில் ஏற்றிச் க்ஷேமமான ஸ்தலத்தில் கொண்டுசேர்த்தார். படகைத் திரும்பத் திரும்பக் கொணர்ந்துவந்து அபாயத்திலிருந்த ஜனங்களுக்குத் தஞ்சம் அளித்தார். அவருடைய அரும் பெருமுயற்சியால் 106 மக்களைச் சேதமறக் காப்பாற்றினார். அவரது பிரயாசம் இல்லையேல், இத்துணைவரும் இறந்தொழிந்திருப்பர். வெள்ளமும் சிறிது சிறிதாகத் தணிந்தது. எது எப்படியானாலும் எவரும் பாண்டியாவைமாத்திரம் மறக்கவே முடியாது. இவ்வீரச்செய்கையைப்பற்றி அரசாங்கத்தாருக்குப் போலீஸ் சூப்பெரின்டெண்டெண்ட் அவர்கள் ஒரு அறிக்கை அனுப்பிவைத்தார். அதில் அவருடைய தைரியத்தையும், பொறுமையையும், சாமர்த்தியத்தையும் மெச்சி, அரசாங்கத்தாரின் மதிப்பைக் காட்டும் அறிகுறியாக ஒரு பண முடிப்பையும், கடிகாரத்தையும் அவருக்குப் பரிசாக அளித்தார்.

மற்றும் ஒருமுறை சூரத்தில் 1883-ம் ஆண்டில் வந்தது போல், பெருவெள்ளம் வர நேருமானால், தாதாபாய் தொராப்ஜி பாண்டியா இயற்றிய அரும்பெருஞ்செயல் மற்றவர்கள் மனதில் நின்று அவர்களுக்கு ஊக்கத்தையும், பெருங் காரியத்தைச் சாதிக்க வல்ல உற்சாகத்தையும் புகட்டும் என்று உறுதியாகக் கூறலாம்.

# XI

## ஆண்மையில் சிறந்த ஜமேதார்

ஜர்மன் மகாயுத்தத்தின் வரலாற்றை நன்கு கற்றுள்ளோர் ஈப்பரின் இரண்டாவது துன்புறு யுத்தம் வேறுவிதமாய் முடிந்திருந்தால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் கதியும், உலகத்தின் க்ஷேமமும் எவ்விதம் நிர்மூலமாய்ப்போயிருக்கும் என்று நன்கு இயம்புவர். ஜர்மானியர் ஒரு சமயத்தில் நேசக்கட்சியாரின் படைகளைக் கடந்து, பிரிட்டிஷ் சானலிலுள்ள துறைமுகங்களுக்கும் பாரீஸ் நகரத்துள்ளும் பிரவேசித்து விடுவார்களோவென்று அஞ்சக்கூடிய அபாயநிலையிலிருந்தது. அப்படி அவர்கள் இறுதி

யில் உண்மையாகவே உட்புகுந்து சென்றிருந்தால் மகாயுத்தத்தின் முடிவு வேறுவிதமாய் மாறி இருந்திருக்கும்.

1914-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஈப்பரில் நடந்த முதலாம் யுத்தத்தில் ஒவ்வொரு பிரிட்டிஷ் வீரனுக்கும் எதிரிடையாக ஜர்மானியர் மூவர் இருந்தார்கள். 1915-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் நடந்த இரண்டாவது ஈப்பர் போரில் இருகட்சியிலும் ஒரே எண்ணிக்கையுள்ள வீரர்கள் யுத்தம் செய்தனர். ஆனால், திடீரென்று, ஜர்மானியர் பிறர் எதிர்பாராதவண்ணம் நச்சுக்காற்றை உபயோகித்தமையால், அந்த நச்சுக்காற்றின் கெடுதியைத் தடுக்கத்தக்க முகமூடியைச் செய்து, சேனைகள் உபயோகிப்பதற்குக் கொடுக்கப்படுமுன் அனேகர் மாண்டதால், ஜர்மானியர்களின் படைவண்மை மிகுந்திருந்தது.

ஜர்மானிய மகா யுத்தத்தில் இந்திய ராணுவத்தோடு கலந்து சண்டைசெய்த மகம்மதிய வீரர்கள் யாவரும், நம் இந்தியாவின் வடமேற்கு எல்லைப் புறமாகாணத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் பல வகுப்பைச் சேர்ந்தவர்கள். அதில் ஒரு வகுப்பாருக்கு ஆப்ரிடிஸ் என்று பெயர். இவ்வகுப்பினர் மற்றவர்களைவிடக் கீர்த்திபெற்ற போர்வீரர்களாக சிறப்புறுவதற்கு அந்த மலைப்பிரதேசத்தின் இயற்கையமைப்பு ஓர் சிறந்த காரணமாகும். விளைபொருள் ஒன்றும் உண்டாகாததும், சட்ட திட்டங்களுக்கடங்காத ஜாதியார் வசிக்கப்பெற்றதுமான அந்தப் பிரதேசத்தில், தேக வலிமையும், துப்பாக்கி சுடும் திறமையுமின்றி ஜீவனோபாயம் செய்வதாவது, உயிரைக் காத்துக்கொள்ளுவதாவது அசாத்தியம். ஆகையால் பொதுவாய் மலைப்பிரதேசங்களில் வசித்துவருபவர்கள்பால் விளங்கும் போர்புரிவதற்குரிய இன்றியமையாத தேகவலியும் விடாமுயற்சியும் ஆப்ரிடிஸ் வகுப்பினரிடத்துக் குடிகொண்டிருந்தன.

மழையெனப் பொழியும் குண்டுகளுக்கும், பெரிய வெடிகுண்டுகளுக்கும், கொடிய விஷக்காற்றுக்கும் மத்தியில் எதிர்த்துச்சென்று, ஜர்மானியரின் அகழிகளைத் தாக்குவதால் உண்டாகும் கஷ்டமும் பிரயாசமும், கைபர் கணவாயில் ஒருவரோடொருவர் கைகலந்து நடத்தும் அற்ப சண்டையில் இருப்பதைவிடப் பன்மடங்கு அதிகம் வேண்டப்படும். ஆனால் போர்வீரரிடத்து விளங்கும் ஆண்மை, படபடப்

பின்மை, சமய யுக்தி என்னும் லட்சணங்கள், எந்நிலையிலும் சிறு சண்டையானாலும் சரி, பெரும்போரானாலுஞ் சரி, எத்திறப் போர்புரிந்தாலும் ஒரே தன்மையாய் விகசிக்கின்றன.

மலைநாட்டாரிடத்தில் காணப்படும் பயிற்றுவிக்கப்படாத வீரத்தை, நவீன முறையில் போர்தொடுத்த ஜர்மன் மஹா யுத்தத்திற்குத் தகுந்த விதமாய் இசைவாக்கிக்கொள்ளக் கூடும் என்ற விஷயம், ஜமேதார் மீர்தஸ்து என்பவரின் சரித்திரத்தால் அறியக்கிடக்கும்.

ஈப்பரில் நடந்த இரண்டாவது யுத்தம், இப்போதுதான் ஆரம்பமாயிற்று. அதேயிடத்தில் நடந்த முதலாவது யுத்தத்தில், முடக்கடியான சங்கட காலம் ஒன்றுநேர்ந்தது. அதுபோல அதேயிடத்தில் இரண்டாவது யுத்தம் நடந்த காலத்திலும், ஸர் ஜான் பிரஞ்சால் ஒப்புக்கொள்ளப்பட்டபடி ஓர் கண்டம் ஏற்பட்டது. அத்தருணந்தான் லாகூர் படை எதிரியோடு போர்புரிய திடமான அனுப்பப்பட்டது. ஜர்மானியர், ஒருவரும் எதிர்பாராத வேளையில் கொடிய விஷக் காற்றைப் பிரயோகித்ததால், நேச சைனியத்தில் பலரைக் கொன்று, சேனையின் ஒழுங்கைச் சிதைத்து, நமக்கு அபாயம் உண்டாக்கத்தக்கவிதமாய் எதிர்த்துவந்தார்கள். லாகூர் சைனியம் நியுவேஷாப்பெல் என்ற இடத்தில் அதிக கம்பீரமாய்ப் போர்புரிந்ததென என்று நாம் அறிவோம். தற்சமயம் எதிரியோடு போர் தொடுப்பதற்குமுன், தாங்கள் இருந்த இடத்திலிருந்து முப்பதுமைல் தூரம் கேவலமான ரஸ்தாவின்மேல் நடந்து களைத்துப்போயிருந்தனர். என்றாலும் கட்டளை பிறந்தவுடன் தாமதமின்றிப் போர் முகத்துக்குச் சென்றனர். முன்பெற்ற சிறப்புக் குன்றாவண்ணம் மாட்சிமையாய்ப் போர்புரிந்தனர். அப்படிப் போர்புரிவதினால் பட்ட கஷ்டத்தின் அளவு கொஞ்சமல்ல.

ஏப்ரல் மாதம் 26-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் சுமார் இரண்டு மணிக்கு லாகூர் சேனை பிரெஞ்சுப்படையோடு சேர்ந்து ஜர்மானியரை எதிர்க்கவேண்டுமென்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜமேதார் மீர்தஸ்து 57-ம் ரைபிள்ஸ் என்னும் சிறு யூனிட்டைச் சேர்ந்தவன். அதற்குத் தளகர்த்தன் மேஜர் யுல்லான்ஸ். இந்த யூனிட் பெராசிபூர் பிரிகேட் என்னும்

பெருஞ்சைனியத்தின் மத்தியிலிருக்க அதற்கு வலப்புறமாக 129-ம் பலுச்சிஸ் பட்டாளமும், இடது புறம் கன்னாட்டு ரேன்ஜார்ஸ் பட்டாளமும் அணிவகுக்கப்பட்டிருந்தன. 57-ம் யூனிட் சேனையைக்காட்டிலும், தீரமாய்ப் போர்புரிந்த சைனியம் வேறொன்றுமில்லை. இப்பட்டாளமே ஏற்கனவே முதல் ஈப்பர் சண்டையில் தங்கள் பெயரை நிலைநாட்டிற்று. இப்பொழுதும் முன்னையைவிட மிகவும் கஷ்டமான அமர் புரிய இச்சேனைக்கே நேரிட்டது.

பிரிட்டிஷ் அகழிகளுக்கும், ஜர்மானியர் அகழிகளுக்கும் மத்தியிலுள்ள இடம் பிரிட்டிஷார் சண்டை செய்வதற்குச் சாதகமானதாக இல்லை. மறைவிடம் கொஞ்சமும் இல்லை. பாதையின் மத்தியில் ஒரு சிறு குன்றுண்டு. அக்குன்று ஜர்மானியர் அகழிகளின் பக்கம் ஏற்றமாயிருந்தது.

சுமார் ஒரு மணிநேரம் வரை ஜர்மானியர் படை பெராசிபூர் பிரிகேட்டால் தாக்கப்பட்டது. தாங்கள் குண்டு சுடுவதை நிறுத்த நேருமுன் வெகுதூரம் செல்வது அவசியமானதால் சுடுவதை ஆரம்பித்தவுடனே நேசப்படைகள் முன்நோக்கியும் சென்றன.

பிரிகேட் படை எதிர்த்து பீரங்கிப்பிரயோகம் செய்துகொண்டிருந்தபோதிலும், ஜர்மானியர் அகோரமாய் குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்ததால், எதிர்த்து முன்செல்லும் ஐக்ய படைகள் எதிரியின் மழைபோல் சொரிந்த குண்டுகளுக்கும், வெடி குண்டுகளுக்கும் இடையில் அதிக கஷ்டத்தோடு செல்லவேண்டியதாயிற்று.

அநேக ராணுவ வீரர்களும், சேனைவீரர்களும் சடுதியில் குண்டுபட்டு வீழ்ந்தனர். அந்த வேளையில் அநேகர் செயற்கரிய வீரச்செயல்கள் பல ஆற்றினர். 57-ம் பட்டாளத்தில் அநேகர் எதிரியின் குண்டுகளுக்கிரையாயினர். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அப்பட்டாளத்தை நடத்தும் உத்தியோகஸ்தர்களில் நான்குபேரைத் தவிர, மற்ற ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் யாவரும் இறந்துவிட்டனர்.

ஆகையால் ஆங்கிலப்படைகள், பிரெஞ்சுப்படைகள், இந்தியப்படைகள் இவைகள் யாவும் ஒன்றோடொன்று கலந்து சண்டையிட நேரிட்டது. முன் உபயோகித்ததுபோல் கொடிய விஷக்காற்று அஸ்திரத்தை இந்த சமயத்திலும்

ஜர்மானியர் பிரயோகித்திருந்திராவிட்டால் நேச சைனியங்கள் கைப்பற்றின இடத்தைவிட்டுக் கொஞ்சமும் பின் வாங்கியிருக்கமாட்டார்கள்.

சுமார் இரண்டரை மணிக்கு நச்சுப்புகையின் மஞ்சள் சுவாலே, ஜர்மானியர் அகழிகளிலிருந்து மேலே கிளம்பிற்று. காற்று அங்கிருந்து இம்முகமாய் வீசிக்கொண்டிருந்ததனுல், அக்கொடிய விஷவாயுவான அஸ்திரத்துக்கு நேசக்கட்சி சைனியம் உட்படநேர்ந்தது.

நேசப்படைகள் யாவும் நச்சுப்புகையால் உபாதிக்கப் பட்டன. ஆனுல் பெராசிபூர் பட்டாளமும், பிரெஞ்சு சைனியங்களும், அதன் கொடுமையால் விசேஷமாய் தவித்தன.

தன் பலத்தால் எதிரியைக் கொல்லவாவது அல்லது தன்னே வேறு வழியால் காப்பாற்றிக்கொள்ளவாவது முடியாதபடி விஷவாயு அஸ்திரத்தால் கட்டுண்டு கிடப்பது ஒரு யுத்த வீரனுக்கு ஏற்படுந் துர்ப்பாக்கியங்களுள் மிகவும் கொடியது. தனது உடன் போர்வீரர்கள் விஷக்காற்றுக்கு இரையாகி, அவஸ்தைப்பட்டுப் புரண்டு புரண்டு, கடைசியில் உயிர் துறப்பதைக் கண்ணுற்றுல் எப்படிப்பட்ட சுத்தவீரனும் பயத்தால் பின்னிடுவான்.

நமது போர்வீரர்கள் தங்கள் முகத்தை ஈரத்துணியால் அல்லது தலேப்பாகையால் மூடிக்கொள்ளலாமே தவிர வேறென்றும் செய்யமுடியவில்லே. சிலர் இந்த விதமாகக் கூடத் தங்களேக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல், அகழியின் சிறு சுவர்களில் தங்கள் மூக்கைவைத்து மூடிக்கொண்டார்கள். செத்துப்போன தங்கள் வீரர்களே யுத்தக்களத்தில் விட்டு விட்டு பிரெஞ்சுக்காரரும், இங்கிலீஷ்காரரும், இந்தியர்களும், புத்திதடுமாறி மூச்சுவிடமுடியாது திணறிக் கொண்டு தள்ளாடிப் பின்சென்றுர்கள். ஆனுல் ஒன்றுக்கும் அஞ்சாமலும், ஒன்றினுலும் கட்டுப்படாமலும் இருந்த வீரர்களும் சிலர் உண்டு. இப்படிப்பட்ட வீரர்களிடத்துத் தான் பிறரால் ஜயிக்க ஒண்ணுத மனத்திட்பமும், மாற்றுனுக்கு இணங்காததும் அவனுல் அடக்கியாள முடியாததுமான ஆண்மையும் குடிகொண்டிருக்கின்றன என்று சொல்லக்கூடும்.

இப்படிப்பட்டவர்களுள், ஜமேதார் மீர்தஸ்து என்பனும் ஒருவன். அவனுடைய உடன் போர்வீரர்களில் அநேகர் இந்த கஷ்டத்தைத் தாங்கக்கூடவில்லை. ஏனெனில் விஷக் காற்றின் கொடுமை மனிதர்கள் தாங்கக்கூடாத அவ்வளவு உபத்திரவமாய் இருந்தது. இக்கொடிய விஷப்புகை ஆகாய மெங்கும் நெருக்கமாய்ப் பரவியிருந்தது. வேளா வேளை களில் ஜர்மானியரின் பெரிய வெடிகுண்டுகள், நமது சேனை களுக்கு அருகில் விழுந்து வெடிப்பதால் அகழியின் இரு கரைகளையும் பிளந்து, மண்ணையும், புகையையும் மேகம் போல் ஆகாயத்தில் கிளப்பின. துப்பாக்கி வெடிச்சத்தமும், யந்திர பீரங்கியின் வெடியோசையும் விடாது கர்ஜ்ஜித்துக் கொண்டிருந்தன. கேட்டோர் காதுகள் செவிடுபடும்படி யான பெரிய சத்தத்தைக் கேட்டதனாலும், கண்டோர் நடுங்கி பயப்படக்கூடிய மரணத்தைப் பார்த்ததனாலும், அநேகர் பின்னிட்டார்கள். ஆனால் மீர்தஸ்து தான் நிற்கு மிடத்திலிருந்து தனக்கு ‘பின்போ’ என்ற கட்டளை கிடைக்குமுன் கொஞ்சமும் நகரவில்லை. பற்களைக் கெட்டி யாய்க் கடித்து துப்பாக்கியை உறுதியாய்ப் பிடித்தவனாய் மீர்தஸ்து ‘ஒன்று சண்டைசெய்து உயிர் துறப்பேன்; அல்லது இருந்த இடத்தைவிட்டுப் பின்னிடாது சண்டை செய்வேன்’ என்று தீர்மானம் செய்துகொண்டு நின்றான். அவனைச் சுற்றிலும் பலர் இறந்தும், பலர் மரணாவஸ்தைப் பட்டுக்கொண்டு மிருந்தனர். ஆனால் விஷக்காற்றினால் முற் றிலும் பீடிக்கப்படாதவர், சண்டைசெய்யத் திறமையுடைய வர்களாயிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் இந்த மீர்தஸ்து உறுதியாய் நிற்பதைக் கண்டதும் தாங்களும் ஒன்றுகூடி, இவ னுடைய வீரத்தால் அவர்கள் மனத்தில் புதிய வீராவேசம் உண்டாகி, அவர்கள் தங்கள் குண்டுகளெல்லாம் தீரும்வரை எதிரியோடு போர்புரிந்து, அகழியைக் காப்பாற்றத் தீர் மானித்தார்கள். குண்டுகள் யாவும் செலவழிந்தபின் அவர் கள் உயிரோடிருக்கும் பட்சத்தில், எதிரியை எதிர்த்து ஈட்டியினால் சண்டை செய்கிறதென்றும் தீர்மானித்தார்கள். எதிரியின் குண்டுக்கிரையாய் இங்கொருவர் அங்கொரு வராய்ச் சிலர் வீழ்ந்து இறந்தனர். யுத்தகளம் பகற்பொழு திலேயே இருண்டுபோகும்படி கரியபுகை ஆகாயத்தில்

மேகக்கூட்டம்போல மேலே எழுந்து சூரியனை மறைத்தது. வெடிகுண்டுகளின் சத்தத்தால் அண்டம் கிடுகிடுத்தது. அப்படியிருந்தும் மீர்தஸ்தின் தலைமையின்கீழ் போர்புரியும் அரியவீரர்கள் ஓய்வின்றி குண்டுகளைப் பிரயோகிப்பதால் அநேகரை வீழ்த்தினர். இவ்வீரச் செயலைக் கண்ணுற்ற சூரியன் தன் தேரை மெதுவாகச் செலுத்தினான். இவ்வாறு அகோரப் போர்புரிந்து தங்கள் அகழிகளைக் காத்துக்கொண்டிருக்கும் சொற்பவீரர்களை ஜர்மானியப்படை எதிர்த்துச் சென்று போர்புரிய நினைத்தனரோ? அப்படி அவர்கள் செய்திருந்தால், எதிரிகளில் அநேகரை சுட்டுக் கொல்லு முன் தங்கள் உயிரை விடுத்திருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். ஆனால் எதிரியோ நமது போர்வீரர்கள் எவ்வளவு பெரும் சைனியத்தையும் எதிர்த்து வெற்றிபெறும் ஆற்றலுடைய தீரர்கள் என்று எண்ணியதுபோலத் தோன்றுகிறது. ஆகையால்தான் எதிர்த்து முன்செல்லாது பீரங்கிப் பிரயோகம் செய்துகொண்டே விரோதிகள் இருந்தார்கள். மீர்தஸ்து சில சமயங்களில் எதிரியின் சைனியங்கள் என்ன செய்கின்றனவெனப் பார்த்த சமயங்களில் அவர்கள் இருந்த இடத்தைவிட்டு முன்நோக்கிச் செல்லுவதாக அவனுக்குப் புலப்படவில்லை. அஸ்தமனமுமாயிற்று. இருள் உலகத்தைக் கவிய ஆரம்பித்தது. சண்டையை நிறுத்தும்படி உத்திரவு பிறந்தது. இந்த உத்திரவு பிறந்தபின்தான் மீர்தஸ்து தன்னைப் பார்த்து வீராவேசம் தூண்டப்பெற்று, அதிக ஊக்கத்தோடு போர்புரிந்த வீரர்களில் எஞ்சியவர்களை நடத்திக்கொண்டு போர்களத்தைவிட்டுப் பின்வாங்கினான்.

என்றாலும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு இல்லவே யில்லை. மற்ற அகழிகளில் நச்சுக்காற்றால் மயங்கிக்கிடக்கும் அநேக வீரர்களைத் தேடிப்பிடித்து அவர்களுக்கு சிகிச்சை செய்யும் பொருட்டு தூக்கிக்கொண்டுவந்து சேர்த்தான். அப்படி அவன் செய்திராவிட்டால் அவர்கள் நிர்ப்பந்தமாய் இறந்திருப்பார்கள். இவ்வளவுதானா? இன்னும் அவனுடைய வேலை ஓயவில்லை.

இன்னும் வீரர்களில் அநேகர் காயப்பட்டவர்களாய் இருந்தனர். மீர்தஸ்து யாவருக்கும் முதன்மையாய்ச்

சென்று அவர்களைத் தூக்கிக் கொண்டுவந்து சேர்த்தான். இது அதிக அபாயகரமான பணி. ஜர்மன் வெடிகுண்டுகள் ஒவ்வொன்று ஊடே ஊடே வெடித்துக்கொண்டிருந்தன. அதிகக் குறிப்பாய் சுடுவது இருட்டில் அசாத்தியமான காரியமானாலும், துப்பாக்கியாலும், இயந்திர பீரங்கிகளாலும் எதிரி குண்டுகளைப் பிரயோகம் செய்துகொண்டேயிருந்த தால் இரண்டு சைனியங்களுக்குமிடையுள்ள ஸ்தலத்தின் மத்தியில் செல்லுவது அதிக ஆபத்திற்கிடமான காரிய மாகும். என்றாலும் மேற்காட்டிய வண்ணம் தனது உடன் வீரருக்குப் பெருந்தன்மையோடு உதவி புரிந்துகொண் டிருக்கும் மத்தியில் மீர்தஸ்துக்கு எதிரியின் குண்டினால் ஒரு காயம் பட்டது.

அவன் தன் வைராக்கியமுள்ள தைரியத்தை போரில் காட்டினது இதுதான் முதல்தடவையென்று சொல்ல வொண்ணாது. மோமாண்டு என்ற பேர்பெற்ற சண்டை யில் காட்டின தைரியத்துக்காக அவன் "இந்தியரில் கீர்த்திக் குரிய கூட்டத்தார்" என்ற கௌரவப்பட்டம் பெற்றிருந் தான். இப்பொழுது விக்டோரியா கிராஸ் என்று சொல் லப்படும் பதக்கம்பெற்ற இந்தியர்களுள் இவன் நான்காவது வீரனானான்.

இவனது வீரத்திற்கு அரசாங்கத்தார் அளித்த கௌர வம் இவைமட்டுமல்ல. ஐரோப்பாவைவிட்டு புறப்படுமுன் இவனுக்கு லார்டு கிச்சினர் பேட்டி கொடுத்தார். "பிரான் சில் போர்புரிந்த இந்திய பட்டாளத்தின் சரித்திரம்" என்ற புத்தகத்தில் கிச்சினரும், மீர்தஸ்தும் சந்தித்த மனோஹர காட்சியைக் காட்டும் ஒரு புகைப்படம் சேர்க்கப்பட்டிருக் கிறது.

கஷ்டமின்றி எளிதில் சுபேதார் என்னும் உயர்ந்த ஸ்தா னத்துக்கு உயர்த்தப்பட்டான். இப்பொழுது அவன் உத்தி யோகத்தைவிட்டு நீங்கிப் பென்ஷன் பெற்றுவருகின்றான். மாட்சிமைதங்கிய கானாட்டுக் கோமகனாருக்கு ராவல்பிண்டி யில், சிற்றுண்டி விழா ஒன்று 1921-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் நடந்த காலையில், பென்ஷன் பெற்றுவருகிற அநேக இந்திய ராணுவ உத்தியோகஸ்தர்கள் விஜயம் செய்தனர். அவர்களுள் மீர்தஸ்தும் வந்திருந்தான் என்

பதே நாம் அவனைப்பற்றிக் கடைசியாய்க் கேள்விப்பட்ட சமாசாரம்.

தனக்களிக்கப்பட்ட கௌரவப் பட்டங்கள், கண்ணியம் இவைகளினுலுண்டாகும் களிப்பை அடைந்து மீர்தஸ்து பல்லாண்டு, பல்லாண்டாய் வாழ்க. அவன் செய்த அரும் பெருஞ் செயல்களை, அவன் தேசத்தார் என்றும் மறவாமல் சதாகாலமும் ஞாபகத்தில் வைத்திருப்பார்களாக!

## XII

## ஒரு கூர்க்க வீரன்

தென் இந்தியாவில் கூர்க்கர்கள் பொதுவாகக் காணப்படுவதே யில்லை. தென்னிந்தியரில் அநேகர் அவர்கள் பேரைமாத்திரம் கேள் விப்பட்டிருக்கலாம். அது தவிர வேறென்றும் தெரியாது. கூர்க் கர்கள் இமயமலையின் சரிவுகளிலுள்ள சுதேச ராஜ்யமாகிய நேபா ளத்தில் வசிக்கும் குள்ளமான மலைவாசிகளாவர். மிக்க வலிமை யுள்ளவர்கள். ஜப்பானியர்களைப் போலவே அவர்கள் உயரத்தி லும், உடற்கட்டிலும், தோற்றத்திலும் ஒற்றுமை யுடையோராய்க் காணப்படுவதன்றி, படைவகுப்பிலும் வியக்கத்தக்கவாறு விளங்கு கின்றார்கள். கூர்க்கனை ஒருபொழுதும் பார்த்திராதவர்கூட, கக்ரி என்பதைப்பற்றியாவது கேட்டிருக்கலாம். கக்ரி என்பது, கிட்டத் தட்ட நாவிதன் கத்தியைப்போன்று, கூர்மையானதாகவும் கனத்த தாகவுமுள்ள ஒரு வளைந்த கத்தியாகும். கூர்க்கன் அதை சாதாரண வேலைகளுக்கு உபயோகிப்பதன்றி, மறைவிடங்களில் நேரும் சண்டையில், உயிர்வாங்கும் செய்கையைப் புரிவதற்கும் உபயோ கிப்பான். ஸ்காட்லாண்டு தேசத்து மலை நாட்டாருக்கும், கூர்க்கர் களுக்கும், ராணுவ சம்பந்தமான பரம்பரை நட்பியல்பு நெடுநாளாக இருந்து வந்தது.

மலைகளும், அடர்ந்த காடுகளுமுள்ள நேபாளம் போன்ற நாட் டில் வசிப்பவர்களின் தன்மை எப்படியிருக்குமென நாம் எதிர் நோக்குவோமோ, அப்படியே கூர்க்கர்கள் மலைச்சண்டையிலும், வனயுத்தத்திலும் இணையற்றவர்களாயிருந்தார்கள். என்றாலும், பிரெஞ்சு தேசத்துச் சமவெளிகளில் நடந்த அகழ்ச்சண்டை, ஐரோப்பாவின் குளிர் பொருந்தாததாலும், இன்னம் மற்றக் காரணங்களினுலும், அவர்கள் மனத்துக்கு அவ்வளவு பொருந்தின தாகத் தோன்றவில்லை.

கூர்க்கர்கள் போர்புரிய நவீன தேயங்களுக்குச் சென்றாலும், அந்தந்த இடத்துக்குத் தகுந்த பிரகாரம், இசைவாய் நடந்து கொள்ளக்கூடிய திறமுற்றிருந்தார்கள் என்பதற்கு, குல்பிர்தாபாவின் சரித்திரமே சான்றாகும்.

1915-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் லூஸ் சண்டை எனப் பேர்பெற்ற பெரும்போர் நிகழ்ந்தது. சாம்பேனில் ஜர்மானியரைப் பலமாய்த் தாக்குவதென்றும், மற்றவிடங்களில் அவர்கள் புதிய படைகளைக் கொண்டுவராமல் தடுப்பதற்காக அநேக ஸ்தானங்களில் அவர்களை எதிர்ப்பதென்றும் ஏற்பட்டிருந்தது. அவ்வித இடங்களுக்கு 'தாக்கும் ஸ்தானங்கள்' எனப்பெயர். இவ்வித ஏற்பாடுகளில் ஒன்று, நியுவேஷாப்பலுக்குப் பக்கத்தில் ஆங்கில வீரர் கொஞ்சம் கலந்திருந்த இந்தியச்சேனை எதிரிகளை எதிர்த்து தாக்குவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போது சொல்லப்புகும் சரித்திரத்திற் கிசைவாகச் சொல்லவேண்டுமானால் சண்டையின் முக்கிய இலக்கானது சங்கன் சாலைக்கும் வின்செஸ்டர் வீதிக்கும் இடையிலுள்ள ஜர்மானியர்களை எதிர்ப்பதுவும், மைக்கிசாரத்திலிருந்து டக்ஸ்பில்லுக்குச் செல்லும் சுரங்கமார்க்கத்தில் பிரிட்டிஷ்படைகளை நிறுத்துவதுமாயிருந்தது. அச்சுரங்கம் 3-வது லண்டன் படைகளால் தோண்டப்பட்ட முன்னுக்கு வளைந்த சுரங்கம். இதனோடு சேர்க்கப்பெற்றுள்ள படத்தைப் பார்த்தால் நிலைமை தெளிவாகப் புலப்படும்.

எதிரிகளைத் தாக்குமுன் நான்கு நாட்களாகப் பீரங்கிப் படைகளாலும், துப்பாக்கிகளாலும் முற்றுகையிடவேண்டுமென்றும், அவ்விதம் தாக்குவதற்குச் சற்று நேரத்திற்கு முன் எதிரிகளின் அகழின்மேல் சுவருக்குக்கீழ் இடதுபக்கத்திலிருந்ததும் ஒரு டன் நிறையுள்ள துப்பாக்கிப் பஞ்சினால் நிரப்பப்பட்டதுமான சுரங்கம் வெடிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானித்திருந்தது. காற்று அனுகூலமாயிருந்தால் ஜர்மானியர் நம்மைப் பிரயோகிக்கும்படி செய்வித்த விஷக் காற்றை இரண்டு நிமிஷத்திற்குப்பின் பிரயோகிக்கவும், கடைசியாக எதிரிகள் கண்ணுக்குப் புலப்படாமல் நமது சேனைகள் முன் செல்வதற்குதவியாக நமது சேனையின் இரு




M. Mine under German Parapet
LLL. 2nd Leicesters
GGG. 2/3 Gurkha Rifles
XXX. German wire left uncut by bombardment
FF. Furthest points reached in the attack

பக்கத்திலுமிருந்து புகைக்காட்டை எழுப்பிவிடவும் தீர்மானம் செய்யப்பட்டிருந்தது.

ஆகவே செப்டம்பர் மாதம் 21-ம் தேதி பீரங்கிகள் தாக்கத் தொடங்கின. நான்கு நாட்களாகப் பகலிலும் இரவிலும் பீரங்கிகள் ஓயாமல் முழங்கின. பீரங்கியைப் பிரயோகிப்பவர்கள் ஜர்மானியரின் அகழிகளை யழிப்பதிலும் அவர்களுக்கு அனுகூலமாயிருந்து வந்த கம்பிகளை யறுப்பதிலும் இடைவிடாது ஓயாமல் பாடுபட்டார்கள். 24-ம் தேதி மாலையில் வலப்பக்கத்திலுள்ள ஒரு பகுதியைத் தவிர ஜர்மானிய சேனையின் முன்னுள்ள மற்றக் கம்பிகள் எல்லாம் அறுபட்டன. இவ்வறுபடாத கம்பியே பின்னால் பல வீரர்கள் உயிர்விடுவதற்குக் காரணமாக இருந்தது.

23-ந் தேதி மாலையில் மழை பெய்தது. 25-ந் தேதிக்குள் அகழ்களில் ஒரு அடித் தண்ணீர் நிறைந்துவிட்டது. எதிர்த்துத்தாக்கும் படைக்கு அது ஒரு பெரிய தடையாக இருந்தது.

25-ந்தேதி காலை 4-40 மணிக்கு, டக்ஸ்பில் என்ற இடத்தில், ஒரு பீரங்கிக்குண்டு ஜர்மானியர் பாளையத்திலிருந்து வந்து விழுந்தது. அதனால் விஷக்காற்று வெளிச்செல்லும்படி வைத்துள்ள வட்டக்குழாய்களின் மேல்பாகம் உடைந்து போனது. நம்மவரில் அநேகர் வெளிவந்த நச்சுக்காற்றால் உபாதிக்கப்பட்டார்கள். ஆயினும் வட்டக்குழாய்களின் மேல், மணலை எறிந்ததினால் விஷக்காற்று நின்றுவிட்டது. என்றாலும் தற்சமயம் காற்று பிரதிகூலமாய் வீசிக்கொண்டிருந்ததால், நச்சுக்காற்றை எதிரிக்கு நேராக வெளிவிடக் கூடாதென்று தீர்மானித்தார்கள்.

பின்பு 5-48 மணிக்கு இடது பக்கத்தில், ஜர்மானியரின் அகழிக்குக் கீழ்பாகத்திலிருந்த சுரங்கம் பயங்கரமாய் வெடிக்கத் தொடங்கி முன்பக்கத்தை உடைத்துவிட்டது. இரண்டு விநாடிக்குப் பிறகு பத்து நிமிஷம்வரையில் பீரங்கிகள் மிகுந்து தாக்கின. அது எதிரியினுடைய தைரியத்தை இழக்கச் செய்ததோடு, எதிர்ப்பையும் இழந்து பின்வாங்கச் செய்தது. ஆறு மணிக்கு மீண்டும் விஷப்புகை பிரயோகிக்கப்பட்டது. தாக்கிக்கொண்டுள்ள காலாட்படைகள், புகை மறைவில் முன்னே சென்றன. வலது பக்கத்தில் லண்டன் படைகள் டக்ஸ்பில் என்னுமிடத்தைப் பற்றிக்கொண்டிருந்தன. இடப்பக்கத்தில் $\frac{2}{3}$ கூர்க்கப் போர்வீரர் இருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் 2-வது லீஸ்டர் படைகள் இருந்தன. கூர்க்கர்கள் அறுபடாத கம்பியைப்பற்றி முன்னமே அறிவிக்கப்பட்டார்கள். மேகம்போன்ற புகைக்குள் வரிசைக்கு மூன்று நான்குபேராக முன்சென்றார்கள். ஜர்மன் சுரங்கங்கள் 200 கஜத்துக்கு அப்பாலிருந்தன. பாதி வழிவரையில் அவர்கள் புகையால் மறைக்கப்பட்டுச் சென்றார்கள். பின்பு ஜர்மானியர்கள் அவர்களைக் கண்டதும், குண்டுகளை மழையைப்போல் பிரயோகித்தார்கள். என்றாலும் நச்சுக்காற்றாலும் புகையாலும் நிறைந்த ஆகாயத்தினூடே எதிர்த்து அச்சமின்றிப் பாய்ந்தார்கள். அதுகார

ணமாகப் பலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தப்பிப் பிழைத்தவர்கள் அறுபடாத கம்பியைச் சார்ந்தார்கள். அது அறுபடவில்லை என்பது அப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது. என்ன பிரயோசனம்? அநேக ஆங்கில யுத்த வீரர்களும், இந்தியப் போர்வீரர்களும் அவ்விடத்தைவிட்டு நீங்கிக்கொள்ள இயலாமல் கீழே விழுந்தார்கள். அறுபடாத கம்பிகளுக்கு முன்பும், யந்திர உதவியால் சுடும் பீரங்கிகளுக்கு முன்பும், மனித பலமும் ஆண்மையும் ஒன்றும் செய்வதற்கில்லை. தப்பிப்பிழைத்த சிலரும் கீழே விழுந்து, தங்களுக்கு எதிர்ப்பட்ட பொருள்களால் தங்களை மறைத்துக் கொண்டார்கள்.

ஆங்கு சில எதிர்பாராத வியக்கத்தக்க சம்பவங்களும் நேர்ந்தன. பிரிட்டிஷ் ராணுவத் தலைவன் ஒருவன் தாக்குண்டு, ஒரு சிறு வெடிகுண்டுப் பொந்துக்குள் எறியப்பட்டான். அதனுள் காயமுற்ற கூர்க்கன் ஒருவன் முன்னமேயிருக்கக் கண்டான். பகைவர்களுக்குச் சிறிது கஜத்திற்குப் பக்கமாகவே அவர்கள் படுத்திருக்கவேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் கால்களை, பகைவருடைய குண்டுகளுக்கு நேராகக் காட்டிக்கொண்டிருக்க நேர்ந்தது. பாதகர்களாகிய ஜர்மானியர் அடிக்கடி காயமுற்றவர்களையே சுட்டுவந்தார்களாதலால், இவர்களிருவரும் பலமுறை காயமுற்றார்கள். இரவானதும் அவர்கள் ஊர்ந்து செல்லத் தொடங்கி இருவர்களில் ஒருவனாகிய ஆங்கில போர்த்தலைவன் பிரிட்டிஷ் சேனையோடு வந்து சேர்ந்துகொண்டான்.

அதிசயிக்கத்தக்கவாறு, ஒரு பிரிட்டிஷ் தலைவனும், ஒரு சிறு கூட்டத்தாரும் சேர்ந்து, தங்கள் தைரியத்தாலும் ஊக்கத்தாலும் கம்பியை ஊடுருவிக் கடந்துசென்று ஜர்மானிய அகழைத் தாக்கினார்கள். கூடுமானவரையில் ஆராய்ந்து பார்த்தமட்டும், ஒருவனைத் தவிர மற்ற எல்லோரும் கொல்லப்பட்டார்களெனத் தெரிகிறது. அவ்வொருவனே குல்பிர் தாபா ஆவன். காயமுற்றிருந்தாலும் அவன் ஜர்மானிய அகழிக்குள்ளே தைரியமாய்ச் சென்றான். அந்த அகழிக்குப் பின்னால் லீஸ்டர் பட்டாளத்தைச்சேர்ந்த காயமுற்ற ஒருவனைக் கண்டான். இவன் தன்னை விட்டுவிடும்படிக்கும், அவனையே பாதுகாத்துக்கொள்ளும்படிக்கும் குல்பிர்தா

பாவை பெருந்தன்மையோடு மன்றுடிக் கேட்டுக்கொண்ட போதிலும், குல்பிர் ஒரு வீர கூர்க்கச் சிறுவனுதலால், பகைவனுடைய தயவுக்கு அக்காயமுற்ற நண்பனைவிட்டுப் போக அவனுக்கு மனங்கொள்ளவில்லை. அதனுல் அன்று இரவு பகல் முழுவதும் அவனுடனேயே குல்பிர்தாபா தங்கியிருந்தான்.

மறுநாட் காலையில் மூடுபனி மிகுந்திருந்தது. அதனுடைய மறைவால் குல்பிர், வலைக்கம்பியின் வழியாக, காயமுற்ற மனிதனை சுமந்து சென்றுன். பல தடவைகளில் அவன் ஜர்மானியர்களால் கண்டுபிடிக்கப்பட நேரிட்டது. என்ருலும் ஒவ்வொரு முறையிலும் அவ்வபாய நிலைமையினின்றும் தப்பினுன். கடைசியாக தனது தோழனை வெடிகுண்டுப் பொந்தில் மறைத்துவைத்து இவ்வண்ணம் அவனைப் பத்திரப்படுத்தினுன். நாடியைத் துன்புறச்செய்யும் இவ்வாருன வீரச்செயலைப் புரிவதில், குண்டுகளால் நேரக்கூடிய சாவுக்குத் தப்பித்துக்கொள்வதே அநேகருக்குத் தாங்கள் செய்யும் அரும்பெருஞ் செயலாகும். ஆனுல் குல்பிருக்கு இதெல்லாம் ஒரு பொருட்டல்ல. ஜர்மன் கம்பிக்கும், குண்டுப் பொந்துக்கும் இடையிலுள்ள "ஒருவருக்கும் சொந்தமில்லாத நிலம்" எனப்படும் ஸ்தலத்தில், காயமுற்ற இரு கூர்க்கர்கள் பதுங்கி ஒளிந்திருப்பதைக் கண்டான். அங்கு சென்று ஒவ்வொருவராக அவர்கள் இருவரையும் நல்ல ஒதுக்கிடத்துக்குக் கொண்டுவந்தான். பொழுது விடிந்து, பகல் நேரமாயிருந்தது. ஆங்கில போர்வீரனை மீட்க குல்பிர் மீண்டும் புறப்பட்டால் பகைவருடைய குண்டுகளுக்குப் பாத்திரனுக வேண்டியிருக்கும். சந்தர்ப்பங்கள் அவனுக்கு மாருகவே யிருந்தன. ஆனுலும் அவன் பிரிட்டிஷ் வீரனை நோக்கிச் சென்று, அவனை மீண்டும் சுமந்து வந்தான். ஜர்மன் குண்டுகள் தன்மேல் படாதபடி பிழைத்துக்கொண்டான். அபாயத்திற்கு அஞ்சாமல் மும்முறையாகத் திரும்பத் திரும்பக் காட்டின தைரியத்திற்கும், தீரத் தன்மையோடு திருவருள் சேருமென்பதற்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"விக்டோரியா கிராஸ்" என்னும் பதக்கத்தைப் பெறுவதற்கு அருகரான பல வீரர்கள், அதைப் பெறுவதற்கு

முன்பும், பெற்றதற்குப் பின்பும் கொல்லப்பட்டார்கள். குல்பிர்தாபா ஒருவாறு தனது காயங்கள் ஆறி, சுகமடைந்து, எகிப்து தேசத்துக்குச்சென்று, அங்கு சிறிதுகாலம் சேவை செய்து இந்தியாவிற்கும் திரும்பினான். தனக்குரிய தர்மத்தையும், தானத்தையும் காப்பாற்றவேண்டிய சந்தர்ப்பம் நேரும் காலத்தில், தர்மம் ஓங்கி, அதர்மம் குன்ற பூர்வகாலத்தில் பரோபகாரராய்த் தங்கள் பிராணனையும் அர்ப்பணம் செய்த வீரர்களைப் போலவாவது, அல்லது புகழை நிலைநாட்ட, உடல் பொருள் ஆவியையும் தத்தம்செய்த தியாக மூர்த்திகளைப்போலாவது, தற்கால இந்தியாவில் எண்ணிறந்த மக்கள் உதிக்கும்படி தூண்டிவிடத்தக்க சிறந்த எடுத்துக்காட்டியாய், நம் கதாநாயகன் நீடூழிவாழப் பிராத்திப்போமாக!

## XIII

## கடலில் பணியாற்றும் காளையர்கள்

'கூப் தேக்தா ஹை' என்று பாடும் சத்தம் நமது காதில் விழுகின்றது. இப்படிப்பாடுபவன் யாவன்? கூர்மையான கண்களையும், சந்தோஷமான முகத்தையுமுடைய மாலுமிகளில் ஒருவன். உடல்கட்டும் உற்சாகமும் பொருந்தியவன். சமுத்திரத்தின் அபாயங்களிலிருந்து தன் கப்பல் தப்பித்துக்கொள்ளும்படியாக இரவு முழுவதும் விழித்திருந்தவன். கப்பல் துறைமுகம் சேர்ந்தவுடன் சிவப்புக்குல்லாவையும், பளபளப்பான நீல நிறச் சட்டையையும் தரித்து, மிகுந்த களிப்புடன் மேல்கண்ட வசனத்தை உரக்கப் பாடுகின்றான்.

நம் இந்தியச் சரித்திரத்தில், தரையில் போர்புரியும் நமது போர் வீரர்களைப்பற்றியும், அவர்களின் அரிய செயல்களைப்பற்றியும் வேண்டியவரையில் கூறப்பெற்றுள்ளது. ஆனால் நமது தேசம் விசாலமானதாலும், உள்நாட்டிற்கும் சமுத்திரத்திற்கும் வெகு தூரமிருப்பதாலும், நம்நாட்டினர் பலர் தங்கள் இந்திய மாலுமிகளைப் பார்த்திருக்கவே மாட்டார்கள்.

என்றாலும் நமது தேசசம்பந்தமான சரித்திரம் இனியதும், மிகப் புராதனமுமானது. நம்நாட்டிலிருந்து விலையுயர்ந்த நவரத்தினங்களும், பட்டுகளும், வாசனைத்திரவியங்களும், கப்பல் மூல

மாய்த் தூர்தேசங்களுக்குக் கொண்டுபோகப்பட்டனவென்று நமக்குக் கிடைத்த புராதன நூல்களிலிருந்து விளங்குகிறது.

தன்னைத் தாங்கவாவது, தான் தாங்குவதற்காவது, தான் பற்றிக்கொள்வதற்காவது, எதுவுமில்லாத பரந்த சமுத்திரத்திலுள்ள அநேக ஆபத்துக்களுக்கிடையே பிரயாணஞ்சென்ற நமது ஜனங்களில் சிலரைப்பற்றி ரிக்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன், மேல் இந்தியாவிற்கும் மெசொபத்தேமியாவிற்கும் சமுத்திர வியாபாரம் நடந்து வந்தது. இவ்வளவு புராதனமான விஷயத்தை நம் கற்பனு சக்தியாலுங்கூட யூகிக்கமுடியாது. ஆனால் நாம் அக்காலத்திலிருந்த ஒரு சிறு கப்பலையும், அக்கப்பலிலேற்றியுள்ள விலையுயர்ந்த நவரத்தினங்களையும், பட்டுவஸ்திரங்களையும், வாசனைத் திரவியங்களையும், அக்கப்பலைக் கரையோரமாய் உடுக்களின் உதவியைக் கொண்டு, பெர்சியா வளைகுடாவுக்கு நடத்திச்செல்லும் தைரியமுள்ள மாலுமியையும், நம் மனேசக்தியால் கற்பனைசெய்து பார்க்கக்கூடும். பாபிலோனியாவின் புகழ்வாய்ந்த அரசனை நேபுகாத் நேச்சார் என்பவனல் கட்டப்பெற்றுத் தற்போது பாழடைந்து கிடக்கும் அரண்மனை, கோவில் இவைகளில் நம்நாட்டிலிருந்து கொண்டுபோன தேக்கு, தேவதாரி உத்திரங்களை உபயோகப்படுத்தினதாகக் காணப்பட்டன. இந்த உத்திரங்களில் ஒன்று பேசக்கூடுமானல், எத்தனையோ புராதன ரகசியங்களையும், சமுத்திரப் பிரயாணத்தில் அவைகள் பட்ட எத்தனையோ ஆபத்துக்களையும், கஷ்டங்களையும் அது சொல்லக்கூடும்.

'ஜாதகங்கள்' என்ற பௌத்த நூல்களைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். அவற்றுள் ஒன்ருன பவேரு ஜாதகத்தில், "சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்குமுன் பவேரு எனப் பெயருள்ள பாபிலோனியா தேசத்திற்கு மயில்களை இந்திய வியாபாரிகள் கொண்டுபோனுர்கள்" என்று கண்டிருக்கிறது.

அந்த வியாபாரிகள் எழுதிவைத்த 'தினசரி வேலைக்குறிப்பு' புஸ்தகம் அகப்படுமானல், அதை எவ்வளவு பொருள்தான் நாம் கொடுத்து வாங்கமாட்டோம்!

பம்பாய்க்கருகிலுள்ள சால்செட் தீவின் கன்ஹேரிக்குகைகளுள், சமுத்திரத்தில் உடைபட்ட ஒரு கப்பலைக்காட்டும் வண்ணமாய் ஒரு கல்லில் சிற்பவேலைசெய்து வெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதில் தங்களுக்கு உதவி புரியவேண்டுமென்று இரண்டு மாலுமிகள் கடவுளை வேண்டுவதுபோலவும், பத்மபாணிக்கடவுள் அவர்களுக்கு உதவிபுரியும் பொருட்டு இருவர்களை அனுப்புவது போலவும் செதுக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கற்சிலை சுமார்

இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் வெட்டுவிக்கப்பட்டது. கடலில் பிரயாணம் செய்யும் கப்பலைப்போல் வெட்டியுள்ள இதைப் போன்ற பழமையான கற்சிலை உலகத்தில் எதுவுமில்லையென்று நிச்சயமாய்ச்சொல்லலாம். அநேக நூற்றுண்டுகளுக்குமுன் ஏதோ ஒரு அரும்பெருஞ்செயல் செய்யப்பட்டதென நாம் இக்கற்சிலையிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். மகா அலெக்ஸாந்தருக்குப் பின் அரசுபுரிந்த சந்திரகுப்த சக்கரவர்த்தியின் ராஜ்யத்தில் கப்பற் படை இலாகா என்று ஒன்று இருந்ததிலிருந்தே அக்காலத்தில் கப்பல்கள் நமது தேசத்தில் அதிகமாய்க் கட்டப்பட்டு, கப்பல் வியாபாரம் அதிக மும்முரமாய் நடந்துவந்திருக்குமென்று நனி விளங்குகின்றது.

இக்கதையை வாசிக்கும் நண்பர்களிற் பலர், அஜண்டாவிலுள்ள மலைக்குகைகளைத் தரிசனம் செய்திருக்கலாம். அங்குள்ள சித்திரங்களுள் ஒன்று, பூர்வகால கப்பல் வியாபாரத்தைக் காட்டுவதாக வரைந்திருப்பதைப் பார்க்கலாம்.

சுமார் ஏழாம் நூற்றுண்டில் வரைந்துள்ள சித்திரங்களிலிருந்து நமது நாட்டின் கப்பல் வியாபாரத்தைப்பற்றியும், அக்காலத்தில் ஆண்ட அரச வம்சத்தினரின் கப்பற்படையைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்ளலாம். இக்காலத்தில் கப்பல் பிரயாணத்தைக் காட்டும் இரண்டு சித்திரங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றில் கடலில் பிரயாணம் செய்யும் ஒரு கப்பலைப் பற்றிய எல்லா விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. மற்றொன்று அரசனின் நீர் விளையாட்டுச் சலங்குப்படம். அதில் அரசன் ஒரு விதானத்தின்கீழே உட்கார்ந்துகொண்டிருப்பதுபோலவும், கப்பலின் முன்னணியில் ஒருவன் துடுப்புப்போட்டுக்கொண்டு நிற்பது போலவும், வெகுகாலத்திற்கு முன் ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள வைக்கிங்ஸ் (Vikings) என்பவர்கள் உபயோகித்துவந்த நீண்ட துடுப்பைக்கொண்டு ஒருவிதமான ஏணியிலிருந்து சுக்கானி கப்பலைத் திருப்புவதுபோலவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது நூற்றுண்டின் மத்தியில் விஜயசிம்மன் இலங்கையை ஜயித்த வரலாற்றை, அதே அஜண்டாகுகையில் வெகு விநோத படரூபமாய் எழுதப்பட்டிருக்கிறது. அநேக விஷயங்கள் விவரம் விவரமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கையில் ஈட்டியைத்தாங்கி, குதிரையில் சவாரிசெய்துகொண்டிருக்கும் குதிரைப் படையைப்போலவும், யானையின் கழுத்தில் அதன் பாகனும், அதன் முதுகில் வில்வீரர்களையுமுடைய யானைப்படையைப்போலவும் படங்கள் வரையப்பட்டுள்ளன. இப்படைகளைப் படகுகளில் ஏற்றி, துடுப்புகளால் தள்ளப்பட்டு, ஜலத்தில் மிதப்பதுபோலவும்

எழுதப்பட்டிருப்பதுதான் அந்தச் சித்திரங்களுள் முக்கிய அம்சம். பிற்காலத்திய சமாசாரங்கள், சரித்திரங்களில் ஒன்றுவிடாமல் வர்ணிக்கப்பெற்றிருப்பதால், இந்தியர்கள் சமுத்திரத்தில் செய்த பெருமுயற்சியைப்பற்றியும், அவர்கள் இயற்றிய வீரச்செயல்களைப் பற்றியும் தொடர்ந்தேர்ச்சியாய்த் தெரிந்துகொள்ளலாம். சாதாரண சரித்திர நூல்களில், தரையில் நடந்த செயல்கள் மிகுதியாய்ச் சொல்லப்படுவதால், கடலில் நடந்த வீரச்செயல்கள் மறைபட்டுப்போகின்றன. எப்படியிருந்தாலும் கடலில் நம்மவர்களால் வீரச்செயல்கள் இயற்றப்பட்டனவென்பதற்குச் சந்தேகமில்லை. அச்செயல்களை விவரமாக எடுத்து எழுதினால் கேட்பவருக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய மனோதிசயமான கதைகளாகும்.

ஸ்பெயின் நாட்டாரின் கப்பற்படையை அழித்து கடலாதிக்கத்தை, எலிஸபெத் ராணி நிலைநாட்டிய அதேகாலத்தில், அக்பர் சக்கரவர்த்தி அதிக முன்யோசனையாய், ராச்சியத்தை ஸ்திரப்படுத்த கப்பற்சேனை அவசியமெனக்கண்டு அதை விசேஷமாய் ஏற்படுத்தினார்.

அவருடைய கப்பற்படைகள் எதிரிகளான இந்து அரசரின் படைகளோடு போர்புரியவேண்டியதோடுகூட, வங்காள விரிகுடாவில் அவர்கள் பெயரைக்கேட்டால், எவரும் நடுங்கும்படியான அவ்வளவு கொடிய ஆரக்கான் நாட்டு கப்பற்கொள்ளைக்காரரோடும் யுத்தம்பண்ணவேண்டியதாயிற்று. இக்கடற்கொள்ளைக் கூட்டத்தாரில் மாக்கள் (Maggs) என்று அழைக்கப்படுகிற ஆரக்கான் நாட்டுக் கடற்கொள்ளைக்காரர்களும், பரங்கிக்காரர் என்னும் அந்நியநாட்டுக் கொள்ளைக்காரரும் கலந்து இருந்தனர். அதே காலத்தில் பெர்சியா தேசத்தில் எழுதப்பட்ட நூல்கள் ஒன்றில், ஆரக்கானிய கொள்ளைக்காரர், இந்துக்களையும் மகம்மதியர்களையும் சிறைப்படுத்தி தெக்கணத் துறைமுகங்களிலுள்ள டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், இந்த வியாபாரிகளிடத்து அடிமைகளாக விற்றுவந்தார்கள் என்று நன்றாகத் தெரிகிறது. "அவர்கள் பீரங்கிகள் எண்ணிறந்தன. அவர்கள் கப்பற்படை சமுத்திரத்தின் அலையைவிட அதிகம்" என்று அதே சரித்திரம் சொல்லுகிறது. பீரங்கிக்குண்டும் ஊடுருவிச் செல்லமுடியாத அவ்வித வைரமரத்தால் அவர்கள் கப்பல்கள் கட்டப்பட்டனவாம். வெகுநாள் நம் நாட்டில் விளைந்த ஆறினதேக்குமரத்தால் அக்கப்பல்கள் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்று சந்தேகமறச்சொல்லலாம். பிற்காலத்தில் இந்த தேக்கு இங்கிலாந்தில் விளையும் ஓக்மரத்தைக்காட்டிலும் அதிக வலிமையுள்ளதென்று கண்டதினால், ஆங்கிலேயரின் கப்பற்

சேனைக்குவேண்டிய அநேக யுத்தக்கப்பல்கள் பம்பாய்த் துறை முகத்திலேயே கட்டப்பட்டன.

புகழ்பெற்ற சிவாஜியின் தலைமையின்கீழ் மகாராட்டியர் தலையெடுத்த விஷயம், பதினேழாவது நூற்றாண்டில் நேர்ந்த முக்கிய சம்பவம். அவர் அநேக வீரச்செயல்களை தரையில் இயற்றினாலும், கப்பற்படையின் சிரேஷ்டத்தையும் நன்குணர்ந்தவராய், ஒரு பெரிய கப்பற்படையைக் கட்டுவித்து, அப்படையைக்கொண்டு சாமானிய கிருத்தியங்கள் அநேகம் கடலில் இயற்றினார்.

சிவாஜியின் கப்பற்படை, சித்தி (Siddis) கப்பற்படையோடு அநேகமுறை சண்டை செய்தது. ஆனால் இறுதியில் சிவாஜியின் படைதான் தோல்வியுற்றதெனச் சொல்லவேண்டும்.

(Janjira) ஜன்ஜீரா நாட்டு சித்தி (Siddi) என்னும் சிற்றரசன், நம் நாட்டின் மேல்கரையில், அபிசீனியரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறு குடியேற்ற நாட்டின் அதிபதி. அதிலிருந்து ஏறக்குறைய மேற்குக்கரை முழுவதையும் அவன் ஆண்டுவந்தான். அங்குள்ள அவன் கப்பற்படையை முதலாவது பீஜப்பூர் சுல்தானும், பிறகு மொகலாய சக்கரவர்த்தியும் எப்படி ஏவினார்களோ, அப்படி அவர்களின் கட்டளையை நடத்தும்படி வைத்திருந்தான்.

மொகலாயர், இங்கிலீஷ்காரர், சிவாஜி இவர்களின் கப்பற்படைகள் சித்திகளுடைய கப்பற்படையோடு, அநேக கப்பற்சண்டைகள் வீராவேசத்தோடு செய்திருக்கின்றன.

மகாராட்டியரின் கப்பற்படைகள் பதினெட்டாவது நூற்றாண்டில், அங்கிரியா (Angria) என்னும் தலைவனின்கீழ் அதி உன்னத பதவியுற்றன. அங்கிரியார்கள் ஒரு கடல் கொள்ளைக் கூட்டத்தார். அவர்கள் அதிக தைரியமுள்ள மாலுமிகள். சண்டை செய்வதில் சமர்த்தர்கள். அவர்கள் இந்தியாவின் மேற்கரையில் உள்ள ஆங்கில கப்பல்கள் அநேகத்தை நாசமாக்கினர். அவர்கள் தொந்திரவு அதிகமாகவே, பீஷ்வாவும், ஆங்கிலரும் ஒன்றுகூடி அக்கொள்ளைக்கூட்டத்தாரை வேரோடு களையப் பிரயத்தனப்பட்டனர். கிளைவும், கப்பற்படைத் தலைவனான வாட்சனும் அங்கிரியார்களின் பலத்த கோட்டையாகிய கெரியா (Gheriah) வை எதிர்த்துத் தாக்கி, அதைக் கைப்பற்றிய பிறகுதான் இந்தக் கொள்ளைக் கூட்டத்தாரின் வலிமை குன்றியது.

தற்காலத்து இந்திய மாலுமிகளில் அநேகர் அங்கிரியாவின் கப்பற்படையிலிருந்த வீரர்களின் பின் சந்ததியாரென்றே சொல்ல வேண்டும்.

பழைய ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் நிர்மிக்கப்பட்டு, ஆதரித்துவந்த நமது தேச கப்பற்படை, பெர்சியா வளைகுடா செங்கடல் வரையிலுமுள்ள சமுத்திரத்தில் கொலை, களவு முதலிய கொடிய செயல்கள் நடவாமல் காவல் காத்து அரிய செயல்களைச் செய்துள்ளது. ஜர்மன் மகாயுத்தத்தில் அதிக கம்பீரமாய் அரிய வீரச்செயல்களை இயற்றிய நமது தேசக் கப்பல் வீரர்களின் முன்னோர்கள்தான் கம்பெனியார் காலத்தில் பெருஞ்செயல்களை நடத்தினவர். அப்படி அவர்கள் இயற்றிய வீரச்செயல்களையும், போர்த்திறமையையும், கப்பற்படையின் ஆதாரங்களைக்கொண்டு ஒரு புத்தகமாக எழுதினால் அது வாசிக்கிறவர்களின் உற்சாகத்தை எழுப்பிவிடும்படியான தூண்டுகோலாகும்.

இவ்வண்ணமாக தற்கால நமது தேச மாலுமி, நூற்றுண்டுகளாகச் சமுத்திரத்திலே காலட்சேபம் செய்த, தன் முன்னோர்களின் அனுபவத்தைக் கர்ணபரம்பரையாய்ப் பெற்றிருக்கிருனென்பது நமக்குத் தெரிகிறது. முன்னோரிடத்துப் பெற்ற பரம்பரை ஞானமும், உணர்ச்சியும் அவனுக்கு எவ்வாறு பிரயோஜனப்பட்டனவென்பது, இந்தக் கப்பல் வீரர்கள் சாதாரணகாலத்தும், சண்டையிலும் எவ்வளவு உண்மையோடும், வீரத்தோடும், தங்கள் பணியை ஆற்றினார்கள் என்று காட்டும் பின்வரும் கதைகளிலிருந்து நன்கு விளங்கும்.

பெர்சியன் வளைகுடாவிலுள்ள (Fao) பேயோ என்னுமிடத்தில் 1913-ம் ஆண்டில் பின்சொல்லப்படும் வீரச்செயல் நடந்தது.

ஷேக்மொய்தீன் என்பவன் 'லாரென்ஸ்' என்ற R. I. M. S. கப்பலின் இயந்திரத்தின் அடுப்பிற் கரிதள்ளும் வேலையாட்களை கண்காணிக்கிறவன். அவன் அக்கப்பலின் மேல்-தட்டில் ஒருநாள் காற்றால் எரியும் விளக்குகளுக்கு கார்பைட்டை மிதவைக்குள் (Buoy) போடுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

இந்த மிதவைக்குமேல் இருப்புக்கவசம் ஒன்றிருந்தது. அந்த இருப்புக் கவசத்தைச் சுற்றிலும், இருப்புக் கம்பிகள் நெருக்கமாய் வைக்கப்பட்டிருந்தன. அதனால் மனிதன் உள்ளே செல்லமுடியாதபடி இருந்தது. ஒரு மனிதன் மிதவையைப் போய்ச்சேரவேண்டுமானால் கவசத்திற்குமேல் அதைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள இருப்புப் பட்டையி

லுள்ள பெரிய துளையின் வழியாகத்தான் உள்ளே செல்ல முடியும்.

இந்தத் துவாரத்திலிருந்து ஒரு துணிக்குழாய் இரும்புக் கவசத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. மிதவையிலும் ஒரு துவாரமிருந்தது. அந்தத் துளையின்வழியாய் இந்தத் துணிக்குழாய் அதனுள் நுழைந்து சென்றது. இந்தத் துணிக்குழாய் வழியாகத்தான் மிதவைக்கு கார்பைட் என்னும் திராவகங்கூடிய பொருளைப் போடுவார்கள்.

கார்பைட் துணிக்குழாய் வழியாய்ச்சென்று மிதவைக்குள் விழுவதை ஒருவன் இருப்புக் கவசத்திலிருந்து பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம். ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் துணிக்குழாய் முறுக்கிக்கொள்ளும். இங்கே ஒருவன் அதிக வசதியாய் உட்கார்ந்து இருக்கமுடியாததானாலும், யாராவது ஒருவர் இந்த வேலையைக் கவனித்தே தீரவேண்டும்.

மிதவைக்குள் கார்பைட்டைச் செலுத்திக்கொண்டிருக்கும் தருணத்தில், திடீரென்று ஒரு அதிர்வெடிச் சத்தம் கேட்டது. இதைக் கண்காணித்துக்கொண்டிருந்த உத்தியோகஸ்தர்கள், அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து விசிறியெறியப்பட்டார்கள். மிதவை முழுவதும் தீப்பற்றி எரியத்தொடங்கியது. அங்கிருந்து பத்து அடி உயரம் நெருப்பு கிளம்பிச் சென்றது. நிர்ப்பாக்கியனை லஸ்கார் தீயால் சூழப்பட்டான். அங்கிருந்து அவன் தப்பித்து வெளியே வருவதற்குரிய ஒரேபாதை துணிக்குழாயால் அடைபட்டுவிட்டது. அந்தக் குழாயும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அங்குள்ள நிலைமையை ஒரு நொடியில் அறிந்து, தனக்கு நேரும் ஆபத்தைக் கருதாது, மிதவைக்குள் அடைபட்டு வெளியே தப்பிவர வகைதெரியாது கூச்சலிட்டுக்கொண்டிருக்கிற லஸ்கரைக் காப்பாற்றவேண்டுமென்ற பொங்கியெழும் அவாவுடன் ஷேக்மோய்தீன் கப்பலின் பக்கமாக இறங்கி மிதவையைக் கட்டிவைத்துள்ள பெரிய மரக்கொம்பின் பக்கமாய்ச் சென்றான்.

இதைக் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அவனை உற்சாகப்படுத்தும்பொருட்டு கரகோஷம் செய்தனர்.

அவ்வொலியின் மத்தியில் அவன் மிதவையினுள் குதித்தான் நெருப்பின் ஜ்வாலை அவனுடைய கைகளையும், முகத்தையும் மெல்ல ஸ்பரிசித்தது. அதைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. பெரிய துவாரத்தில் தொங்கிக்கொண்டிருந்த துணிக்குழாயில் எரிந்ததுபோக மிகுதியாய் இன்னும் எரிந்துகொண்டிருந்தவற்றைப் பிடுங்கி எறிந்தான்.

பிறகு கொஞ்சமும் மனோதைரியத்தை விடாமல், பிரக்ஞையற்றுக் கிடக்கும் லஸ்கரை நெருப்பிலிருந்து வெளியே இழுத்து, மிதவையின் காற்று வீசும் பக்கத்தில் உள்ள ஜலத்தில் அமிழ்த்தி வைத்திருந்தான். சீக்கிரம் ஒரு படகு வந்து அவர்களை ஏற்றிச்சென்றது.

லஸ்கருக்குச் சீக்கிரத்தில் பிரக்ஞை வந்தது. இவ்வாறு தன் சொந்தப் பிராணனையும் பாராட்டாது தன் வேலையாளின் உயிரைக் காப்பாற்றின அவனை யாவரும் புகழ்ந்தார்கள். அவனுடைய தைரியத்திற்கு அத்தாட்சியாக இரண்டாவது வகுப்பு ஆல்பார்ட் பதக்கம் வெகுமதியாக அளிக்கப்பட்டது.

ஜர்மன் மகாயுத்தத்தில் நமது தேசத்துக் கப்பற் படைவீரர்கள் மிக்க லாபகரமான அநேக தீரச்செயல்களைச் செய்திருக்கின்றமையால், அவர்களில் அநேகர் அரிய செயல்களுக்கு அணிதரும் பதக்கம் பரிசு பெற்றிருக்கின்றனர். நாம் சொல்லப்புகும் சுருக்கமான சரித்திரங்கள் சமுத்திரா தேவியின் நம் நாட்டு மைந்தர்களாற்றிய வீரச்செயல்களை எடுத்துக்காட்டும்.

தான் எதிர்த்துச் சுடமுடியாத சந்தர்ப்பத்தில், எதிரி தன்பேரில் அகோரமாய்க் குண்டுகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்குந் தருணத்தில், ஒருவன் எதிர்முகமாய்ச் செல்லவேண்டிவந்தால், கொஞ்சமும் அஞ்சாமல், அடக்கத்துடனும், ராணுவ ஒழுங்கு முறைகளின்படியும், முன் செல்லும் தைரியத்தைவிட மிஞ்சின தைரியம் உலகத்தில் கிடையாது.

மறைவிடமே இல்லாத சமுத்திரக்கரையில் உள்ள ஒரு இடத்துக்கு இத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரு படகில் உட்கார்ந்துகொண்டுபோய்ச் சேருவதென்றால் ஒரு மனிதனுடைய தைரியத்தை இன்னும் அதிக கொடுமையாய்ப்

பரீட்சிக்கிறதாகும். தரை மார்க்கமாய்ச் செல்லும்பொழுது யுத்தவீரர்கள் சில சந்தர்ப்பங்களில் சாதாரணமாய் நடந்து செல்லவும், மற்ற சில வேளைகளில் வேகமாய் ஓடியும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளலாம். எதிரிகள் தோட்டாக்களைத் துப்பாக்கிகளில் சொருகி தன்னைச் சுட குறிபார்த்துக் கொண்டிருக்கும் சமயத்திலோ, அல்லது யந்திர பீரங்கிகளிலிருந்து வெளிக்கிளம்பும் பெரிய வெடிகுண்டுகள் படகு முழுகுவதையும் ஒரு நொடியில் அழித்துவிடக்கூடிய அத்தகைய சந்தர்ப்பத்திலோ, திறந்த படகில் கையைக் கட்டிக் கொண்டு பிரயாணம் செய்வது மனிதனுடைய தைரியத்தை அதிகக் கொடுமையாய்ப் பரீட்சிக்கிறதாகும்.

இப்படிப்பட்ட அநேக சந்தர்ப்பங்களில், நம் நாட்டு மாலுமிகள் தங்கள் தைரியத்தை நிலைநாட்டியுள்ளார்கள். பெர்சியன் வளைகுடாவிலுள்ள டில்வார் என்னுமிடத்தில் நடந்த போரில், மாலுமிகளில் சின்ன உத்தியோகஸ்தன், ஷேக் அலி பால்கூன் சண்டைக் கப்பலிலுள்ள படகுக்கு மேல்அதிகாரியா யிருந்தான். எதிரியின் குண்டு சுட்டுக் கொண்டிருக்கும்பொழுதே கரையைப் போய்ச்சேரவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. படகு கரையைச் சமீபித்த போது, எதிரிகள் குண்டுகளை மிக்க கடூரமாய்ச் சுடவே அநேகர் இறந்தார்கள். பலர் காயப்பட்டார்கள். இவ்வித சந்தர்ப்பத்தில் சேனைத்தலைவன், அதிக தைரியத்தோடும் அடக்கத்தோடும் யுத்தவீரர்களை அதிக சமயோசிதமாய்க் கட்டளையிட்டு நடத்தவேண்டியிருந்தது. அப்படிக்கில்லாவிட்டால், சைனியத்திலுள்ளவர்கள் அதிகமாய்ப் பயப்பட்டு எதிரியோடு போர் தொடுக்கமாட்டார்கள். கரையில்வந்து இரங்கவும் மாட்டார்கள். ஆனால் ஷேக் அலி ஓர் சமய சஞ்சீவி. எதிரி சரமாரியாய்ச் சுடும் பீரங்கிகளையாவது குண்டுகள் சப்தித்துக்கொண்டு வேகமாய் வருவதையாவது ஒன்றையும் அறியாதவன்போல் நடித்தான். அவனது மன அமைதியைப் பார்த்த மற்ற வீரர்கள் தாங்களும் மன அமைதியுற்றனர். அச்சமயங்களில் படைவீரரில் தான் கொண்டுள்ள நன்மதிப்பை விளக்கும் சில சொற்களும், ஒவ்வொருவனும் இன்னது இன்னது செய்யவேண்டியதென்ற தெளிவான கட்டளையும்தான் தேவை. அதன் மூலமாய்

அதிக நெருக்கடியான அச்சந்தர்ப்பம் கடந்துபோய்விட்டது சைனியம் கரையைச் சேர்ந்தது.

எதிரியின் குண்டு தனக்கு நேராக வரும்பொழுது கையைக் கட்டிக்கொண்டு படகில் உட்கார்ந்திருப்பது யுத்த வீரனுடைய தைரியத்தைப் பரீட்சிப்பதாகும்.

எதிரியின் குண்டுகளுக்கு இலக்காயிருந்த எஞ்சினீயுர் போரில்கலந்து யுத்தம் செய்பவர் அல்லராதலால், அவரிடத்திலுள்ள வீரம் வெளித்தோன்றும்படி தூண்டும் காரணங்கள் ஒன்றுமில்லை. அப்படிப்பட்டவர்கள் சாந்தமாய் போரில் தங்கள் பணியை ஆற்றுவது அவர்களிடத்துத் தோன்றும் பொறுமையை எவ்வளவு தூரம் பரீட்சிக்கவேண்டியதோ அவ்வளவும் பரீட்சித்ததாகும். அத்தகைய குணங்கள் இரண்டாவது வகுப்பு யந்திர எஞ்சினீயர் ஷேக்யாகூபினிடத்தில் விளங்கின.

ஷெட்—அல்—ஆரப், தைக்ரிஸ், ஐபிராத்து இந்நதிக்கரைகளில் நடந்த போரிலும், 1914, 1915-ல் நடந்த குர்ணைச் சண்டையிலும் அமராவுக்குச் செல்லும்பொழுதும் டில்வாரில் படைகள் இறங்கும்பொழுதும், படகுகளில் படைகளை ஏற்றி, அவற்றைக் கயிற்றால் இழுத்துக் கரைசேர்த்தபொழுதும் ஷேக்யாகூப் சண்டைக்கப்பலைச் சேர்ந்த ஒரு நீராவிப் படகிலுள்ள யந்திரங்களைக் கவனித்துவரும் எஞ்சினீயராக நியமிக்கப்பட்டிருந்தான். அவனைப்பற்றி மேல் அதிகாரிகள் எழுதிவைத்துள்ள பத்திரத்தின்படி 'எதிரிகள் குண்டு சுட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அதிக மனோதிடத்தோடும், தைரியத்தோடும் தன் பணியை ஆற்றினானென்று' விளங்குகின்றது.

சரீரத்திற்கும் மனத்திற்கும் அடிக்கடி எவ்வளவோ சோர்வு உண்டாயினும் அதை மேற்கொண்டு போர்புரிவதற்கு எவ்வளவோ மனோதிடமும் தன்னடக்கமுமிருந்தால்தான் இத்தகைய புகழ்மொழிகள் பெறக்கூடுமென்பதைச் சற்று ஆலோசித்துப் பாருங்கள்.

இன்னுமோர் சரித்திரம்: யுத்தக் கப்பலின் படகை எதிரியின் வெடிகுண்டுகள் சுட்டு வீழ்த்தப்பார்க்கின்றன. எந்த வேளையில் ஷேக்யாகூபின் தலையில் குண்டு பாய்ந்து மூளை

லங்கிப்போகுமோ, அல்லது சின்னபின்னமாய்விடுமோ என்று தெரியாது. ஆனால் அவன் அதைப்பற்றிக் கொஞ்சமும் சிந்திக்கவில்லை. அவன் தனது கப்பலையும் அதன் இயந்திரத்தையும் காப்பாற்றுவதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தான். திடீரென்று குண்டு ஒன்று பாய்ந்து ஒரு குழாய் உடைந்துவிடுமானால் அல்லது ஒரு கம்பி நொறுங்கிவிடுமானால் என்ன செய்வதென்ற சிந்தனையே அவனுக்குப் பலமாய் இருந்தது. சில வேளைகளில் வெகுதூரத்திலுள்ள தன் சொந்ததேசத்தில் வசிக்கும் அருமை மனைவி குழந்தைகளுடைய ஞாபகம் வரும். அவர்களைத் திரும்பப் பார்க்கப் போகிறதில்லை என்ற எண்ணம் அவனைத் துர்ப்பலனாக்கும். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவன் அமைதியடைவான். தன் முன்னிலைமையை அடைந்து தன்னுடைய இயந்திரத்தைப்பற்றிய ஞாபகமே அவன் மனத்தைக் கவரும். 'தைரியசாலியே பாக்கியசாலி' என்றபடி எத்தனையோ இடையூறுகளுக்கிடையில் அவன் உயிர்தப்பினான்.

அவன் செயற்கரிய செயல்களைத் செய்திருக்கின்றான். ஆனதுபற்றி அவன் அரச பெருமானின் பரிசுக்கு அருகனானான்.

இந்தியாவிற்கு ஒரு கப்பற்படை யிருக்கவேண்டுமென்று அநேகர் அதைப்பற்றிச் சிந்தித்தும், பிறரோடு ஆலோசித்தும் வருகின்றனர். ஷேக்மொய்தீன், ஷேக்அலி பால்க்கூன், ஷேக்யாகூப் போன்ற மாலுமிகளால் இந்தியாவின் சண்டைக் கப்பல்கள் நடத்தப்பட்டு அவர்களுக்குத் தலைமை வகிக்கும் ஆற்றலுடையவர்களால் நிர்வஹிக்கப்பட்டு வருமானால் நம் நாட்டுக் கப்பற்படை ஆங்கிலேயரின் கப்பற்படையைப் போன்றிருக்குமென்பதற்கு ஐயமேயில்லை.

* * * * * * *

அநேக நூற்றாண்டுகளாகிய அரண்மனையின் பிராகாரத்தின் வழியே நடந்து, நிகழ்காலமென்னும் வாசற்படியில் வந்து நிற்கின்றோம். உருவகமின்றிச் சொல்லின், கடந்த காலங்களில் நேர்ந்த நம் முன்னோரின் அரும்பெரும் செயல்களை ஆராய்ந்து பார்த்து, படிபடியாக சில வருடங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களையும் மனத்தை உற்சாகப்படுத்தி

களிப்பிக்குமாறு கவனித்தோம். காலநேமி என்னும் பகைவன் அழிக்கா வண்ணம் ஒவ்வொரு காலத்திலும் அரிய பெரிய வீரச் செய்கைகள் ஆற்றப்பட்டு அவைகள் ஒன்றன் பின் ஒன்றாகக் கோர்வையாய் அரிய செயல்களாகிய பொற் சங்கிலியாக விளங்குகின்றன.

அச்சங்கிலியின் கடைசி வளையங்களாகிய அரியசெயல்களைச் சாதித்தவீரர்கள் இப்பொழுதும் உயிரோடிருக்கின்றனர். 'வருங்கால இந்தியா' இப்பொழுதே உதித்துவிட்டது. இனி வருங்காலத்தில் இந்திய புத்திரர் புத்திரிகளுக்கு தங்கள் மனோதிடத்தையும், கருமத்தினிடத்துள்ள பக்தியையும் வெளிப்படுத்தத்தக்க சந்தர்ப்பங்கள் பல ஏற்படும். அச்சந்தர்ப்பங்களில் இந்தியமக்கள் தங்கள் கடமையை அதிக வீர தீரத்தோடாற்றி, தங்கள் முன்னோர்களுக்குத் தாங்கள் தகுந்த புத்திரர்கள் என்பதை நிலைநாட்டி தங்கள் அரிய செயல்களாகிய புதிய வளையங்களை இயற்றி, அற்புதச் செயல்களாகிய சங்கிலியில் இணைத்து, அதை அதிக நெடுமையாக்குவார்கள் என்று உன்னுகின்றோம்.

THE MADURA TAMIL SANGAM

முற்றிற்று

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1927